# காலசர்ப்பம்

CONNEMARA PUBLIC LIBRARY
CHENNAI 600 008

ஸ்டெல்லா புரூஸ்

அகரம்
மனை எண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007

கால சர்ப்பம் / © ஸ்டெல்லா புரூஸ் / முதல் பதிப்பு: டிசம்பர் 20
வெளியீடு: அகரம், மனை எண் 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் -7/
அச்சாக்கம்: ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி / அட்டை
வடிவமைப்பு: மணிவண்ணன் / விலை. ரூ. 110/-

572018

**BIBLIOGRAPHICAL DATA**

| | |
|---|---|
| Title of the Book | : Kaala Sarppam |
| Subject | : Novel |
| Author | : Stella Bruce |
| Language | : Tamil |
| Edition | : First Edn. December 2003 |
| Size of the Book | : Demy 1x8 |
| Printing Point | : 10 Pt. |
| Paper | : Cream Wove |
| Number of Pages | : 240 |
| Number of Copies | : 1000 |
| Printers | : Hemamala Syndicate, Sivakasi |
| Publishers | : **AKARAM** Plot No: 1, Nirmala Nagar Thanjavur - 613 007. |
| Price | : **Rs. 110/-** |

894.8113
STE

# முன்னுரை

இருபது வருடங்கள் சந்திக்காத உறவினர் ஒருவரை சந்தித்தேன். வாழ்க்கை நெடுக நடந்த பல சம்பவங்கள் பற்றி பல மணி நேரங்கள் விடாமல் பேசிக் கொண்டிருந்தார். இதற்குமேல் சொல்வதற்கு எதுவும் இல்லையென்று தெரிவித்து விடுகிற அளவிற்கு அனுபவங்களை உறவினர் சொல்லிவிட்டிருந்தார். கிட்டத்தட்ட பேச்சின் முடிவிற்கு வந்துவிட்ட உணர்வுபாவம் அவரின் முகத்தில் தெரிந்தது. சில நிமிட மௌனத்திற்குப் பிறகு அவர் சொன்ன செய்தி இது - வாழ்க்கையில் அவர் மனைவியைத் தவிர வேறு பெண் யாரிடமும் பாலுறவு சுகம் பெற்றதில்லை. இதைச் சொன்னபோது உறவினரின் முகத்தில் சோகம் வந்து கவிந்திருந்தது. குரலில் பெரிய இழப்புணர்வு. இந்தச் சம்பவம் நடந்து சில மாதங்களுக்குப் பிறகு இசைத்துறையில் பிரபலமாக இருக்கும் என் வாசகர் ஒருத்தருடன் பேசிக் கொண்டிருந்தபோது *'ஆயிரம் கதவுகள் திறக்கட்டும்'* என்ற என் நாவல் பற்றிய சில எண்ணங்களை நாங்கள் பரிமாறிக் கொண்டோம். பாலுணர்வு; பாலுறவு பற்றிய சிற்சில வினோத யதார்த்தங்கள் அந்த நாவலில் ஆங்காங்கு வெளிப்படுத்தப் பட்டிருந்தன. அதைப்பற்றி சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்த என் வாசகர் தொடர்ந்து அவரைப் பற்றிய அந்தரங்க உண்மைகள் சிலவற்றை ஆதங்கத்துடன் வெளியிட்டார். அவரின் 40 வருஷ தாம்பத்ய வாழ்க்கையில் மனைவியிடம் பகிர்ந்துகொண்ட பாலுறவு சுகம் அவருக்கு நிறைவை தந்திருக்கவில்லை. போதுமானதாகவும் அந்தக் ம ்றை வாழ்க்கையின் நெருடலான ஒரு இழையாய் அவருள் ஓடிக்கொண்டே இருக்கிறது. சுற்றிலும் இருக்கும் ஏதேனும் ஒரு தெரிந்த பெண்ணிடம் பாலுறவிற்காக அணுகிப் பார்க்கலாமா என்ற சலனம் அவரின் உணர்வுகளில் எப்போதும் துடித்தபடி இருந்தது. ஆனால் அதற்கான ை ;ரியம் வருவதற்கான

வழி இல்லாமலேயே இருந்தது. அணுகப்போய் அந்தப் பெண் உடனே எல்லோரின் முன்னிலையில் பகிரங்கமாக அவமானப் படுத்திவிட்டால் என்ன பண்ணுவது என்ற பயம் அவருடைய நெஞ்சில் நிறைய இருந்தது. அப்படி ஒரு அவமானம் நிகழ்ந்து தன் குடும்பத்தாரின் மத்தியில்; குறிப்பாக தன் குழந்தைகளின் மத்தியில் கெளரவம் குலைந்து; தலைகுனிந்து நிற்கும் நிலையை அவரால் ஒருபோதும் தாங்கிக்கொள்ள முடியாது. அதனால் யாருக்கும் தெரியாமல் பாலுறவு சுகம் தரும் விலைமகளிடம் போகலாமா வென்று நினைத்தார். போய் பால்வினை நோய் எதுவும் வந்துவிட்டால் என்ன செய்வது? இந்தப் பயம் கூடவே அவரை இம்சை பண்ணியது. விளைவு? அவர் அறுபது வயதைத் தாண்டிவிட்டார். மனைவியிடம் கிடைக்காத பாலுறவுச் சுக நிறைவுக்கான தாபத்திற்கும் ஏக்கத்திற்கும் வடிகால் அவருக்கு கிடைக்கவில்லை. வயதாகிவிட்ட பிறகும் அந்தக் குறை - ஆள் அரவமற்ற நடுநிசியில் எரிந்துகொண்டிருக்கும் தெரு விளக்குபோல் அவருக்குள் எரிந்துகொண்டிருக்கிறது.

மேலே சொன்ன இரண்டு சம்பவங்களையும் *'கால சர்ப்பம்'* என்ற இந்த நாவலை நான் எழுத நேர்ந்ததற்கான காரணங்களாக சொல்லலாம். பாலுணர்வும் பாலுறவும் எப்படி வாழ்வின் ரகசிய அம்சங்களாக மையம் கொண்டு வாழ்க்கையின் போக்கை ஒளிவு மறைவாகவும் வாய் திறந்தும் தீர்மானிக்கின்றன என்பதை கொஞ்சம் வேகமாக சொல்லப் பார்த்திருக்கிறேன். வெள்ளத்தின் வேகத்தில் எல்லாம் அடித்துக்கொண்டு வரப்படும். எல்லாமே அடித்துச் செல்லவும் படும். 'கால சர்ப்பம்' நாவலின் காட்சிகள் அப்படி பிரவகித்து வந்தவையே.... அவையடக்கம் இல்லாத இந்த நாவல் மந்திரமொழி அற்றது. சாதாரண மனிதர்களின் மன ஆற்றாமைகளை அவர்களின் மொழியில் பேசுகிறது. வார இதழ் எதிலும் தொடராக வராத இந்த நாவலை நேரிடையாக நூல் வடிவில் கொண்டு வந்திருக்கும் அகரம் கதிர் அவர்களுக்கு என் நன்றி.

ஸ்டெல்லா புரூஸ்

# 1

PUBLIC LIBRARY
19

குளியல் அறையும்; குளியல் அறைக்குள் நிதானமாக நீண்ட நேரம் குளித்துக் கொண்டிருப்பதும் சந்தானலஷ்மிக்கு மிகவும் பிடித்தமான விஷயங்கள். அவளுடைய வீட்டின் குளியல் அறையை சந்தான லஷ்மி எப்போதும் பளிச்சென்று சுத்தமாக வைத்திருப்பாள். அவளுடைய கவனிப்புக்கும் ஒருபடி மேலாகவே குளியல் அறை அவளின் வீட்டில் சுத்தமாக இருப்பதற்குக் காரணம் - சந்தானலஷ்மியின் வீடு அவள் ஒருத்தி மட்டுமே இருக்கின்ற ஒற்றை நபர் வீடு. வீட்டில் அவளைத் தவிர வேறு மனிதர்கள் கிடையாது. தனியாக சமைத்து; தனியாக உண்டு; சந்தானலஷ்மி அவளுடைய சைதாபேட்டை விசாக தோட்டம் பகுதியில் இருக்கின்ற வீட்டில் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். சுந்தரேசன் என்ற பெயரில் தம்பி ஒருத்தன் சந்தானலஷ்மியுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் அயனாவரம் பக்கம் குறிப்பிட்ட எந்த முகவரியிலும் இல்லாமல்; ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு இடத்தில் யார்யாருடனோ இருந்து கொண்டிருந்தான். சந்தானலஷ்மியை போலவே அவனுக்கும் கல்யாணம் காட்சியென்று எதுவும் கிடையாது. அன்றாட வாழ்க்கை எதிலும் அக்காவுடன் எந்தத் தொடர்பும் கொண்டிராத சுந்தரேசன் எப்போதாவது சந்தானலஷ்மியை பார்ப்பதற்கு வந்தால் - அது அவளிடம் இருந்து பணம் ஏதாவது வாங்கிக்கொண்டு போவதற்குத்தான். வேறு எதற்காகவும் சந்தானலஷ்மியை பார்க்க அவன் வருவதில்லை.

சந்தானலஷ்மிக்கு இப்போது முப்பத்தி நான்கு வயதாகிறது. கல்யாணம், காட்சி என்ற சந்தர்ப்பங்கள் வராமல் போய்விட்டாலும், இந்த நான்கு வருஷமாக அவளுடைய வீட்டிலும் வாழ்க்கையிலும் கனகசபாபதி என்ற பெயரில் நாற்பத்தெட்டு வயதான பணக்காரரின் 'ஆண் வாசனை' ஆரம்பத்தில் அடிக்கடியும்; இப்போது அவ்வப்

போதும் வந்து வந்து போய்க் கொண்டிருக்கிறது. கனகசபாபதி என்ற அவர் வந்து போகிற ஒரு சில மணி நேரங்கள் மட்டும் வீட்டின் மொத்த சூழ்நிலையும் மாறிப்போய்விடும் சந்தானலஷ்மிக்கு. மனித நடமாட்டம் அதிகம் இல்லாத கடற்கரை ஓரங்களில் ஒருவித மீன் வாசனை இருக்கும். கனகசபாபதி இருக்கும்போது கிட்டத்தட்ட அப்படிப்பட்ட ஒரு வாசனைதான் சந்தானலஷ்மியை சுற்றி வியாபித்திருக்கும். கனகசபாபதி கிளம்பிப்போன பிறகும்கூட அவளின் புடவையில் அந்த வாசனை நீண்ட நேரத்திற்குக் கமழ்ந்து கொண்டிருக்கும். வீட்டில் கனகசபாபதி இல்லாமல் போய்விடுகிற நேரங்களில் இல்லாது போய்விடுகிற அந்த வாசனையை அந்த நிமிஷமே சுவாசித்துப் பார்க்கவேண்டும் என்ற ஆவேசம் சில தருணங்களில் வந்துவிடும்போது சந்தானலஷ்மிக்கு நெஞ்செல்லாம் புடைத்துப் போய்விடும். அந்த வெப்பமான நிமிஷங்களில் அவள் அவளின் மிகக் கனத்த மார்பகங்களைப் போட்டு அழுத்தியவாறு படுக்கையில் குப்புறப் படுத்துக் கிடப்பாள்....

கனகசபாபதி என்ற பணக்கார ஆண் வாசனை சந்தானலஷ்மிக்கு அவ்வப்போது வந்து செல்கிற காற்றாக இருந்தது. காற்று ஒவ்வொரு நேரம் புயல்போல வரும். சில சமயங்களில் தென்றலாக வேகம் அற்று நிதானமாக வரும். சில தருணங்களில் காற்று வரவே செய்யாது. காற்று வீசும்போது ஆனந்தமாக இருக்கும். ஆனால் காற்று இல்லாதபோது ஏற்படுகிற வெப்பமும் புழுக்கமும் மிகவும் இறுக்கமானது. நன்றாக விரிய திறந்து வைத்திருக்க வேண்டும் போல இருக்கும். ஆனால் நிரந்தரமான ஒரு ஆண்துணை இல்லாத வீடு என்ற உபரி காரணத்தாலும் வீட்டின் கதவை அவள் எப்போதும் சாத்தியே வைத்திருப்பாள். கதவுகளை சாத்தியே வைத்திருக்கும் ஒரு வீட்டிற்குள் வெப்பமும் இறுக்கமும் அதிகமாகத்தான் இருக்கும்.

இது தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கும் நேரங்களில் சந்தானலஷ்மியை வீட்டின் மொட்டை மாடியில் பார்க்கலாம். ஆனால் மொட்டை மாடியில் தனியாக அவள் நிற்பதேகூட பல ஆண்களுக்கு கிளுகிளுப்பூட்டுகிற கவர்ச்சியான விஷயம். அதனால் சந்தானலஷ்மி நீண்ட நேரம் மொட்டை மாடியில் போய் நிற்பதற்கும் தயங்குவாள். அதே நேரம் வீட்டின் வாசலில் போய் நிற்பது அதைவிடத் தயக்கமான தர்மசங்கடமான சமாச்சாரம். அதனாலேயே அவ்வப்போது மொட்டை மாடியில் நிற்பதை அவளால் தவிர்க்கமுடிவதில்லை. அதற்கு இன்னொரு வலிமையான காரணம் உண்டு. மொட்டை மாடியில் நின்று தெருவையும்



வீடுகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதில் சந்தானலஷ்மிக்கு இருக்கும் ஈடுபாடு அளவிட முடியாதது. அதைவிட, மழை பெய்கிறபோது மொட்டை மாடியில் நின்றபடி விச்ராந்தியாக நனைந்தவாறே குளிப்பதில் அவளுக்கு இருக்கும் ஆர்வத்தைச் சொல்வதற்கு நிஜமாக வார்த்தை கிடையாது.

ஆனால் - குளிப்பது என்பது துணிகள் இல்லாமல் குளிக்கும் அறைக்குள்தான் என்றாகி விட்டபடியால்; மொட்டை மாடியில் மழை பெய்யும்போது துணியோடு குளிப்பது என்பது சிறிதுகூட சாத்தியமற்றதாகிவிட்டது. நாள் முழுவதும் சிறிதும் விலகாமல் உடம்பு பூராவும் உடைகளைச் சுற்றிக்கொண்டு காலம் காலமாக நின்று நின்று சந்தானலஷ்மி மனதிற்குள் அலுத்தே போயிருந்தாள். சில நேரங்களில் ஆடையே விலங்குபோல கூடத் தெரியும் அவளுக்கு. குளிக்கும் அறைக்குள் உடை இல்லாமல் நீண்ட நேரத்தை குளிப்பதற்காக எடுத்துக்கொள்வதில் இதெல்லாம்கூட காரணமாக இருக்கலாம்.... குளியல் அறை விஷயத்தில் சந்தானலஷ்மியின் மனநிலையில் இன்னொன்றும் இருக்கிறது. உடம்பில் துணி இல்லாமல் குளித்துக் கொண்டிருக்கும்போது அவளுடைய குளியல் அறையே மிக வசீகரமாகத் தெரியும். ரொம்பப் பெரிய அழகி கிடையாது சந்தானலஷ்மி. விசேஷமான முக லட்சணம் எதுவும் இல்லாத சாதாரணமான பெண் அவள். ஆனால் அவளின் மார்பகங்கள் சற்று விசேஷமானவை. சந்தானலஷ்மியின் மார்பகங்கள் அளவற்ற வளமும்; ஆச்சர்யப்பட வைக்கும் அளவும் கொண்டவை. அந்த அகன்று குவிந்த மார்பகங்கள் மெலிதாக அசைந்தாடும்படி குளிக்கிறபோது குளியல் அறை மிகவும் கவர்ச்சி பொங்கி வழிவதாக அவளுக்குத் தெரியும். அந்தக் கவர்ச்சியை ரசித்துக் கொண்டே நீண்ட நேரத்திற்குக் குளித்துக் கொண்டிருப்பாள்.

குளிக்கிற விஷயத்தில் கனகசபாபதி சந்தானலஷ்மிக்கு நேர் எதிரானவர். பொதுவாக அவர் சந்தானலஷ்மியின் வீட்டில் குளிப்பது கிடையாது. அவளின் வற்புறுத்தலுக்காக (தன் வீட்டுக் குளியல் அறையில் ஆடவன் குளிக்கிற சப்தம் சந்தானலஷ்மியின் மனதிற்கு இதம் தருகிற விஷயம்) எப்போதாவது குளித்தாக வேண்டிய அவசியம் வருகிறபோது குளிக்கும் அறைக்குள் போன நிமிஷத்தில் கனகசபாபதி வெளியில் வந்துவிடுவார். குளிக்கிற இந்தக் குளியலும் இப்படி ஒரு காக்கா குளியலாக இருப்பதாலோ என்னவோ; அவருடைய உடம்பில் எப்போதுமே வியர்வையின்

ஒருவித நெடி இருந்து கொண்டிருக்கும். சந்தானலஷ்மிக்கு கனகசபாபதியின் இந்த வியர்வையின்மீது மையல் உண்டு. முத்தமிடுகிறபோது அவரின் புஜங்களில் படிந்திருக்கும் வியர்வையின் ஈரத்தை பல நேரங்களில் அவள் சுவைத்தே பார்ப்பாள். பனியன் இல்லாத அவரின் மார்பிலும் தோள்களிலும் வியர்வையின் ஈரம் பளபளக்கும்; தலையணையில் சாய்ந்துகொண்டு கனகசபாபதி புகைக்கிற சிகரெட் புகையின் வாசனையின் மேல் சந்தானலஷ்மிக்கு இருக்கும் சுகமான போதையும் - இந்த வியர்வையை சுவைக்கிற அவளின் ஈடுபாட்டுக்கு இணையானதுதான். கனகசபாபதி புகைக்கும் சிகரெட் புகையின் வாசனையின்மேல் சந்தானலஷ்மிக்கு ஒரு பரவசமான புளகாங்கிதம் உண்டு. அவளைப் பார்க்க வரும்போதெல்லாம் உதடுகளில் புகையும் சிகரெட்டோடுதான் வீட்டிற்குள் நுழைவார் கனகசபாபதி. வீட்டுக் கதவை அவருக்காக திறந்து விடுகிறபோதே சிகரெட் புகைதான் சந்தானலஷ்மியின் முகத்தில் முதலாவதாக வந்து படும். அந்த வினாடியில் அவளின் ரத்தத்தில் புத்துணர்ச்சி பொங்கிப் பெருகிவிடும். ஒரு புது சிகரெட்டை கனகசபாபதி எடுத்து உதடுகளில் வைத்துக்கொள்ளும் போதெல்லாம் சந்தானலஷ்மிதான் தீக்குச்சியை உரசி அவருக்கு சிகரெட் பற்ற வைப்பாள்.

ஆரம்பத்தில் கனசபாபதிக்கும் இதெல்லாம் பெரும் கிளர்ச்சியைத் தந்தன. நாற்பது வயதைத் தாண்டிய நிலையில் இப்படியான மனக்கிளர்ச்சிக்கு ஆளாகியதற்கான காரணங்கள் கனகசபாபதியின் குடும்ப வாழ்க்கையில் நிறைய உண்டு. அவரின் சிகரெட் புகைக்கும் வழக்கத்தை அவரின் மனைவி வனிதாமணி ஒட்டுமொத்தமாக வெறுப்பவள். அவள் ஒரு கடுமையான ஆஸ்த்மா நோயாளி. அவளின் ஆஸ்த்மா பிரச்னைக்கு சிகரெட் புகை ஒருபோதும் காரணமாக இருந்ததில்லை என்பது வனிதாமணியின் டாக்டர்கள் மிகத் தெளிவாக சொல்லிவிட்ட விஷயம். இருந்தாலும் சிகரெட் புகையும் தன்னுடைய ஆஸ்த்மாவிற்கு ஒவ்வாத ஒன்று என்ற நம்பிக்கை வனிதாமணி அவளுடைய மனதில் வலிமையாக வளர்த்து வைத்திருந்தாள். அதனால் வீட்டில் சிகரெட் புகைக்க கனகசபாபதியை அவள் அனுமதிப்பதில்லை. தினசரி வாழ்க்கையில் மனைவியிடம் கனகசபாபதிக்கு ஏற்பட்டிருந்த நிறைய எரிச்சல்களில் இதுவும் ஒன்று. மனைவி கடுமையான ஆஸ்த்மா நோயாளி என்பது பல விஷயங்களில் பல ஆற்றாமைகளை அவரிடம் ஏற்படுத்தி இருந்தது. ஆஸ்த்மாவின் இசிவை அனுபவித்து அனுபவித்து வனிதாமணியின் உடம்பு ஈரம் பிழியப்பட்ட துவைத்த பழைய துணி



போல ஆகிவிட்டிருப்பதை பார்க்கும்போதே எரிச்சல் பீறிட்டுக் கொண்டு வரும் கனகசபாபதிக்கு. ஆஸ்த்மா கடுமையாக இருக்கும்போது மனைவியின் பக்கத்தில்கூடப் போகமாட்டார். வனிதாமணியும் அந்த நேரத்தில் அவரைப் பக்கத்தில் வர விடமாட்டாள். இதெல்லாம் ஆஸ்த்மா இல்லாத நேரத்திலும் மனைவியைப் பார்க்கப் பிடிக்காத அளவுக்கு கனகசபாபதியின் மனதில் வெறுப்பு முட்களை நிறைய வளர வைத்திருந்தது. ஆனால் இந்த வெறுப்புக்கும் எரிச்சலுக்கும் மேற்பட்ட பெரும் மனக் கசப்போ மனமோதலோ கனகசபாபதிக்கு வனிதாமணியிடம் ஏற்படுவதற்கும் சாத்தியம் இல்லாமல் இருந்தது. இதற்கு ஒரே காரணம்; சாதாரண வேலையில் இருந்த கனகசபாபதி; ஒரு கம்பெனியின் முதலாளி என்ற இந்த உயரத்திற்கு வந்திருப்பது - வனிதாமணியின் அப்பா ஆண் வாரிசு இல்லாத ஒரு பெரிய பணக்காரராக இருந்த நிலைமைதான். இல்லாவிட்டால் இப்போதும் அவர் எங்கேயாவது சம்பளம் வாங்குகிற ஒரு வேலையில்தான் இருந்துகொண்டிருப்பார். இந்த அபிப்பிராயமும் செருக்கும் கனகசபாபதியின் மனைவி வனிதாமணியிடம் இன்றும் நிறைய உண்டு. கம்பெனியும் பணமும் சொத்துக்களும் இப்போதும் அவளுடைய பெயரில்தான் இருக்கின்றன. இந்தக் கவனமும் பயமும் கனகசபாபதியின் மனதில் எச்சரிக்கையுடன் பயமும் கலந்ததாய் இருந்துகொண்டிருந்தது. அதனால் பெரிய மோதல் ஏதாவது வந்துவிடுகிற சந்தர்ப்பங்களில் கனகசபாபதி மனைவிக்கு அடங்கிப் போய்விடுவார். அடங்கிப்போவது அவருக்கு வெட்கக்கேடாகத் தான் இருக்கும். இந்த வெட்கக்கேடுகளும் சேர்ந்து வனிதாமணியின் மேல் கனகசபாபதி கொண்டிருந்த எரிச்சலையும் கசப்பையும் மிக அதிகப்படுத்தி வைத்திருந்தன....

எரிச்சல்களும் கசப்புகளும் இத்தோடு முடிந்துவிடவில்லை. இளம் வயதில் பெண் என்கிறவளின் மேல் கனகசபாபதி கொண்டிருந்த பெரும் மோகத்திற்கு; மனைவியாகக் கிடைத்த வனிதாமணி சின்ன வடிகாலாகக்கூட இருந்ததில்லை. அவரைப் பொறுத்தவரையில் இது மிகப் பெரிய ஏமாற்றம்; மிகப் பெரிய இழப்பு.... ஆனால், இந்த ஏமாற்றத்தை ஈடுசெய்து கொள்கிற மாதிரி வெளிப் பெண்கள் யாரையும் தேடுகிற உணர்வு வேகம் மட்டும் கனகசபாபதியின் மனதில் ஒரு நாள்கூட ஏற்பட்டது கிடையாது. அதே நேரம் - மனைவியிடம் இதமான; வெகுவான ஆசைக்கேற்ற சுகபோகம் கிடைக்காமல் போன கொதிப்பும் கோபதாபமும் அவரின் மனசிலும்உடம்பிலும் நிரம்பி அடைத்துக் கிடந்தது. இந்த

மன அடைசல்கள் வேறொரு இடத்தில் வேறொரு வடிவத்தில் கனகசபாபதியிடம் இருந்து சூடாக வெளிப்பட்டுக்கொண்டே இருந்தது. கனகசபாபதி அவருடைய ஆபிசில் மிகப் பெரிய சிடுமூஞ்சிக்காரராகவும் சிறிதுகூட பொறுமை இல்லாத கோபக்காரராகவும் எல்லாரிடமும் எல்லா நேரமும் தோற்றமளித்துக் கொண்டிருந்தார். மனைவியிடம் காட்ட முடியாத கோபவேகங்கள் எல்லாவற்றையும் அவர் அதிகமான வேகத்தில் ஆபிசில் காட்டிக் கொண்டிருந்தார். அதுவும் அவரிடம் வேலை பார்க்கும் பெண்களிடம் அவர் காட்டுகின்ற கோபத்தின் பாய்ச்சல் வேகம் பல மடங்கு அதிகமாக இருக்கும். பெண்களின் மேல் அடங்காத கோபமே இருந்தது கனகசபாபதிக்கு. பெண்கள் ஆபிசில் செய்கிற சின்னச் சின்ன தப்புகளுக்கெல்லாம் ரௌத்ரத்தின் உச்சிக்குப் போய்விடுபவராக இருந்தார் அவர்.

கனகசபாபதியின் கோபத்தையும் கூச்சலையும் தாங்கிக்கொள்ள முடியாமல் வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஓடியிருக்கும் பெண்கள் அவருடைய ஆபிசில் பலர் இருந்திருக்கிறார்கள். வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போகமுடியாத குடும்பச் சூழ்நிலையில் இருந்த பெண்கள் மட்டும் தலைவிதியை நொந்தபடி வேலையில் தொடர்ந்து இருந்துகொண்டிருந்தார்கள். ஐந்து வருஷத்திற்கு முன்னால் கனகசபாபதியின் ஆபிசில் அவருடைய 'பர்சனல் ஸ்டேனோ'வாக பணியில் இருந்த சந்தானலஷ்மியும் மிகப்பெரிய கோபத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாக நேர்ந்தாலும் வேலையை விட்டுப் போக முடியாத வாழ்க்கைச் சூழலில்தான் இருந்து கொண்டிருந்தாள். தொடர்ந்து ஏழு வருஷம் வேலை பார்த்துவிட்ட கனகசபாபதியின் ஆபிசை விட்டு இன்னொரு புதிய ஆபிசிற்குப் போக அவளின் மனம் தயாராக இல்லை. தாய் தகப்பன் இல்லாத; கல்யாணத்திற்கு வழி இல்லாத; 'லேடிஸ் ஹாஸ்டல்' வாழ்க்கையின் திக்கற்ற அவல நிஜங்களை மீண்டும் ஒரு புதிய ஆபிஸ் வட்டத்திற்குக் கொண்டு செல்கிற பொறுமையும் தைரியமும் சந்தானலஷ்மியிடம் இல்லை. எப்படி கனகசபாபதியின் கோபமும் சிடுமூஞ்சித்தனமும் அவளுக்குப் பழகிப் போய்விட்டதோ; அதேபோல அவளுடைய திக்கற்ற அவலமான வாழ்க்கை நிலையும் கனகசபாபதியின் ஆபிசிற்குப் பழகிவிட்டிருந்தது....

இத்தனைக்கும் ஆபிசில் மற்ற பெண்களைவிட சந்தானலஷ்மி அதிகமான கோபத்தை கனகசபாபதியிடம் நேரிடையாகவும் அடிக்கடியும் எதிர்கொண்டாக வேண்டிய நிலைமையில் வேறு



இருந்தாள். அவளுக்கு முன்பு பல பெண்கள் அந்த 'பர்சனல் ஸ்டேனோ' வேலையில் ஆறு ஏழு மாதங்கள்கூட தாக்குப்பிடிக்க முடியாமல் வேலையைவிட்டுப் போயிருக்கிறார்கள். சந்தான லஷ்மிதான் அந்த வேலையில் நிலையாக தாக்குப்பிடித்து நின்றாள். நியாயமாகப் பார்த்தால் இதனால் கனகசபாபதியின் மனதில் சந்தானலஷ்மியின் மேல் நல்லவிதமான திருப்தியும் நிறைவும்தான் இயல்பாக ஏற்பட்டிருக்கவேண்டும்.... ஆனால் அது ஏற்பட வில்லை. எத்தனை கோபமாக நடத்தினாலும் வேலையைவிட்டுப் போகாத நிலைமையில் இருக்கிறாள் என்ற அலட்சிய உணர்வுதான் கனகசபாபதியின் மனதில் ஏற்பட்டது. அதுமட்டுமில்லை; சந்தானலஷ்மியிடம் மேலும் கடுமையாக நடக்கிற மிக இளக்காரமான மனத்தன்மையில் வேறு இருந்தார்.

கனகசபாபதி இந்த மாதிரியெல்லாம் சந்தானலஷ்மியிடம் மேலும் மேலம் கடுமையாக நடந்து கொண்டதில் அவரின் மனதில் வேறொரு முக்கியமான கோணம் காரணமாக இருந்தது. இந்த சந்தானலஷ்மி அழகு இல்லாத பெண்ணாக இருந்தாலும் ஒரு கரடு முரடான கவர்ச்சி தடித்த மெழுகுப் படிமமாக அவளின் உடம்பில் சற்று ஓங்கிப் புடைத்திருந்தது. - இது கனகசபாபதயின் மனதில் எரிச்சலைத்தான் அதிகப்படுத்தி இருந்தது. நாதியில்லாத இந்தப் பொம்பளைக்குப் போய் எதற்கு இத்தனை கவர்ச்சி என்ற ஒரு கோபம் அவருடைய மனதில் இருந்தது. சந்தானலஷ்மிக்குக் கிடைத்திருக்கும் கவர்ச்சியில் பாதி அளவாவது வனிதாமணியின் உடம்பில் இருந்திருந்தால் அவரின் தாம்பத்ய உறவில் கனகசபாபதி கொஞ்சமாவது இன்பமாகவும் சந்தோஷமாகவும் இருந்திருப்பார். கல்யாணத்திற்குக்கூட வழியில்லாத ஒருத்திக்குப் போய் இப்படி ஒரு கவர்ச்சியான உடம்பு தேவையா என்பதுதான் கனகசபாபதிக்கு இருக்கிற ஆதங்கமான கேள்வி... இந்த ஆதங்கமும் சேர்ந்து சந்தான லஷ்மியை மேலும் மோசமாக நடத்துகிற மனநிலைக்குத்தான் அவரை ஏற்றி வைத்திருந்தது.

- இப்படியெல்லாம் சிக்கலாகிப்போன இழைகளில் கரடு முரடாகச் சென்று கொண்டிருந்த கனகசபாபதி - சந்தானலஷ்மி ஆபிஸ் உறவில் எதிர்பாராத விபத்து என்று சொல்லும்படியான சம்பவம் ஒன்று நடந்தது....

❖

## 2

ஒருநாள் ஆபிசில் சந்தானலஷ்மி 'டைப்' செய்து எடுத்துப் போயிருந்த பேப்பரின் வரிகளில் சின்னதாக தப்புப் பண்ணியிருந்தாள். தப்பு பெரியதாக இருந்திருந்தால் பேப்பர்களை கனகசபாபதி வீசி எறிந்திருப்பார். அன்று பேப்பரை அப்படி வீசியும் எறியாமல்; சந்தானலஷ்மயிடம் கொடுத்தும் விடாமல்; மேஜையில் வைத்திருந்தபடியே '' டைப் பண்ணியிருக்கும் லட்சணத்தைப் பார்'' என்று கோபத்தோடு முணங்கி; அவளுக்கு அழகு வேறு காட்டினார். வழி இல்லாமல் சந்தானலஷ்மி ரொம்பவும் குனிந்துதான் பேப்பரில் அவள் செய்திருந்த பிழையை கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. ஆனாலும் பிழையை உடனே அவளால் தெரிந்துகொள்ள முடியவில்லை. குனிந்து பிழையைக் கண்டுபிடிக்கிற கவனத்திலேயே அவள் ஆழ்ந்துவிட்டிருந்தபோது சந்தானலஷ்மியின் தோளில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக புடவை விலகி அவளின் மார்புக்கும் கீழே சரிந்துவிட்டதை சந்தானலஷ்மி உணர்ந்து கொள்ளவில்லை.

சராசரி அளவுக்கும் மிக அதிகமான ஏற்றம் கொண்ட அவளின் மார்புப் பகுதி இதனால் பொங்கி எழும்பி மிக அருகில் பிரும்மாண்டமாகக் காட்சியானதில் கனகசபாபதியின் ஆண் தலையில் ஓர் புதிய ரத்தம் விருவிருவென ஏறிவிட்டது. கோபம்; எரிச்சல் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட; அவரின் அத்தனை உணர்வுகளின் மொத்த கூர்மையும் சந்தானலஷ்மியின் ஏற்றமான அந்த மேட்டுப் பகுதியில் குவிந்துவிட்டது. கனகசபாபதி அவருடைய பார்வையால் அவருடைய கண்களை விரித்தபடி அந்தக் காட்சியை ரசித்து களித்துக் கொண்டிருந்தார்.

சந்தானலஷ்மியின் அறிவுணர்வு பல வினாடிகளுக்குப் பிறகு இதை உணர்ந்தது. சரேலென அவளை நாணம் மொய்த்துக் கொண்டுவிட்டது. உடனே புடவையை சரிசெய்து கொண்டே அவளின் பார்வை கனகசபாபதியின் பார்வையை தயக்கமான வெட்கத்துடன் சந்தித்தது. கனகசபாபதியின் கண்களில் இத்தனை வருஷத்தில் அவள் பார்த்தே இராத இன்பக் களிப்பு மின்னிக் கொண்டிருந்தது. தன் 'ஸ்டேனோ'வின் பெரும் மார்பகங்களின் ஏற்றத்தைப் பார்த்து ரசித்துவிட்ட திருட்டுத்தனத்தின் குதூகலமும் அவருடைய கண்களில் நிறைந்திருந்தது. இந்த எதிர்பாராத சம்பவம்



கனகசபாபதியின் மனக்கடலில் மட்டும் புதிய புதிய அலைகளை எழுப்பிவிட்டிருக்கவில்லை. சந்தானலஷ்மியின் மனசமுத்திரத்திலும் இந்த நிகழ்ச்சி புத்தம் புது அலைகளை புரள வைத்திருந்தது.

இந்தச் சம்பவம் நடந்த நாளின் இரவு படுக்கையில் படுத்திருந்த கனகசபாபதியின் மனக்கண் சந்தானலஷ்மியின் மார்புப் பெருக்கையே நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. பிற பெண் உடல் என்ற மாற்றுப் பிரக்ஞையே இல்லாதிருந்த அவரின் மனதில் அதற்கான விதை ஆழமாக விழுந்துவிட்டிருந்தது. ஆஸ்த்மாவின் கடும் இசிவாலும்; இயல்பான உடல் வாகாகவும் மெலிந்து தட்டையாகிப் போன மனைவி வனிதாமணியின் உப்பு அற்ற மார்புப் பகுதியை; 'பர்சனல் ஸ்டேனோ' சந்தானலஷ்மியின் நிறைந்த மார்பகங்களோடு ஒருவித கழிவிரக்கத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார் கனகசபாபதி. சந்தானலஷ்மியின் மேல் முதல் முறையாக அவருக்குள் பரிவு உணர்ச்சி வந்தது. அவளின் இந்தச் செழுமையான மார்பகங்களுக்காகவாவது அவளை ஒருத்தன் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கலாம்.... பாவப்பட்டவள்தான் சந்தானலஷ்மி. அப்பா அம்மா இல்லாத கல்யாணமாகாத அபலையாக பெண்களுக்கான ஏதோ ஒரு ஹாஸ்டலில் இருந்து கொண்டிருக்கிறாள்.... - இப்படியெல்லாம் கனகசபாபதி ரொம்ப நேரத்திற்கு அளவு இல்லாத ஆதங்கத்தோடு சந்தானலஷ்மியைப் பற்றி நினைத்தவாறு படுத்திருந்தார். - இப்போது அவள் அவளுடைய ஹாஸ்டல் அறையில் ஒரு அனாதையைப் போல தூங்கிக் கொண்டிருப்பாள் என்று மிகவும் கரிசனத்துடன் வேறு நினைத்துக் கொண்டார்.

ஆனால் கனகசபாபதி நினைத்த மாதிரி சந்தானலஷ்மி அந்த நேரம் அவளின் ஹாஸ்டல் அறையில் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. கனகசபாபதிக்கு தூக்கம் வராமல் போனமாதிரிதான - அவளுக்கும்? அவளுக்கு மட்டும் பிறகு எப்படி தூக்கம் வந்துவிடும்.... சந்தானலஷ்மியும் தூக்கமே வராமல் படுக்கையில் வெறுமே படுத்து புரண்டு கொண்டிருந்தாள். ஆபிசில் அன்று நடந்துவிட்ட விபத்தை ஒத்த சம்பவம் அவளின் நெஞ்சில் உருண்டுகொண்டே இருந்தது. கிடைத்த அந்தச் சில நிமிடங்களில் கனகசபாபதி எப்படி அவரின் கூரிய ஆண்பார்வையால் சந்தானலஷ்மியின் மார்பைத் துளைத்து விட்டார்.... நினைத்துப் பார்க்க நினைத்துப் பார்க்க அவளுக்கு தலைகால் புரியவில்லை.... ஒரு ஆடவனின் உடம்பைத் தான் துணி இல்லாமல் பார்த்துவிட்டாற் போன்ற அதிசயமான பரவசப்

புல்லரிப்பு அவளின் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரைக்கும் மின்னோட்டம் போல் பாய்ந்து கொண்டிருந்தது. மீண்டும் அந்தச் சம்பவம் நடக்கவேண்டும் போல இருந்தது. கனகசபாபதியை ரொம்ப பக்கத்தில் நிற்க வைத்து மார்பகங்களை முழுமையாக வெளிப்படையாகவே காட்ட சந்தானலஷ்மியின் மனம் ஆசைப்பட்டது. 'சிடுமூஞ்சிப்பயல்' என்ற நிரந்தர வெறுப்பு அவளின் மனதில் இருந்தது சட்டென காணாமல் போய் 'திருட்டுப் பயல்' என்ற செல்லமான கோபம் ஏற்பட்டது.

இதுவரை சந்தானலஷ்மி கனகசபாபதியை கற்பனையில்கூட அவளின் படுக்கைக்குக் கொண்டு வந்ததில்லை. அன்று அந்த காரியத்தை மிகவும் விருப்பத்துடன் செய்தாள். ஆபிசில் அன்று நடந்த சம்பவம் பல நாட்களுக்கு முன்பாகவே நடந்திருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும் என்று சந்தானலஷ்மிக்குத் தோன்றியது. அன்று நடந்தது எதிரேபாராதது. கற்பனையே பண்ணாதது. கொஞ்சம்கூட திட்டமிடாதது. இனி வரப்போகும் நாட்களில் திட்டம் போட்டே இப்படி ஒரு சம்பவத்தை நடக்கும்படி ஏதாவது செய்தால் எப்படி இருக்கும் என்று யோசனை செய்து பார்த்தாள் சந்தானலஷ்மி. அவளின் மனது சொன்ன பதில் - நன்றாகத்தான் இருக்கும்....

கனகசபாபதிக்காகவாவது இந்தச் சம்பவத்திற்கு முந்தின நிமிஷம் வரை பிற ஸ்திரீ என்ற ஆர்வம் அவருடைய மன உணர்வுகளில் வந்தது கிடையாது. ஆனால் அப்படிப்பட்டதில்லை சந்தான லஷ்மியின் மனோஉணர்வுகளின் நிலை. ஆண் என்ற தாபம் அவளுடைய மனதின் ஒரு பகுதியாகவே அவளுக்குள் கனம் பெற்றிருந்தது. பார்க்கின்ற ஒவ்வொரு இளம் ஆணும் அவளுக்கு இளம் ஆணாகவே தெரிந்து கொண்டிருந்தான். பல நேரம் இது அவளுக்குக் கொடிய உபாதையாக இருந்தது. கணவன் என்ற பெயரில் சந்தானலஷ்மியின் வாழ்க்கையில் ஆண் ஒருத்தன் நுழைவதற்கு வழி இல்லாமல்; அதற்கான எந்த அறிகுறியும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தென்படாமல் வாழ்க்கை அவளுக்கு ஆண் அரவம் கிடைக்காமல் ஒரு காலியான வீடுபோல காட்சி அளித்துக் கொண்டிருந்தது. லேடிஸ் ஹாஸ்டல் வாழ்க்கை இந்தக் காலியான வீட்டை மேலும்தான் வெறுமைப்படுத்தி இருந்தது. சூனியப்படுத்தி இருந்தது. ஆபிசில் அவளுடன் வேலை பார்த்த பெண்கள் ஆபிஸ் நேரம் முடிந்ததும் அவரவர்களின் வீடுகளுக்குக் கிளம்பிப் போகிறபோது சந்தானலஷ்மி மட்டும்தான்



ஹாஸ்டலுக்குக் கிளம்புவாள். அந்த நிமிஷம் அவளுடைய மனம் படும் பாடு அவளுக்கு மட்டும்தான் தெரியும்....

ஆறு வருஷங்களுக்கு முன்பு, வேலை பார்க்கும் பெண்களுக்கான இந்த ஹாஸ்டல் அறைக்கு வந்து சேர்ந்தபோது சந்தானலஷ்மிக்கு முதலில் ஹாஸ்டல் வாழ்க்கை குதூகலமாகத்தான் இருந்தது. ஆபிஸ் முடிந்து அறைக்கு வந்தால் அடுப்புப் பற்ற வைக்கும் அவசரம் கிடையாது. பாத்திரம் கழுவவேண்டும்; வீடு பெருக்க வேண்டும் என்ற எரிச்சல்கள் கிடையாது. கட்டிக் கொண்டிருக்கும் புடைவையைக் கூட மாற்றாமல் அப்படியே படுத்துத் தூங்கினாலும் அவளைக் கேட்பதற்கு யாரும் கிடையாது ஹாஸ்டலில். பணியாட்கள் சூடாக பரிமாற, உட்கார்ந்து நன்றாக ஆற அமர சாப்பாட்டை ரொம்ப நிதானமாக சாப்பிடலாம். சந்தானலஷ்மியின் ஹாஸ்டல் வாழ்க்கையின் அன்றாட விஷயங்களின் ஒவ்வொரு அம்சமும் சந்தானலஷ்மியால் மட்டுமே தீர்மானம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அவளை எந்தக் கேள்வி கேட்பதற்கும் ஒருத்தரும் கிடையாது. யாருக்கும் எந்தப் பதிலும் சொல்கிற அவசியமும் அவளுக்கு இல்லை.

- இந்தச் சுதந்திரம் ஆரம்பத்தில் சந்தானலஷ்மிக்கு மிகப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்திருந்தது. ஆனால் நாட்கள், செல்லச் செல்லத்தான் தன்னுடைய வாழ்க்கை ஆள் அரவம் அற்ற 'காலி வீடு' போன்றது என்ற உண்மை உறைத்தது. அவளுக்கென்று யாரும் இல்லாத; யாருக்காகவும் அவளும் இல்லாத ஹாஸ்டல் வாழ்வின் தனிமையையும் வெறுமையையும் கொஞ்சம் கொஞ்சமாக சந்தானலஷ்மி வெறுக்க ஆரம்பித்தாள். அதுவும் தீபாவளி நேரத்திலும்; பொங்கல் சமயத்திலும் பெரும்பான்மையான ஹாஸ்டல் பெண்கள் அவரவர்களுடைய சொந்த ஊர்களுக்குக் கிளம்பிப் போய்விடும்போது பார்க்கவேண்டும் சந்தானலஷ்மியின் முகத்தை. அப்படியே செத்துப் போயிருக்கும்.... சொந்த உற்றார் உறவினர் அற்ற ஹாஸ்டல் வாழ்க்கையின் தனிமை நிலை பண்டிகை நாட்களில் விசுவரூபமாகத் தெரியும் அவளுக்கு. அப்படிப்பட்ட நேரங்களில் தன் எதிர்கால முதுமையை நினைத்தெல்லாம்கூட சந்தானலஷ்மியின் மனசு நடுங்கும். தம்பி சுந்தரேசன் ஒழுக்கமானவனாகவும்; பொறுப்பாக ஒரு இடத்தில் வேலை பார்ப்பவனாகவும் இருந்திருந்தால் அவனுடனாவது ஒரு சின்ன வாடகை வீட்டில் சமைத்துச் சாப்பிட்டு வந்திருக்கலாம். அந்த

வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது சந்தானலஷ்மிக்கு. சுந்தரேசன் நடத்தை சரியில்லாத நண்பர்களுடன் மனம் போனபடி முறையில்லாத வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான்.

சந்தானலஷ்மிக்கு இப்படி அண்ணன் தம்பி என்ற பெயரிலோ; தகப்பன் என்ற பெயரிலோ வாழ்வில் ஆண் என்பவனே இல்லாமல் போய்விட்டிருந்ததில் - இதையெல்லாம் ஈடுகட்டி விடுகிறமாதிரி கணவன் என்ற பெயரிலாவது ஒருத்தன் இருந்திருந்தால் அந்த ஆண் வாசனை அவளின் பெருமூச்சை ஆசுவாசப்படுத்தி இருக்கும். அதற்கும் ஒரு வழி பிறக்காததில்; ஹாஸடல் வாழ்க்கையின் தனிமை நெடி சந்தானலஷ்மிக்கு தாங்கமுடியாததாகப் போய்விட்டிருந்தது. இதையெல்லாம் தாங்கிக்கொள்ள முடியாமல் போகிற நேரங்களில் யாராவது ஒரு ஆணிடம் தகாதமுறையில் நடந்து கொள்ளலாமா என்ற ஆத்திரமே வரும் அவளுக்கு.... ஆனால் அவளைப் பிடித்த சனியனோ என்னமோ - அப்படி நடந்துகொள்கிற தைரியமும் அவளுக்கு வரவில்லை.... - இப்படிப் போய்க் கொண்டிருந்தது ஹாஸ்டலில் சந்தானலஷ்மியின் வாழ்க்கை.

இத்தனைக்கும் ஹாஸ்டலில் இருக்கும் பெண்கள் நிறைய பேருக்கு ஆண் நண்பர்கள் வெளி உலகில் இருக்கவே செய்தார்கள். அந்த நண்பர்களோடு அந்தப் பெண்கள் சினிமாக்களுக்கும் ஹோட்டல்களுக்கும் போவார்கள் வருவார்கள். சில பெண்கள் சொந்த ஊருக்குப் போவதாகச் சொல்லிவிட்டு இரண்டொரு நாள் ஆண் நண்பர்களுடன் லாட்ஜ் ஒன்றில் போய் தங்கியிருந்துவிட்டுக் கூட வருவார்கள். காதில் விழும் இந்த மாதிரிக் கதைகளையெல்லாம் சந்தானலஷ்மி வாயைப் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருப்பாள். இதிலும் அவளைப் பிடித்த சனியனோ என்னவோ; இந்த மாதிரியான சமாச்சாரங்களும் சந்தானலஷ்மியின் ஹாஸ்டல் தினங்களில் நடந்து தொலையவில்லை. அந்தக் கடுப்பு அவளின் மனதில் கரையோர முதலை மாதிரி கோரமாக வாயைத் திறந்தவாறு கிடந்தது. ஒரு ஆண் தனியாகக் கிடைத்தால் அவனைக் கடித்து குதற மனசால் சந்தானலஷ்மி எப்போதுமே தயாராக இருந்தாள். ஆனால் யதார்த்த வாழ்க்கையில் அவளால் செய்ய முடிந்த ஒன்றே ஒன்று- அவளுக்குப் பிடித்தமான சில ஆம்பளைகளுடன் உடலுறவு வைத்துக் கொள்வதைப் போல கற்பனை பண்ணிப் பார்த்துக் கொண்டதுதான்.... இந்தக் கற்பனை உடலுறவையும் எத்தனை நாளைக்குத்தான் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்.... கொஞ்ச நாளில் இதனால் உடம்பும் மனதும் சந்தானலஷ்மிக்கு



ஒரேயடியாக கொதித்துப் போனதுதான் அவளுக்குக் கிடைத்த ஒரே பலன்....

ஹாஸ்டல் வாழ்க்கையில் சந்தானலஷ்மி அணு அணுவாக அனுபவித்துக் கொண்டிருந்த இன்னொரு பெரிய மனவேதனை - யாரிடம் இருந்தும் கடிதமே வராத ஒரு சில ஹாஸ்டல் பெண்களில் அவளும் ஒருத்தி. யாராவது மனிதர்கள் இருந்தால்தானே அவளுக்குக் கடிதம் எழுதுவதற்கு.... ஆபிஸ் முடிந்து ஹாஸ்டல் அறைக்குத் திரும்பும் பல பெண்கள் வந்ததும் பார்ப்பது அவர்களுக்கு எதாவது கடிதம் வந்திருக்கிறதா என்பதைத்தான். கடிதம் எதுவும் வந்திருந்தால் உடனே அதைப் பிரித்து ஒரு தடவைக்கு இரண்டு தடவை வாசித்துப் பார்த்த பிறகுதான் அந்தப் பெண்கள் அவர்களின் அறைக் கதவையே திறப்பார்கள். அந்தக் காட்சிகளைப் பார்க்கும்போது சந்தானலஷ்மிக்கு மனதிற்குள் அப்படியொரு பொறாமையாக இருக்கும்.... விடுமுறை நாள் வந்துவிட்டால் சில பெண்களுக்கு யாருக்காவது கடிதம் எழுத உட்கார்ந்து விடுவதிலேயே அன்றைய பொழுது பூராவும் போய்விடும். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சந்தான லஷ்மிக்கு யாரோ எழுதினதுபோல தனக்குத் தானே வித விதமாகக் கடிதம் எழுதி போஸ்ட் செய்துகொண்டால் என்னவென்று ஒவ்வொரு நேரம் தோன்றி இருக்கிறது. ஆனால் அந்தக் காரியத்தைச் செய்ய அவளுக்கு இஷ்டமில்லை. அப்படி தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதற்கு சும்மா இருப்பதே நல்லதாகத் தோன்றியது அவளுக்கு. ஆனால் சந்தானலஷ்மி வேறொரு ரகசியமான காரியத்தைச் செய்தாள். ஹாஸ்டல் பெண்களுக்கு வருகிற கடிதங்களை அவர்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். யாரோ அவளுக்கு முகம் தெரியாத நபர் எழுதியிருக்கும் கடித விஷயங்களை படிக்கும்போது அவை அவளுக்கு எழுதப்பட்டதாகவே தெரியும். அதுவும் இப்படி அவள் படித்துப் பார்க்கும் கடிதங்கள் காதல் கடிதங்களாக இருந்துவிட்டால் - அது சந்தானலஷ்மியின் மனதை ஒரு வழி பண்ணிவிடும். சில நேரங்களில் ஏண்டா - சாமி படித்தோம் என்றாகிவிடும். காதல் சொட்டும் ஆடவனின் கடிதம் ஆடவ காதல் இல்லாத அவளின் 'காலியான வீடு' என்ற வாழ்வின் விஸ்தாரத்தை பலமடங்கு அதிகப்படுத்திக் காட்டிவிடும். சந்தானலஷ்மி நொந்து நூலாகிப் போக ஒரே ஒரு காதல் கடிதம் போதும்....

இப்படி நொந்து நூலாகிப் போய்க் கொண்டிருந்த நீண்ட ஹாஸ்டல் வாழ்க்கையில் சந்தானலஷ்மி கொஞ்சம் கொஞ்சமாக

'சீனியர்' வேறு ஆகிக்கொண்டிருந்தாள். நிலைமை இப்படியே போய்க் கொண்டிருந்தால் ஒருநாள் ஹாஸ்டலில் 'சீனியர் மோஸ்ட்' ஆகிவிடும் அபாயம் அவளின் மனக் கண்ணின் எதிரில் மிக அருகில் தோற்றம் தந்துகொண்டே இருந்தது. இந்த நினைப்பு அவளைப் போட்டு படுத்திய பாடு இருக்கிறதே - அந்தப் பாட்டை அப்படியே சொல்வதற்கு வார்த்தை கிடையாது. தலை நரைத்து நாடி நரம்பெல்லாம் தளரப் போகிற காலம் வரைக்கும் இதே ஹாஸ்டல் வாழ்க்கைதானா சந்தானலஷ்மியின் கதி....? நினைக்கும்போதே கண்களில் கண்ணீர் தளும்பிவிடும் அவளுக்கு. பேசாமல் விஷம் குடித்துச் செத்துப்போய் விடலாமாவென்ற எண்ணம்கூட சில நேரங்களில் வந்திருக்கிறது அவளுக்கு. ஆனால் விஷம் சாப்பிடுவதற்கான தைரியம் வரவில்லை.

சந்தானலஷ்மியைப் பொறுத்தவரையில் அவளுடைய வாழ்க்கையில் பெரிய ராஜகுமாரன் வரவேண்டாம். ஒரு ஆட்டோ ரிக்ஷாகாரன் வந்தால்போதும். அவளுக்கு ஆட்டோரிக்ஷா மேல் ஒரு ஈர்ப்பு உண்டு. மையல் உண்டு. அதனால் ஒரு ஆட்டோ ரிக்ஷாகாரனின் பழைய ஆட்டோவில் ஏறி உட்கார்ந்து கொண்டு வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் விழுந்து வாரி விபத்துக்கும் ஆளாகி பயணம் போவதற்குத் தயாராக இருந்தாள் அவள். வாழ்க்கையில் தனியாக நடந்து போகத்தான் பயந்து செத்தாள். தினமும் இந்தப் பயத்தில் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தாள். - இந்த நேரத்தில்தான் ஆபிசில் மார்பக சம்பவம் நடந்து சந்தான லஷ்மியின் வாழ்க்கைக்கு உயிர் கொடுக்கும் பிராண வாயுவாக அமைந்துவிட்டது....

❖

# 3

ஹாஸ்டல் வாழ்க்கையில் மூச்சுத்திணறிக் கொண்டிருந்தபோது ஆபிசில் நடந்துவிட்ட மார்பக விபத்து உயிர் தரும் பிராணவாயுவாகி விட்டதில் சந்தானலஷ்மிக்குள் புதுப்புது சுரப்பிகள் துரிதமாக இயங்கத் தொடங்கிவிட்டன. அவளின் உடல் பூராவும் இனிய உஷ்ண்மான திரவம் நிறைந்தோடிக் கொண்டிருந்தது. வாழ்க்கையில் யாரையாவது கல்யாணம் செய்துகொள்ளப் போகிற சந்தர்ப்பம் வரப்



போகிறதோ இல்லையோ; பாலுறவு என்ன என்பதை ஒரு ஆணுடன் சேர்ந்து அறிந்து அனுபவித்துவிட முடியும் என்ற நம்பிக்கை சந்தானலஷ்மியின் மனதில் திடீரென ஏற்பட்டுவிட்டது. இன்னொரு ஞானோதயமும் அவளுள் வந்தது. அவளின் பெரிய எடுப்பான மார்பகங்களைக் கொண்டே எத்தனை பெரிய ஆம்பளையையும் வசியப்படுத்த முடியும் என்ற புதிய நம்பிக்கையும் அவளுடைய மார்பகங்களைப் போல் உயர்ந்து தெரிந்தது. இந்த ஞானோதயம் கொஞ்சம் தாமதமாக ஏற்பட்டிருக்கிறதேயென்று சிறிது நேரம் சந்தானலஷ்மி வருத்தப்பட்டாள். இளமை விகசித்த அவளின் மிகப் பல நாட்கள் ஆண் இல்லாமல் வீணாகிப் போய்விட்டதேயென்று சிறிது நேரம் அங்கலாய்த்தும் கொண்டாள்.

-போனதெல்லாம் போகட்டும்; இனிமேல் இரண்டில் ஒன்று பார்த்து விடலாம். முதலில் கனகசபாபதி என்ன ஆகிறார் என்று பார்க்கலாம்.... எதிர்பார்க்கிற அளவுக்கு அவர் சரிப்பட்டு வராவிட்டால் வேறு ஆளைப் பார்க்கலாம். புருஷன் இல்லாமல் போனால் போகட்டும். ஆண் இல்லாமல் போய்விடக் கூடாது என்ற உறுதிக்கு வந்தாள் சந்தானலஷ்மி. இந்த உறுதியோடுதான் மறுநாள் காலை அவள் ஆபிசிற்குக் கிளம்பினாள்.

வழக்கமாக கைக்குக் கிடைக்கிற ஏதோ ஒரு புடவையை எடுத்து'காமாசோமா'வென்று கட்டிக்கொண்டு ஆபிஸ் போகிறவள் அன்று தேடிப் பார்த்து; இருக்கிறதிலேயே மிக நல்லதாக இருக்கிற புதுப் புடவையை எடுத்துக் கட்டிக்கொண்டாள். தொப்பை தெரியாமல் வழக்கமாக கட்டுகிற மாதிரி இல்லாமல் கொஞ்சம் தொப்பை தெரிகிற மாதிரி புடவையை இறக்கிக் கட்டிக் கொண்டாள். கழுத்துப் பகுதி சற்று தாராளமாக இறக்கி வெட்டப்பட்ட 'ப்ளவுஸை' எடுத்து அணிந்துகொண்டாள். இந்த மாதம் சம்பளம் வாங்கியதும் இரண்டு 'ப்ரா' வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டாள். பொதுவாக புது ப்ரா வாங்கப் போகிற போதெல்லாம் சந்தானலஷ்மிக்கு ஒரு தர்மசங்கடம் வந்துவிடும். சராசரியாக நிறைய பெண்கள் வாங்குகிற அளவைவிட பெரிய அளவில் அவளுடைய ப்ராவை வாங்கவேண்டும் அவள். ஆனால் இங்கே இன்னொன்றையும் சொல்லிவிட வேண்டும். புது ப்ரா வாங்கப் போகும்போது சந்தானலஷ்மிக்கு வருவது தர்மசங்கடம் மட்டும்தான் என்று ஒரேயடியாய் சொல்லிவிட முடியாது. தர்மசங்கடத்தின் பின்னால் ஒரு ரகசிய பெருமையும்தான்; அவளுடைய மனதில் ஏற்படும்.... - போதும்; இந்த பெருமைதான் மிச்சம் என்று சில நேரங்களில் சந்தானலஷ்மிக்கு எரிச்சலும்

வந்திருக்கிறது.... இனி இந்தப் பெருமையின் உச்சத்தில் போய் நின்று கொள்ளப் போவதாக தீர்மானம் செய்துகொண்டு அன்று அவள் ஆபிஸ் கிளம்பினாள். தினமும் முதலாளி கனகசபாபதியின் சிடுமூஞ்சிப் பார்வையை நோக்கி வேண்டா வெறுப்பாக ஆபிஸ் கிளம்புகிற சந்தானலஷ்மி அன்று கனகசபாபதி என்ற ஆம்பளையின் திருட்டுப் பார்வையை நோக்கி சுறுசுறுப்பாக புறப்பட்டாள்.

கனகசபாபதியின் நிலைமையும் இதே மாதிரியான மனதளத்தில் தான். எப்போதும் காலையில் சரியாக பத்து மணிக்கு ஆபிஸ் வந்துவிடுவார். இனிய விபத்து நடந்ததற்கு மறுநாள் காலையில் அவருக்கு இருந்த அசாதாரண பரவசத்தில் ஆபிஸ் கிளம்புவதை மிகவும் தாமதப்படுத்தினார். நேற்றைய ஞாபகத்துடன் காலையில் சந்தானலஷ்மியின் முகத்தைப் பார்க்க அதீத உணர்வுப் பிரவாகமாக இருந்தது அவரின் மனதில். ஓடிப் போய் சந்தானலஷ்மியின் மேல் ஓர் விஷமப் பார்வையை செலுத்த அவரின் மனசு ஒரு பக்கம் துடித்துக்கொண்டுதான் இருந்தது. இருந்தாலும் ஆபிஸ் கிளம்புவதை தாமதமாக்கிக் கொண்டிருந்தது. நேற்று நடந்தது சர்வ நிச்சயமாக விபத்துதான். அதை இனி எப்படித் தொடர்வது; அல்லது எதை நோக்கிச் செலுத்துவது; எப்படிச் செலுத்துவதென்று புலப்படாமல் அப்படியும் இப்படியுமான கற்பனைகளில் ஆழ்ந்திருந்தார். அந்தக் கற்பனைகளில் சந்தானலஷ்மியில் கண்ட மார்பகங்கள் வண்ண வண்ண ஊதப்பட்ட பலூன்களாக தெரிந்து கொண்டே இருந்தன.... அதே நேரம் அவருக்கும் சந்தான லஷ்மிக்கும் இடையே இருக்கும் உறவையும் கனகசபாபதி நிமிஷத்துக்கு ஒரு தடவை நினைவுபடுத்திக் கொண்டார். மேனஜிங் டைரக்டர் அவர். அவரிடம் சம்பளம் வாங்கும் சாதாரண 'பர்சனல் ஸ்டெனோ' அவள். அதுமட்டுமில்லை; இத்தனை வருஷமும் கனகசபாபதி சந்தானலஷ்மியிடம் ஒரு வேங்கைப் புலிபோல் இருந்திருக்கிறார். ஆபிசில் தினமும் அவளுக்கு அவர் சிம்ம சொப்பனம்.... இனியும் அவர் வேங்கைப் புலியாகவே தொடர்ந்தால் நேற்று நடந்த இனிய எதிர்பாராத விபத்து இனிய அனுபவங்களை நோக்கி தொடர வாய்ப்பு கிடையாது. இனிய புதிய அனுபவங்களை நோக்கி நேற்றைய விபத்தைச் செலுத்த வேண்டுமென்றால் கனகசபாபதி தொடர்ந்து சந்தானலஷ்மியிடம் சீறிப் பிறாண்டும் வேங்கைப் புலியாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது.

சிறிது நேரத்திற்கு கனகசபாபதியின் மனதில் ஊசலாட்டம் நடந்து கொண்டிருந்தது. ஆனால் இந்த ஊசலாட்டத்திலேயே மாட்டிக்



கொண்டு தவிக்கவில்லை அவர். அவருக்குள் வாலைச் சுழற்றிக் கொண்டிருந்த வேங்கைப் புலி தானாக விடைபெற்றுக் கொண்டு விட்டது. நிஜத்தில் கனகசபாபதி வேங்கைப் புலி கிடையாது. கனவுகள் பொய்த்துப் போனதில்; புயலாய் மூண்டு கிடந்த மோகத்திக்கு வடிகால் அற்றுப்போன சினத்தில் வெறுப்பில் - அவருள் பிறந்ததுதான் வேங்கைப் புலி. இத்தனை வருடங்களுக்குப் பிறகு மிக அருகில் மோகத்தின் மூலஸ்தானம் திரை நழுவி அவரின் பார்வைக்கு தரிசனம் தந்திருக்கும்போது வேங்கைப் புலிக்கு இனி வேலை கிடையாது. இரை கிடைத்துவிட்ட பிறகு புலியாவது சிங்கமாவது.... கனகசபாபதிக்குள் ஊசலாட்டம் அகன்று தீர்மானம் நிறைவேறிவிட்டது. நேற்றைய சம்பவம் ஒரு புதிய திருப்பத் திற்கான ஆரம்பம்தான் என்ற நம்பிக்கை வந்துவிட்டது அவருள். நினைத்தே பார்க்காத ஒரு கதவு நேற்று அவருக்குப் பக்கத்தில் திறந்து கொண்டிருக்கிறது. திறந்திருக்கும் கதவின் வழியாக அது இட்டுச் செல்லும் உலகத்திற்கு பிரவேசித்து விடவேண்டியதுதான்.... அந்த வாழ்க்கையில் தன்னுடைய 'முதலாளி' என்ற ஸ்தானத்தின் அதிகாரங்களையும் உத்தரவுகளையும் தான் இழக்கும்படியான நிலைமை வருமோ என்ற ஒரு பெரிய கேள்வியும் கனகசபாபதியின் அறிவில் - கடைசி கேளவியாய் எழுந்து அவரிடம் பதிலை கேட்டது. மிகச் சில நிமிடங்களிலேயே அதற்குப் பதில் சொல்லிவிட்டார் கனகசபாபதி. அவருடைய பாலுறவு வாழ்க்கை எந்த அழகிய கட்டுமானமும் எழும்பாத வெற்றுப் பாழ்மனையாக; காலிமனையாய்த்தான் இதுவரை தோற்றமாகவும் அனுபவமாகவும் தூர்ந்து போயிருக்கிறது.... அந்தக் காலிமனையில் கட்டுமஸ்தான ஏதோ ஒன்று திடீரென்று தட்டுப்படுகிறது. அது என்னவென்று அப்பட்டமாகப் பார்த்துவிடலாம். கனகசபாபதி எங்கேயும் இதற்காக மெனக்கெட்டு தேடிப்போகவில்லை. தானாக வந்து பார்வையிலும் கவனத்திலும் இடறுகிறது. என்னவென்று அதை தூக்கி நிறுத்தி உச்சிமுகர்ந்து பார்த்துவிடலாம். - இதற்காக முதலாளி என்ற கௌரவத்தையும் அதிகாரத்தையும் இழக்க வேண்டி வந்தால் தாராளமாக இழந்துவிட்டுப் போகலாம். கனகசபாபதிக்கு அதனால் நஷ்டம் கிடையாது. பாலுறவு லாபம்தான்....

கனகசபாபதியும் அந்த வருஷம் தீபாவளிக்கு வாங்கிய பேண்ட்டையும் ஷர்ட்டையும் தேடி எடுத்து அணிந்து கொண்டு; என்றும் இல்லாத வழக்கமாக கண்ணாடியில் தன் உருவத்தை ஒரு தடவைக்கு இரு தடவை பார்த்துவிட்டு புது மாப்பிள்ளை போன்ற மனதோரணையில் ஆபிஸ் கிளம்பினார் - கிட்டத்தட்ட ஒரு

மணிநேரம் தாமதமாக. -அன்றைய அவருடைய ஆபிஸ் பயணமும் மானசீகமாக சந்தானலஷ்மியை நோக்கித்தான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. என்றைக்கும்போல கனகசபாபதி அவருடைய மாருதி காரில்தான் போய் ஆபிசில் இறங்கினார். ஆனால் உணர்வுகளில் என்னமோ தனி விமானத்தில் சென்று இறங்கினாற் போன்ற மிதப்பும் பூரிப்பும்....

பொதுவாக ஆபிசில் அவருடைய அறைக்குள் போய் நுழைந்து கொண்டதும் பத்து நிமிடங்களில் சந்தானலஷ்மியை அன்றைய பணிகளுக்காக கூப்பிட்டுவிடும் கனகசபாபதி அன்று காலை நீண்ட நேரத்திற்கு அவளைக் கூப்பிடாமலேயே இருந்தார். அவருடைய பதட்டம் அவருக்கு. சும்மாவே நாற்காலியில் பிடித்துவைத்த பிள்ளையார் போல உட்கார்ந்து கொண்டிருந்தார். - அதேநேரம் அதே கதைதான் சந்தானலஷ்மியின் கதையும். கனகசபாபதி கூப்பிட்டதும் எழுந்து விரைய வேண்டிய அதிவேக மார்புத் துடிப்போடு அறைக்கு வெளியே அவளுடைய நாற்காலியில் சந்தானலஷ்மியும் பிடித்துவைத்த பெண்பிள்ளையார் மாதிரி வெறுமனே உட்கார்ந்திருந்தாள். ஒரு வித்தியாசம் - பெண் பிள்ளையார் கொஞ்சம் நகம் கடித்துக் கொண்டிருந்தார்....

கிட்டத்தட்ட நாற்பது நிமிடங்கள் சென்ற பின்தான் கனகசபாபதி யிடம் இருந்து சந்தானலஷ்மிக்கு அழைப்பு வந்தது. அழைப்பு வந்ததும் ஒரு நிமிடம் அவளுக்கு - பழைய சிடுமூஞ்சி முதலாளியின் குரலாகத்தான் கேட்டது. அப்புறம்தான் சுதாரித்துக் கொண்டாள். இது சிடுமூஞ்சியின் குரல் இல்லை. நேற்று திருட்டுப் பார்வை பார்த்த திருடனின் திருட்டுக் குரல். குரலிலேயே அந்தத் திருட்டுத்தனம் தெரிந்தது சந்தானலஷ்மிக்கு. திருடனின் முன்னால் போய் நிற்கும் முன் சந்தானலஷ்மி தன் தோற்றத்தை ஒருமுறை திருப்தியுடன் பார்த்துக்கொண்டாள். முதுகிலும் மார்பிலும் வழியும் வியர்வைக் கோடை உணர்ந்தவாறே கனகசபாபதியின் அறைக்குள் நுழைந்தாள். வழக்கமாக நாற்காலியில் மூஞ்சியை தூக்கி வைத்தபடி நாற்காலியில் ஏதோ ஒரு அழுக்குப் பிடித்த முதலாளியாக விறைப்பாக உட்கார்ந்திருக்கும் கனகசபாபதி அறையின் ஒரு ஜன்னல் ஓரத்தில் போய் நின்றபடி தெருவைப் பார்க்கிற மாதிரி பாசாங்கு பண்ணிக் கொண்டிருந்தார். உள்ளே நுழைந்த சந்தானலஷ்மி வேகமான மார்புத் துடிப்புடன் கனகசபாபதியின் ஆண் முதுகை இப்போதுதான் கவனிப்பதாக பிரமை அவளுக்கு. அதற்காக எத்தனை நிமிஷத்திற்கு ஆண் முதுகை



கவனித்துக் கொண்டிருப்பது.... சந்தானலஷ்மி தைரியமாக தொண்டையை செருமிக் காட்டினாள். ஆண்முதுகு ஆண் மார்பு ஆகியது. கனகசபாபதி சந்தானலஷ்மியை ஓர் புதிய இளைஞன் போல் பார்த்தார். நேற்றைய சம்பவம் அவரின் கண்களில் இருந்தது. ஒருவித இன்பக் கிளுகிளுப்பில் அவரின் முகம் பூரித்துப் போயிருந்தது. சந்தானலஷ்மியால் அவருடைய பார்வையை நேருக்கு நேராக சந்திக்க முடியவில்லை. நாணம் அவளுடைய பார்வையை அவளின் பாதங்களுக்குத் தாழ்த்தியது. சில நிமிஷங்கள் அவர்கள் இருவருக்கும் இடையே நிசப்தமாக ஓடின. பின்; கனகசபாபதி மெள்ள நடந்து சந்தானலஷ்மியை நெருங்கி நின்றார். மௌனமாக அவளையே பார்த்தார். சந்தானலஷ்மி வெட்கம் கலையாமலேயே அவரை நிமிர்ந்து பார்த்தாள். இந்தப் பார்வைக்குத் தான் காத்துக் கொண்டிருந்தவர் மாதிரி எந்தத் தயக்கமும் இல்லாமல் கனகசபாபதி சந்தானலஷ்மியை இரண்டு கைகளாலும் அணைத்துக் கொண்டார். சந்தானலஷ்மிக்கு இது ஆணின் மிக முதல் அணைப்பு. சொல்லப்போனால் ஒரு ஆணின் சட்டையே இப்போதுதான் முதன் முதலாக அவள் மேல் படுகிறது....

- காலம் காலமாக காமத்துடன் காத்திருந்த ஆணின் அந்த அணைப்புக்குள் சந்தானலஷ்மி அவளை இறுக நெகிழ்த்துக் கொண்டாள். ஓர் உஷ்ணம் ஒளி வேகத்தில் உடல் பூராவும் விரிவதை உணரமுடிந்தது அவளால். இன்னொன்றையும் மிக சுகமாக அவள் உணர்ந்தாள். அவளின் மார்பகம் மெலிதாக கனகசபாபதியின் நெஞ்சின்மேல் அழுந்தியிருந்தது.... தலைக்கு உயர்ந்த மோகத்துடன் சந்தானலஷ்மியை மேலும் இறுக அணைத்துக் கொண்ட கனகசபாபதி அவளின் மார்பு ஏற்றத்திற்கு வேகமாக அவரின் முகத்தை சரித்தார். சதை பெருத்த அவரின் முகத்தை சந்தானலஷ்மியும் இச்சையின் வேகத்தோடு அவளின் மார்பகத்திற்குள் மிக இறுக்கமாக அழுத்திக்கொண்டாள்....

-இப்படி ஆரம்பித்தது கனகசபாபதி சந்தானலஷ்மி பாலுறவு வாழ்க்கை. கொஞ்சநாள் இப்படியே சென்று கொண்டிருந்தது கனகசபாபதி சந்தானலஷ்மி பாலுறவு வாழ்க்கை. தொடர்ந்து இதனால் எத்தனையோ நாட்களுக்கு ராத்திரி வேளைகளில் சந்தானலஷ்மிக்கு தூங்கின மாதிரியும் இல்லை. தூங்காத மாதிரியும் இல்லை. இன்பக் கனவுகளும் இன்ப நினைவுகளும் கலந்த இனிய அனுபவ ஞாபகமாக ஒவ்வொரு நாள் இரவும் கழிந்து கொண்டிருந்தது. தினமும் ஆபிசில் சில நிமிடங்கள் அவளுடைய நெஞ்சின்மேல் முகத்தைப் புதைத்துச் சுகம் காண்பது

கனகசபாபதிக்கு அன்றாட ஆபிஸ் வேலை போலாகிவிட்டது. தினசரி இதற்காகவே ஆபிஸ் போகிறவள் மாதிரிதான் சந்தானலஷ்மி பொழுது விடிந்தால் ஆபிஸ் கிளம்பி ஓடத் தயாராக இருந்தாள். அவளுக்குள்ளும் கனகசபாபதிக்குள்ளும் மோக வெப்பத்தின் அனல் அலையாய் வீசிக்கொண்டிருந்தது. இந்த வெப்பத்தைத் தாங்க முடியாமல் சில நேரங்களில் உடையின் மறைப்புகள் இல்லாமல் அவளின் மார்பகங்களைக் காணுகிற வேகம் பெற்று விடுகிறபோது மட்டும் அதை அனுமதிப்பதில்லை சந்தானலஷ்மி. வேறு யாரும் சட்டென்று நுழைந்து விடமுடியாத கனகசபாபதியின் பிரத்யேக தனி அறைதான் என்றாலும் துணிகளை விலக்குவது அத்துமீறிய அபாய செயல் என்ற பயம் இருந்தது அவளுக்கு.

ஆனாலும் ஆணுக்கு உரிய இயல்பான வேகத்தில் வேட்கை உயரும் நேரங்களில் கனகசபாபதி துணிகளை நீக்கிக் காண சந்தானலஷ்மியிடம் எத்தனையோ தடவை கெஞ்சியிருக்கிறார். அவள் அதற்கு பெண்ணுக்கு உரிய இயல்பில் மசிந்தே கொடுக்கவில்லை. இம்மாதிரி நேரங்களில் பெண்ணிடம் ஆணுக்கு ஏற்படுகிற ஆற்றாமையின் இம்சை கனகசபாபதியின் மனதில் ஏற்பட்டு விடும். அப்போதெல்லாம் ஒரு பொய்யான கோபத்தை சந்தானலஷ்மியிடம் காட்டியவாறு முகத்தை 'உர்'ரென்று வைத்திருப்பார்.

இதெல்லாம் சந்தானலஷ்மிக்கு ரொம்ப நூதனமாக இருந்தது. ஆபிஸ் போய் வருவதே அவளுக்கு ஒரு இன்பக் கேளிக்கையாக மாறிப் போயிருந்தது. சில சமயங்களில் ஆ்பிசில் இருப்பது சினிமா தியேட்டரில் இருப்பதைப் போன்ற குதூகலத்தைத் தந்தது. தியேட்டர் திரையில் ஓடிக்கொண்டிருக்கும் சினிமாவின் கதாநாயகி அவள்தான். இத்தனை நாள் வரைக்கும் வில்லன் போல இருந்த கனகசபாபதிதான் கதாநாயகன். ஆனால் கொஞ்சம் வயதாகிவிட்ட கதாநாயகன். அப்படிப் பார்த்தால் கதாநாயகிக்கும்தான் கொஞ்சம் வயதாகிவிட்டது.... சந்தானலஷ்மி கனகசபாபதியின் வயதை சிறிதும் பொருட்படுத்தவில்லை. அவர் ஒரு திடகாத்திரமான ஆண். அதுவும் பண வலிமை உள்ள ஆண். இவை போதுமானதாக இருந்தது சந்தானலஷ்மிக்கு. அவளுடைய தீவிர முயற்சி எதுவும் இல்லாமல் அவளின் நெஞ்சின் மேல் விழுந்திருக்கிறான் அந்த ஆண். அதுவும் வசமாக விழுந்திருக்கிறான்.

அவனை விழ வைத்த பெருமை சந்தானலஷ்மியின் பெரிய மார்பகங்களுக்குத்தான். ஹாஸ்டல் அறையில் தனிமை வாய்த்த



போதெல்லாம் அவளின் மார்பகங்களை சந்தானஷ்மி பெருமிதத்தோடும் நன்றியோடும் பார்த்துக் கொண்டாள். நிஜமாகவே அவளுடைய அவைகளுக்கு புதிய அர்த்தங்களும்; நூதன பரிமாணங்களும் கிடைத்துவிட்டன. - அதே அர்த்த மாற்றமும்; பரிமாணப் புதுமையும் சந்தானலஷ்மியின் வாழ்விலும் நிகழ்ந்தன....

❖

## 4

ஆபிசில் அவசர அவசர அணைப்புகளும்; முத்தங்களுமாக தொடக்கம் கொண்டிருந்த கனகசபாபதி - சந்தானலஷ்மி இவர்களின் புதிய உறவிற்கு நாட்கள் செல்லச் செல்ல இதெல்லாம் போதவில்லை. பெரிய யானைப் பசிக்கு சின்ன சோளப்பொரி கொடுத்த மாதிரிதான் இருந்தது இது. முழுமையான பாலுறவிற்கு அவர்கள் இருவரின் உடம்பும் மனதும் பொங்கி எழும்பின. சின்னக் குழந்தையாக இருக்கின்ற வரைக்கும்தான் சாக்லேட் மிட்டாய் போன்றவை போதுமானதாக இருக்கும். பெரிய ஆளாகிவிட்டால் கோழி பிரியாணி மீன்குழம்பு போன்ற சமாச்சாரங்கள்தான் விசேஷம். கனகசபாபதிக்கு பிரியாணி சாப்பிடுகிற ஆசை வரும்போது சந்தானலஷ்மிக்கு மட்டும் அந்த ஆசை வராமல் இருக்குமா.... அவளுக்கும் வந்தது. ஆனால் கனகசபாபதிக்கு இதுவரை பிரியாணியை (அவரைப் பொறுத்தவரையில் அது பிரியாணி யிலேயே சேர்த்தி கிடையாது என்பது வேறு விஷயம்....) வீட்டில் மட்டும்தான் - அதுவும் ஆடிக்கொரு தடவையோ அமாவாசைக்கு ஒரு தடவையோ சாப்பிட்டுத்தான் வழக்கம். இதுவரை வெளியில் கை நனைக்காத ஆசாமி அவர்.... தெரிந்தோ தெரியாமலோ - ஏதோ ஒரு விதத்தில் கனகசபாபதி - ஒரு வீட்டுப் பறவை. வீடு என்ற கூட்டைவிட்டுப் பறந்து பார்க்கிற பிரக்ஞைகூட இல்லாமல் போனவர். கல்யாணத்திற்கு முன்பும் சரி; கல்யாணத்திற்குப் பிறகும் சரி; வீடு விட்டால் ஆபிஸ்; ஆபிஸ் விட்டால் வீடு என்ற வாழ்க்கை வட்டத்திற்கே பழக்கப்பட்டுப் போனவர்.

கல்யாணமாகி நான்கு வருஷங்கள் கழித்து; ஒரு அந்தஸ்திற்காக; அதுவும் மனைவி வனிதாமணியின் வற்புறுத்தலுக்காக பணக்கார

கனவான்களின் அமைப்பு ஒன்றில் உறுப்பினராகிக் கொண்டாரே தவிர அதன் செயல்பாடுகள் எதிலும் கனகசபாபதி கொஞ்சம்கூட ஆர்வம் காட்டியது. முதலில் அந்த மாதிரி இடங்களுக்கு வனிதாமணியை கூட்டிக்கொண்டு போவதற்கே ஒரு தாழ்வு மன்பான்மை அவரிடம் இருந்தது. அந்த ஆஸ்த்மாகாரியைக் கூட்டிக்கொண்டு போய்விட்டாலும் - என்ற எரிச்சல் இருந்தது அவரிடம். அதனாலேயும் கனகசபாபதி வீட்டைவிட்டு வெளியேறுவதை தவிர்த்தார். சாதாரண பேச்சில்கூட சில இடங்களில் சில ஆண்கள் அவர்களின் மனைவியைப் பற்றி ஆசையோடும் பெருமையோடும் சொல்லிக் கொள்கிற மாதிரி கனகசபாபதியால் மனைவி வனிதாமணி பற்றி ஒரு வார்த்தைக்கூட மனம் திறந்து சொல்லிக்கொள்ள முடியாது. சொல்லிக் கொள்ளவும் எதுவும் கிடையாது. இப்படிப்பட்ட ரகசியமான காரணங்களால் வெளியிடங்களில் ஆண்களோடுகூட சகஜமாகப் பேசுகிற தன்மையை முற்றிலுமாக இழந்துவிட்டிருந்தார் அவர்.

இப்படியெல்லாம் காரணங்கள் மேல் காரணங்கள் சேர்ந்து கனகசபாபதி வீட்டுக்குமேல் எதுவும் தெரியாத கிணற்றுத் தவளை போல் ஆகிவிட்டிருந்தார். கிணற்றுக்குள்ளும் அவர் ஆனந்த நீச்சல் அடித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் கிணற்றைவிட்டு இந்தப் பக்கம் அந்தப் பக்கம் கொஞ்சம் பார்த்து வைக்கலாம் என்கிற மாதிரியான எண்ணம் மட்டும் ஏற்கனவே சொன்னதுபோல கனகசபாபதிக்குள் ஒருநாள்கூட வந்தது கிடையாது. ஆனால் - ஆபிஸ் அறைக்குள் சந்தானலஷ்மியுடன் இனிய விபத்து நடந்துவிட்ட நூறு நாட்களுக்குப் பிறகு கனகசபாபதி என்ற கிணற்றுத் தவளைக்கு இந்தப் புதிய கிணறுகூட போதவில்லை. தொடர்ந்து பாதிக்கிணறு தாண்டின கதையாகவே போய் கொண்டிருந்ததால் அவர் முழுக் கிணறும் தாண்ட ரொம்ப ஆசைப்பட்டார்.

சந்தானலஷ்மியும்தானே இதுபோன்ற படகில்; ஒருமாதிரியான கிணற்றுக்குள் இருந்தாள்.... ஒரு கிணற்றுக்குள் போய் எந்தப் படகை எப்படி ஓட்ட....அவளுக்கும் அதனால் என்ன பண்ணுவதென்று தெரியவில்லை. அவளும் முழுக்கிணறு தாண்டுவதற்கு ஆசையோடு தயாராக இருந்தாள்.

கிணற்றுத் தவளையாக இருந்த கனகசபாபதி மண்டையை பிய்த்துக் கொண்டு ரொம்ப தீவிரமாக யோசனை செய்து பார்த்தார். இவ்வளவு பெரிய யோசனை கிணற்றுத் தவளையாக இருந்ததால் தான்.... தொடர்ந்து யோசனை செய்துகொண்டே இருந்ததில்



கனகசபாபதிக்கு ஒரு வழி தெரிந்துவிட்டது. கம்பெனி வேலையாக கனகசபாபதி அவ்வப்போது வெளியூர்களுக்குச் சென்று வருவார். அவர் போக வேண்டும் என்கிற அவசியமெல்லாம் கிடையாது. அவரிடம் பணிபுரிபவர்கள் போய் வந்தாலே போதும். ஆனாலும் ஆஸ்த்மா நோயாளியான வனிதாமணியுடன் நடத்திக் கொண்டிருக்கும் சுவாரஸ்யம் இல்லாத வறண்ட இல்லற வாழ்க்கையை விட்டு சில நாட்களாவது வெளியே இருந்துவிட்டு வரலாம் என்ற எண்ணத்தில் கனகசபாபதியே கிளம்பிவிடுவார். சேலம்; பங்களூர்; கோயம்புத்தூர்; ஹைதராபாத் இதெல்லாம் கம்பெனி வேலையாய் அவர் போய் வரும் சில ஊர்கள். இந்த முறை கோயம்புத்தூர் போகும்போது கூடவே சந்தானலஷ்மியையும் யாருக்கும் தெரியாமல் அழைத்துப் போய்விட்டு வந்தால் என்னவென்று தோன்றியது அவருக்கு. இப்படி ஒரு வழி பிறக்கும் என்று கனகசபாபதியே எதிர்பார்க்காததால் இந்த எண்ணம் தோன்றியதுமே அவருக்குள் இன்பப் பெருமூச்சு ஏற்பட்டது. வாழ்க்கையில் இத்தனை வயது சென்றபின் அவருக்கு ஒரு புதிய பிரதேசத்திற்கு இட்டுச் செல்கிற புதிய கதவு ஒன்று திறக்கப் போவது தெரிந்தது. - அந்த கதவின் வழியே ஒரே ஓட்டமாக ஓடிவிடலாம் என்ற நினைப்பு வரவில்லை கனகசபாபதிக்கு. தோன்றும் போதெல்லாம் போய் வர முடிந்தால் போதும். அதற்குமேல் எதுவும் வேண்டாம்....

இந்த கோயம்புத்தூர் விஷயத்தை கனகசபாபதி சந்தானலஷ்மி யிடம் சொன்னாரோ இல்லையோ அந்த நிமிஷமே அவள் கோயம்புத்தூருக்குப் பெட்டியைத் தூக்கத் தயாராக இருந்தாள். வாழ்க்கையில் தாம்பரம் தாண்டிப் போயிராத அவளின் மனம் கோயம்புத்தூருக்கு ரயில் ஏற பரபரத்தது. கிட்டத்தட்ட அவளுடைய கதையும் கனகசபாபதியின் கதைதானே.... அவருக்காவது பெயருக்கு ஒரு ஆஸ்த்மாகாரி இருந்தாள். சந்தானலஷ்மிக்கு அதுவும் கிடையாது. அதனால் அவள் நடுநிசியில் சுவர் ஏறிக் குதித்துக் கிளம்பக்கூட தயாராக இருந்தாள். ஆனால் கனகசபாபதி அப்படியெல்லாம் அவசரப்படவில்லை. சந்தானலஷ்மி இனி அவருடைய கிணற்று நீர். அதை எந்த வெள்ளம் வந்தும் அடித்துக்கொண்டு போய்விட முடியாது. இது உறுதி. ஆனால் அதற்காக கிணற்று நீரை கனகசபாபதி உடனே கோயம்புத்தூர் அழைத்துப் போக தயாராக இல்லை. காரணம் - கிணற்று நீரான சந்தானலஷ்மியின் தோற்றத்தில் ஒரு மாதிரியான 'கச்சாத்தனம்' இருந்தது. ஒருவித 'மலினம்' இருந்தது. சந்தானலஷ்மி

யிடம் இருந்த சற்று கரடுமுரடான கவர்ச்சி பார்க்கக் கொஞ்சம் கௌரவத்திற்கு அப்பாற்பட்டதாக தெரிந்தது. அதுவும் மிகவும் விலை குறைந்த வாழ்க்கை வாழ்ந்தே பழகிப் போயிருக்கும் அவளை மிக விலை உயர்ந்த கோயம்புத்தூருக்கு அழைத்துப் போனால் சந்தானலஷ்மி பார்க்கிறவர்களுக்கு அவருடைய மனைவி போல் தெரிவாளா என்பது சந்தேகத்திற்கு உரியதாக இருந்தது கனகசபாபதிக்கு. யாரோ ஒரு பெண்ணைத் தள்ளிக்கொண்டு வந்திருக்கிறார் என்றும் பார்க்கிறவர்களுக்குத் தோன்றுவதற்கு வாய்ப்பு அதிகம் இருந்தது - அப்படியெல்லாம் தெரியக்கூடாது.... சந்தானலஷ்மி கனகசபாபதியின் மனைவி இல்லாவிட்டாலும் மனைவி போல் தெரியவேண்டும். இது ரொம்ப ரொம்ப அவசியம் அவருக்கு. அவளும் விலை உயர்ந்த வாழ்க்கை வாழும் ஒரு சீமாட்டி போலத் தெரியவேண்டும். அதற்காக கனகசபாபதி செய்ய வேண்டிய முதல் காரியம் - சந்தானலஷ்மி உடனே விலை உயர்ந்த பணக்கார சாப்பாடாக தினமும் சாப்பிட்டுத் தள்ள நல்லதாக ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். தொடர்ந்து குறைந்தது ஒரு மாதம் அப்படி அவள் அருமையான பணக்கார சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டே வந்தால் உடம்பில் பளபளப்பும் வாளிப்பும் ஏற்பட்டு பார்க்க கனகசபாபதியின் அந்தஸ்துக்கு விகற்பமாகவோ வித்தியாசமாகவோ தெரியாது. கனகசபாபதியும் பெருமையோடு நெஞ்சைத் தூக்கிக்கொண்டு சந்தானலஷ்மியை கோயம்புத்தூருக்கும் அழைத்துப் போய் வரலாம் கொடைக்கானலுக்கும் அழைத்துப் போய் வரலாம்.... - இதற்கு என்ன பண்ணவேண்டுமோ அதை அவர் பண்ணினார்.

தினமும் மாலை ஆபிஸ் முடிந்ததும் ஹாஸ்டலுக்குப் போவதற்கு முன் சந்தானலஷ்மியை பெரிய ஹோட்டல்களுக்குப் போய் பாதாம் அல்வா; நல்ல ரசகுல்லா; குலாப்ஜாமூன் போன்ற விலை உயர்ந்த சத்து மிகுந்த இனிப்புகளை நிறைய வாங்கிச் சாப்பிடச் சொன்னார். முடிந்தால் ராத்திரியில் கூட ஹாஸ்டலில் சாப்பிடாமல் வெளியில் பாசுமதி அரிசியில் தயாரித்த பிரியாணி வகையறாக்களை வாங்கி சாப்பிடச் சொன்னார். அத்தோடு பாதாம் பால்; சிம்லா ஆப்பிள் சாறு போன்றவற்றையும் வாங்கி அவளை டம்ளர் டம்ளராக குடிக்கச் சொன்னார். - இப்படியெல்லாம் சாப்பிட வைத்தால் எப்படியும் ஒரு மாதத்தில் சந்தானலஷ்மியின் உடம்பில் தெரியும் 'நாட்டுக்கட்டை கச்சாத்தனம்' மறைந்து போய் ஒரு ஜிலுஜிலுப்பு வந்துவிடும் என்பது கனகசபாபதியின் நம்பிக்கை. அப்போது பார்ப்பதற்கும் சந்தான லஷ்மி அவருக்கு பொருத்தமான கொஞ்சம் பணக்கார களையோடு



இருப்பாள். விலை உயர்ந்த புடவைகளும் புதிதாக வாங்கி அவள் கட்டிக்கொண்டால் கனகசபாபதி பயப்படவே வேண்டிய தில்லை....

வருஷா வரஷம் சம்பள உயர்வு அறிவிக்கும்போது முந்நூறு ரூபாய் 'இன்க்ரிமெண்ட்' கொடுப்பதற்கு கனகசபாபதி அத்தனை யோசனை செய்வார். இப்போது உடம்பில் பளபளப்பும் தளதளப்பும் கூடிய பணக்கார களை வரும்படி சாப்பாடு சாப்பிடுவதற்காக சந்தானலஷ்மிக்கு அவர் தூக்கிக் கொடுத்த தொகை எவ்வளவு தெரியுமா? ஐந்தாயிரம் ரூபாய்.... அதற்கு முன் அவள் மொத்தமாக ஐந்தாயிரம் ரூபாயை கையால் தொட்டுக்கூட பார்த்ததில்லை.... அந்தப் பணத்தை சந்தானலஷ்மி கனகசபாபதி யிடம் இருந்து வாங்கிக் கொண்டபோது நிஜமாகவே உணர்ச்சி வசப்பட்டாள். பணத்தை வாங்கிக்கொண்ட கையோடு அவரின் புறங்கையைப் பற்றி சந்தானலஷ்மி நன்றியுடன் முத்தமிட்டாள். பதிலுக்கு கனகசபாபதியும் அவளை நன்றியுடன் அணைத்து முத்தமிட்டார். விலை உயர்ந்த ஹோட்டல்களுக்கு சாப்பிடுவதற்கு அவளை கனகசபாபதியையே அழைத்துக்கொண்டு போகச் சொன்னாள் சந்தானலஷ்மி. அதை மட்டும் தன்னிடம் எதிர்பார்க்க வேண்டாம் என்று அவர் தாட்சண்யம் இல்லாமல் மறுப்புத் தெரிவித்து விட்டார். எந்தக் காரணத்தைக் கொண்டும் சென்னையில் அவரும் சந்தானலஷ்மியும் ஒன்றாக சேர்ந்தாற்போல யாருடைய பார்வையிலும் பட்டுவிடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார் கனகசபாபதி. சந்தானலஷ்மிக்கு முதலில் இது சிறிது ஏமாற்றமாகத்தான் இருந்தது. ஆனாலும் இதற்காக அந்த நேரம் அவள் பெரிதாக வருத்தமும் பட்டுவிடவில்லை. வந்ததை வரவு வைத்துக்கொள்கிற மனநிலையில்தான் சந்தானலஷ்மி அந்த நிமிஷம் இருந்தாள். அதனால் கனகசபாபதியை வற்புறுத்தாமல் அன்று சாயந்தரமே அவள் அவர் தந்த பணத்துடன் பெரிய ஹோட்டல் ஒன்றுக்குச் சாப்பிடுவதற்காக தனியாகவே கிளம்பிவிட்டாள்.

முதலில் சந்தானலஷ்மிக்கு அந்தப் பெரிய ஹோட்டலுக்குள் தனியாக போவதற்கு மிகவும் பயமாக இருந்தது. யாரோடும் சேர்ந்துகூட இப்படி விலை ஒசத்தியான ஹோட்டல்களுக்குள் சாப்பிடப் போனதில்லை அவள். ரொம்பவும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டுதான் சந்தானலஷ்மி அந்த ஹோட்டலின் படிகளில் ஏறினாள். பணக்கார உலகத்திற்குள் நுழைகிறோம் என்ற இனிய எண்ணம் அவளின் மனதுள் ஓடிக்கொண்டிருந்தது. நிஜமாக

அந்த ஹோட்டலின் உள் அரங்கம் பணக்காரத்தனமாகத்தான் ஜொலித்துக் கொண்டிருந்தது. மங்கலான வெளிச்சத்தில் ஒரு நாற்காலியைத் தேடி அமர்ந்து கொண்ட சந்தானலஷ்மிக்கு அந்த நிமிஷமே தான் பணக்காரியாகிவிட்ட பிரமை கலந்த பயம் வந்தது.

சர்வர்கள் முதலில் சந்தானலஷ்மியை கேள்விக்குறியோடுதான் பார்த்தார்கள்.... எங்கேயோ போக வேண்டியவள் வழி தவறி எங்கேயோ வந்துவிட்டாளாவென்ற அர்த்தத்துடன் பார்த்தார்கள். அப்படியெல்லாம் இல்லாவிட்டாலும்கூட அவள் ஒரு ஸ்பெஷல் மசாலா தோசைதான் ஆர்டர் கொடுக்கப் போகிறாள் என்று அலட்சியமாய் நினைத்தார்கள். எப்போதாவது இப்படி ஒரு 'கேஸ்'- சர்வர்களின் அனுபவத்தில் அந்த ஹோட்டலுக்கு அத்தி பூத்தாற்போல் வந்துவிடுவதுண்டு. வந்து ஒரு ஸ்பெஷல் மசாலா தோசையை மட்டும் சாப்பிட்டுவிட்டு பில் கேட்பதும் உண்டு. இதையேதான் சர்வர்கள் சந்தானலஷ்மியிடமும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. சந்தானலஷ்மி ஒரு பாதாம் அல்வா ஆர்டர் கொடுத்தாள். ரொம்ப மரியாதையாக அவளுக்கு பாதாம் அல்வா வந்து சேர்ந்தது. சின்ன பலாச்சுளை அளவில் வந்த பாதாம் அல்வாவெல்லாம் சந்தானலஷ்மியின் ஒரு வாய்க்கு காணவில்லை அதன் அமிர்தமான ருசியும் சொக்க வைத்ததால் சர்வரை கூப்பிட்டு சந்தானலஷ்மி இன்னொரு பாதாம் அல்வா ஆர்டர் செய்தாள். இரண்டாவது பாதாம் அல்வா ஆர்டர் கொடுக்கும் 'கஸ்டமரை' அந்த சர்வர் அவனுடைய சர்வீசில் அப்போதுதான் பார்க்கிறான். 'யெஸ் மேடம்' என்று ஓங்கி ஒரு சல்யூட் அடித்துவிட்டு வேகமாக உள்ளே ஓடினான்.

அன்று ஹோட்டலில் சந்தானலஷ்மி சாப்பிட்டது - இரண்டு பாதாம் அல்வா; இரண்டு கட்லெட்; ஒரு தக்காளி ஆம்லெட்; ஒரு கண்ணாடி கோப்பை நிறைய ஃபலூடா ஐஸ்க்ரீம்.... எண்ணி பத்து நாள்தான்; சாப்பிட்ட சாப்பாட்டில் சந்தானலஷ்மிக்கு உடம்பு பளபளவென்றாகி கனகசபாபதியுடன் கோயம்புத்தூருக்கு ரயில் ஏற ஓரளவு தயாராகிவிட்டது. ஆனால் இதற்கு பாதாம் அல்வாவும் ஃபலூடா ஐஸ்க்ரீமும்தான் காரணம் என்று சொல்லிவிட முடியாது. வாழ்க்கையில் தனக்கும் ஒரு ஆணின் ஸ்பரிசம் கிடைத்துவிட்ட குதூகலமும்; ஆபிசில் தினமும் அந்த ஆணிடம் கிடைத்துக் கொண்டிருக்கும் மோகம் பெருகிய அணைப்புகளும்; ஆவேச முத்தங்களும்தான் காரணம். கொஞ்ச நாட்களிலேயே சந்தானலஷ்மி யின் உடம்பு பொங்கிய பால்போல் ஆகிவிட்டிருந்தது. ஹாஸ்டலில்



பல பெண்கள் என்ன ஏதுவென்று வாயைத் திறந்து அவளை கேட்டே விட்டார்கள். சந்தானலஷ்மி யாரிடமும் வாயைத் திறக்கவில்லை. வாயைத் திறக்கக்கூடாது என்பது கனகசபாபதியின் கறாரான உத்தரவு. மறந்துகூட உத்தரவை மீறக்கூடாது என்பதை அவர் பலமுறை சந்தானலஷ்மியிடம் ஞாபகப்படுத்தி வைத்திருந்தார். அவரின் உத்தரவை மீறினால் எங்கே அவர் பழையபடி சிடுமூஞ்சி முதலாளியாகி விடுவாரோ என்ற பயம் அவளுக்குள் கெட்டியாக இருந்துகொண்டிருந்ததால் சந்தானலஷ்மியும் எந்தக் காரணத்தாலும் கனகசபாபதியின் உத்தரவை மீறுவதாக இல்லை.

கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களில் கனகசபாபதி விரும்பிய பணக்கார பளபளப்பும் வாளிப்பும் சந்தானலஷ்மியின் உடம்பில் பரிபூரணமாகத் தெரியத் தொடங்கியதும் இனி பார்ப்பதற்கு சந்தேகத்திற்கு உரிய விதத்தில் பார்க்கப்படும் சாத்தியம் இல்லை என்ற நம்பிக்கையும் தைரியமும் அவருக்கு வந்தது. கோயம்புத்தூருக்குக் கிளம்ப நல்ல தேதியாக பார்த்தார். ஒரு தேதியையும் தீர்மானம் செய்து அதை பதினைந்து நாள் முன்னதாகவே சந்தானலஷ்மியிடம் தெரிவித்தார். தேதியை கேளவிப்பட்டதும் அவளுடைய உடம்பின் சில முக்கியமான பிரதேசங்கள் இன்பத்தில் அதிர்ந்தன. அந்த தேதிக்கு பத்து நாட்களுக்கு முன்பாகேவ சந்தானலஷமி பெட்டி படுக்கையோடு தயாராகிவிட்டாள்....

❖

## 5

நவம்பர் முப்பதாம் தேதிக்கு கோயம்புத்தூர் செல்ல கணகசபாபதி எப்போதும் போல சேரன் எக்ஸ்பிரஸ்ஸில் முதல் வகுப்புப் பெட்டியில் அவருக்கான பயணச் சீட்டை ஏஜென்சி மூலமாக வாங்கிவிட்டார். அதே தேதியில் அதே ரயிலில் இரண்டாம் வகுப்புத் தூங்கும் வசதிகொண்ட பெட்டியில் சந்தானலஷ்மி அவளுக்கான பயணச்சீட்டை அவளாகவே மாம்பலம் ஸ்டேஷனுக்குப் போய் ரிசர்வ் செய்துகொண்டாள். இரண்டு பேரும் ஒரே பெட்டியில் பயணம் செய்யக்கூடாது என்பது கனகசபாபதியின் மற்றொரு உத்தரவு.

திட்டமிட்டபடி சந்தானலஷ்மி கோயம்புத்தூருக்குக் கிளம்புவதற்கு முந்தின நாளே உடம்பு சரியல்லையென்று பொய் சொல்லி ஆபிசில் லீவ் லெட்டர் கொடுத்துவிட்டாள். அரைநாள் லீவ் கேட்டாலே ஆயிரத்தெட்டு கேள்வி கேட்கும் கனகசபாபதி; அன்று ஒரு சின்னக் கேள்விக்கூடக் கேட்காமல் சந்தானலஷ்மியின் லீவ் லெட்டரில் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்திட்டபோது மொத்த ஆபிசும் வியப்பில் ஆழ்ந்து விட்டது. ஆனால் வியப்புக்கு மேல் வேற எந்தவிதமான நினைப்பும் யாருக்கும் வரவில்லை. வருவது சாத்தியமும் இல்லை. - ஆபிசில் விஷயம் இந்த மாதிரி. நீண்ட ஹாஸ்டல் வாழ்க்கையில் ஹாஸ்டலைவிட்டு ஒருநாள்கூட எங்கேயும் வெளியில் போய் தங்கியிராத சந்தானலஷ்மி ஆபிஸ் தோழி ஒருத்திக்கு கோயம்புத்தூரில் கல்யாணம் என்றும்; அதற்குச் சென்றுவிட்டு நான்குநாள் கழித்துத்தான் வருவேன் என்றும் வார்டனிடம் சொன்னபோது வார்டனுக்கும்தான் ஆச்சர்யமாக இருந்தது. கொஞ்சம் நம்பமுடியாமலும் இருந்தது. ஆனால் கோயம்புத்தூர் சென்ற வர அனுமதி தர முடியாதென்று சொல்வதற்கு உரிமை இல்லாததால் ஹாஸ்டல் வார்டன் சந்தானலஷ்மிக்கு அனுமதி தந்துவிட்டாள். சந்தானலஷ்மிக்கு இறக்கைகள் இல்லை. இருந்திருந்தால் கும்மாளத்தில் சிறகடித்தி ருப்பாள்.... கோயம் புத்தூருக்கு பறந்தே கிளம்பி இருப்பாள்.... சென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கி ஆட்டோ ரிக்ஷாவில் ஏறிப் புறப்பட்டபோது சுதந்திரம் கிடைத்த பறவையாகத்தான் தன்னை அவள் உணர்ந்தாள்.

சந்தானலஷ்மியின் வாழ்க்கையின்·முதலாவது நீண்ட ரயில் பயணம் அது.... அதுவும் முதலாவது முழு பாலுறவு அனுபவத்தை நோக்கிச் செல்கிற மிக முதல் பயணம்.... இரவு சரியாக பத்து மணிக்கு 'சேரன் எக்ஸ்பிரஸ்' சின்ன அதிர்வோடும்; சிறிய குலுங்களோடும் புறப்பட்டபோது சந்தானலஷ்மியின் பாலுணர்வு களும்தான் அதிர்ந்து சிலிர்த்தன.... ஒரே ஊரை நோக்கி; ஒரே ரயிலில்; ஒரே நோக்கத்திற்காக; ஆனால் வேறு வேறு பெட்டிகளில் கனகசபாபதியும்; சந்தானலஷ்மியும் அந்த இரவுப் பயணம் முழுவதும் தூக்கம் வராமலேயே பயணமாகிக்கொண்டிருந்தார்கள்.

இப்படி கோயம்புத்தூர் நோக்கி ஓடத் தொடங்கிய அவர்களின் பாலுறவுப் பயணம் அத்தோடு நின்றுவிடாமல் பங்களூர்; ஹைதராபாத் என நாலா பக்கமும் ஓடி பாலுறவுத் திரவியம் தேடியது எண்ணற்ற வருஷம் பருவ மழை பொய்த்துப் போயிருந்த பூமிபோல் இருந்த சந்தானலஷ்மியின் உடம்பு இப்போது விடாமல் கொட்டிய



பாலுறவுக்கன மழையில் மழைக்காலத்து வாழைத்தோப்புபோல பச்சைப் பசேல் என்றாகிவிட்டது.... போதாதற்கு இன்னமும் தொடரும் பாதாம் அல்வா; ஃபலூடா ஐஸ்கிரீம் - எல்லாம் சேர்ந்துகொண்டு சந்தானலஷ்மியின் உடல் தோற்றத்தை விலை உயர்ந்த மினுமினுப்பான நிமிர்ந்த ஜெர்சி பசு போலக் காட்டியது. வாரத்திற்கு இரண்டு கிலோ எடை அவளுடைய உடம்பில் நீர்மட்டம் உயர்வது போல வேகமாக உயர்ந்து கொண்டிருந்தது. அப்படி இருக்கும்போது அவளின் மார்பகங்களின் எழுச்சியையும் வளர்ச்சியையும் பற்றிச் சொல்லவே வேண்டாம். வீரியம் செறிந்த சூரியகாந்தி மலர்போல விரிந்து மலர்ந்து போயிருந்தன. பார்க்கப் பார்க்க சந்தானலஷ்மிக்கே பரவசத்தையும் சிலிர்ப்பையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை.... அவளாலேயே தாங்கிக்கொள்ள முடியாதபோது கனகசபாபதியால் மட்டும் தாங்கிக்கொள்ள முடியுமா? அவராலும் தாங்கிக்கொள்ள முடியவில்லைதான்....

அதனாலேயே வேலை எதுவும் இல்லாதபோதும்கூட முக்கியமான வேலை ஒன்றை வலிய ஏற்படுத்திக்கொண்டு கனகசபாபதி கோயம்புத்தூருக்கும் பங்களூருக்கும் ரயில் ஏற தயாராக இருந்தார். வேலை வேலையென்று இப்படி கனகசபாபதி வெளியூர் கிளம்பிச் செல்கிற நேரத்தில் எல்லாம் சந்தானலஷ்மிக்கும் சரியாக உடம்பு சரியில்லாமல் போய்விடுகிறது. ஆபிசில் சம்பளம் இல்லாத லீவ் போடுகிறாள். ஆனால் லீவ் முடிந்து ஆபிஸ் வரும்போது பார்த்தால் உடம்பு சரியில்லாமல் இருந்துவிட்டு வருபவள் மாதிரி கொஞ்சம்கூடத் தெரியமாட்டாள். சிறிது நேரத்திற்கு முன்புதான் தேன்நிலவு கொண்டாடிவிட்டு வருகிறவள் போல பளிச்சென்று பெரும் பட்டாம்பூச்சிபோல இருப்பாள்.... ஆபிசில் பணிபுரிந்து கொண்டிருந்த சிலருக்கு இதைக் கவனித்து நோக்கியதும் லேசாக மூக்கில் வியர்த்தது. ஆனால் யாராக இருந்தாலும் சரி - கொஞ்சமாகத்தான் வியர்க்கவேண்டும் மூக்கு. அவசரப்பட்டு ரொம்ப வியர்த்துவிடக் கூடாது. ஒரே ஒருத்தருக்கு ஆபிசில் கொஞ்சம் அதிகமாக மூக்கு வியர்த்து விட்டது. அதன் பலனாக எந்தக் காரணமும் சொல்லாமல் வேலை போய்விட்டது அவருக்கு.... சந்தானலஷ்மி அவருடைய 'பர்சனல் ஸ்டெனோ' என்ற ஹோதாவில் ஆபிஸ் வந்து வேலை பார்ப்பதும் போவதும் சரிப்பட்டு வரா விஷயம் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது அவருக்கு. அடிக்கடி ஆபிசிற்கு லீவ் போடுகிறாள் என்பதையே காரணமாகக் காட்டி சந்தானலஷ்மியை ஒருநாள் அவர் வேலையை விட்டு நீக்கிவிட்டார். அதைப் பார்த்த மொத்த ஆபிசும்

ஆச்சர்யத்திலும் அதிர்ச்சியிலும் மூக்கின்மேல் விரலை வைத்து விட்டது. மூக்கு வியர்த்த ஆசாமிகளுக்குக்கூட மூக்கை எங்கே கொண்டு வைத்துக்கொள்வதென்று தெரியவில்லை. யாருமே இதை எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், ஆபிசில் சந்தானலஷ்மியின் சர்விஸ் அப்படி.... 'பாவம் சந்தானலஷ்மி' என்று அவளுக்காக வருத்தப்பட்டார்கள். இதில் நிஜமாகவே 'பாவம்' என்ற பரிதாபத்திற்கு உரியவர்கள் - அவர்கள்தான் என்பதை யார் அவர்களுக்குச் சொல்வார்கள்.

சந்தானலஷ்மியின் வேலை நீக்கம் ஒரு கண்கட்டி 'நாடகம் என்பது யாருக்குமே தெரிந்து கொள்ள முடியாத விஷயமாகவே இருந்துவிட்டது. வேலை நீக்கத்திற்கான உத்தரவை வாங்கிக் கொண்ட கையோடு சந்தானலஷ்மி அவளின் ஆஸ்தான ஹோட்டலுக்கு 'பாதாம்கீர்' சாப்பிடப் போனதை அந்த ஆபிஸ் ஆசாமிகள் பார்த்திருந்தால் என்னதான் நினைத்திருப்பார்களோ....

ஆனால் சந்தானலஷ்மியைப் பொறுத்தவரை நேராக பாதாம்கீர் சாப்பிடப் போனதற்கு வேறொரு வலிமையான காரணம் இருந்தது. காலத்தின் தவிர்க்கவே முடியாத கட்டாயத்தில்தான் அவள் ஆபிஸ் என்றும் வேலை என்றும் பணத்திற்காக இத்தனை வருஷமும் இந்த ஓட்டத்தை மூச்சு வாங்க ஓடிக்கொண்டிருக்கிறாள். உள் மனசில் அவளுக்கு வேலைக்குச் செல்ல இஷ்டமே கிடையாது. ஒரு அழகான வீட்டில் இல்லத்தரசிபோல் இருக்கவே அவளுக்கு விருப்பம் ஜாஸ்தி.... எவனாவது ஒருத்தனால் கழுத்தில் தொங்கத் தொங்க ஒரு தாலியை கட்டிக்கொள்ள வேண்டும். மூன்று நான்கு குழந்தைகளையும் பெற்றுக்கொண்டு குடும்பப் பெண்ணாக இருக்கமாட்டோமா என்பதுதான் அவளுடைய கனவு; அவளின் லட்சியம். அந்தப் புருஷன் என்ற ஒருத்தனுடன் தினசரி ஆசைதீர பாலுறவு வைத்துக்கொள்ள வேண்டும். இது ரொம்ப முக்கியம் சந்தானலஷ்மிக்கு.... ஆனால் அவளின் லட்சியமும் ஆசையும் நிறைவேறவில்லை. அவளுக்குக் கல்யாணமும் ஆகவில்லை. ஆவதற்கான வழியும் இல்லை. ஆனால் கனகசபாபதி அவருடைய கோணத்தில் நிறைய யோசனை செய்து பார்த்துவிட்டு சந்தானலஷ்மியை தன்னுடைய ஆசைநாயகியாக அவளை ஆயுள் பூராவும் வைத்துகாப்பாற்றுவதாக தீர்மானம் செய்து அவளிடம் தெரிவிக்கிறார். ஒரு விஷயத்தை எடுத்த எடுப்பிலேயே அவர் சொல்லி விடுகிறார். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர் சந்தானலஷ்மியை எந்த சந்தர்ப்பத்திலும் கல்யாணம் மட்டும்



செய்துகொள்ள மாட்டார். இதை ஒரு தடவைக்கு நூறுதடவை ரொம்ப அழுத்தமாக சொல்லி வைத்துவிட்டார். சந்தானலஷ்மி இதை நூறு தடவை யோசித்துப் பார்த்தாள் என்று சொல்ல முடியாது. ஆனால் நிறைய தடவை யோசனை செய்து பார்த்தாள். கனகசபாபதிக்கு ஆசைநாயகியாக இருக்க சம்மதித்துவிடலாம் என்றுதான் தோன்றியது. அதன் பலனாக முதலில் இந்த வேலைக்குப் போய் கொண்டிருக்க வேண்டாம். நிம்மதியாக வீட்டோடு இருக்கலாம். மனைவி என்ற அந்தஸ்தும் உரிமையும் கிடைக்காது என்பதில் ஏமாற்றமும் வருத்தமும்தான் சந்தானலஷ்மிக்கு. ஆனாலும் அவளுக்கு வேறு வழியும் தெரியவில்லை. ஒரு ஆட்டோ ரிக்ஷா டிரைவர் கிடைத்தால்கூட போதும் என்று காத்துக்கிடந்தவளுக்கு 'மாருதி ஆயிரம்' கார் வைத்திருக்கும் கனகசபாபதி கிடைத்திருக்கிறார். யோசித்துப் பார்த்தால் ஏதோ ஒரு விதத்தில் திடீரென்று சந்தானலஷ்மிக்கு ஒரு ஞானப்பழம் கிடைத்திருப்பதுபோல இருந்தது. அதேநேரம் வேறு ஒரு பழம் கிடைக்கவில்லையென்றும் இருந்தது...-ஆனாலும் இப்போதைக்கு வருவதை வரவு வைப்போம் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள். மற்றவற்றை பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று தோன்றியது.

கனகசபாபதிக்கு ஆசைநாயகியாக இருப்பதில் சந்தானலஷ்மிக்கு உடனடியான முக்கிய பலன் வேறொன்று இருக்கிறது. பாழாய்ப் போன 'லேடிஸ் ஹாஸ்டல்' வாழ்க்கையை விட்டு உடனே திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்துவிடலாம். சந்தானலஷ்மிக்கு இதுதான் ரொம்பப் பெரிய விஷயம். இன்னும் கொஞ்ச வருஷத்திற்கு ஹாஸ்டலில் இருந்து கொண்டிருந்தால் மிச்ச காலத்திற்கு அவள் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்தான் இருந்து கொண்டிருக்க வேண்டும். அந்த நிலைமை இன்னும் மோசம்.... இதையெல்லாம் யோசனை செய்து பார்த்து விட்டுத்தான் சந்தானலஷ்மி தாலி கட்டிக் கொள்ளாத ஆசைநாயகியாக இருக்க கனகசபாபதியிடம் சம்மதம் சொல்லி விட்டாள்.

- இது சந்தானலஷ்மியின் பக்கம். அவளை கல்யாணம் செய்து கொள்ள கனகசபாபதி தயார் கிடையாது என்பதற்கான அவருடைய பக்கம் என்ன என்பதை ரொம்ப சுருக்கமாக இப்போது பார்க்கலாம். இன்னொரு மனைவி என்பது கண்டிப்பாக கனகசபாபதியின் வாழ்க்கையில் பெரிய சிக்கலை ஏற்படுத்திவிடும். இதில் அவருக்கு சந்தேகமே கிடையாது. அவருக்கு இன்னொருத்தி எங்கேயோ மனைவியாக இருக்கிறாள் என்ற விஷயம் தெரிய வந்தால்

வனிதாமணி கனகசபாபதியை விவாகரத்து செய்ய கொஞ்சங்கூடத் தயங்கமாட்டாள் என்பது கனகசபாபதியின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஆஸ்த்மாகாரிக்கு எது இருக்கிறதோ இல்லையோ - அகம்பாவம் ரொம்ப ஜாஸ்தியாக இருந்தது. அதுமட்டுமில்லாமல் - சொத்து; பணம்; கம்பெனி தொழில் எல்லாமே அந்த ஆஸத்மாகாரி யின் பெயரில்தான் இருந்தன. கம்பெனியில் கனகசபாபதி மாதம் ஐம்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு சாதாரண மேனேஜிங் டைரக்டர்தான். கம்பெனியின் சேர்மன் - ஆட்டுக்கண் - ஆஸ்த்மா காரி சேர்மன் நினைத்தால் மேனேஜிங் டைரக்டரை வேலையில் இருந்து தூக்கி அடிக்க ரொம்ப நேரம் ஆகாது. அப்புறம் இந்த மாதிரி ஒரு மேனேஜிங் டைரக்டர் உத்தியோகம் கனகசபாபதிக்கு அடுத்த ஜென்மத்தில்தான் கிடைக்கும். அதுவும் நிச்சயம் கிடையாது....

-இதையெல்லாம் கனகசபாபதி ரொம்ப மண்டையைப் போட்டு குடை குடையென்று குடைந்து கண்டுபிடித்த சமாச்சாரங்கள் இல்லை.... ரொம்ப வெளிப்படையான; பார்த்தாலே தெரிகிற விஷயங்கள் இவை. ஆஸ்த்மாகாரிக்கு புருஷனாக இருப்பது தேவையோ இல்லையோ - அவளுடைய கம்பெனிக்கு மேனேஜிங் டைரக்டராக இருந்து கொண்டிருப்பது கனகசபாபதிக்கு உலகமகா தேவையானது. அந்தத் தேவையை யாருக்காகவும் அவர் தியாகம் செய்ய முடியாது. இதை அவர் மறைக்காமல் சந்தானலஷ்மியிடம் சொல்லிவிட்டார் - அவளிடம் இருந்து எதையும் தான் மறைக்க விரும்பவில்லை என்பதைக் காட்டிக்கொள்வதற்காக.... அவர் சொன்னது எல்லாமே நியாயந்தான் என்பதை சந்தானலஷ்மி மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாள்.

கனகசபாபதி தன்னுடைய உண்மையான நிலைமை பற்றிச் சொன்னதெல்லாம் நிஜம்தான். அதில் எதுவும் பொய் கிடையாது. ஆனால் வேறொரு நிஜத்தை அவர் சந்தானலஷ்மியிடம் சொல்லவில்லை. அந்த நிஜம் அவளிடம் சொல்லக்கூடியதும் இல்லை. மேனேஜிங் டைரக்டர் வேலை போனால் போகிறது யென்று வீரமாய் கனகசபாபதி சந்தானலஷ்மியை தாலி கட்டி இன்னொரு மனைவியாக்கிக் கொள்ளத் தயாராவென்று ரொம்ப வேண்டியவர்கள் யாராவது ரொம்ப ரகசியமாக அவரிடம் கேட்டால் - கனகசபாபதி 'தயார்' என்று சொல்லி விடுவாரா? கண்டிப்பாக சொல்ல மாட்டார்.... கனகசபாபதியை கனகசபாபதிக்குத் தெரியும்....வேறு ஒரு கம்பெனியில் இதே மாதிரி 'மேனேஜிங் டைரக்டர்' வேலை கொடுத்தால்கூட அவர் சந்தானலஷ்மியை கல்யாணம் செய்துகொள்ள மாட்டார்....



கனகசபாபதிக்குள் ஒரு ரகசியமான காரணம் இருந்தது. தாலி கட்டி மனைவியாக ஏற்றுக்கொள்கிற அந்தஸ்து சந்தானலஷ்மியிடம் இல்லை.... இதை கனகசபாபதி எந்தக் கோயிலிலும் வைத்து சொல்வார். சந்தானலஷ்மிக்கு அவருக்கு ஆசைநாயகியாக இருப்பதற்கான தகுதிதான் இருக்கிறது.... நிஜமாகவே நேர்மையான மனிதராக இருந்திருந்தால் இதை கனகசபாபதியால் வெளிப்படை யாகவே சந்தானலஷ்மியிடம் சொல்லி இருக்க முடியும்.... மற்ற விஷயத்தில் அவர் எப்படியோ - இந்த விஷயத்தில் அவர் நேர்மையான மனிதர் இல்லை. அவளும் இப்படி ஒரு உண்மை இருக்கிறது என்பதை உணரவில்லை.... 'வீடு பார்க்க ஆரம்பிக்கட்டுமா?' என்பதை மட்டும் கவனமான உணர்வோடு திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டாள். 'உடனே பார்; நல்ல வீடாக பார்' என்று கனகசபாபதியும் ரொம்ப கவனத்தோடு பதில் சொன்னார். சந்தானலஷ்மி உடனே அவளுக்கான நல்ல வீட்டைப் பார்க்கிற வேலையைத் தொடங்கிவிட்டாள்.

வீடு பார்க்க ஆரம்பித்த முதல் விஷயத்திலேயே கனகசபாபதி சந்தானலஷ்மியை அவளுடைய விருப்பப்படி சுதந்திரமாக நடந்து கொள்ள முடியாமல் குறுக்கிட்டார். சந்தானலஷ்மி மயிலாப்பூர் பகுதியில் வீடு பார்க்க ஆசைப்பட்டாள். ஹாஸ்டல் வாழ்க்கையின் போது எப்போதாவது கபாலீச்வரர் கோயில் பக்கம் போகும் போதெல்லாம் வரிசை வரிசையாக கடைகளில் பசேலென்று குவிந்து கிடக்கும் பச்சைக் காய்கறிகளையும்; அவற்றை வாங்கிப் போகும் இல்லத்தரசிகளையும் சந்தானலஷ்மி கண்கொட்டாமல் ஆசையாக பார்ப்பாள். அவளுக்கும் அந்த இல்லத்தரசிகளைப் போல கோஸ், பீன்ஸ், பீட்ரூட் என்று பை நிறைய காய் வாங்கிக் கொண்டு போகவேண்டும் போல இருக்கும். காய் வாங்கலாம்தான். அதற்கென்ன? ஆனால் வாங்கிக்கொண்டு எந்த வீட்டுக்குப் போக அவள்....? வீடு என ஒன்று இல்லாமல் போய் விடுகிறபோது காய் வாங்கிக்கொண்டு போகிற சின்ன விஷயம்கூட இல்லாமல் போய் விடுகிறது - வாழ்க்கையில் இத்தனை வருஷம் கழித்து இப்போது தான் சாமி சந்தானலஷ்மிக்கு வீடு பார்க்கச் சொல்லி வரம் தந்திருக்கிறது. ஆனால் மயிலாப்பூர் பக்கம் வீடு பார்த்துக்கொள்ள ஆசைப்பட்டால் - அதற்குப் பூசாரி கனகசபாபதி வரம் தரமுடியா தென்று சொல்லிவிட்டார். அந்தப் பகுதியில் அவருடைய உறவுக் காரர்கள் நிறைய இருப்பதாக சொல்லி மயிலாப்பூர் வேண்டாம் என்றார் கனகசபாபதி. அதற்கும்மேல் அவருடைய மனைவி வனிதா மணி அவ்வப்போது கபாலீச்வரர் கோயில்; நவ சக்தி வினாயகர்

கோயில் என்று அவளுடைய அடையார் வீட்டில் இருந்து கிளம்பி மயிலாப்பூர் பக்கம் வந்துவிடுவாள். கனகசபாபதி மயிலாப்பூர் வேண்டாம் என்று சொன்னதற்கு இதுவும் முக்கியமான காரணம்....

மாம்பலம் பக்கம் வீடு பார்க்கலாமாவென்று கேட்டாள் சந்தான லஷ்மி. அவளைப் பொறுத்தவரை மாம்பலம் ஏரியாவும் 'ஓகே'தான். தினமும் சாயங்காலம் ரெங்கநாதன் தெருப்பக்கம் போய் முதலில் காய் பழம் எல்லாம் வாங்கி வரலாம். ஒன்றும் வாங்காவிட்டாலும்கூட சும்மா ரெங்கநாதன் தெருவில் வேடிக்கை பார்த்தபடி இரண்டு நடை நடந்துவிட்டு வரலாமே.... - அதை விட்டால் இருக்கவே இருக்கிறது சரவணா ஸ்டோர்ஸ்.... அங்கே சின்னதாக சும்மா ஒரு 'ஷாப்பிங்' பண்ணிவிட்டு அப்படியே போய் சரவணா பவனுக்குள் நுழைந்து சூடாக ஒரு சோளா பூரியும் செட்டிநாட்டு நெய் இட்லியும் சாப்பிட்டுவிட்டு வந்து கொண்டே இருக்கலாம்.... நினைத்துப் பார்த்தபோது சந்தானலஷ்மிக்கு மயிலாப்பூரைவிட மாம்பலத்தையே ரொம்பப் பிடித்தது.... மாம்பலத்தில் வீடு பார்க்க ரொம்பவே ஆசைப்பட்டாள். ஆனால் அவளுடைய இந்த ஆசையும் பூசாரியிடம் செல்லுபடியாகவில்லை. மாம்பலம் பகுதி வேண்டவே வேண்டாம் என்று சொல்லிவிட்டார் பூசாரி. ஏன் என்ற காரணத்தைச் சொல்லவில்லை பூசாரி. சந்தானலஷ்மியும் காரணத்தைக் கேட்கவில்லை.... அவளுக்குக் காரணம் தேவையில்லை.

❖

## 6

மாம்பலம் பகுதியிலும் வீடு பார்க்க வேண்டாம் என்று கனகசபாபதி சொன்னதில் சந்தானலஷ்மிக்குக் கொஞ்சம் எரிச்சல்தான் மனதிற்குள். ஆனால் என்ன செய்ய முடியும்; எரிச்சலை வெளிப்படையாகக் காட்டவா முடியும்.... புருஷனாக இருந்தால் எரிச்சலைக் காட்டலாம்.... சந்தானலஷ்மி இரண்டு நாட்கள் சும்மா இருந்தாள். பின் இரண்டு மூன்று இடங்கள் சுற்றிவிட்டு சைதாபேட்டையில் பார்க்கட்டுமா? என்று கேட்டாள். 'பார்' என்று ஒற்றை வார்த்தையில் கனகசபாபதி சம்மதம் சொன்னார். உடனே சந்தானலஷ்மி சைதாபேட்டைப் பகுதியில் மும்முரமாக வீடு



தேடினாள். சுற்றி அலைந்து கடைசியில் சைதாபேட்டை விசாகதோட்டம் பகுதியில் அவளுக்கு வீடு அமைந்தது. ஆனால் அங்கேயும் சந்தானலஷ்மிக்கு எடுத்த உடனேயே வீடு கிடைத்துவிட வில்லை. அவளின் தளதளப்பும் கவர்ச்சியும் கொண்ட ஓங்கி வளர்ந்த உடம்பைப் பார்த்து அவள் ஏதாவது சினிமாத் துறையை சேர்ந்தவளாக இருப்பாளோ என்ற சந்தேகத்தில் சிலர் சந்தானலஷ்மிக்கு வீடு தரப் பயந்தார்கள். வேறு சிலரோ கனகசபாபதி என்ற பணக்காரரின் ஆசைநாயகியாக இருக்கும் அவளுக்கு வீடு தர தயங்கினார்கள். யாரோ ஒருத்தனுக்கு தாலி கட்டாத வைப்பாட்டியாக இருக்கிறவள் - இன்னும் எப்படி இருப்பாளோ; ஏது இருப்பாளோ என்ற யோசனை சில வீட்டுக்காரர்களுக்கு. அதுவும் கனகசபாபதி அவ்வப்போதுதான் வந்து போய்க் கொண்டிருப்பார் என்ற செய்தியும் சில 'ஹவுஸ் ஓனர்'களுக்கு சரிப்பட்டு வரவில்லை.... ஒருநாள் இந்த கனகசபாபதி வராமல் போய் வேறொரு கனகசபாபதி வந்து போகத் தொடங்கினால் பார்ப்பதற்கு அதெல்லாம் அவ்வளவாக நன்றாக இருக்காது.... அந்த விசாகதோட்டம் பகுதியில் வசிப்பவர்கள் எல்லாம் ரொம்ப கௌரவமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்....

கனகசபாபதிக்கு இதெல்லாம் கொஞ்சம்கூட வாழ்க்கையில் தெரியாத பக்கங்கள். பார்க்கத் தொடங்கிய உடனேயே வீடு கிடைத்துவிடும் - சந்தானலஷ்மிக்கு என்று ரொம்ப அலட்சியமாக நினைத்துக் கொண்டிருந்தார். வீடு தர மறுத்த வீட்டுச் சொந்தக்காரர்களையெல்லாம் திட்டித் தீர்த்தார். நினைத்தால் விசாகதோட்டம் ஏரியாவில் சந்தானலஷ்மிக்கு வீடே வாங்கிக் கொடுத்து விடுவேன் என்று எல்லா வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் மானசீகமாக சவால் விட்டார். ஆனால் அதற்காக வீடு எதையும் வாங்கி விடுகிற காரியத்தில் எல்லாம் அவர் இறங்கிவிடவில்லை. - அதற்குள் அலையாய் அலைந்து சந்தானலஷ்மி ஒரு வீட்டைப் பார்த்து எப்படியோ முடித்துவிட்டாள். அந்த வீடும் வெற்றிலை தாம்பாளத்தில் அழகாய் ஒரு ரவிக்கைத் துணியை வைத்து ஒரு சுமங்கலி வந்து கொடுத்த மாதிரியெல்லாம் இலகுவாய் கிடைத்துவிடவில்லை.... அந்த வீட்டுக்காரரும் எல்லா ஹவுஸ் ஓனர்களையும் போல சந்தானலஷ்மியை மேலேயும் கீழேயும்தான் பார்த்தார். ரொம்ப யோசிக்க வேண்டிய 'பார்ட்டி'யாக இருக்கிறதேயென்று பாவனை செய்தார். வீட்டை சந்தானலஷ்மிக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு முன் கனகசபாபதியை ஒரு தடவை நேரில் பார்க்க வேண்டும் என்றார். இதை சந்தானலஷ்மி போன்

பண்ணிச் சொன்னபோது கோபம் தலைக்குமேல் வந்துவிட்டது கனகசபாபதிக்கு. அப்படியெல்லாம் எவனோ ஒரு ஊர் பெயர் தெரியாத துக்கடா வீட்டுக்காரனின் முன்னால் எல்லாம் போய் நிற்க முடியாதென்று கோபத்தோடு போனில் உறுமினார். உறுமினால் காரியம் நடக்காது என்றாள் சந்தானலஷ்மி. நேரில் ஒரு தடவை வராவிட்டால் இந்த வீடும் கிடைக்காது என்றாள். கனகசபாபதி எரிச்சலோடு யோசித்தார். நினைத்த நேரத்தில் சந்தானலஷ்மியை தேடிப் போய் பாலுறவை அவளுடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்றால் கனகசபாபதிக்கு உடனே ஒரு வீடு வேண்டும். வீடு வேண்டும் என்றால் அவர் இந்த துக்கடா வீட்டுக்காரனின் எதிரில் போய் நின்றுதான் ஆகவேண்டும். வேறு வழி இல்லாமல் கனகசபாபதி போய் நின்றார். 'மாருதி ஆயிரம்' காரில் வந்து பணக்கார தோரணையுடன் கனகசபாபதி இறங்கியதும் வீட்டுக்காரருக்கு ரொம்ப திருப்தியாகிவிட்டது. பார்ப்பதற்கு கனகசபாபதி நல்ல ஆள் போலத்தான் இருந்தார். பணக்கார சண்டியர் மாதிரியெல்லாம் இல்லை. வீட்டுக்காரருக்கு இது ரொம்ப முக்கியம். யாரோ ஒரு பணக்கார சண்டியரின் வைப்பாட்டிக்கு வீட்டை வாடகைக்குக் கொடுத்துவிட்டு; நாளைக்கு ஏதோ ஒரு காரணத்தில் வீட்டை காலி பண்ணித் தரச் சொல்லும்போது முடியாதென்று தக்ராறு எதுவும் பண்ணிவிட்டால் பெரிய பிரச்சனையாகப் போய்விடும்.... அதனால் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது....

இந்தக் கஷ்டமெல்லாம் வீட்டுச் சொந்தக்காரர்களுக்குத்தான் என்று நினைத்துவிடக் கூடாது. சந்தானலஷ்மிக்கும் ரொம்பக் கஷ்டம்தான். பணக்காரர் ஒருத்தரின் ஆசைநாயகியென்று தன்னைப் பற்றி அறிமுகம் கொடுத்து வீடு பார்க்கப் போனதில் அவள் பட்ட பாடு கொஞ்சம் இல்லை.... வீடு பார்க்கப் போகிற இடத்தில் இந்த அறிமுகத்தைத் தாண்டி முடிப்பதற்குள் உயிர் போய் உயிர் வரும் அவளுக்கு.... யாரோ ஒருத்தனின் மனைவி என்ற முத்திரைதான் அவளிடம் மனிதர்களுக்குத் தேவையாக இருந்தது. முதலில் ஆசைநாயகி என்ற வாழ்க்கை முறை ஒரு முறைகேடாகவே தெரிந்தது அந்த மனிதர்களுக்கு. அந்த பிரக்ஞையால்தான் சந்தானலஷ்மி வீட்டுச் சொந்தக்காரர்களின் எதிரில் தர்மசங்கடமாக நிறைய கூனிக் குறுகி நின்றதெல்லாம்.... அதே தர்மசங்கடம்தான் கனகசபாபதிக்கும்.... -ஆனால் எல்லாம் கடைசியில் ஒரு முடிவுக்கு வராமல் போய்விடுவதில்லை.... சந்தானலஷ்மி வீடு பார்த்த விஷயமும் முடிவுக்கு வந்துவிட்டது. கனகசபாபதியை நேரில்



வரவழைத்துப் பார்த்துத் திருப்தியடைந்த பழனிச்சாமி என்ற வீட்டுக்காரர் மேலும் சில இல்லாத அலட்டல் எல்லாம் அலட்டி அவருடைய வீட்டை ரொம்பப் பெரிய மனது வைத்து வாடகைக்குத் தர ஒப்புக்கொண்டார். நிஜமாகவே சந்தானலஷ்மி 'அப்பாடா' என்று பெருமூச்சுவிட்டாள். வயிற்றில் பால் வார்த்தாற் போல இருந்தது. இந்த வீடும் முடியாமல்; இப்படியே இன்னும் வீடு வீடு என்று தேடிப் போய்க் கொண்டிருந்தால் அவள் நொந்து நூலாகிப் போயிருப்பாள்.... நல்லவேளை; இத்தோடு தப்பித்தாள்.... இந்த வரையில் சந்தானலஷ்மியும் கொஞ்சம் யோகக்காரிதான்....

ஆனால் வீட்டுச் சொந்தக்காரர் பழனிச்சாமி ஒரு தகிடுதத்தம் பண்ணிவிட்டார். மற்றவர்களுக்கெல்லாம் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் வாடகையென்று சொல்லிக் கொண்டிருந்த அவர் சந்தானலஷ்மியிடம் வீட்டின் வாடகையை நாலாயிரம் என்று அடித்துச் சொல்லிவிட்டார். கனகசபாபதி அவளை மூவாயிரம் ரூபாய் வாடகையில்தான் வீடு பார்த்துக் கொள்ளச் சொல்லி இருந்தார். பழனிச்சாமி திடீரென்று இப்படி நாலாயிரம் என்று சொன்னதும் அவளுக்கு பகீர் என்றது. ஆனால் கனகசபாபதிதான் அவர் இருந்த மனநிலையில் வீட்டுக்காரர் ஐயாயிரம் ரூபாய் கேட்டால்கூட கொடுத்துவிடத் தயாராக இருந்தார். இதற்கு மேலும் வீட்டுக்காகக் காத்திருக்க அவர் தயார் கிடையாது. கோயம்புத்தூர் ஹைதராபாத் என்று ஊர் ஊராக சந்தானலஷ்மியை அழைத்துப் போய்க் கொண்டிருப்பதற்கும் இனி அவருக்கு தோதுப்படாது. அதனால் நாலாயிரம் ரூபாய் வாடகையைத் தர அவர் சரி சொல்லி விட்டார். நாலாயிரம் ரூபாய் வாடகையை கனகசபாபதி தரட்டுமே என்பதுதான் வீட்டுக்காரர் பழனிச்சாமியின் அபிப்பிராயம்.

வீட்டுக்காரர் அட்வான்ஸாகக் கேட்ட பத்து மாத வாடகையை கனகசபாபதி சரியாக எண்ணிக்கூடப் பார்க்காமல் எடுத்து நீட்டினார். பணத்தை ஒரு தடவைக்கு இரண்டு தடவை எண்ணிப் பார்த்த பழனிச்சாமி அதில் ஒரு ஐந்நூறு ரூபாய் நோட்டு கூடுதலாக இருந்ததைப் பற்றி மூச்சே காட்டாமல் அதை அப்படியே அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டார்.... - இந்த வீட்டுச் சொந்தக்காரர் பழனிச்சாமியின் இன்னொரு பக்கம் இருக்கிறது. நான்காயிரம் ரூபாய் வாடகைக்காக மட்டும் அவர் வீட்டை சந்தானலஷ்மிக்குக் கொடுக்கவில்லை. அவளுடைய உடம்பில் இருந்த கவர்ச்சியான சுவாரஸ்யம் அவரைக் கொஞ்சம் சலனப்படுத்தி இருந்தது. சந்தானலஷ்மி ஒருத்தரின் கௌரவமான மனைவியாக

வாழ்கிற குடும்பப் பெண் இல்லை. ஒரு பணக்காரனின் தாலி கட்டாத ஆசைநாயகி அவள். அதனால் கண்டிப்பாக அவள் கொஞ்சம் முன்னேபின்னேதான் இருப்பாள். வீட்டிலும் அவள் அநேகமாக தனியாகத்தான் இருக்கப் போகிறாள்.... 'பார்க்கலாமே' என்பது பழனிச்சாமியின் ரகசியமான அபிப்பிராயம். அவ்வப்போது 'ஹவுஸ் ஓனர்' என்ற ஹோதாவில் போய் சந்தானலஷ்மியை பார்த்து அவர் ஏதாவது உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கலாம். அவரை யாரும் எதுவும் கேட்க முடியாது.... அதே நேரம் சந்தானலஷ்மி யிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அவரையும் மீறி எதுவும் நடக்க வேண்டுமென்று இருந்தால் நடந்துவிட்டுப் போகட்டும். பழனிச்சாமி அதை வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை....

சந்தானலஷ்மிக்கு வீட்டை வாடகைக்குக் கொடுத்ததில் இப்படி ஒரு ரகசிய பக்கம் இருக்கிற மாதிரி பழனிச்சாமிக்குள் இன்னொரு பக்கமும் இருந்தது. இந்த சந்தானலஷ்மி போன்ற ஒரு மாதிரியாக இருக்கின்ற பெண்களுக்கு வீட்டை வாடகைக்குக் கொடுத்தால் வீட்டின் சொந்தக்காரருக்கு 'லட்சுமி கடாட்சம்' ரொம்ப விசேஷமாக இருக்கும் என்பதை பழனிச்சாமி எங்கேயோ எப்பவோ கேள்விப் பட்டிருக்கிறார்.... அதையும் மனதில் ஒரு பக்கம் வைத்துக் கொண்டுதான் வீட்டின் சாவியை தூக்கி அவர் சந்தானலஷ்மியிடம் கொடுத்தது. சாவியைக் கொடுத்ததற்கான பலனும் பழனிச்சாமிக்கு கைமேல் உடனே கிடைத்துவிட்டது. கனகசபாபதி தந்த அட்வான்ஸ் பணத்தில் ஐந்நூறு ரூபாய் அதிகமாக இருந்ததே....

எப்படியோ; சைதாபேட்டை விசாகதோட்டம் பகுதியில் பழனிச்சாமி என்பவரின் வீடு சந்தானலஷ்மிக்கு வாடகைக்குக் கிடைத்துவிட்டது. அந்த ஏரியாதான் அவ்வளவாக அவளுக்குப் பிடிக்கவில்லையே தவிர; வீடு அவளுக்கு ரொம்பப் பிடித்து விட்டது. அவளுக்கு இந்த வீடு போதும். இப்போதைக்கு இந்த வீட்டில் கனகசபாபதியோடு கிடைக்கப்போகிற துண்டு துண்டு வாழ்க்கை போதும். கொஞ்சம் மூச்சு விடுவாள். கொஞ்சம் சந்தோஷமாக இருப்பாள். இந்த நிமிஷமே போய் ஹாஸ்டல் அறையை சந்தானலஷ்மி தலைமுழுகி விடலாம். இந்த வீட்டிற்கு வந்த அப்புறம் இஷ்டத்திற்கு கனகசபாபதியோடு பாலுறவும் அனுபவிக்கலாம்.... இதற்கெல்லாம் இப்போதைக்கு சந்தான லஷ்மிக்கு இந்த வீடு போதும்.... இந்த வீட்டுக்குப் போக அவள் நாள் நட்சத்திரம் எதுவும் பார்க்கவில்லை. எங்கே போய் பார்க்க.... அடுத்த இரண்டு நாட்களில் வந்த வெள்ளிக்கிழமையே ஒரு



ராஜராஜேஸ்வரி படம் வைத்து சாமி கும்பிட்டு பால் காய்ச்சிக் கொண்டாள். பால் காய்ச்சும்போது கனகசபாபதி வரவில்லை. வருவதற்கு அவருக்கு வெட்கமாக இருந்தது. பால் காய்ச்சும் போதெல்லாம் வந்து நிற்க - அவர் என்ன கல்யாணம் பண்ணி வீடு பார்த்து புதுக்குடித்தனமா ஆரம்பிக்கிறார்....? வீட்டுச் சொந்தக்காரர் பழனிச்சாமி இருக்கிற வேலையெல்லாம் விட்டுவிட்டு முதல் ஆளாக வந்துவிட்டார். விட்டால் அவரே பால் காய்ச்சிக் கொடுத்திருப்பார்.... ஆனால் ஆயாவிடம் சொல்லி இரண்டு பால் பாக்கெட் வாங்கி வர ஏற்பாடு செய்தவர் அவர்தான். சந்தான லஷ்மிக்கு சின்னச் சின்ன ஒத்தாசையெல்லாம் செய்தார். அவ்வப்போது ரகசியமாக அவள் உடம்பின் ஏற்றம் இறக்கங்களை; வளைவு சுளிவுகளை திருட்டு நோட்டமிட்டுக் கொண்டிருந்தார். எந்த நேரத்திலும் எந்த ஒத்தாசை வேண்டியிருந்தாலும் கூச்சப்படாமல் சந்தானலஷ்மி அவருடைய வீட்டுக்கு வந்து கேட்கலாம் என்பதை திருப்பித் திருப்பி நூறு தடவை சொல்லிவிட்டு; தம்ளர் நிறைய கிடைத்த பாலைக் குடித்து வாயைத் துடைத்தபடி பழனிச்சாமி திருப்தியுடன் கிளம்பிப் போனார்....

சந்தானலஷ்மியின் வீடு பார்த்து பால் காய்ச்சும் படலம் இப்படி ஒரு வழியாக முடிந்தது. அடுத்த உடனடி படலம் சந்தானலஷ்மி அவளுடைய குகை போல் இருந்த ஹாஸ்டல் அறையை காலி பண்ணியது. அறையை அவசர அவசரமாகக் காலி பண்ணியபோது நிஜமான காரணத்தை ஹாஸ்டல் பெண்கள் எவளிடத்திலும் அவள் சொல்லவில்லை. சொல்லக்கூடாதென்று ஏற்கனவே கனகசபாபதி ரொம்பக் கண்டிப்புடன் சொல்லி வைத்திருந்தார்.... அவர் அப்படிச் சொல்லாமல் இருந்திருந்தால்கூட சந்தான லஷ்மியைப் பொறுத்தவரை ஹாஸ்டல் பெண் யாரிடமும் உண்மையைச் சொல்லப் போவதில்லை. சொல்லத் தேவையில்லை அவளுக்கு. எப்படி ஹாஸ்டல் என்பது பிடிக்கவே பிடிக்காதோ அதுபோல ஹாஸ்டல் பெண்ணும் அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காத சமாச்சாரம். இத்தனை நாளும் பிடிக்காமலேயே ஹாஸ்டலில் இருந்த மாதிரி; மனசுக்குப் பிடிக்காமலேயே இத்தனை நாளும் ஹாஸ்டல் பொம்பளைகளுடன் ஒப்புக்கு பேச்சு வார்த்தை வைத்துக் கொண்டிருந்தாள். இனி இவர்களை எங்கேயாவது தப்பித் தவறி நேருக்குநேர் பார்த்துவிட்டால்கூட இவர்களோடு சந்தானலஷ்மி ஒரு மரியாதைக்குக்கூட பேசப் போவது கிடையாது. இனிமேல் அவள் யாரோ அந்த ஹாஸ்டல் பொம்பளைகள்

யாரோ.... எப்படி இனி லேடிஸ் ஹாஸ்டல் என்பது அவளுடைய வாழ்க்கையில் கிடையாதோ அதேபோல் அந்த பொம்பளை யாரோடும் அவளுக்கு தொடர்போ பேச்சு வார்த்தையோ கிடையாது....

அதனால் யாரிடமும் எதுவும் சொல்லாமல் தான் வீடு ஒன்று பார்த்து விட்டதாகவும்; அதில் இனி தான் சமைத்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கப்போவதாகவும் மட்டும் மொட்டையாக சொல்லிவிட்டு ஒரு நிமிஷத்தில் சந்தானலஷ்மி ஹாஸ்டல் அறையைக் காலி பண்ணியபோது ஹாஸ்டல் நிர்வாகமும் ஹாஸ்டல் பெண்களும் அவளை ஆச்சர்யத்தோடும் பார்த்தார்கள்; ஒரு சந்தேகத்தோடும் பார்த்தார்கள். கடந்த சில மாதங்களாகவே அவர்கள் எல்லோருக்கும் சந்தானலஷ்மியின் உடம்பில் ஏற்பட்டிருந்த பிரகாசமான மாற்றத்தைப் பார்த்து நிறைய சந்தேகங்கள் வந்திருந்தன. யாரோ ஒரு வசதியான ஆசாமி அவளுக்குக் கிடைத்திருக்கிறான் என்று எல்லாருமே ஊகம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவளாக யாரிடமும் எதையும் வாயைத் திறந்து சொல்லாதபோது அவர்களும் சந்தானலஷ்மியிடம் வாயைத் திறந்து கேட்கவில்லை.... அவளுக்கே இத்தனை அழுத்தம் இருக்கும்போது அவர்களுக்கு மட்டும் அதே நெஞ்சு அழுத்தம் இல்லாமல் போய்விடுமா? அவர்களும் அவர்களின் நெஞ்சு அழுத்தத்தைக் காட்டிவிட்டார்கள்.

- இந்த இடத்தில்தான் சந்தானலஷ்மி விசித்திர முரண்பாடான பெண். ஹாஸ்டல் அறையை அவள் காலி பண்ணியபோது; யாரும் எதுவும் எந்த விபரமும் வாயைத் திறந்து கேட்காததில் ரொம்ப மனம் வெகுண்டுவிட்டாள். 'எவளாவது ஏதாவது கேட்டாளா பார்' என்று மனதில் ஆத்திரப்பட்டாள். நீண்ட வெடிச்சரம் தீப்பற்றிக் கொள்வதுபோல சினம் அவளுள் பற்றிக்கொண்டு வெடித்துத் தள்ளியது. ஆயுசுக்கும் ஹாஸ்டலிலேயேய கிடந்து சாகுங்கடி....' என்று அவளின் கோபம் சாபமே இட்டது.... 'இருங்கடி இருங்க; ஒருநாள் இல்லேனாலும் ஒருநாள் - ஒரு மாருதி காரில் இதே ஹாஸ்டல் பக்கம் நானும் இப்படியும் அப்படியுமா நூறு தடவை போகத்தான் போறேன். நீங்களும் அதைப் பாக்கத்தான் போறீங்க...'

- என்று கொஞ்சம் வயிறு எரிய கறுவிக்கொண்டே சந்தானலஷ்மி ஹாஸ்டல் அறையைக் காலி பண்ணிவிட்டு திரும்பிப் பார்க்காமல் நடையைக் கட்டினாள். - அவளுக்கு ஒரு அபிப்பிராயம் - இப்போது அவளுடைய உடம்பில் ஏற்பட்டிருக்கும் புரட்சிகரமான கவர்ச்சி



மாற்றத்தைப் பார்த்து ஹாஸ்டலில் இருக்கும் பொம்பளைங்களுக்கு அவள் மேல பொறாமை.... சந்தானலஷ்மியின் இந்த அபிப்பிராயம் தப்பு கிடையாதுதான்....

❖

# 7

ஹாஸ்டல் அறையைக் காலி பண்ணிவிட்டு வந்து சேர்ந்த இரண்டு நாட்களுக்கு சில நிமிடங்கள் வந்து போகக்கூட முடியாமல் மிக முக்கியமான அலுவல்களில் கனகசபாபதி மாட்டிக்கொண்ட படியால் முதல் இரண்டு நாட்களும் சந்தானலஷ்மி முழுக்க முழுக்க வீட்டில் தனியாகத்தான் இருந்து கொண்டிருந்தாள். இருந்தாலும் வீடு என்ற வேறு உலகத்திற்குள் வந்து சேர்ந்துவிட்ட இன்ப நிறைவில் அவள் பாட்டுக்கு நிம்மதியாக உட்கார்ந்திருந்தாள். ஹாஸ்டல் அறை என்ற குகைக்குள் இருந்து தப்பி வந்துவிட்ட களிப்பில் அவ்வப்போது அவளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது. வந்து சேர்ந்த முதல் இரண்டு நாட்களுக்கு சந்தானலஷ்மி சரியாக சமைக்கவும் இல்லை. சரியாக சாப்பிடவும் இல்லை. வீடு என்ற அந்தப் புதிய உலகத்தில் இருந்த புதிய காற்றை நெஞ்சு விரிய சுவாசித்தபடி பெரும்பான்மையான நேரம் பேசாமல் படுத்தே கிடந்தாள்....

பொதுவாக ஒரு தெருவில் வீடு ஒன்று காலியாகி புதியவர்கள் அதில் குடித்தனம் வரும்போது; அக்கம் பக்கம் இருப்பவர்களுக்கெல்லாம் வந்திருப்பவர்கள் யார் என்று தெரிந்துகொள்கிற ஆர்வம் வரத்தான் செய்யும். அவரவர் வீட்டு வாசலில் நின்றும்; ஜன்னல் வழியாகவும் புதிதாக வந்திருப்பவர்களை கவனித்துக் கொண்டிருப்பார்கள்.... புதிதாகக் குடித்தனம் வந்திருப்பவர்களின் வீட்டுப் பொருட்கள் லாரியிலோ வேனிலோ வந்து இறங்கும்போது என்னவெல்லாம் இறங்குகின்றன என்பதையும் ரொம்ப அக்கறையோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள்.... ஃபிரிட்ஜ்; பெரிய கலர் டி.வி; வாஷிங்மிஷின் போன்றவைகள் இறங்கினால் வந்திருப்பவர்கள் பெரிய மனிதர்களாக பார்க்கப் படுவார்கள். இவையெல்லாம் இல்லாவிட்டால் சாதாரண குடிமக்களாக அலட்சியமாகப் பார்க்கப்படுவார்கள்.

சந்தானலஷ்மியின் விஷயத்தில் இவற்றையெல்லாம் விடவேறு முக்கியமான சங்கதிகள் இருந்துவிட்டன. அந்த சங்கதிகளைப் பரப்பியது வேறு யாரும் கிடையாது - பழனிச்சாமிதான். பணக்காரர் ஒருத்தரின் ஆசைநாயகி ஒருத்தி அவருடைய வீட்டுக்கு குடித்தனம் வருகிறாள் என்பதை பெரிய கௌரவத்திற்கு உரிய விஷயம் போல நிறைய வீடுகளுக்கு அவரே நேரில் போய் சொல்லிவிட்டு வந்தார். என்னமோ அதைச் சொல்வதில் பழனிச்சாமிக்கு அலாதியான சந்தோஷம் இருந்தது. இதனால் பால் காய்ச்ச சந்தானலஷ்மி அவருடைய வீட்டுக்கு வருவதற்கு முன்பே அவளைப் பற்றிய சுவாரஸ்யமான பேச்சுக்கள் அந்தத் தெரு பூராவும் அடிபடத் தொடங்கி; வீட்டின் வாசலில் சந்தானலஷ்மி ஆட்டோவில் போய் இறங்கினாலே ஒவ்வொரு வீட்டுக்குள் இருந்தும் ஆள் ஆளுக்கு வாசலுக்கு ஓடி வந்து அவளைப் பார்த்தார்கள். அவர்களுக்கும் ஒரு விஷயம் புரியத்தான் செய்தது. சந்தானலஷ்மி பார்ப்பதற்கே ஒரு மாதிரியான வாட்டசாட்டமான சினிமாகாரி போலத்தான் இருந்தாள்....

ஆனால் தெரு ஜனங்களுக்கு முதலில் ஒரே ஒரு விஷயம்தான் புரியவில்லை. சந்தானலஷ்மி ஒரு பெரிய லாரி நிறைய சாமான்களை அள்ளிப்போட்டுக் கொண்டு வந்து பழனிச்சாமி வீட்டில் தடபுடலாக இறங்கப் போகிறாள் என்றுதான் அவர்கள் எல்லோரும் நினைத்து காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த மகராசி இரண்டே இரண்டு ட்ரங்க் பெட்டிகளோடும் ஒரே ஒரு படுக்கையோடும் எங்கோ சென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கி ஒரு ஆட்டோ பிடித்து வருகிறவள் போல - ஆட்டோ ரிக்ஷாவில் வந்து இறங்கியதும் ஒன்றும் புரியாமல் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். அவள் ஹாஸ்டல் அறையைக் காலி பண்ணிவிட்டு நேராக வருகிறாள் என்கிற அளவிற்கெல்லாம் அவர்களுக்கு சந்தான லஷ்மியை பற்றி விபரங்கள் தெரியாது.... என்ன இது; நாலாயிரம் ரூபாய் வாடகை தரப்போகிற மகராசி இப்படி அன்னக்காவடி போல் வந்து இறங்குகிறாள் - என்ற ஒரே கேள்விதான் சைதாபேட்டை விசாகதோட்டம் பகுதி மக்களின் எல்லாருடைய மனதிலும்....

ஆனால் அடுத்தடுத்த கொஞ்ச நாட்களில் எல்லோருக்கும் தெரிந்து விட்டது நாலாயிரம் ரூபாய் வாடகை தந்து பழனிச்சாமியின் வீட்டுக்கு வரப்போகிற வாட்டசாட்டான மகராசி அன்னக்காவடியா அன்னலஷ்மியா என்பது... வீட்டுக்கு வந்து சேர்ந்த அடுத்த நாளே புதிய குக்கர்; புதிய பால் குக்கர்; புதிய ரைஸ் குக்கர்; ஒரு புத்தம் புது மிக்ஸி.... என்று கைகள் நிறைய அயிட்டங்களோடு சந்தானலஷ்மி



ஆட்டோவில் வந்து இறங்கியதைப் பார்த்த தெரு இல்லத்தரசிகள் எல்லாருடைய கண்களும் எவ்வளவு அகலமாக விரியனுமோ அவ்வளவு அகலமாக விரிந்து போய்விட்டன.... இல்லத்தரசிகளின் கண்கள் இதற்கே இத்தனை அகலமாய் விரிந்ததென்றால் இன்னும் ஒவ்வொரு நாளும் புதுசு புதுசாக வந்து இறங்கப் போகிற அயிட்டங்களைப் பார்த்தால் அவர்களின் கண்கள் என்ன கதிதான் ஆகுமோ.... - சொல்லி வைத்த மாதிரி அடுத்த நாள் ஒரு பெரிய 'ஒனிடா' கலர் டி.வி. வந்து சந்தானலஷ்மியின் வீட்டு வாசலில் இறங்கியது. அடுத்த நாள் காட்ரேஜ் ஃபிரிட்ஜ்.... அப்புறம் ஒருநாள் மிக அகலமாக பெரிய மரக்கட்டிலும் மெத்தையும். இன்னொரு நாள் அழகான சோபா செட்.... - இப்படி போய்க் கொண்டிருந்தது பட்டியல். இதற்கு மேல் நினைத்து நினைத்து சந்தானலஷ்மி போய் வாங்கி வந்து கொண்டிருந்த புத்தம்புது எவர் சில்வர் பாத்திரங்கள்....

இதையெல்லாம் பார்த்துப் பார்த்து விசாகதோட்டத்து இல்லத்தரசிகள் கனத்த பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்கள். தினம் தினம் இப்படி போய் எதை எதையோ வாங்கி வந்து கொண்டிருந்த சந்தானலஷ்மிக்கோ இன்பப் பெருக்கில் மூச்சு வாங்கியது. இதெல்லாம் தன்னுடைய வாழ்க்கையிலா நடக்கிறது என்பதை அவளால் நம்பவே முடியவில்லை.... கபாலீச்வரர் கோயில் பக்கம் ஒரு காய் வாங்கும் காலம் வராதாவென்று ஒரு காலத்தில் ஏங்கியவள் அவள்.... இன்று ஒரு மார்க்கெட்டையே வாங்கிக்கொண்டு வருகிறாள்.... கடைசியில் அவளும்கூட கிட்டத்தட்ட ஒரு இல்லத்தரசி எனகிற பெயரை வாங்குகிற நிலைக்கு உயர்ந்துவிட்டாள். வீட்டுக்கு ஒரு 'பால் கார்டு' வாங்கிக் கொண்டதுகூட அப்படியொரு பெருமையாக இருந்தது அவளுக்கு... இப்போது சந்தானலஷ்மியிடம் இல்லாதது இரண்டே இரண்டு. ஒன்ற -கழுத்தில் தாலி. இன்னொன்று - ரேஷன் கார்டு....

சந்தானலஷ்மியிடம் ரேஷன் கார்டு இல்லாததில் தெரு இல்லத்தரசிகளுக்கு எந்த அபிப்பிராயமும் கிடையாது. ஆனால் அவளுடைய கழுத்தில் தாலி இல்லாமல் இருந்ததில் அந்த இல்லத்தரசிகளுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. அதை மோசமான அபிப்பிராயமாகவும் சில இல்லத்தரசிகள் அதிகப் படுத்தி வைத்துக் கொண்டார்கள். மோசமான அபிப்பிராயம் ஏதோ ஒரு வகையில் அவர்களுக்கு திருப்தியை தந்தது. அதுவும் மிக அகலமான அழகான இரட்டை மரக்கட்டில் மெத்தையும் சேர்ந்து சந்தானலஷ்மியின் வீட்டு வாசலில் வந்து இறங்கியபோது இல்லத்தரசிகளின் மோசமான அபிப்பிராயத்தையும் மீறி அவர்களின்

மனதிற்குள் இருந்த பொறாமை வெளியே பீறிட்டுக் கொண்டு வந்து விட்டது. காரணம் என்ன தெரியுமா? விசாக தோட்டம் இல்லத்தரசிகளின் யாருடைய வீட்டிலும் அப்படியொரு அழகான அகலமான கட்டில் கிடையாது - பொறாமை கொஞ்ச நேரத்தில் காழ்ப்புணர்ச்சியாக மாறிவிட்டது. 'ஒரு சின்ன வீட்டுக்கு வந்திருக்கிற வாழ்வைப் பாரேன்' என்று மனம் புழுங்கி கழுத்தை நொடித்துக் கொள்ளாத இல்லத்தரசிகள் விசாக தோட்டம் பகுதியில் யாராவது உண்டா என்பது சந்தேகம்தான்....

விசாக தோட்டம் பகுதி இல்லத்தரசிகளுக்கு இன்னொரு 'பாடு'ம் உண்டு. சந்தானலஷ்மியை அவ்வப்போது பார்ப்பதற்கு வந்து போகிற கனகசபாபதியை தங்கள் வீட்டின் ஜன்னல் வழியாகக் காணும் அவர்கள் காரில் வந்து இறங்கும் அவரின் பணக்காரத் தோரணையைப் பார்த்து கொஞ்சம் கொஞ்சம் மனம் புழுங்கிப் போயிருக்கிறார்கள். ஒரு விதத்தில் பார்த்தால் சந்தானலஷ்மி கொடுத்து வைத்த மகராசியாகவும் தெருப் பெண்களுக்குத் தெரிந்தாள். அவர்களின் பார்வையில் கனகசபாபதியால் சந்தான லஷ்மிக்கு எந்த பிக்கலும் கிடையாது. எந்த பிடுங்கலும் கிடையாது. ஆசாமி வந்தால் இரண்டொரு மணி நேரங்கள் மட்டுமே இருக்கிறார். பிறகு கிளம்பி போய் விடுகிறார். மனுசனை உட்கார வைத்து சமைத்து வடிக்கிற எந்த வேலையும் கிடையாது சந்தானலஷ்மிக்கு. (ஆனால் கனகசபாபதியை உட்கார வைத்து சமைத்து அவருக்கு சாப்பாடு போடத்தான் சந்தானலஷ்மிக்கு ஆசை....) மேலும் அந்த ஆசாமியின் துணிகளை தினமும் துவைத்துப் போட்டு; நாள் பூராவும் அவனுக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கிற அடிமைத்தனமும் கிடையாது. - இதற்குமேல் என்ன வேண்டும் ஒரு மனுஷிக்கு.... - இது விசாக தோட்டம் தெருப் பெண்கள் நிறைய பேரின் ஒரே கேள்வி....

இதெல்லாம் இல்லத்தரசிகளின் பாடு என்றால்; அந்தப் பகுதி இல்லத்தரசர்களின் பாடு வேற மாதிரி.... திடீரென்று பார்த்தால் அவர்களுடைய தெருவிலும் ஒரு பிரகாசமான வாட்டசாட்டமான பொம்பளை.... ஒரு பணக்காரரின் ஆசைநாயகி. அதுவும் தனியாக இருக்கும் ஆசைநாயகி. - பளபளப்பான காகிதத்தில் சுற்றப்பட்ட பாதாம் அல்வா போல காட்சி தரும் ஆசைநாயகி. சில இல்லத்தரசர் களுக்கு சந்தானலஷ்மியின் உடல் வாளிப்பையும் பளபளப்பையும் பார்த்த பிறகுதான் அவர்களுடைய மனைவிமார்களின் உடல் தளர்ச்சியும்; அலுத்துப் பழையதாகிப் போயிருந்த அவர்களின்



அன்றாட நடைமுறைகளும் புத்தியில் அதிகமாக உறைத்தன. இதனால் அவர்கள் திடீரென்று அவரவர் மனைவிமார்களின் மேல் உப்புப் பெறாத விஷயத்திற்கெல்லாம் எரிந்து எரிந்து விழ ஆரம்பித்திருந்தார்கள்.... அதே நேரம் கல்யாணமாகாத சின்ன வயது ஆண்களோ சந்தானலஷ்மியின் கவனத்தைப் பெற நன்றாக உடையணிந்து அவர்களின் வீட்டு வாசல்களில் அடிக்கடி அதிக நேரம் காட்சி தந்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த மாதிரியெல்லாம் சைதாபேட்டை விசாக தோட்டத்து சமூக சூழலே அப்படி இப்படியென்று மாறிப்போகும்படியான நிலைமையை உருவாக்குவதற்காகவே அங்கே வந்து சேர்ந்தாற் போலாகிவிட்ட அவளுடைய வீட்டிற்குள் சந்தானலஷ்மி அவளின் முதல் தினத்தை மிகவும் மனநிறைவோடு கழித்தாள். இத்தனைக்கும் முதல் நாள் கனகசபாபதியால் ஐந்து நிமிடம்கூட அவளை வந்து பார்த்துவிட்டுப் போக முடியவில்லை.... வேலை அதிகமாக இருப்பதால் இரண்டு நாள் கழித்து வருவதாக கனகசபாபதி முதலிலேயே சொல்லி இருந்தார். அதனால் சந்தானலஷ்மி வருத்தப்படாமல் தனியாக அவள் பாட்டுக்கு இருந்து கொண்டிருந்தாள். வீடு என்ற அமைப்பு கிடைத்துவிட்ட நற்கதியின் ஆறுதல் அவளுக்கு. வீட்டுக்கு விரும்பியதையெல்லாம் வாங்கிக் கொள்ள கனகசபாபதி கட்டுக் கட்டாக கரன்சி நோட்டுக்களை தூக்கிக் கொடுத்திருந்தது சந்தானலஷ்மியை ரொம்ப நெகிழ வைத்திருந்தது. அப்போது அவளுக்கு ஒரு முக்கியமான விஷயம் தெரியாது. கனகசபாபதி அவளுக்குக் கொடுத்த பணம் எல்லாம் கணக்கில் வராத கறுப்புப் பணம். கறுப்புப் பணத்திற்கு அவரின் மனைவி வனிதாமணி கனகசபாபதியிடம் எந்த கணக்கும் கேட்பது கிடையாது. வெளி உலக கேளிக்கைகளோடு தொடர்போ ஆர்வமோ அற்றவர் என்பதால் கறுப்புப் பணத்தை கன்னாபின்னாவென்று தவறான வழிகளில் செலவழித்துவிடப் போகிறவர் கிடையாது என்ற நம்பிக்கை இருந்ததால் கனகசபாபதியின் தனிப்பட்ட பொறுப்பில் இருக்கும் கறுப்புப் பணத்தின் கணக்கு வழக்குகளில் வனிதாமணி எந்தக் கவனமும் வைத்துக்கொள்ளாமல் இருந்து வந்தாள். - இந்த நேரத்தில் அது ஒரு வரப்பிரசாதமாகி விட்டது. அதனால் கனகசபாபதி தன் கறுப்புப் பணத்தால் சந்தானலஷ்மியின் எல்லா இஷ்டங்களையும் பூர்த்தி செய்துவைத்தார். அவளும் ஆசை தீர பொருட்களாக வாங்கி வீடு முழுக்க நிறைத்துவிட்டாள். சந்தானலஷ்மி யாரோ ஒரு ஆட்டோ ரிக்ஷாகாரனை கல்யாணம் செய்து கொண்டிருந்தால்கூட அவளுடைய பணத்தில் சீர்வரிசை என்ற

ஒரு கணக்குக்கு ஏழெட்டு பாத்திரமாவது வாங்கியாக வேண்டும் இப்போது இந்த 'கல்யாணத்திற்கு' அவளுக்கு தம்படி காசு செலவு கிடையாது. எந்த சிரமும் இல்லாமல் சந்தானலஷ்மிக்கும் ஒரு 'இல்வாழ்க்கை' தயார் - ஹோட்டலில் சாப்பாடு தயார் என்கிற மாதிரி....

பொய் சொல்லக்கூடாது; நிஜமாகவே கனகசபாபதி சந்தானலஷ்மியை உட்காரவைத்து அல்லது படுக்க வைத்து சாப்பாடு போட்டார். வீட்டு வாடகையான நாலாயிரம் ரூபாய்க்கு மேல் மாதாந்தர செலவுகளுக்காக அவர் அவளுக்கு ஒவ்வொரு மாதமும் ஐந்தாயிரம் ரூபாய் தந்தார். உள்ளூர் வரிகள் தனி என்பது போல; விலை உயர்ந்த பொருட்கள் வாங்கிக் கொள்ள சந்தானலஷ்மி ஆசைப்பட்டு கேட்டால் அதற்குக் கனகசபாபதி தருகிற பணம் இந்த மாதாந்தர பணக்கணக்கில் சேராது. ஆனாலும் என்ன - மாதாந்தர செலவுக்காக அவர் தருகிற ஐயாயிரம் ரூபாயில் பாதிப்பணம் கூடச் செலவாகாது சந்தானலஷ்மிக்கு. அதற்குள் அவளுடைய அதிர்ஷ்டம்; அடுத்த மாத 'சந்தா' பணம் வந்து விடும். சந்தா பணம் தருபவர் சென்ற மாதம் தந்த சந்தாவில் மிச்சம் மீதி ஏதாவது இருக்கிறதா இல்லையாவென்று ஒரு நாளும் சந்தானலஷ்மியை கேட்டதில்லை. அவளும் போன மாதம் கொடுத்த பணத்தில் இன்னும் நிறைய மிச்சம் இருக்கிறதென்று கனகசபாபதியிடம் சொன்னது கிடையாது. மிச்சம் இருக்கும் பணத்தையெல்லாம் அப்படி அப்படியே ஏதாவது ஒரு டப்பாவில் போட்டு போட்டு சமையல் அறையில் வைத்திருந்தாள்.

- இப்படியே ஒரு ஏழெட்டு மாதம் போனது. அப்புறம்தான் இந்த மிச்சப் பணம் சந்தானலஷ்மியின் கருத்தைக் கவர்ந்தது. ஆயிரம்தான இருந்தாலும் அவள் கனகசபாபதியின் சட்டப்பூர்வமான தாலி கட்டிய மனைவி இல்லை. இந்த நிமிஷம் கனகசபாபதி சந்தான லஷ்மியின் மேல் அளவற்ற மோகம் வைத்திருக்கிறார் என்பதென்னவோ உண்மைதான். இந்த மோகம் இப்படியே காலத்திற்கும் நீடித்திருக்குமா? தெரியாது. அதற்கெல்லாம் எந்த உத்திரவாதமும் கிடையாது. திடீரென ஒருநாள் கனகசபாபதிக்கு சந்தானலஷ்மி கசந்து போனாலும் போய் விடலாம். அதனால் அவளுடைய தொடர்பையேகூட அவர் அறுத்துக்கொண்டாலும் கொள்ளலாம். அப்படி எதுவும் நடந்தால் அதைக் கேட்பதற்குக்கூட சந்தான லஷ்மியின் பக்கம் சரியான மனிதர்கள் கிடையாது. இதை மறந்துவிடவே கூடாது அவள். மனித வாழ்க்கையில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். அதனால் எதையும் எதிர்பார்த்து

572018


சந்தானலஷ்மி இப்போது இருந்தே அவளுடைய எதிர்காலத்திற்குத் தேவையான பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்துக் கொண்டால்தான் நல்லது.... இதெல்லாம் விசாக தோட்டத்து வீட்டுக்கு வந்து சேர்ந்த ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு சந்தானலஷ்மியின் பாதுகாப்பு உணர்வு சற்று நிறைவாக இருந்த மனநிலையில் ஏற்பட்ட எச்சரிக்கை உணர்வாம்.... ஹாஸ்டலை விட்டு வெளியேறி வீடு என்ற அமைப்பிற்குள் வந்து சேர்ந்திருப்பதில் மனதில் ஆசுவாசமான நிம்மதி அவளுக்கு ஏற்பட்டிருந்ததும் உண்மைதான். ஆனால் கனகசபாபதிக்கு தான் தாலி கட்டிய மனைவி கிடையாது என்ற பாதுகாப்பு அற்ற உணர்வும் சந்தானலஷ்மியின் உள்மனதில் கடல் ஆழத்துத் தாவரமாய் சஞ்சலித்தே கிடந்தது. அவ்வப்போது வந்து போகிற மனிதராய் கனகசபாபதி இருந்ததில் அவளின் மனதிலும் தனிமை உணர்வு அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்தது. ஆனால் தொடக்கத்தில் இந்த உணர்வுகூட சந்தானலஷ்மிக்குப் பெரிய பிரச்சினையாக இருந்ததில்லை. - இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் அவளே எதிர்பாராத ஒருவித தாழ்வு மனப்பான்மைதான் கஷ்டமான பிரச்சினையாக இருந்தது அவளுக்கு. என்னதான் வசதியான இன்பகரமான வாழ்க்கைதான் என்றாலும் தான் ஒருத்தரின் மனைவி இல்லை; வெறும் ஆசைநாயகிதான் என்ற கூச்சமும் ஒருவித குறுகுறுப்பும் சந்தானலஷ்மியின் மனதிற்குள் இருந்துகொண்டே இருந்தது. இந்த கூச்சத்தையும் குறுகுறுப்பையும் தாண்டி அக்கம் பக்கம் எந்த வீட்டுப் பெண்களோடும் சகஜமாக அவளால் பேசிப் பழக முடியவில்லை. அவளை ஒரு கௌரவமான குடும்பப் பெண்ணாக நினைத்தும் மதித்தும் தெருப் பெண்கள் பேசுவார்களோ மாட்டார்களோ என்ற சந்தேகமும் பயமும் சந்தானலஷ்மிக்குள் ரொம்ப இருந்தது. அதேபோல அந்தத் தெருவில் இருந்த பெண்களுக்கும்; இவள் யாரோ ஒரு பணக்கார ஆசாமியின் ஆசைநாயகி என்ற அபிப்பிராயத்தைத் தாண்டி வந்து சந்தானலஷ்மியிடம் அந்நியோன்னியமாக பேசிப் பழக முடியாமல் இருந்தது.

- இந்த பரஸ்பர இரண்டு பக்க முடியாமைகளின் பலனாக என்ன ஆயிற்று தெரியுமா? சந்தானலஷ்மிதான் அவளுடைய வீட்டின் கதவுகளை எல்லா நேரமும் சாத்தியே வைத்துக்கொண்டு தெருப் பெண்கள் யாரிடத்திலும் பேசிப் பழகாமல்; பேசிப் பழக முடியாமல் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியதாகி விட்டது....

❖

LIBRARY
17-11-2004
CHENNAI 600 008
CPL572018

572018

## 8

**யா**ரிடமும் அன்னியோந்நியமாக பேசிப் பழக முடியாமல் வீட்டின் வாசல் கதவை பூட்டியே வைத்து தனிமைப்பட்டிருக்கும் சங்கடம் சந்தானலஷ்மிக்கு என்றால்; கனகசபாபதிக்கு வேற மாதிரியான ஒரு தர்மசங்கடம். ஆரம்ப நாட்களில் காரில் இருந்து இறங்கி சந்தானலஷ்மியின் வீட்டுக் கதவை தட்டிக்கொண்டு ஒரே ஒரு நிமிஷம் நிற்பதென்றால்கூட கூச்சம் அவரைக் கொஞ்சம் பிடுங்கித் தின்றுவிடும்.... இப்படியெல்லாம் அதற்குமுன் நின்ற முன்அனுபவம் எதுவும் கிடையாதே அவருக்கு.... அதனால் தெருஜனம் பார்க்கும்படி அவருடைய ஆசைநாயகியின் வீட்டுக்கு வந்து போவது மனதிற்குள் கனகசபாபதிக்கு வெட்கக்கேடாக இருந்தது.... ஆனால் வெட்கக்கேடான அந்தக் காரியத்தை அவரால் செய்யாமல் இருக்கவும் முடியவில்லையே....

காரில் வந்து கனகசபாபதி இறங்கும்போது அவரைப் பார்ப்பதற்காகவே நிற்கிற மாதிரி சில வீட்டின் வாசல்களில் பெண்களேகூட நிற்பதுண்டு.... சும்மா அவரைப் பார்க்கத்தான். வேற எதுவும் கிடையாது.... சில வீட்டின் ஆண்களுக்கு கனகசபகாபதி எத்தனை மணிக்கு வருகிறார், எத்தனை மணிக்கு கிளம்பிச் செல்கிறார் என்பதை கவனிப்பதே தலையாய வேலையாக இருந்தது.... கனகசபாபதியின் கார் கண்ணில் பட்டதும் 'மைனர் வந்திட்டார் பார்' என்று ஆற்றாமையுடன் சொல்லிக் கொள்ளும் வயசான ஆசாமிகளும் மூன்று நான்கு வீடுகளுக்கு ஒருவர் - அந்தத் தெருவில் இருந்தார்கள்.

- ஆனால் இவை எல்லாமே வீட்டுக்கு வெளியில் நிகழும் தர்மசங்கடங்கள்தான். வீட்டிற்குள் சந்தானலஷ்மியின் ஆரம்ப பல மாதங்களும் சில வருடங்களும் இனிமையாகவும் குதூகலமாகவுமே கழிந்தன. இந்த வீட்டில் கனகசபாபதி முதல் தடவையாக வந்து; முதல்முறையாக சந்தானலஷ்மியுடன் பாலுறவு வைத்துக்கொண்டபோது எந்த கட்டுப்பாடும்; எந்த சம்பிரதாயங்களும் இல்லாமல் மிக சுதந்திரமான பாலுறவும்; அந்தப் பாலுறவின்போது முதன் முறையாக வாழ்க்கையில் தன்னை முழு நிர்வாணமாக்கிக் கொண்ட சந்தானலஷ்மியின் பூகம்ப எழுச்சியும் எந்த வார்த்தைகளாலும் விவரிக்கப்படுவதற்கு அப்பாற்பட்டவை.... இந்த வீட்டில் நிகழ்ந்த



முதல் பாலுறவுக்கு முன் சந்தானலஷ்மிக்கு கிடைத்த பாலுறவு அனுபவம் எல்லாமே ஹோட்டல் அறைகளில்தானே - 'ஒரு ஹோட்டல் அறையில் இருக்கிறோம்' என்ற ஒரு பய உணர்வும்; இனம் தெரியாத அந்நிய உணர்வும் அவளின் மனதில் ஒரு வயிற்று உபாதைபோல உயிரை வாங்கி இருக்கிறது.... இந்தப் பயத்தின் உபாதை ஹோட்டலுக்கு ஹோட்டல் அதிகப்பட்டுக் கொண்டே வேறு இருந்தது.... ஹோட்டலின் பக்கத்து அறைகளில் ஏதாவது பேச்சுக்குரல்கள் கேட்டால்கூட கனகசபாபதியோடு மேற்கொண்டிருக்கும் பாலுறவை யாரோ எட்டிப் பார்ப்பதைப் போன்ற பதட்டமும் கலவரமும் சந்தானலஷ்மியின் உணர்வுகளில் பீறிட்டுப் புடைக்கும்.

விசாக தோட்டத்து வீட்டில் இந்த மாதிரி எந்தப் பாடும் கிடையாது சந்தானலஷ்மிக்கு.... வீட்டுக் கதவை சாத்தி தாழ்போட்டுவிட்டால்- அவ்வளவுதான்.... எந்தத் தொல்லையும் கிடையாது. சந்தான லஷ்மி-சந்தானலஷ்மிதான். கனகசபாபதி - கனகசபாபதிதான்.... யாரும் கிடையாது. எதுவும் கிடையாது. ஆண் பெண் பாலுறவின் எல்லா பரிமாணங்களோடும் வீட்டுக் கட்டிலில்தான் சந்தானலஷ்மி கனகசபாபதியோடு ஓங்கி உயர்ந்து ஐக்கியமானாள் என்று சொன்னால் - கொஞ்சம் கூட அது மிகை கிடையாது....

- இதெல்லாம் சந்தானலஷ்மியின் பாலுறவுப் பக்கம். -இது கனகசபாபதியின் பாலுறவுப் பக்கம்....வீட்டுப் படுக்கையில் சந்தானலஷ்மியின் எழுச்சியையும் ஐக்கியத்தையும் பார்த்த கனகசபாபதி வியந்து பிரமித்துப் போனார். அவரைப் பொறுத்த வரையில் ஹோட்டல் அறையில் பார்த்த சந்தானலஷ்மியே அசர வைத்திருக்கிறாள் ஆனால் - அதே சந்தானலஷ்மியை வீட்டின் படுக்கையில் பார்க்கிறபோது ஹோட்டல் அறை சந்தானலஷ்மி ஒன்றுமே இல்லை. வீட்டுச் சந்தானலஷ்மியை கனகசபாபதி அவளுக்குக் கிடைத்த 'பாலுறவுப் புதையல்' என்று நினைத்தார். படுக்கையின் அந்தத் தருணங்களில் சந்தானலஷ்மியின் சத்துள்ள பழுத்த நிர்வாணமும் அவரை மிகவும் நெகிழவும் கனியவும் வைத்திருந்தன. அவருடைய பதினைந்து வருட தாம்பத்ய வாழ்க்கையில் கனகசபாபதி மனைவி வனிதாமணியிடம் இப்படி ஒரு கோபம் கலந்த ஒத்துழைப்பையோ; ஒருமித்த அவகாசத்தையோ; முழு நிர்வாண பரிவர்த்தனையையோ பெற்றுக் கொண்டதே கிடையாது...

கல்யாணமான புதிதில் கனகசபாபதி மனைவி வனிதாமணியை உடலுறவின்போது குறைந்தபட்சமான அரை அம்மணத்தில் வேறு

வேறு கோணங்களில் ரசிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். வனிதாமணி அவரின் இந்த ஆசைகளை ஒருநாள்கூட நிறைவேற்றிய தில்லை. பாலுறவு நேரங்களில் சின்ன விளக்கு வெளிச்சத்தைகூட அனுமதிக்கமாட்டாள் அவள். மனைவியை கனகசபாபதியால் வாய் திறந்து திட்டமுடியாது. மனதிற்குள் போட்டு நன்றாக அவளை திட்டி தீர்ப்பார். அந்த காலகட்டத்தில் அவருக்கு மனைவியின் மனச்சிக்கல் ஒன்று தெரியாததாக இருந்தது. - வனிதாமணிக்கு இளமைப் பெருக்கு இல்லாத அவளின் வறண்ட உடல் அமைப்பின்மேல் பெரிய தாழ்வுமனப்பான்மை ஒரு நங்கூரத்தைப் போல அவளுடைய அடிமனசில் கனமாகக் கிடந்தது. அதனாலும்தான் அவள் அவளுடைய உடம்பை சுதந்திரமாக கணவனுக்குக் காட்ட மறுத்தாள். வனிதாமணி ஆஸ்த்மாவின் இசிவு ஆரம்பமாகும்போது அதைக் காரணமாகக் காட்டி மேலும் அதிகமாக கணவனிடம் இருந்து தன் உடம்பை விலக்கிக் கொள்வாள். கல்யாணமான இரண்டாவது வருடம் மகனும்; ஆறாவது வருடம் மகளும் பிறந்தபோது அதைக் காரணமாக்கி பல இரவுகள் வனிதாமணி அவளுடைய படுக்கையை தனிமைப்படுத்திக் கொள்வாள். அப்புறம் பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள் என்ற காரணம். பின்னால் கனகசபாபதி நாற்பது வயதைத் தாண்டிவிட்டார் என்ற காரணம்....

இப்படி மாறி மாறி ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி காட்டி வனிதாமணியிடம் உடலுறவு என்பது பலவித இச்சைகளுக்கு வளைந்து தராத; மனதிருப்திக்கு ஏற்றதாக இல்லாத ஒரு அரைகுறை சாப்பாடு போல் ஆகிவிட்டிருந்தது கனகசபாபதிக்கு.... அது கிடைக்கிற நேரங்களில் கனகசபாபதி சாப்பிட்டு வந்தார். - அந்த சாப்பாட்டில் ஒருநாள்கூட நிறைவுடன் சாப்பிட்டு அவர் ஏப்பம் விட்டதே கிடையாது - அந்த ஏமாற்றம்; அந்த ஆவேசம் அத்தனையையும் சேர்த்துவைத்து சந்தானலஷ்மியிடம் கனகசபாபதி மூக்கு பிடிக்க சாப்பிட்டு நன்றாக ஏப்பம் விட்டார்.... சந்தான லஷ்மியைப் பற்றி சொல்லவே வேண்டாம். அரைகுரை சாப்பாடு கூட இல்லாமல் முழு பட்டினி கிடந்தவள் அவள். அதனால் கிடைத்திருக்கும் பணக்கார சாப்பாட்டை எவ்வளவு அதிகம் சாப்பிட முடியுமோ அவ்வளவு அதிகம் சாப்பிட்டாள். சாப்பிட்டுக் கொண்டே இருக்க ஆசையும்பட்டாள்.... வயிறார சாப்பிடுபவர் களுக்கு - அந்த நிமிஷம் மனசெல்லாம்கூட நிறைந்து பொங்கிப் போயிருக்கும். அப்படிப்பட்ட ஒரு மனநிறைவில் பாலுறவுச் சாப்பாடு சாப்பிட்ட இன்ப களைப்பில் கனகசபாபதி சந்தான



லஷ்மியின் மேல் கவிழ்ந்து கிடந்தார். அப்போது அவருடைய மன ஆழத்திற்குள் எங்கேயோ புதைந்து கிடந்த இளம் பிராயத்து கனகசபாபதியின் ஜனனம் நிகழ்ந்தது. 'இதற்குத்தானே காலம் காலமாக ஆசைப்பட்டாய்....?' என்று இளம்பிராயத்து கனகசபாபதி இன்றைய கனகசபாபதியை கேட்டான். இன்றைய கனகசபாபதி அதற்கு பதில் சொல்லவில்லை. நிசப்தமாக கனகசபாபதி சந்தான லஷ்மியின் அகன்ற திண்மையான உடம்பின்மேல் அசையாமல் கவிழ்ந்தே கிடந்தார். அவருடைய வியர்த்துப் போயிருந்த தலைமுடியை விரல்களால் காதலுடன் அளைந்து கொண்டேயிருந்த சந்தானலஷ்மி பல நிமிடங்கள் கழித்துக் கேட்டாள்.

''என்ன - கொச்சு முதலாளிக்கு எந்திருக்க இன்னும் மனசு வரல போல இருக்கு?''

''எந்திருக்க முடியலை....'' கனகசபாபதி ஈனஸ்வரத்தில் சொன்னார்.

''ஏனாம்?'' - சாப்பாடு அப்படி பயங்கர ஓவர்... ''ஒரே உண்ட கிறக்கம்....''

''அப்பிடிப் பாத்தா தொண்டனுக்கும்தான் இருக்கும் உண்ட கிறக்கம்...''

''தொண்டன் யாரு - நீயா?''

''வச்சிக்கோங்களேன்....''

''தொண்டனுக்கே உண்ட கிறக்கம்னா - தலைவனுக்கு கிறக்கம் ஒருபடி ஜாஸ்தியாத்தான் இருக்கும்....''

''ஏனாம்?''

''தலைவன் சாப்பிடறது அப்படி. தொண்டனோடதையும் சேர்த்துச் சாப்பிடற ஆளாச்சே தலைவன்....''

''இப்படியெல்லாம் பேசறது என்னோட சிடுமூஞ்சி முதலாளியான்னு ஆச்சர்யமா இருக்கு எனக்கு....''

''சந்தானம் - அந்த உன் சிடுமூஞ்சி முதலாளி உயிரைவிட்டு ரொம்ப நாளாயிருச்சி....''

சந்தானலஷ்மி கனகசபாபதியின் முகத்தில் முத்தமிட்டுவிட்டு கேட்டாள் ''இப்ப என் மேல கிடக்கறது யாராம் - புதுசா பிறந்த மனுசனா?''

''இல்ல. ரொம்ப ரொம்பப் பழைய மனுஷன். முப்பது வருஷத்துக்கு மேல எனக்குள்ள புதைஞ்சே போயிட்ட அரத பழசான மனுஷந்தான் இப்ப உன்மேல கிடக்கான்....''

''அப்ப - அந்த அரதப் பழசான மனுசனோட வயசு என்னவாம்.... அது தெரிய மாட்டேங்குதே....''

''பதினைஞ்சே பதினைஞ்சி வயது...''

''பதினைஞ்சி வயசு பையனா இப்படி ஒரு போடு போடுதாம்?

''பதினைஞ்சி வயசுலேயே திடீர்னு இவனுக்கு மீசை முளைச்சாச்சி சந்தானம்...'' - இவனோட பரிதாபமே - அப்படி மீசை முளைச்சதுதான்...

''சொல்றதையெல்லாம் பாத்தா பிஞ்சிலேயே பழுத்தாச்சி போல....''

''பழுத்திருந்தாத்தான் நல்லா இருந்திருக்குமே.... இந்த கனக சபாபதி பதினைஞ்சாவது வயசில வெம்பில்ல போயிட்டான்....''

''பதினைஞ்சி வயசில மீசை முளைச்சிட்டா வெம்பித்தான் போகணுமோ என்னமோ....''

''இல்லை சந்தானம். முழுசாவும் வெம்பிப் போகலை. அதனால் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் தப்பிச்சான் கனகசபாபதி....''

''எங்கே தப்பிச்சீங்க.... கடைசியில பாத்தா - இப்படி ஒரு தடிச்சிகிட்ட வந்து மாட்டிக்கிட்டீங்களே....''

''இப்படி எங்கேயாவது எக்கச்சக்கமா மாட்டிக்க மாட்டோமான்னுதானே பதினைஞ்சாவது வயசில இருந்து மனசு எனக்கு அலையா அலைஞ்சிருக்கு....''

சொல்லக்கூடாது. அநியாயந்தான் - பதினைஞ்சாவது வயசிலேயே இதுக்கெல்லாம் அலைஞ்சது....''

''அநியாயமே கிடையாது சந்தானம்; நான் சொல்றேன் -அது ஒரு மாதிரியான சுயகொடுமை.... பதினைஞ்சாவது வயசில கிடைக்கக் கூடாத கொடுமை. மனசு கிடந்து அப்பவே அலைஞ்சதுக்கு அந்தக் கொடுமைதான் காரணம்....

''கொச்சு முதலாளிக்கு அலைஞ்சது மனசு மட்டும்தானா - இல்லை உடம்பும் சேர்ந்தேவா?''



''இங்கேதான் நம்பவே முடியாத நெஜம் இருக்கு சந்தானம். என்னன்னு கேட்டினா -எல்லா எழவு அலைச்சலும் எனக்கு மனசாலேதான்....''

''உடம்பும் சேர்ந்து அலைஞ்சிருந்தா ரொம்ப மோசமா போயிட்டிருக்கும்னு நெனைக்கிறேன்.''

கனகசபாபதி இதற்கு சில நிமிடங்கள் யோசனை செய்து பார்த்துவிட்டு சொன்னார். ''சந்தானம்; சின்ன வயசில செக்ஸ்னு ஒண்ணு என் மனசுக்குள் ஐடியா பண்ணி வச்சிருந்தேனே - எனக்கு அது எத்தனையோ வருஷம் கழிச்சி - இப்பத்தான் உன்கிட்டே கிடைச்சிருக்கு....''

''பேசறதை பாத்தா - இதுக்கு முன்னாடி நெறயத்தான் பாத்தாச்சி போல....''

''தப்பா சொல்றே.... உனக்கு முன்னாடி நான் பாத்தது ஒண்ணே ஒண்ணுதான். ஆனா என்னோட பெரிய துரதிர்ஷ்டம் - அதில் பாக்கறதுக்கு ஒண்ணுமே இல்லை. அதனால அதை பாக்கறதுக்கே பிடிக்காம போயிருச்சி''

''பிடிக்காமலேயே அதையும் இத்தனை வருஷம் பார்த்தாச்சி''

''பாரேன் தலை எழுத்தை. ஆனா என்ன - இனிமே உன்னை ஒரு கை பாக்காம விடறதில்லை....''

''நானும்தான் இத்தனை வயசுக்குப் பிறகு பாக்குறேன் - இப்படியெல்லாம்....''

''பாரேன் அதிர்ஷ்டத்தை. கடவுள் நம்ம ரெண்டு பேரையும் ஒரே நேரத்ல கண்ணைத் திறந்து பாத்திட்டார்....''

''போதும்டா என் சாமி. ஹாஸ்டல் பிழைப்புன்னு உசிரை விடறதுக்கு நான் நாள் பாத்திட்டு இருந்தேன்....''

''கிட்டத்தட்ட நாம ரெண்டு பேரும் ஒரே படகுல இருந்திருக்கோம் சந்தானம்....''

''ஆனா இந்தப் படகும் கொஞ்சம் சின்னதா தெரியுது சாமி. இன்னும் கொஞ்சம் பெரிசா இருந்தா தேவலை....''

''நீ ஒண்ணு எனக்கு. வனிதாமணிகூட நான் நடத்திக்கிட்டு இருக்குற கல்யாண வாழ்க்கை பாக்கறதுக்கு பெரிய கப்பலாட்டம் தெரியுதுன்னு பாக்குறியா.... உள்ளுக்குள்ள அது ஓட்டை விழுந்த

கப்பல்டி சந்தானம். ஒரு நாள் இல்லேன்னாலும் ஒருநாள் இந்தக் கப்பல் முங்காமல் போகாது.... நீ வேணா பாத்திட்டு இரு....''

''கதை இதெல்லாம். பதினெட்டு வருஷமா இந்தக் கப்பல் ஓடிட்டுதானே இருக்கு....-'' - சந்தானலஷ்மி கேட்டாள்.

''கப்பல் முங்கறதுக்குக் கொஞ்ச நாள் பிடிக்கும்டி சந்தானம்....''

''நீங்க சொல்றதும் சரிதான்.... படகுதான் நிமிஷத்ல மூழ்கிப் போயிடும்''

சந்தானலஷ்மி இப்படிச் சொன்னதும் கனகசபாபதி அவளைச் சற்று திகைத்துப்போய் பார்த்தார். சந்தானலஷ்மிக்கு அவரின் திகைத்துப்போன முகத்தைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

''ஒரு பேச்சுக்குச் சொன்னா - உடனே மனுசன் பாக்குறதைப் பாரு''

''தயவுசெஞ்சி இப்படியெல்லாம் விளையாட்டுக்குக்கூட பேசாத சந்தானம்.... இப்பத்தான் எனக்கு நீ கிடைச்சிருக்கே....'' - கனகசபாபதி சிறிது உடைந்த குரலில் சொன்னார்.

''பேசினா பேசிட்டுப் போறேனே... இந்த மாதிரியெல்லாம் பேசறப்பதான் ஒரு பொம்பளையா இருக்குறதும் ஒரு தினுசா சூப்பரா இருக்கு....''

கனகசபாபதி உற்சாகம் அடைந்துவிட்டார் ''இங்கே வேற மாதிரி சந்தானம். இந்த மாதிரியான நேரங்கள்ள எனக்கு பொம்பளைங்க கிட்ட ரொம்ப கெட்ட வார்த்தை பேசணும் போல இருக்கும்.

''பதினைஞ்சி வயசுப் பையன் பேச ஆரம்பிக்கிற வாசனை வர்ற மாதிரி தெரியுது.''

''சந்தானம் - என்னோட பாழாபோன பதினைஞ்சாவது வயசில ஒரு பார்க்கக்கூடாததை பாத்துத் தொலைச்சிட்டேன். இன்னைக்கி வரைக்கும் அதைப்பத்தி யார்கிட்டேயும் வாயைத் திறந்து சொன்னதே கிடையாது....''

''யார்கிட்டேயும் சொல்லவே முடியாத சமாச்சாரமா?''

''சொல்லிடணும் சொல்லிடணும்னு ஆசைப்பட்ட விஷயம். என்னைப் பொறுத்தவரைக்கும் சொல்லியே தீரவேண்டிய விஷயம். ஆனா யார்கிட்டேயும் அதை சொல்லவே இல்லை. கல்யாணமாகி எனக்குப் பெண்டாட்டியா வர்ரவகிட்டே கட்டாயம் சொல்லி டணும்னு நெனைச்சி காத்திட்டே இருந்தேன்.... அதுவும்



நடக்கலை.... காத்திருந்து பாத்துப் பாத்து எனக்கு நெஞ்சே அவிஞ்சி போயிருச்சி....''

''காத்திருந்தது பதினைஞ்சாவது வயசில இருந்து?'' சந்தான லஷ்மி கேட்டாள்.''

''யெஸ்....''

''வெக்கமில்லாம சொல்றதைப் பாரேன்....''

''ஏய் - இதுல என்னடி குண்டு வெக்கம்?''

''இன்னைக்கி வரைக்கும் ஏன் அதை உங்க பெண்டாட்டிகிட்டே சொல்லாமலே இருக்கீங்க?''

''நல்லா சொல்வேனே.... ஒரு தடவை செக்ஸ் வச்சிக்கிறதுக்கே அவகிட்ட நான் குதிரை கொம்பு வாங்கியாகணும். அப்படிப்பட்டவ கிட்டேபோயா செக்ஸைப் பத்தி ஒருத்தன் பேசமுடியும்.... தலைகீழா நின்னாலும் நடக்க முடியாத விஷயம் அது....''

''அப்படி என்ன ஒரு விஷயமோ....''

''என்னமோ இன்னைக்கி உன்கிட்டே அதைப்பத்தி பேசிடலாம்னு தோணுது...''

''இந்த நிமிஷம் சந்தானலஷ்மிதான் பெண்டாட்டி போலவாக்கும்?''

''பெண்டாட்டி போல இல்லை. பெண்டாட்டிக்கும் மேல....''

அந்த நிமிஷம் அத்தனை பெரிய வார்த்தையை சந்தானலஷ்மி கனகசபாபதியிடம் எதிர்பார்க்கவில்லை. அந்த சின்ன வார்த்தையில் அவளின் மொத்த மனசும் பூரித்துப் போய்விட்டது.

''இந்த வார்த்தை உங்க பெண்டாட்டிமேல சத்தியமா சொன்ன வார்த்தையா இருந்தா போதும். எத்தனை ஜென்மத்துக்கும் நாயா உங்க காலையே சுத்திட்டு கிடப்பேன்....''

சந்தானலஷ்மி சொன்னதைக் கேட்டு கனகசபாபதியும்தான் நெகிழ்ந்து கரைந்து போனார். உரத்த குரலில் அவர் சொன்னார் ''பெண்டாட்டி மேல சத்தியமா இல்லைடி சந்தானம். என் பெண்டாட்டிக்கும் மேல இருக்கறவ மேல சத்தியமா சொன்ன வார்த்தை அது....''

''இந்த வார்த்தை போதும் சாமி.... ஆயுசுபூரா தாங்கும்.... இனிமே நாம - விஷயத்துக்கு வருவோம். பதினைஞ்சாவது வயசில

பார்க்கக்கூடாத எதையோ பாத்திட்டதா சொன்னீங்களே.... அதைச் சொல்லுங்க... நான் கேக்குறேன் - முதல்ல....''

சந்தானலஷ்மியிடம் அதைச் சொல்லத் தொடங்குவதற்கு முன்னால் கனகசபாபதி கிட்டதட்ட முப்பது வருஷங்களுக்கு முன்பு தான் காண நேர்ந்த பாலுறவு காட்சியை சில நிமிடங்களுக்கு பெரிய பெருமூச்சோடு ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொண்டார்....

✧

## 9

முப்பது வருஷங்களுக்கு மேலாக மனதிற்குள் புதைந்து கிடக்கும் விஷயத்தையும்; அதைச் சார்ந்த பல மனோபாவங்களையும் இன்று சந்தானலஷ்மியிடம் ஒன்றுவிடாமல் சொல்லிவிட வேண்டியது தான் என்ற சிறிது ஆவேசமான முடிவுக்கு வந்ததும் - அதற்குமுன் தன்னை சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்ள அத்தனை நேரமும் சந்தானலஷ்மியின் மேல் கவிழ்ந்தே கிடந்த கனகசபாபதி எழுந்து கொண்டார். நிதானமாக உடைகளை எடுத்து அணிந்து கொண்டார். நெஞ்சுச் சூட்டுக்காக சிகரெட் ஒன்றையும் பற்றவைத்துக் கொண்டார். விரிந்து பரவிய சிகரெட்டின் புகை சந்தானலஷ்மிக்குக் கிடைத்திருக்கும் புதிய வாழ்க்கையின் அரிய நறுமணமாக அவளைச் சுற்றி வளைய வந்துகொண்டிருந்தது.

''ஆரம்பிக்கலாமா?'' - கனகசபாபதி கேட்டார்.

''கேட்டுட்டு இருக்காதீங்க....''

''ரைட்.... முதல்ல - சொல்ல வந்த அந்த முக்கியமான விஷயத்தைச் சொல்றதுக்கு முன்னாடி என் சின்ன வயசில; என் வாழ்க்கைல இருந்த சில சூழ்நிலைகளையும் உன்கிட்ட சொல்லிட்டா பொருத்தமாக இருக்கும்னு மனசுக்குப் படுது. சம்பந்தம் இருக்கோ இல்லையோ - சொல்லிக்கிட்டே போறேன்.... நீ கேட்டுக்கிட்டே வா....''

சில வினாடிகள் மௌனமாக இருந்தபின் கனகசபாபதி தொடர்ந்தார்.

''சந்தானம் எங்க வீட்ல நாலு தங்கச்சிங்களுக்கு நான் ஒரே அண்ணன். அதேபோல எங்க அப்பாவும் அவர்கூடப் பிறந்த நாலு



அக்கா தங்கச்சிங்க மத்தியில ஒரே ஆம்பளைப் பையன். எங்க அம்மா கதையை கேட்டின்னா - அதுவும் அதே கதைதான்.... ஸேம் ஸ்டோரி அவகூடப் பிறந்தது மூணு தங்கச்சிங்கதான். அண்ணன் தம்பி கிடையாது அவளுக்கு. எதுக்காக இதைச் சொல்றேன்னா - இப்படி ரெண்டு வழியிலேயுமே என்னைச் சுத்தி இருந்தது ஒரே பொம்பளைங்க பட்டாளந்தான் என்கிறதை நீ தெரிஞ்சிக் கிறதுக்குத்தான்.... ஏதாவது நாள் கிழமை; பண்டிகை அது இதுன்னு வந்திச்சின்னு வச்சிக்க - அவ்வளவுதான்; வீடுபூரா என் சித்திக்காரிகளும் அத்தைக்காரிகளும்தான்.... அப்ப என் ரெண்டு காதுலேயும் வந்து விழற எல்லா சங்கதிகளுமே ஒரே பொம்பளைங்க சமாச்சாரமாவே இருக்கும். கேக்குறதுக்கும் எனக்கு பயங்கர இண்ட்ரஸ்ட்டாத்தான் இருக்கும். ஆனா - உள்ளுக்குள்ள என்னோட விஷயம் வேற மாதிரி. வீட்ல என்னைச் சுத்தி ஒரே பொம்பளைங் களாவே இருந்தாலும்கூட அந்தப் பொம்பளைங்க கூட்டத்ல நான் ஒரேயடியா என் இஷ்டத்துக்கெல்லாம் இழைஞ்சிட முடியாது. எங்கேயோ ஒரு இடத்ல பெரிசா கோடு ஒண்ணைப் போட்டு என்னை அந்தக் கோட்டுக்கு அப்பால கொஞ்சம் தள்ளி ஒரு பக்கமாவே நிக்க வச்சிடுவாளுங்க. கோட்டுக்கு மறுபக்கம் அவளுங்க நின்னுப் பாளுங்க.... இப்படி நின்னு நின்னு என்ன ஆச்சின்னா - அந்தப் பொம்பளைங்க யார்கிட்டேயுமே எனக்கு எங்கேயோ ஒரு அந்நியோன்னியம் வர்ரதுக்கு சான்சே இல்லாம நான் எங்கியோ ஒரு வெத்து இடத்ல தன்னந்தனியா அம்போனு நின்னுட்டேன்.... என்ன அதுல பிரச்சினைன்னு கேட்டினா; அந்தப் பொம்பளைங்க போட்ட அந்தக் கோட்டைத் தாண்டி அவளுங்ககிட்ட எனக்கு சைக்கலாஜிக்கல் கான்டாக்ட் - ரொம்ப ரொம்ப அதிகமா தேவையா இருந்துச்சி.... அதனாலேயோ என்னவோ; அந்த சைக்கலாஜிக்கல் காண்டாக்ட் எனக்குக் கொஞ்சங்கூட கிடைக்காம போயிருச்சி.''

தொடர்ந்து கனகசபாபதி சொல்வதற்குள் சந்தானலஷ்மி குறுக்கிட்டாள்.

''இருங்க இருங்க. இந்த இடத்ல ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்டுடறேன். உங்க அம்மாகிட்டே அப்படியெல்லாம் கோடு கீடுன்னு எதுவும் இருந்திருக்காதே....அதனால உங்க அம்மாகிட்டே மட்டுமாவது உங்களுக்கு ஒரு அந்நியோன்னியம் கிடைச்சி ருக்குமே....?''

சந்தானலஷ்மி இப்படிக் கேட்டதும் கனகசபாபதி புதிய சந்தோஷத்தோடு அவளைப் பார்த்தார்: இதுவரை அவர் சொன்னதை

சந்தானலஷ்மி கச்சிதமாக உள்வாங்கிக் கொண்டிருக்கிறாள் என்பது அவளின் கேள்வியில் தெரிந்தது.

''விஷயத்தை கரெக்ட்டா பிடிச்சிட்டே சந்தானம். நீ கேட்டது சரிதான். என் அம்மாகிட்டே நீ சொன்னாப்ல கோடு கீடு எதுவும் கிடையாதுதான். ஆனா வேற ஒரு பெரிய சுவர் மாதிரியான சங்கடம் அவகிட்ட.... சொன்னா சிரிச்சி வைக்கக்கூடாது....''

''சிரிச்சா அதுக்காக கோவிச்சிக்கக்கூடாது - சொல்லிட்டேன்....''

''எங்க அம்மாவுக்கு ரெண்டு காதும் டமாரச் செவிடுடி சந்தானம். குண்டு போட்டாகூட கேக்காது''

''போச்சிடா....''

''அவங்க காதுல ஒரு விஷயத்தைப் போடறதுக்குள்ள எல்லாருக்குமே ஒரு மாதிரி உயிர் போய் உயிர் வந்திரும்....''

''காதுல ஏதோ ஒண்ணை மாட்டிக்கிட்டா நல்லா கேக்கும்னு சொல்வாங்களே?''

''எங்கேயாவது வெளியில போகும்போது கால்ல செருப்பை மாட்டிக்கிற மாதிரி; எங்க அம்மா 'ஹியரிங் எய்டை' எடுத்து காதுல வச்சிருப்பாங்க. அதென்னமோ வீட்ல இருக்கும்போது அதைத் தொடறது கிடையாது. அதனால நமக்குத்தான் மகா சங்கடம். மகாபாதிப்பு. வீட்ல யாரு என்ன பேசினாலும் அம்மா அவங்க பாட்டுக்கு இருப்பாங்க. அதனால என்ன ஆயிருச்சின்னா - எனக்கும் என் அம்மாவுக்கும் இடையில பெரிய 'கம்யூனிகேஷன் கேப்' வந்திருச்சி. நான் வீட்ல அவங்ககிட்ட பேச்சே வச்சிக்கிறதில்லை. நீ சொன்னாப்பல அந்த மனுஷிகிட்ட கோடே கிடையாதுதான். ஆனாலும் பாரு - இந்தக் காது கேட்காது என்கிற விஷயம் குறுக்க வந்து என் அம்மா பக்கத்திலேயும் போக முடியாம - அந்த இடத்திலேயும் நான் தனியா அம்போன்னுதான் நின்னுட்டு இருந்தேன்....''

''எதுக்கெடுத்தாலும் கொச்சு முதலாளி 'அம்போ'னு நின்னுடுவார் போல....''

''போடா - போய் தெருவுல பசங்ககூட விளையாடு. இல்லேன்னா ஏதாவது புஸ்தகத்தை எடுத்து வச்சிக்கிட்டுப் படி. நாங்க இங்கே பொம்பளைங்க முக்கியமான விஷயம் பேசிட்டு இருக்கோம். இங்கே வந்து நிக்காதே.... இப்படியே எங்க வீட்ல இருக்குற பொம்பளைங்க எல்லாம் என்னைச் சொல்லிச் சொல்லி விரட்டிக்கிட்டே இருப்பாங்க.... ஒரே எரிச்சலா வரும் எனக்கு.



இந்த மாதிரியெல்லாம் கோடு போட்டு வைக்காத ஒரு மனுஷிகிட்டப் போய் கொஞ்சம் நேரம் நிக்கமாட்டோமானு - ஒரு கட்டத்தில கடுப்பாகி ஏங்கியே போயிட்டேண்டி சந்தானம்....''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சந்தானலஷ்மி சிறிது உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னாள் ''இப்படியெல்லாம் ஒரு ஆம்பளை பேசறதை என் ஆயுசுல இப்பத்தான் கேக்குறேன்....''

''இந்த மாதிரி மனசைத் திறந்து ஒரு பொம்பளைகிட்ட கொட்டறதுக்குத்தானே இத்தனை வருஷமா நானும் காத்துக்கிட்டு இருந்தேன்....''

''அதுக்காக எல்லாத்தையும் ஒரே நாள்ல கொட்டித் தீர்த்திட வேண்டாம்...''

''இல்ல சந்தானம் - சின்ன கோடுகூட போட்டுக்காத உன்கிட்டேயும் கொட்டறதுக்கு நாள் நட்சத்திரம் பாத்திட்டு இருந்தா நான் 'அம்பேல்'தான்''

''வேண்டாம்யா சாமி. வேண்டாம். என்னால வேற நீங்க அம்பேல் ஆகவேண்டாம்....''

- இப்போது கனகசபாபதி உணர்ச்சிவசப்பட்டார். ''குண்டு நீ இந்த மாதிரி பேசும்போது நான் உன்கிட்ட வேறமாதிரி அம்பேல் ஆயிடறேன்....''

''அம்பேல் ஆவது நீங்க மட்டும்தானாக்கும்....?''

-சந்தானலஷ்மி இதை வேற ஒரு மாதிரியான குரலில் கேட்டாள். சில நிமிடங்கள் இருவருமே மௌனமாக இருந்தார்கள். கனகசபாபதி அவளைப் பார்த்தவாறு சிகரெட் புகையை ஊதிக் கொண்டிருந்தார். பல நிமிடங்களுக்கு மௌனமாக சிகரெட் புகைத்துக்கொண்டே இருந்தபின் - சந்தானலஷ்மியை கேட்டார்.

''சந்தானம் - இவ்வளவு நேரம் நான் சீரியஸா சில விஷயங்களைப் பத்தியெல்லாம் சொல்லிட்டு இருந்தேனே - அதெல்லாம் வேற ஒரு 'ப்ளேன்'ல உனக்குப் புரியவேண்டிய அளவுக்குப் புரிஞ்சதா இல்லையா?''

''இப்ப பேசிக்கிட்டு இருக்கறதுல இருந்தே நான் புரிஞ்சி பேசறேனா புரியாம பேசறேனான்னு யோசிச்சி பாத்தா தெரிஞ்சி போயிருமே....''

''பாத்தா புரிஞ்சி பேசற மாதிரிதான் தோணுது. இருந்தாலும் உன்மேல இருக்குற ஒரு அக்கறையில இதை கேக்கறேன்....''

''இந்த பேச்சையெல்லாம் நாலு மாசத்துக்கு முந்தி பேசியிருந் தீங்கன்னா - நீங்க இப்பச் சொன்னதுல ஒரு எழுத்துக்கூட புரிஞ்சிருக்காது - எனக்கு''

கனகசபாபதி சிகரெட் புகையை சந்தானலஷ்மியின் மார்பகங் களின் மேல் ஊதிவிட்டபடி கேட்டார் ''இந்த நாலு மாசத்ல - இதையெல்லாம் புரிஞ்சிக்கிறதுக்கு புதுசா எதை; எங்கே போய் படிச்சிட்டு வந்திட்டேனு தெரியலையே....''

''வேற எங்கே போய் படிப்பேனாம்... எல்லாம் இந்த மனுஷர்கிட்டேதான். தெரியுமா உங்களுக்கு - நாலு மாசத்துக்கு முந்தி வரைக்கும் எனக்குப் பாதி கண்தான் தெரிஞ்சது. பாதியே பாதி காதுதான் கேட்டது. மூச்சே பாதி மூச்சுதான் விட்டுட்டு இருந்தேன்....''

''நீ சொல்றதை வச்சிப் பார்த்தா - பாதியே பாதி வாழ்க்கைதான் வாழ்ந்திட்டு இருந்திருக்கே....?''

''பாதிகூட கிடையாது. வெறும் அரைகுறை ஆனா - என்னைக்கி இந்த கொச்சு முதலாளி டைப் அடிச்ச பேப்பரைப் பாக்குற சாக்குல என் ப்ரெஸ்ட்டைப் பாத்தாரோ அன்னைல இருந்து என் ரெண்டு கண்ணும் முழுசா பாக்க ஆரம்பிச்சாச்சி. காது ரெண்டும் நல்லா கேக்க ஆரம்பிச்சாச்சி. புரியாம இருந்த சமாச்சாரங்க எல்லாம் புரியவும் ஆரம்பிச்சாச்சி''

''குண்டு - இப்ப நீ ரொம்ப அஸால்ட்டா 'ப்ரெஸட்'னு சொன்னீயே - இந்த ஒரு சாதாரண வார்த்தையை இன்னைக்கி வரைக்கும் வனிதாமணி என்கிட்ட தப்பித் தவறிக்கூட சொன்னது கிடையாது தெரியுமா? ஏன்னு கேட்டா - அவ்வளவு இன்ஹிபிஷன்... அவ்வளவு மனக்கூச்சம் சனியனுக்கு... - இதை நான் எங்கேபோய் யார்கிட்டே சொல்லுவேன் - சொல்லு....''

''பாவம்தான் சாமி நீங்க... இதையும் நீங்க என்கிட்டே வந்துதான் சொல்லிக்க முடியுது....''

''என் சுபாவம் என்னன்னா - இந்த மாதிரியான சங்கதிகளைத்தான் உடனே பொம்பளைங்ககிட்ட சொல்லியாகணும் எனக்கு. என்னமோ அப்படி ஒரு புத்தி....'' - இந்த நிமிஷம் என் வாழ்க்கைல இருக்குற ஒரே பொம்பளை யார்னா - நீதான். அதான் சொல்லிட்டேன் உன்கிட்ட....''



''எனக்கு வாழ்க்கைல இருக்குற ஒரே ஆம்பளை நீங்க....''

கனகசபாபதி சிகரெட்டை 'ஆஷ்ட்ரே'யில் நெறித்துத் திணித்தார். முகவாயை கையால் அழுத்தமாக தடவியபடியே சொன்னார். ''எதைச் சொல்லணுமோ அதை இன்னும் நான் சொல்ல ஆரம்பிக்கவே இல்லை.... சொல்றதுக்கு ஆரம்பிக்கட்டுமா அதை....?''

''சொல்ல ஆரம்பிங்க. ஒண்ணு விடாம சொல்லிட்டே போங்க. ஒரு எழுத்து விடாம என் புத்திக்குள்ள போயிட்டே இருக்கும்....''

''திருவண்ணாமலையில எனக்கு ஒரு சித்தி இருந்தாடி சந்தானம்....''

''ஏன் - இப்ப இல்லையா அவ....?''

''இல்லை. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடிதான் செத்துப் போனா. ப்ரெஸ்ட் கேன்சர் வந்தது அவளுக்கு. பின்னாடி உடம்புல எங்கெல்லாம் பரவணுமோ அங்கெல்லாம் பரவி; எந்த ட்ரீட்மெண்ட்டும் பிரயோஜனப்படாம அநியாயமா செத்துப் போயிட்டா.....''

இதைக் கேட்டு சந்தானலஷ்மி உடம்பை ஒருமுறை சிலிர்த்துக் கொண்டாள். ''சொல்லாதீங்க சாமி - ப்ரெஸ்ட் கேன்சர் என்கிற வார்த்தையை கேட்டாலே உடம்பெல்லாம் நடுங்கிப் போயிடும் எனக்கு.... அங்கே போயா கேன்சர் வரும் - அநியாயம்....''

''இங்கேதான் எனக்குக் கடவுள் என்கிறவன் பெரிய கிராதகனா தெரிவான். பொம்பளைங்களுக்கு ப்யூட்டிஃபுல்லா ப்ரெஸ்ட்டை குடுத்திட்டு அங்கே போய் கேன்சரை கொடுத்தா - அந்த கடவுளை என்னன்னு சொல்றது....''

''போதும் சாமி கேன்சரைப் பத்தின பேச்சு. நீங்க உங்க திருவண்ணாமலை சித்தியைப் பத்தி சொல்லுங்க....''

''அந்த சித்தி என்னைவிடப் பத்து வயது பெரியவ. அவ ஒருத்திதான் எங்க குடும்பத்து தாய்க்குலங்களோட மத்தியில என்கிட்ட கொஞ்சம் கோடு போட்டுக்காம இருந்த ஒரே மனுஷி. கொஞ்சம் ஃப்ரீயா இருப்பா. என்னைப் பிரியமா கூப்பிட்டு பக்கத்ல உக்காரவச்சிப் பேசுவா. திருவண்ணாமலையில அவளை கல்யாணம் பண்ணி குடுத்திருந்தது. எனக்குத் தெரிஞ்சி இன்னைக்கு வரைக்கும் என் சித்திக்கும் அவ வீட்டுக்காரருக்கும் இருந்த அவ்வளவு பெரிய அந்நியோன்னியத்தை இன்னொரு தம்பதிகள் கிட்ட நான் பாத்ததே கிடையாதுன்னா பார்த்துக்கோயேன். அவங்க

ரெண்டு பேருக்குமே ஒருத்தர் மேல ஒருத்தருக்கு அப்படியொரு காதல். அவளுக்கு இவர்தான். இவளுக்கு அவர்தான் - அப்படின்னு ஒரு ப்ளான் போட்டு அவங்க ரெண்டு பேரையும் கடவுள் படைச்ச மாதிரி தெரியும் - அவங்க ரெண்டு பேரையும் பார்த்தா....

- அந்த சித்தப்பா இருக்காரே - அவர் எங்க எல்லார் முன்னாடியும் கூச்சமே இல்லாம சித்தியை கட்டிப் பிடிச்சிக்கிட்டு ஜாலியா வெள்ளைக்காரன் மாதிரி பால்ரூம் டான்ஸே ஆடிக்காட்டுவார்னா - பாத்துக்க....''

''உங்க சித்தப்பா கொஞ்சம் கொஞ்சம் என்னோட 'டைப்' போல....'' சந்தானலஷ்மி சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''முப்பது வருஷத்துக்கு முந்தி ஒரு மிடில் க்ளாஸ் குடும்பத்தில அந்த மாதிரியெல்லாம் டான்ஸ் ஆடறது எங்கேயும் பார்க்கவே முடியாத விஷயம்.... கற்பனைகூட பண்ணமுடியாத சமாச்சாரம் - இல்லையா? அதனால எனக்கு அந்தச் சித்திகிட்டேயும் சித்தப்பாகிட்டேயும் என் சின்ன வயசில இருந்தே பெரிய இமேஜ் இருந்தது. அவங்க ரெண்டு பேருக்கும் பிள்ளையா பிறந்திருக்கக் கூடாதான்னு ஒவ்வொரு நேரம் நான் ஆசையேபட்டிருக்கேன் சந்தானம்.... ஸ்கூல் லீவ் விட்டாச்சின்னா போதும் - குறைஞ்சது ஒரு வாரமாவது திருவண்ணாமலைக்குப் போய் என் சித்தி வீட்ல இருந்திட்டு வருவேன்.... அங்கே அந்த சித்தப்பாவுக்கு சொந்த பிசினெஸ். அதனால இஷ்டப்பட்டா கடைக்குப் போவார். இஷ்டம் இல்லேன்னா வீட்லேயே இருந்திடுவார்.... வீட்ல இருக்கும்போது என் சித்தியையே சுத்தி சுத்தி வந்திட்டு இருப்பார். என்னதான் இருக்குமோ - சித்தி சமையல் பண்ணிட்டு இருக்கும்போது கிச்சன்ல போய் உக்காந்துக்கிட்டு எதையாவது அவகிட்ட பேசிட்டு இருப்பார். அதையெல்லாம் பாத்து எனக்கும் என்னோட கல்யாணத்துக்குப் பிறகு இருபத்தி நாலு மணி நேரமும் என் பெண்டாட்டியை சுத்திக்கிட்டு வீட்லேயே இருக்கணும்னு மனசுக்குள்ள ஒரு ஆசை ஓடும்....''

''பெண்டாட்டினா அவ்வளவு ஆசை?'' - சந்தானலஷ்மி கேட்டாள்.

''அநியாய ஆசை. ஆனா அது வெறும் பெண்டாட்டி ஆசை மட்டும் கிடையாது. அது ஒரு பயங்கரமான பொம்பளை ஆசையும்கூட....''

''எனக்குள்ள இருந்த புருசன் ஆசை; ஆம்பளை ஆசை மாதிரி''



''ஆனாலும் பாரு; இத்தனை வருஷத்துக்கு அப்புறம் ஒரு பெண்டாட்டி என்கிறவளுக்கும் மேற்பட்ட ஒரு முழு பொம்பளையா எனக்கு வந்து கிடைச்சிருக்கே.... இருந்தாலும் சேர்ந்த மாதிரி ஒரு நாலு மணி நேரம்கூட உன்கூட இங்கே இருக்க முடியலை. எந்திரிச்சி ஓட வேண்டியிருக்கு.''

''ஏன் - கோயம்புத்தூர்லேயும் பெங்களூர்லேயும் சேர்ந்தாபோல நாலுநாள் அஞ்சு நாள்னு ஊறுகாய் ஊறின மாதிரி என்கூட ஊறிட்டு இருந்ததெல்லாம் யாராம்....?''

''அதெல்லாம் ஒரு 'ஹாலிடே' மாதிரிதான் சந்தானம்.... அதுவே வாழ்க்கையா ஆயிடலையே....'

''கொச்சு முதலாளி 'ரெடி'ன்னா - நிரந்தரமா பெங்களூரோ மைசூரோ ஓடிவர்ரதுக்கு இந்த நிமிஷமே நான் தயார்....''

''ஓட முடியாதே. அப்படி ஓட முடியாமத்தானே என் ரெண்டு கால்லேயும் குடும்பம் என்கிற விலங்கை கனமா மாட்டி விட்டுருக்கானுங்க. அதை விட்டுட்டு எங்கே எப்படி ஓடுவேன் சொல்லு....''

''நீங்க வாங்கிட்டு வந்திருக்கும் வரமே அவ்வளவுதானோ என்னவோ?''

''இருந்தாலும் கடவுள் என்கிறவன் இப்படி ஒரு வறண்டு காஞ்சு போன ஒரு கடுவன் பூனையை எனக்குப் பெண்டாட்டியா குடுத்திருக்க வேண்டாம்....''

''அதையெல்லாம் இன்னொரு நாளைக்கி பேசி தீர்த்துக்கலாம். நேரம் இப்ப என் முதுகுல வியர்வை ஓடற மாதிரி ஓடிட்டு இருக்கு... கிளம்பறதுக்குள்ள திருவண்ணாமலை சித்தியைப் பத்தி சொல்லி முடிச்சாச்சின்னா தேவலை....''

- திருவண்ணாமலை சித்தப்பா இருக்காரே - அவர் எங்க சித்தியை சில நேரங்கள்ள என் முன்னாடியே லேசா - அதாவது கொஞ்சம் ரொமாண்ட்டிக்கா கட்டிப் பிடிச்சிக்கிட்டு 'போஸ்' குடுப்பார். அப்ப ஃபேமஸா இருந்த ஒரு நடிகையோட பேரைச் சொல்லி - சித்தி அந்த நடிகையோட சாயல்ல இருக்கறதா ரொம்ப ஆசையா சொல்லி சித்தப்பா என்னைப் பாத்து கண்ணைச் சிமிட்டுவார். அந்த வயசுல எனக்கு அதெல்லாம் ஒரு சினிமா பாக்கறாப்பல இருக்கும்....''

''உங்க சித்திக்கும் அந்த நேரத்ல வெக்கமெல்லாம் வராதாக்கும்?''

''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா - அந்தச் சித்தியை எங்க அம்மா ஒரு வெக்கங்கெட்டவனு திட்டிட்டே இருப்பாங்க....''

''உங்க சித்தியை பாக்கறதுக்கு உங்க அம்மாவுக்குத்தான ரொம்ப வெக்கமா இருந்திருக்கும்''

சந்தானலஷ்மி இப்படிச் சொன்னதும் கனகசபாபதி அசந்து போனார்.

''அதெப்படி சந்தானம் நேர்ல பாத்தாப்ல - அதை அவ்வளவு கரெக்ட்டா சொல்றே....?'' என்றார்

''இப்பத்தானே சொல்லி வாயை மூடினேன். என் கண்ணு ரெண்டும் முழுசா பார்க்க ஆரம்பிச்சாச்சின்னு....'

''அதுக்காக இப்படி அச்சடித்த மாதிரி தீர்க்கமாவா பார்க்க முடிஞ்சிடும்?''

''இந்த கொச்சு முதலாளி திருவண்ணாமலையில தீபத்தைப் பார்த்த மாதிரி என்ன பார்த்தார்னு நானே சொல்லிரட்டுமா?'' - சந்தானலஷ்மி கேட்டாள்.

''சொல்லிரேன் பாக்கலாமே''

''சொல்லிட்டா என்ன தருவீங்க எனக்கு.''

''உடனே உன் வீட்டுக்கு ஒரு டெலிபோன் கனெக்ஷன்....''

கனகசபாபதி இதைச் சொன்ன வினாடி - சந்தானலஷ்மி எழுந்து வாட்டசாட்டமான பசு மாதிரி எழுந்து நின்றுவிட்டாள்....

❖

## 10

''அந்த நிமிஷத்தில் சந்தானலஷ்மியின் கடந்த கால அனுபவத்தின் வாழ்க்கை நிலையில் டெலிபோன் என்பது மிகப் பெரிய விஷயம். நாலாயிரம் ரூபாய் வாடகையில் வீடும்; இரட்டைக் கட்டில் மெத்தையும்; சோபா செட்டுமே - ஏதோ அலாவுதீனின் அற்புத விளக்கு தந்தது போன்ற பெரிய பிரமிப்பைத் தந்திருந்தது. கலர் டி.வி; வாஷிங்மிஷின் - என்ற விலை உயர்ந்த நிஜங்களில்



ஒருவித போதையுடன் ஒவ்வொரு நாளையும் அனுபவித்துக் கொண்டிருந்தாளே தவிர வீட்டில் டெலிபோன் என்ற சாதனத்தை வைத்துக்கொள்ளலாம் என்று ஒருநாளும் நினைத்தே பார்த்துக் கொண்டதில்லை. ஆபிசில் சந்தானலஷ்மி வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது டெலிபோன் என்பது சாதாரண ஒரு தெரு விளக்குப் போன்ற கவனமே அற்ற அற்பப் பொருள். ஆபிசில் போன் ஒரு நாளைக்கு ஆயிரத்தெட்டு தடவையாவது அடிக்கும். ஆயிரத்தெட்டு தடவை யாராவது யாருக்காவது போன் பண்ணிப் பேசிக்கொண்டே இருப்பார்கள். - ஆபிசில் 'பர்சனல் கால்' யாரிடம் இருந்தும் வராத; யாருக்கும் 'பர்சனல் கால்' பண்ணாத ஒரே ஆத்மா சந்தானலஷ்மிதான். அன்றைய நிலையில் இதுகூட சில நேரங்களில் வேறொரு விதமான திக்கற்ற கதியாகத் தெரியும் அவளுக்கு. - ஆனால், வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு இருந்தே ஆகவேண்டிய புருஷன் என்பவனே இல்லாமல் போயிருக்கும்போது தனக்கு டெலிபோன் பண்ணுவதற்கு யாரும் கிடையாது என்ற நிலைமை அவ்வளவு பெரியதாக சந்தானலஷ்மியை பாதித்ததில்லை. - ஆனால் கனகசபாபதி 'உடனே உன் வீட்டுக்கு ஒரு டெலிபோன் கனெக்ஷன்...' என்று சொன்ன ஒரு வார்த்தை பளீரென அவளை நிமிர்ந்து நிற்கச் செய்துவிட்டது. கனகசபாபதியை கட்டிப்பிடித்துக் கொண்டாள்.... கொடுக்க வந்த தெய்வம் கூரையை பிய்த்துக் கொண்டு கொடுப்பது போலிருந்தது அவளுக்கு.... ஒரே மாதத்தில் அவளுடைய வீட்டுக்கு டெலிபோன் தொடர்பு வந்துவிட்டது; அதுவும் அவளுடைய பெயரிலேயே....

ஒருநாள் காலை மணி பதினொன்று இருக்கும். டெலிபோன் துறை பணியாளர்கள் வந்து வீட்டுக் கதவை தட்டியபோது யாராக இருக்கும் - இந்த நேரத்தில் என்ற சின்னப் பதட்டத்துடன் கதவைத் திறந்து பார்த்த சன்தானலஷ்மி விஷயம் தெரிந்ததும் குதூகலமாகி விட்டாள். டெலிபோன் துறை பணியாளர்களும் அவளுடைய பெயருக்கு ஒரு சாதாரணமான இல்லத்தரசியைப் போல் இருக்கும் பெண்மணியை எதிர்பார்த்து தனிப்பட்ட எந்த சுவாரஸ்யமும் இல்லாமல் வந்திருந்தார்கள். கதவைத் திறந்த சந்தானலஷ்மியைப் பார்த்ததும் பணியாளர்கள் ரொம்ப சுவாரஸ்யமாகிவிட்டார்கள். அவர்களின் அனுபவத்தில் பார்த்திருக்கிறார்கள் - ஒரு சாதாரண குடும்பப் பெண்ணுக்கு இந்த மாதிரியெல்லாம் தளதளப்பான பளபளப்பான உடம்பு வரவே வராது. கொஞ்சம் இவள் ஒரு மாதிரியான 'அம்மணி'யாக இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஒருவேளை அம்மணி ஏதாவது மாஜி தெலுங்கு சினிமா துணை

நடிகையாகக்கூட இருக்கலாம் என்பது டெலிபோன் துறை பணியாளர்களின் அபிப்பிராயம்....

டெலிபோன் துறை சேவகர்கள் வேறு யாருக்காவது இந்த மின்னல் வேகத்திலும்; இந்த அக்கறையிலும் எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் புது ஃபோன் தொடர்பு கொடுத்திருப்பார்களா? சந்தேகம்தான். இந்த விஷயத்தில் சந்தானலஷ்மி நிஜமாக அதிர்ஷ்டக்காரிதான். வந்திருந்த நான்கு டெலிபோன் துறை விருந்தாளிகளுக்கும் அவள் ஆளுக்கொரு டீதான் போட்டுக் கொடுத்திருந்தாள். அதற்கே விருந்தாளிகள் அவளை ஆயிரம் மேடம் போட்டு; மிக அரிய சோம பாணத்தைப் பருகிவிட்ட மாதிரிதான் முகங்களை வைத்துக்கொண்டு டீ குடித்த நேரத்தில் டெலிபோனை பொருத்தி இணைப்பு தந்துவிட்டார்கள். அன்று சாயந்தரமே சந்தானலஷ்மியின் வீட்டு ஃபோன் அதன் முதல் மணிஒலியை ஒலித்துவிட்டது. இந்த முதல் மணிஒலி கனகசபாபதி யிடம் இருந்து கிடையாது. டெலிபோன் துறைக்காரர்களிடம் இருந்து.... டெலிபோன் இணைப்பு நேர்த்தியாக செயல்படுகிறதா வென்று அவர்கள் ஒரு தடவைக்கு நான்கு தடவை சந்தானலஷ்மியை விசாரித்த விசாரிப்பை நிஜமாக காலத்திற்கும் அழியாதபடி பொன் எழுத்துக்களால் பொறித்து வைக்கலாம்.... டெலிபோன் என்றைக்காவது வேலை செய்யாவிட்டால் சந்தானலஷ்மி டெலிபோன்துறை ஆபிசுக்கு நடையாய் நடந்து புகார் பிரிவு எதற்கும் போய் புகார் பண்ணிக்கொண்டிருக்க வேண்டியதே இல்லையாம். இரண்டாவது தெருவில் இருக்கும் நாயர் டீ கடையில் யாரையாவது ஒரு பையனை அனுப்பி ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதுமாம். தகவல் போகவேண்டிய இடத்துக்கு ஒரு நிமிஷத்தில் போய் சேர்ந்துவிடுமாம் - சரியாக அடுத்து ஒரு மணி நேரத்தில் சந்தானலஷ்மி வீட்டு டெலிபோன் சரிசெய்யப்பட்டு விடுமாம்....

இத்தனை பெரிய பெருமைக்கும் குதூகலத்திற்கும் உரிய டெலிபோன் வசதியை உடனே சந்தானலஷ்மி அடைவதற்கான வேகத்தை கனகசபாபதியின் மனதில் ஏற்படுத்தினாளே - அவள்; அதற்குக் காரணமாக இருந்த அன்றைய தொடர்ந்த உரையாடலின் விபரத்தொகுப்பு கீழே....

''பதினைஞ்சாவது வயசில எங்க கொச்சு முதலாளி திருவண்ணா மலை சித்தி வீட்ல பார்த்த பார்க்கக்கூடாத காட்சி என்னன்னு சொல்லிடட்டுமா?'' திருப்பியும் ஒரு தடவை சந்தானலஷ்மி கரகரப்பான குரலில் கேட்டாள்.



''நீ கேக்குற ஸ்டைலைப் பார்த்தா - டெலிபோன் கனெக்ஷன் உனக்கு உடனே வரப் போகுது போல....''

''அங்கே நீங்க உங்க சித்தியும் சித்தப்பாவும் ஒருநாள் செக்ஸ் வச்சிக்கிட்டதை எதிர்பாராம பார்த்துத் தொலைச்சிட்டீங்க.... சரிதானா நான் சொல்றது....'' சந்தானலஷ்மியும் சிறிது உணர்ச்சி வசப்பட்டுத்தான் கனகசபாபதியிடம் இதைக் கேட்டாள்.

கனகசபாபதி அவளுக்குமேல் உணர்வு வயப்பட்டுவிட்டார். ஒரு இம்சை உணர்வோடு சந்தானலஷ்மியின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

''நெஜமாகவே என்னைக் கொன்னு குழிதோண்டிப் புதைச் சிட்டேடி குண்டு. மண்டை பூரா மட்டுமில்லை; மண்டைக்குக் கீழேயும் உனக்கு மூளைதான்.... அந்த ஸீனைத்தான் அநியாயத்துக்கு அந்தச் சின்ன வயசில நான் பாத்துத் தொலைச்சிட்டேன்டி சந்தானம். எத்தினியோ வருஷம் ஒரு சிலுவையைத் தூக்கிட்டுத் திரியற மாதிரி அந்த ஞாபகத்தை என் மனசில தூக்கிட்டுத் திரிஞ்சிருக்கேன் பாரு - நெஜமாவே ரொம்ப மோசமான அனுபவம் அது.... ரொம்ப கொடிய ஞாபகம் அது. - அப்ப நான் பத்தாவது வகுப்புப் படிக்கிறேன். பெரிய பரீட்சை லீவுக்கு திருவண்ணாமலை சித்தி வீட்டுக்குப் போயிருந்தேன்.... நைட்ல அங்கே நான் தனியா ஒரு ரூம்ல படுத்துப்பேன். சித்தியும் சித்தப்பாவும் தனியா வேற ஒரு ரூம்ல படுத்துப்பாங்க. ஆனா அவங்க படுத்துக்கற ரூம் கதவைப் பூட்டறதும் கிடையாது. சும்மா சாத்தி வச்சிக்கிறதும் கிடையாது. அதென்னமோ கதவு எப்போதும் போல திறந்தேதான் கிடக்கும்.... ஒருநாள் நைட் நான் என்னோட ரூம்ல படுத்து நல்லா தூங்கிட்டு இருந்தப்ப - திடுதிப்னு எனக்கு நட்டநடு ராத்திரியில வயிறு கலக்க ஆரம்பிச்சி தூக்கம் கலைஞ்சி போயிருச்சி. கொஞ்ச நேரம் நான் எந்திரிக்காம படுத்தே கிடந்தேன். ஆனா வயித்ல வலி நிக்கற மாதிரி தெரியலை.... டாய்லெட் போகணும்போல வேற இருந்தது. என்னடா பண்றதுன்னு தெரியலை.... வலி நிக்கற மாதிரி தெரியலை -வயித்ல.... பார்த்தா அந்த நேரத்லேயும் பக்கத்து ரூம்ல இருந்து ரொம்ப லேசா லேசா சித்தப்பா ஏதோ பேசற சப்தம் கேட்டுச்சி....

''ஒரே ஒரு நிமிஷம் சாமி....'' - சந்தானலஷ்மி இடைமறித்தாள்'' ஒரு விஷயத்தை நீங்க சொல்லலை. உங்க திருவண்ணாமலை சித்திக்கும் சித்தப்பாவுக்கும் பசங்க இருந்தாங்களா இல்லையா?''

''அவங்களுக்குப் பசங்க கிடையாது சந்தானம்....''

''இதைத் தெரிஞ்சிக்கத்தான் கேட்டேன்.... மேலே சொல்லுங்க....''

''எந்திரிச்சிப் போய் வயிறு வலிக்கிறதை சித்தப்பாக்கிட்ட சொல்லணும்போல இருந்தது. படுக்கையில இருந்து மெள்ள எந்திருச்சிப் போனேன். ரூம்கதவு திறந்துதான் கிடந்தது. ஆனால் ரூம்ல வெளிச்சம் மட்டும் அவ்வளவா இல்லை. திறந்து கிடந்த கதவைப் பிடிச்சிட்டு லேசா உள்ளே எட்டிப் பார்த்தேன்.... பாத்திட்டு அப்படியே அதிர்ந்து போயிட்டேன்; ரூமுக்குள்ள மங்கலா இருந்த வெளிச்சத்தில் நான் பார்த்தது - அந்த வயசுக்குக் கற்பனையில்கூட என்னால நெனைச்சிப் பார்க்கமுடியாத காட்சியா இருந்துச்சி. முதல்ல எனக்கு அந்தக் காட்சி என்னன்னே புரியலை. அதனாலேயே - அதைப் பாத்துக்கிட்டே நின்னுட்டு இருந்தேன். கல்யாணம்னு ஒண்ணு ஆனதும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில ஒரு ரகசிய உறவு ஏற்படுதுன்னு மங்கலான உணர்வு ரீதியான குருட்டு ஐடியா அந்த காலகட்ட மனசுல இருக்கத்தான் செஞ்சது எனக்கு. ஆனா அன்னைக்கி நட்ட நடுராத்திரியில அந்த ரகசிய உறவோட நிஜ வடிவம் என்னன்னு அதிர்ந்து போகிற விதத்ல தெரிஞ்சிபோயிருச்சி. அந்த நிஜ வடிவத்தை அந்தப் பதினைஞ்சாவது வயசில பார்த்ததுகூட பயங்கரமான விஷய மில்லை. அந்த வடிவத்தை எனக்குப் பிடிச்ச சித்திகிட்டேயும் சித்தப்பாகிட்டேயும் பாத்திட்ட கொடுமையைத்தான் என்னால தாங்கிக்க முடியாம போயிருச்சி.... என்னை அது அதிர்ந்து நொறுங்கிப்போக வச்சிருச்சி.... அந்தக் கண்றாவியான கோலத்ல அவங்க ரெண்டு பேரையும் பாக்கறதுக்கு அருவருப்பா இருந்துச்சி எனக்கு. ஆனா - அதைப் பாக்காம மூஞ்சியை திருப்பிக்கிட்டு உடனே அந்த இடத்தைவிட்டு ஓடிப் போயிடலை நான்.... பொறுக்கி மாதிரி அந்தக் காட்சியை முடியற வரைக்கும் நல்லா நின்னு - அதே நேரம் மனசுக்குள்ள ஒருவித அழுகையோட பாத்திட்டுத்தான் மெதுவா சைலன்ட்டா என் ரூமுக்கு நடந்துபோய் படுத்தேன்....''

''நீங்க வந்து நின்னது அவங்களுக்குத் தெரியாது?'' - சந்தானலஷ்மி குறுக்கிட்டுக் கேட்டாள்.

''தெரியாது....''

கனகசபாபதி சில நிமிடங்கள் மௌனமாக இருந்துவிட்டுப் பின் தொடர்ந்தார்.

''சுருக்கமா செல்றேன் - சந்தானம். அந்த என் பதினைஞ்சாவது வயசில அதுவரைக்கும் எனக்குள்ள ஒரு அறியாமை இருந்தது பார் -



அந்த அறியாமை அன்னைக்கு உடைஞ்சி நொறுங்கி சுக்கல் சுக்கலா போயிடுச்சு. ஒரு பவித்ரமான சந்தோஷத்தை அன்னைக்கி நான் பறிகொடுத்திட்டேன் சந்தானம்.... அதுக்குப் பிறகு எப்பப் பார்த்தாலும் இருபத்திநான்கு மணி நேரமும் சைலன்ட்டா அந்தக் காட்சி என் மனசுக்குள்ள ஓடிட்டே இருந்தது.... அடுத்த நாள் காலையில பொழுது விடிஞ்சதும் என்னால என் சித்தி முகத்தைப் பார்க்கவே முடியலை. ஒரு மாதிரி கேவலமா; ரொம்ப இம்சையான அவமானமா இருந்தது.... ராத்திரியில பார்த்த காட்சியை மனசில இருந்து துடைச்சிப் போட்டுட்டு அவளோட முகத்தைப் பார்க்க முடியலை எனக்கு.... சித்தியை பார்த்தா அந்த ஸீன்தான் ஞாபகத்திற்கு வந்தது.... என்ன மாதிரியான கொடுமை பாரு.... எந்த ஒரே ஒரு மனுஷிகிட்டே மட்டும் கோடு இல்லாத அந்நியோன்னியம் இருந்ததுன்னு சொன்னேனோ - அவகிட்டே இருந்த மென்மையான அந்த அந்நியோன்னியமும் அந்த இன்சிடெண்ட்டுக்கு அப்புறம் 'கட்' ஆயிடுச்சுடி சந்தானம்....''

''.... அந்த சம்பவம் நடந்த பிறகும்; முதல்ல போட்டிருந்த ப்ளான்படி மேலும் நாலு நாள் திருவண்ணாமலை சித்தி வீட்ல தங்கியிருந்திட்டுத்தான் நான் கிளம்பி வந்தேன்.... ஆனா அந்த நாலு நாளும் ஏண்டா ராத்திரி வருதுன்னு இருக்கும். படுத்திருக்கவே முடியாது ரூம்ல. முள்ளுமேல படுத்திருக்குற மாதிரி இருக்கும். தூக்கமே வரலை. சித்தப்பா ரூம்ல இருந்து ஏதாவது சத்தம் வருதா என்கிற கவனத்திலேயேதான் புத்தி பூராவும் இருக்கும். நேத்து மாதிரியே சித்தாப்பாவும் சித்தியும் செக்ஸ் வச்சிட்டு இருப்பாங்களோ என்கிற நெனைப்பு மண்டையைப் போட்டு குடைஞ்சிட்டு இருக்கும். எந்திருச்சிப் போய் மெதுவாய் பாத்திட்டு வரலாமா என்கிற நப்பாசையெல்லாம் வரலை.... ஆனா - அவங்க செக்ஸ் வச்சிக்கிறாங்களா இல்லையானு தெரிஞ்சிக்க மட்டும் ஏனோ ஆசைப்பட்டேன்....''

''ஆனா எந்திருச்சிப் போய் எட்டியெல்லாம் பாக்கலை?'' சந்தானலஷ்மி கேட்டாள்.

''எட்டிப் பார்ப்பேனா போய்? எட்டியெல்லாம் பாக்கலை. ஆனா பத்து நிமிஷத்துக்கு ஒருவாட்டி ஒண்ணுக்குப் போறதுக்காக சத்தம் போடாம எந்திருச்சி எந்திருச்சி நான் பாத்ரூமுக்குப் போய் போய் வந்தது இருக்கு பார் - அது ஒருவிதத்ல எட்டிப் பாத்ததுலேதான் சேர்த்தி. அப்படியென்ன நாயே உனக்கு அப்படி அர்த்தராத்திரியில மாத்தி மாத்தி ஒண்ணுக்கு வந்திட்டே இருக்கு.... அயோக்கிய

கம்மனாட்டின்னு என்னை அப்ப யாராவது வந்து பிடரியில ரெண்டு தர்ம அடி செமத்தியா குடுத்திருந்தா ஒழுங்கா ஒண்ணுக்கெல்லாம் போகாம பேசாம படுத்திட்டு இருந்திருப்பேன்.... அந்த புத்தியை காணோமே.... மானம் இல்லாம எந்திருச்சி எந்திருச்சி நானும் போயிட்டு இருந்தேனே - கொஞ்சம்கூட வெக்கமில்லாம....''

- கனகசபாபதி கொஞ்சம் வேகமாக சொன்னதும் சந்தான லஷ்மிக்கு அதைவிட ஒரு மாதிரியான உணர்வு வேகம் வந்து விட்டது. ஒரு தினுசாக சிலிர்த்துவேறு போய்விட்டாள். ''எனக்கு எப்படியோ விருவிருன்னு வருது. பாவி மனுஷானு உங்களைப் பாத்து ஒன்னு கத்தணும்போல இருக்கு. படவா ராஸ்கல்னு பல்லைக் கடிச்சிக்கிட்டு நல்லா திட்டணும்போல இருக்கு....''

''திட்டுடி குண்டு. ஆசை தீர திட்டு. எவ்வளவு கேவலமா வேணுமானாலும் திட்டு. முடிஞ்சா நல்லா கெட்ட வார்த்தையாலும் திட்டிக்க. வாசல்ல நின்னுகிட்டு. தெருவுல போய் நின்னுட்டு வேணுமானாலும் திட்டு.... எவ்வளவு திட்டணுமோ - இன்னைக்கே இப்பவே திட்டிக்க....''

''சொல்லாதீங்க சாமி.... எனக்கு அழுகை அழுகையா வருது....

- நிஜமாகவே சந்தானலஷ்மியின் கண்கள் இரண்டிலும் கண்ணீர் திரண்டு இருந்தது.

''இப்படித்தான்டி குண்டு நானும் அந்தக் காலத்ல மனசுக்குள்ள ஒரு அழுகை அழுதிட்டு இருந்தேன். என் இளமைக் காலம் பூராவும் ஒரு இம்சையை நெஞ்சுல தூக்கிச் சுமந்திட்டுத் திரிஞ்சேன். - அதுமட்டுமில்லை; என் சித்திக்கு அப்படியெல்லாம் ஒரு கோரமான செக்ஸ் வேண்டாமேன்னு ஒரு அலைச்சல் என் மனசில அலைஞ்சிட்டு இருந்தது. கொஞ்ச நாளைக்கு எனக்குத் தெரிஞ்ச புருஷன்-பெண்டாட்டின்னு யாரைப் பார்த்தாலும் - ராத்திரியில அவங்களும் இப்படித்தானே கண்றாவியா ஒரு செக்ஸ் வச்சிப்பாங்கன்னு என் மனசில ஒருவிதமான கோவம் கலந்த உணர்வு ஒண்ணும் ஓட ஆரம்பிச்சிருச்சி.... அதேநேரம் ஒரு புருஷன் பெண்டாட்டி விடாம ராத்திரியில நடக்கற செக்ஸ் - என்னோட அந்தக் கால வாழ்க்கையில; அந்த ராத்திரிகள்ள இல்லவே இல்லாத விஷயமா இருந்தது.... இந்த முரண்பாட்டை என்னால தாங்க முடியலைடி சந்தானம்.... என்னோட ராத்திரிகள்லேயும் அந்த கோரமான செக்ஸ் இடம் பெறாதா என்கிற தாபம் வந்திருச்சி.... ஆனா இந்த தாபம் உடனே வந்திடலை; கொஞ்ச நாள் கழிச்சி வந்தது.



வந்தது போகவே இல்லை.... சில நேரங்கள்ள ஏதாவது ஈ நம்மை சுத்திச் சுத்தி வந்து உயிரை வாங்கும் தெரியுமா.... அந்த மாதிரி சித்தப்பா - சித்தியோட செக்ஸ் என் புத்தியில போகாம சுத்திச் சுத்தி வந்திட்டே இருந்தது. ஆனா ஈயை நாம விரட்டுவோம். இந்த செக்ஸ் ஈயை நான் விரட்டலை.... தப்பா போயிருச்சி அது. ஈயால கண்ட கண்ட வியாதியெல்லாம் வர்ர மாதிரி இந்த செக்ஸ் ஈயால என்னமோ ஒரு மனோவியாதி எனக்கு வந்திருச்சி சந்தானம்....''

''இந்த வியாதிக்கு மருந்து எதையும் தேடிப் போகலையா?''

''வியாதியை நெனைச்சிக்கிட்டேதான் இருந்தேனே தவிர மருந்து எதையும் தேடலை... தேடற வயசும் உடனேயே வந்திடலையே...''

''வயசுக்கு மீறிய வியாதி மட்டும் வந்தாச்சி''

''பாரேன் தலை எழுத்தை....''

''ஒரே ஒரு நிமிஷம் சாமி. ஒண்ணுக்குப் போயிட்டு வந்திடறேன்....''

''அவரசமே இல்லை மெதுவாவே வா....''

சந்தானலஷ்மி எழுந்து போனாள். கனகசபாபதி - இதுவரை எல்லாவற்றையும் சரியாக சொல்லிவிட்டோமோவென்று யோசித்துப் பார்த்தப்படி புதிதாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டார்.....

❖

## 11

சந்தானலஷ்மி பாத்ரூமில் இருந்து திரும்பி வந்துகொண்டே சொன்னாள்.

''சினிமா தியேட்டர்ல 'இண்டெர்வெல்' விட்ட மாதிரி இருக்கு....''

''சந்தானம்; - இதுவரைக்கும் நான் சொன்ன 'மேட்டர் ' பூராவையும் வச்சி ஒரு சினிமா தயாரிச்சா எப்படி இருக்கும்?'' - கனகசபாபதி கேட்டார்.

''சினிமா தயாரிக்கலாம். ஆனா ரிலீஸ் பண்ண முடியாது.... ஒரு தடவைக்கு ரெண்டு தடவை பாத்திட்டு சென்சார்காரன் படத்தை 'பேன்' பண்ணிடுவான்....''

''சினிமாவை நாமே போட்டு போட்டு பாத்துக்க வேண்டியது தான்....''

''ஒரு விஷயந்தான் சாமி எனக்குப் புரியலை.... உங்களோட மனசில இருந்த நோய்க்கு ஒரு மனுஷிகிட்ட போய் மருந்து வாங்கிக்கிற நெனைப்பு மட்டும் ஏன் வரலைன்னு தெரியலை....''

''எனக்கும் அதான் ஆச்சர்யம்.... அந்த 'ட்ராக்'ல என் மனசு போகவே இல்லை.... ஏதோ ஒரு காசை குடுத்திட்டு முன்னே பின்னே தெரியாத ஒருத்திகிட்ட - எவ்வளவுதான் நோயோட கடுமை தாங்கமுடியாம இருந்தாலும் போய் செக்ஸ் வச்சிக்கிறது என்கிற நெனைப்பு எனக்கு வரவே இல்லை.... ஒரு பிடிச்ச லேடிகிட்ட மனசால செக்ஸ் வச்சிட்டே அலைஞ்சேன்.... அது எனக்கு ரொம்ப சுலபமா இருந்ததுன்னு வச்சிக்கோயேன்.... - அப்படி நான் மனக் கற்பனையில் செக்ஸ் வச்சிக்கிட்ட லேடிஸோட லிஸ்ட் கொஞ்சம் பெரிசு. அந்த கற்பனை செக்ஸ் சுகமாகவும் இருந்தது. அதுவே தாங்க முடியாத வெறுமையாகவும் இருந்தது - இந்த மிக நீண்ட கற்பனையைத் தாண்டி என் செக்ஸ் சார்ந்த எல்லா அனுபவத்தையும் ஒருநாள் மனைவியா வரப்போற பொம்பளைகிட்ட பெற நான் ஒரேயடியா எதிர்பார்த்துக் காத்திட்டும் இருந்தேன்....''

''கடேசியா அந்தப் பெண்டாட்டி என்கிற பொம்பளைகிட்ட ஒரேயடியா ஏமாந்தும் போயாச்சி''

''அந்தக் கர்மத்தை சொல்லு. ஆனா ஒண்ணு சந்தானம்; பெண்டாட்டியா வந்தவகிட்ட நான் ஒரேயடியா ஏமாந்து போன வயித்தெரிச்சல் ஒரு பக்கம் இருக்கட்டும். அதுக்கு முன்னாடி பெண்டாட்டினு ஒருத்தி எனக்கு வந்து சேர்றதுக்குள்ள உயிர் போய் உயிர் வந்திருச்சி. எனக்கு அப்படியொரு லேட் மேரேஜ். ஒவ்வொரு தங்கச்சியா கல்யாணம் பண்ணிக் குடுத்து கரைசேர்த்து என் ஜாதகத்தை கையில எடுக்கறதுக்குள்ள - பெண்டாட்டினு ஒருத்தி எனக்கு வருவாளானு ஆயிடுச்சி. ஒரு தூணுக்கு புடவையை சுத்தி இதான் உன் பெண்டாட்டினு சொன்னாகூட அதுமேல பாயறதுக்கு நான் தயாரா இருந்தேன்னா - பாத்துக்க. கடைசியில அதைவிட மோசமா ஒரு துடைப்பத்துக்குப் புடவை சுத்தி வைத்த டைப்லே தான் எனக்குப் பெண்டாட்டி வந்தா....''



''சொன்ன மாதிரி அவ மேல பாயறதுக்கும் முடியாமப் போச்சாக்கும் கடைசியில?''

''பாயறதுக்கு அங்கே என்ன இருந்துச்சி? ஒரு கர்மமும் கிடையாது. சரி நானும் கிடைச்சது போதும்; இந்த குண்டு சட்டியிலேயே குதிரை ஓட்டற மாதிரி ஓட்டிட்டு இருப்போம்னு பாத்தா அதுக்கும் வழி இல்லாம போச்சி. உடம்பு இல்லாட்டி போவுது. மனசாவது இருந்திருக்கணும். சந்தோஷப்பட்டிருப்பேன். உடம்பு இல்லாததாலேயே மனசும் இல்லாம போயிருச்சி. எப்ப செக்ஸ் கேளு - உடம்பு சரியில்லை; களைப்பா இருக்கு; விளக்கு வேண்டாம். இப்படி காட்டமாட்டேன்; அப்படி காட்டமாட்டேன்- என்கிற இதே கருமாந்திரம்தான் டெய்லி. இதே ஒப்பாரிதான் தாலி கட்டுன நாள்ல இருந்து.... குழந்தைங்க பிறந்ததும் உள்ளதும் போச்சிடா நொள்ளைக் கண்ணா என்கிற கதை. எவன் தாங்குவான் சொல்லு. என்னதான் பண்ணுவான் ஒரு ஆம்பளை.... - இதையெல்லாம் தாங்க முடியாம ஒருநாள் மகா எரிச்சல் ஆசாமி ஆயிட்டேன் சந்தானம். எரிச்சலையும் கட்டினவகிட்ட காட்ட முடியலை. ஆபிஸ்ல காட்ட ஆரம்பிச்சிட்டேன்... அதுவும் பொம்பளைங்ககிட்ட ரொம்ப ஓவராவே என் எரிச்சலை காட்டினேன் - உனக்கே தெரியுமே - அதெல்லாம் ஒவ்வொரு நேரத்ல எவளாது ஒரு பொம்பளையை கடிச்சி குதறிடலாம் போலகூட ஆத்திரமும் எரிச்சலும் வரும்னா பாத்துக்கோயேன் - எப்படி எரிச்சல்கார பயலா இருந்திருக்கேன்னு....''

சந்தானலஷ்மி கனகசபாபதியின் கன்னத்தில் பரிவுடன் ஒரு முத்தமிட்டுவிட்டுச் சொன்னாள். ''கதைப் புஸ்தகங்கள்லகூட இப்படியெல்லாம் படிக்க முடியுமானு தெரியலை....''

''படிக்க முடியாதுன்னுதான் நெனைக்கிறேன்.... ஏன்னா - யாரும் நெசத்தை எழுதறது கிடையாது. பயம் எழுதறதுக்கு. அதனால எதையாவது கதை விட்டுட்டு காசை வாங்கிட்டுப் போயிட்டே இருப்பானுங்க.... ஏதாவது ஒரு பொம்பளையை பார்த்தா கடிச்சிக் குதறணும்போல இருந்ததுன்னு எவனையாவது கதையில் சொல்லச் சொல்லு பாப்பம். அதுவும் சந்தானம், எவளாது அழகான பொம்பளையை பார்த்தா சுத்தமாவே பிடிக்காது எனக்கு. 'சரிதான் போங்கடி.'ன்னு மனசுக்குள்ள திமிரோட சொல்லிப்பேன். உனக்குத்தான் தெரியுமே - அழகா இருக்குற பொம்பளை எவளுக்கும் நம்ம ஆபிஸ்ல வேலை கிடையாது.... ரோட்டுலகூட

எனக்குக் குறுக்கே ரொம்ப அழகா ஒருத்தி போனா கோவத்ல மூஞ்சியை திருப்பிப்பேன் - அவ்வளவு வெறி....

''ஆபிஸ்ல வேலை பாக்கும்போது என்னை எப்படியெல்லாம் வார்த்தையால கடிச்சித் துப்பியிருக்கீங்க....'' - சந்தானலஷ்மி சொன்னாள். இதற்குக் கனகசபாபதி சின்ன குற்ற உணர்வுடன் லேசாக சிரித்து வைத்தார்.

''அதுக்கெல்லாம் சேர்த்து வச்சித்தானே இப்ப மருந்து போட்டுட்டு இருக்கேன்''

''அதை ஒத்துக்கறேன். இப்பப் போட்டு விடற மருந்தும் சாதாரண மருந்து கிடையாது.''

''இப்ப கதையே வேற சந்தானம். சொல்லப் போனா எனக்கு இன்னைக்கி மருந்தே நீதான்....''

''விருந்தும் மருந்தும் மூணு நாள் என்கிற கதை ஆயிடக்கூடாது சாமி''

''ஆகாதுடி குண்டு. ஆகவே ஆகாது. இந்த 'குண்டு பெஸ்கி' மருந்து இல்லாம எனக்கு இனிமே வேலை ஓடாது. உனக்குத் தெரியுமா? பிராந்தி விஸ்கி - இதெல்லாம் சாப்பிட்டு சாப்பிட்டுப் பழகிப் போயிருச்சின்னா - பின்னாடி அது இல்லாம இருக்க முடியாத நிலைமை ஆயிடும். அந்த மாதிரியான நிலைமைதான் இன்னைக்கி எனக்கு. வேணும் என்கிறபோதெல்லாம்; வேணும் என்கிற விதத்திலயெல்லாம் உன்கிட்டேதான் எனக்கு உடம்பும் மனசும் நிறைய செக்ஸ் கிடைச்சிருக்கு. அதை விட்டுடுவேனா சொல்லு.... விட்டாத்தான் வேலைக்கு ஆகுமா? சின்ன வயசில இருந்தே - எனக்குப் பெண்டாட்டியா வரப் போறவகிட்ட எப்படி எப்படியெல்லாம் செக்ஸ் வச்சிக்கணும்னு தினுசு தினுசா வண்டி வண்டியா கனவு கண்டேனோ - அது எல்லாமே எனக்கு ஒண்ணுவிடாம உன்கிட்டேதான்டி சந்தானம் கிடைச்சிருக்கு.... சுருக்கமா சொன்னா - என் கனவு ஒவ்வொண்ணையும் நினைவாக்கியது நீதான்....''

''என்னை உங்களோட கனவுக் கன்னினு சொல்லியாறது போல''

''கனவுப் பெண்டாட்டி....''

''அதுவும் சரிதானே.... நான் உங்களுக்குக் கனவுப் பெண்டாட்டிதான். நிஜ பெண்டாட்டி கிடையாது''

''இதான்டி உன்கிட்ட; உடனே தப்பா அர்த்தம் பண்ணிப்பே''



''தப்போ ரைட்டோ - நிஜம்தான் நான் சொன்னது....?''

''இப்படிப் பாரேன் செங்கமலம் - என் கனவுகளை நீ நினைவாக்கியவள்''

''போச்சிடா - என்னது இது; என் பேரே மாறுது....?''

''என்னமோ திடீர்னு தோணிச்சி - செங்கமலம்னு....''

''சின்ன வயசில எவ்வளவுதான் உங்களுக்குள்ள கனவுகள் இருந்துச்சி?''

''அதை எண்ணவே முடியாது குண்டு''

''உதாரணத்துக்கு ஒண்ணு ரெண்டு கனவைச் சொல்லலாமே....''

''கெட்ட கெட்ட வார்த்தையால செல்லமா திட்டிக்கிட்டே செக்ஸ் வச்சிக்கணும்''

''முதல் கோயம்புத்தூர் விசிட்லேயே இந்தக் கனவு நிறைவேறியாச்சி. அப்புறம்?''

''பதிலுக்கு அப்ப நீயும் கன்னாப் பின்னான்னு திட்டினேயே - அது நான் காணாத கனவு....''

''கண்ட கனவை மட்டும் சொன்னா போதும்''

''அப்புறம் தண்ணி அடிச்சிட்டே செக்ஸ் வச்சிக்கணும்....''

''எதுவும் நேரான உருப்படியான கனவா இருக்காதுபோல....''

''வாழ்க்கை உருப்படியா இருந்தா ஏன் உருப்படி இல்லாத கனவு வரப்போகுது?''

''நிறைவேறாத கனவுன்னு இன்னும் ஏதாவது மிச்சம் மீதி இருக்குதா?''

''ஒண்ணே ஒண்ணு இருக்கு சந்தானம். ஆனா அது நிறைவேறவே முடியாத கனவு. சொன்னா - அடிக்க வரமாட்டியே....?''

''அடிக்கமாட்டேன் சொல்லுங்க....''

''இல்லை - அடிப்பே நீ''

''சரி - அடிச்சா அடிச்சிட்டுப் போறேன். சொல்லுங்க....''

''நீயும் நானும் செக்ஸ் வச்சிக்கிற அழகை ஒரே ஒரு தடவை என் பெண்டாட்டி வந்து பாத்தா போதும் எனக்கு....''

கனகசபாபதி இதைச் சொல்லி முடிக்கவில்லை. சந்தானலஷ்மி அவரை தலையணையால் சாத்து சாத்துவென்று சாத்திவிட்டாள்.

''பாவி மனுசா சே - கனவைப் பாரு.... இதெல்லாம் ரொம்ப ஓவர்....''

''ஓவர்தான். ஒத்துக்கறேன்....''

''ஓவர்கூட கிடையாது. ஒரே வக்ரம்''

''வக்ரத்ல இருக்குற தனி சுகம் எனக்குத்தாண்டி தெரியும்''

''சரி சாமி; கிளம்பற வேலையைப் பாருங்க - நீங்க கிளம்ப வேண்டிய நேரம் நெருங்கியாச்சி....''

''கிளம்பித் தொலையணுமா அதுக்குள்ள.... இதனால யெல்லாந்தான் நான் இன்னும் மோசமா வக்ரமாயிடறேன்....''

''இந்த சால்ஜாப்பெல்லாம் எனக்குத் தேவை கிடையாது.''

''வேற என்னதாண்டி தேவை....''

''கிளம்பறதுக்கு முன்னாடி - இன்னும் ஒரே ஒரு தடவை....''

''திருப்பியும் வனிதாமணி பத்திப் பேசறேன்னு நினைக்காதே. இத்தனை வருஷம் குடித்தனம் பண்ணி குப்பை கொட்டினதில ஒருநாள்கூட அவளா வந்து செக்ஸ் வேணும்னு என்கிட்ட கேட்டதே கிடையாது - போதுமாடி?''

''அதுக்கெல்லாம் சேத்து வச்சி கேக்கறதுக்குத்தான் இப்ப நான் ஒருத்தி இருக்கேனே....''

''நெஜமாவே நீ எனக்குக் கிடைச்ச செக்ஸ் புதையல்டி சந்தானம்''

''பேச்சு போதும்''

''ரைட்....''

அவர்களிடையே பேச்சு நின்றது. சந்தானலஷ்மியின் சைதாபேட்டை விசாக தோட்டத்து வீட்டில் அவளின் ஆரம்ப நாட்களும்; ஆரம்ப வாரங்களும் ஆரம்ப மாதங்களும் இப்படித்தான் உற்சாகம் மிகுந்த அனுபவங்களால் நிறைந்து போயிருந்தன.... அவளும் கனகசபாபதியும் புதிதாக கல்யாணமான ஜோடிபோலத் தான் அந்த வீட்டிற்குள் கூத்தடித்துக்கொண்டிருந்தார்கள். அதுவும் கல்யாணமான மறு நிமிஷமே தனிக்குடித்தனம் போன்ற சுதந்திரம். கேட்க வேண்டுமா? சந்தித்துக் கொண்ட ஒவ்வொரு நாளும் வீட்டிற்குள் இருவருக்கும் தேன்நிலவு போன்ற கொண்டாட்டம் தான். வாழ்வு என்பதே அவர்களுக்கு பாலுறவு மயமாக இருந்தது என்றேகூடச் சொல்லிவிடலாம்.... ஒரு லாட்டரியில் திடீரென பெரிய பரிசு ஒன்று கிடைத்துவிட்டாற் போலத்தான் இருந்தது



இரண்டு பேருக்கும். - அந்தப் பரிசை சந்தானலஷ்மி கனகசபாபதியை விட பல மடங்கு அதிகமான வீச்சுடன் அனுபவித்தாள். கனகசபாபதி அவளுடன் வீட்டில் இல்லாத நேரங்களில் வேறொரு விதமான சுதந்திரத்தோடு எந்தப் பொறுப்பும் இல்லாமல் அவள் பாட்டுக்கு வெளியே போய் வந்து கொண்டிருந்தாள். காய்களும் பழங்களும் உடனடியாக தேவை இருக்கிறதோ இல்லையோ - மனதில் தோன்றிவிட்டால் அப்போதே பனகல் பார்க் மார்கெட்டிற்குக் கிளம்பிவிடுவாள். அந்த மார்கெட் நல்ல பணவசதி உள்ளவர்களுக் கானது என்பது சந்தான லஷ்மியின் அபிப்பிராயம்.... பட்டர்பீன்ஸ்; சிகப்பு நிறத்தில் இருக்கும் சோயாபீன்ஸ்; பச்சைப் பட்டாணி என்ற விலை உயர்வான 'இங்லீஷ்' காய்கறிகளைத் தவிர வேறு காய்களையெல்லாம் இப்போது அவள் திரும்பிக்கூட பார்ப்பது கிடையாது. வீட்டில் இருப்பது என்னமோ அவள் ஒருத்திதான். ஆனாலும் மூன்று நான்கு பேர்களுக்குத் தேவையான அளவு காய்களை வாங்கி வந்து ஃபிரிட்ஜ் நிறைய அழகாக அடுக்கி வைத்துவிடுவாள். அவ்வப்போது ஃபிரிட்ஜைத் திறந்து, அடுக்கப் பட்டிருக்கும் காய்களையெல்லாம் ஆசையோடு ஒரு பார்வை வேறு பார்த்துக் கொள்வாள்.

ஒரே ஒரு உள்பாவாடை வாங்க வேண்டியிருக்கும். மெனக் கெட்டு ஒரு ஆட்டோ வைத்துக்கொண்டு மாம்பலம் ரெங்கநாதன் தெருவரை போய் வருவாள். ஒரு புடவை வாங்கி வர பாண்டி பஜார் கிளம்பிவிடுவாள். முதல் முறையாக கனகசபாபதியுடன் கோயம்புத்தூர் செல்வதற்காக உடம்பை அவருக்குப் பொருத்தமாக தயார் செய்துகொள்ள வேண்டி ஹோட்டலுக்குப் போய் விதவிதமாக சாப்பிட்டுப் பழகிவிட்ட அவளுக்கு; வீட்டில் அவளுக்கு மட்டும் சமைத்து; அதையும் அவள் மட்டுமே உட்கார்ந்து சாப்பிட ஒவ்வொரு நேரம் அசுவாரஸ்யமாக இருக்கும். அப்படிப் பட்ட சமயங்களில் சந்தானலஷ்மியை சரவணா பவனிலும் ஹோட்டல் கீதாஞ்சலியிலும் பார்க்கலாம்.... அந்த இரண்டு ஹோட்டல்களிலும் அவள் ஒரு 'ரெகுலர் கஸ்டம'ராகவே ஆகிவிட்டாள்....

சந்தானலஷ்மிக்கு சினிமா பார்ப்பதில் ரொம்ப ஆர்வம் உண்டு. காதலுக்கு மரியாதை படத்தை இரண்டு தடவை பார்த்தாள். உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் படத்தை மூன்று தடவை போய் பார்த்துவிட்டு வந்தாள். ஏதாவது ஒரு ஹிந்திப் படம் மிகவும் வெற்றியோடு பேசப்படும்படியாக ஓடிக்கொண்டிருந்தால் மொழி தெரியாவிட்டாலும்கூடப் போய் ஜாலியாக பார்த்துவிட்டு

வருவாள்.... - இப்படித்தான் ஆரம்பத்தில் சந்தானலஷ்மிக்கு எல்லாமே களிப்பாகவும் இனிமையாகவும் இருந்தன. மனசுக்கு இதமாகவும் தெரிந்தன. நாட்கள் செல்லச் செல்லத்தான் அவளின் வாழ்க்கைப் பயணத்தின் திசை சந்தானலஷ்மிக்குப் புரியாததாக இருந்தது. ஏதோ ஒரு இனம் விளங்காத வெறுமை சாலையோர மரங்களின் இலைகளில் புழுதி படிவதுபோல அவளின் மனதில் படியத் தொடங்கியது. சரவணாபவன் போனாலும் சரி; உதயம் தியேட்டருக்கு சினிமா பார்க்கப் போனாலும் சரி - திரண்டு கிடந்த ஜனக்கூட்டத்தின் மத்தியில் எவரோடும் சேராமல் அவள் மாத்திரம் தனியாக இருப்பது சந்தானலஷ்மியின் மனதைக் கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கத் தொடங்கியது. சிறிது சிறிதாக அந்த அரிப்பு பெரிய நெருடலாகியது. - கொஞ்ச நாட்களில் அந்த நெருடல் ஒரு வலி போல; ஒரு இம்சை போல மனதில் கனத்துப்போய்விட்டது. எந்த விலை உயர்ந்த இடத்திற்குப் போனாலும் வாழ்க்கையில் நாம் மட்டும் தனியாக இருக்கிறோம் என்ற கவலை ஒருநாள் சந்தானலஷ்மியின் மனதில் தோன்றிவிட்டது. இந்தக் கவலை நாளாக நாளாக விஷம் ஏறுவது போல அவளின் நெஞ்சில் வளர்ந்து கொண்டே இருந்தது.

சந்தானலஷ்மிக்கும் ஒரு பாதுகாவலர் போல கனகசபாபதி என்ற பணக்கார ஆண் இருக்கத்தான் செய்கிறார். ஆனால் அவர் அவளுடன் இல்லை.... இந்த உண்மை நெஞ்சின் ஆழத்தில் உறைக்க ஆரம்பித்தபோது அவளின் மனதில் பெரிய கலக்கம் ஏற்பட்டு விட்டது. வீடு என்ற வடிவத்தில் மறுபடியும் ஒரு ஹாஸ்டல் அறையில் இருக்கிற பிரமை அவளின் உணர்வுகளில் கனமாக கவிய ஆரம்பித்துவிட்டது....

❖

# 12

சைதாபேட்டை விசாக தோட்ட வீட்டிற்குள் சந்தானலஷ்மி இருந்தபோது அவளுடைய தனிமை அளவவற்ற நிசப்தமாக இருந்தது. வீட்டிற்கு வெளி உலகத்தில் ஜனங்களின் மத்தியில் அவளின் தனிமை பெரும் இரைச்சலாக இருந்தது. வீட்டின் நிசப்த தனிமையைத் தவிர்க்க சில நேரங்களில் வெளி உலகத்தை நோக்கி ஓடினாள்.... வெளி உலகத்தில் அதன் இரைச்சல் மிகுந்த



தனிமையைத் தாங்க முடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கப் பார்த்தாள். ஆனால் இதனால் எல்லாம் அவளின் தனிமை உணர்வை அகற்றிவிட முடியாது என்பது ஒரு கட்டத்தில் சந்தானலஷ்மிக்குப் புரிந்து போயிற்று. இனி அவளுக்கென்று அவளுடைய வாழ்க்கையில் அவளுடைய வீட்டில் யாராவது வந்து நிரந்தரமாக இணைந்து இருந்தால்தான் இந்தத் தனிமை நிலை இல்லாமல் இருக்கும் என்பதும் விளங்கிவிட்டது.

இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தாள் சந்தானலஷ்மி. என்ன செய்வதென்று அவளுக்கு நிஜமாகவே தெரியவில்லை. வாரத்தில் இரண்டு மூன்று நாட்களாவது தன்னுடைய வீட்டில் வந்து கனகசபாபதியை அவளுடன் தங்கியிருக்கச் சொன்னாள். அந்தச் சில நாட்களாவது தனிமை உணர்வு இல்லாமல் இருக்கலாமே என்பது அவளுடைய அபிப்பிராயம். ஆனால் கனகசபாபதி சந்தானலஷ்மியின் அபிப்பிராயத்திற்கு செவி சாய்க்கவில்லை. அவளின் ஆசைக்காக ஒரே ஒரு முழு ராத்திரிகூட அவளுடைய வீட்டில் வந்து தங்குவதற்கு அவர் சம்மதிக்கவில்லை. இதையெல்லாம் முதலிலேயே பேசி முடிவு செய்தபின்தான் சந்தானலஷ்மியை இந்த வீட்டில் கொண்டுவந்து உட்கார வைத்திருப்பதாக கனகசபாபதி கொஞ்சம் அழுத்தமாகவே சொன்னார். நல்லதோ கெட்டதோ - எந்த விதத்திலும் ஒப்பந்தத்திற்கு மாறாக தான் நடக்கத் தயாரில்லை என்பதை அவர் சற்று இறுக்கமான குரலிலேயே சொன்னார்.

சில நாட்களுக்கு சந்தானலஷ்மியும் அமைதியாக மௌனமாக இருந்தாள். ஆனால் தனிமை அவளை எங்கே அமைதியாகவும் மௌனமாகவும் இருக்கவிட்டது.... கனகசபாபதி இங்கே வந்து தங்கித் தொலையத்தான் வேண்டாம்; ஒருநாள் அவளுடன் ஏதாவது ஒரு சினிமாவுக்குப் போய் வரலாம்.... கடற்கரையில் போய் கொஞ்ச நேரம் சந்தானலஷ்மியுடன் அலை ஓரத்தில் உட்கார்ந்துவிட்டு வரலாம்.... சரி; அதெல்லாம்கூட வேண்டாம்; அவளை காரில் அழைத்துக்கொண்டு ஒரு தீபாவளி ஷாப்பிங்; பொங்கல் ஷாப்பிங் போவதற்குக்கூட வரமாட்டேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஒவ்வொரு நேரம் சந்தானலஷ்மிக்கு மனதிற்குள் தாங்கமுடியாத ஆத்திரம் வரும்.... நாளும் கிழமையோ அல்லது பண்டிகையோ வரும்போது ஹாஸ்டலில் முக்கால்வாசிப் பெண்கள் அவர்களுடைய சொந்த ஊர்களுக்குக் கிளம்பிப் போகிற போதெல்லாம் சந்தானலஷ்மியின் மனநிலை எப்படி பாதிக்கப் பட்டதோ - இப்போதும் அதேபோல தீபாவளி; பொங்கல்; புதுவருஷப் பிறப்பு; சித்ரா பௌர்ணமி; வினாயக சதுர்த்தி;

நவராத்திரி; ஆயுதபூஜை - என்று வருகிற பண்டிகை நாட்களில் அவளின் மனநிலை ஒரு மாதிரி குமைந்து போய்விடுகிறது. அந்த நேரங்களில் அவளின் தனிமை உணர்வு பூதாகரமாகத் தெரிகிறது. பண்டிகை காலங்களில் எல்லா வீடுகளிலும் மனிதர்கள் நிறைந்து வழிவார்கள். உற்சாகமான குரல்கள் ஓங்கியே ஒலிக்கும்.... அப்போதும் சந்தானலஷ்மி அவளுடைய வீட்டில் அதே ஒண்டிக்கட்டை ஒய்யாரியாக தனியாகவே இருந்துகொண்டிருப்பாள்.

-எல்லோருடைய வீடுகளும் பண்டிகை காலங்களில் கலகலப்பாக இருப்பதைப்போல அவளுடைய வீடும் கலகலப்பாக இருக்கவேண்டும் என்று சந்தானலஷ்மி ஆசைப்பட்டாள். ஆனால் பண்டிகை நாட்களில்தான் கனகசபாபதி அவள் வீட்டுப் பக்கம் தலைவைத்துக்கூடப் படுக்கமாட்டார். தீபாவளி அன்று அவர் அவருடைய வீட்டில் புது பட்டுவேஷ்டி கட்டி அவருடைய பெண்டாட்டி பிள்ளைகளோடு கொண்டாடிக்கொண்டு இருப்பாரா - இங்கே வேறு ஆள் அரவம் இல்லாத சந்தானலஷ்மியின் இந்த வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டிருப்பாரா? அதுவும் இல்லாமல் பண்டிகை நாளும் அதுவுமாக கனகசபாபதியை வீட்டைவிட்டு வெளியில் செல்ல அவரின் பெண்டாட்டிதான் அவரை விட்டு விடுவாளா? அதனால் பண்டிகை நாளில் கனகசபாபதி சந்தானலஷ்மியுடன் வந்து இருப்பது என்பது சாத்தியமற்றதாகவே இருந்தது.... ஆனால் சந்தானலஷ்மியும் கனகசபாபதியின் பெண்டாட்டி வனிதாமணிபோல் ஒரு பெண்தானே.... ஆனால் பண்டிகை நாளில் தன் புருஷன் வீட்டிலேயேதான் இருக்கவேண்டும் என்று வனிதாமணி மட்டும்தான் நினைப்பாளா? - சந்தானலஷ்மியும் நினைக்கமாட்டாளா; அல்லது அவளுக்கும்தான் நினைக்கத் தெரியாதா? சொல்லப் போனால் - அவள்தான் அதிகமாக நினைத்தாள். இருப்பவர்களைவிட இல்லாதவர்களுக்குத்தான் நினைப்பும் கூடுதலாக இருக்கும்

சந்தானலஷ்மியை கேட்டால் ஒரு புலம்பல் புலம்பித் தள்ளி விடுவாள்! மற்ற பண்டிகைகளைக்கூட கொஞ்சம் தாங்கிக் கொள்வாள் அவள். இந்தத் தீபாவளியைத்தான் அவளால் தாங்கிக் கொள்ளவே முடியாது. இரண்டுபடும் ஊர். எங்கு பார்த்தாலும் வெடிச் சத்தம்; புதுப்புதுத் துணிகளை அணிந்துகொண்டு குடும்பம் குடும்பமாக கோவில்களுக்குப் போகிற பக்தி மணம்; - இவை எல்லாவற்றுக்கும் மேலாக நாலாவிதமான பட்சணங்களும் இனிப்புகளும் நிறைந்த அருமையான சாப்பாட்டை எல்லோருமாக



உட்கார்ந்து வயிறு நிறைய ஒரு கை பார்ப்பது - போன்ற எந்த தீபாவளிக்கும் உரிய எந்த லட்சணமும் இல்லாமல் இருப்பது - சந்தானலஷ்மியின் வீடு மட்டும்தான். இதை எப்படி தாங்குவாள் அவள்.... அன்று ஒரே ஒரு நாளாவது - கனகசபாபதி அவளுடைய வீட்டில் பட்டு வேஷ்டி பட்டுச் சட்டையுடன் சந்தானலஷ்மியோடு உட்கார்ந்து அவளின் சமையலை மூக்குப்பிடிக்க சாப்பிட்டால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் அவளுக்கு.... அந்த சந்தோஷத்தை கனகசபாபதி ஒரு வருஷம்கூட அவளுக்குத் தரவில்லையே.... முதலில் இது சந்தானலஷ்மிக்கு ஆதங்கமாக இருந்து கொண்டிருந்தது.... ஆதங்கம் ஆதங்கமாக இருப்பதெல்லாம் எத்தனை நாளைக்கு.... இதெல்லாம் ஒருநாள் ஆத்திரமாக மாறிக்கொண்டிருந்தது. ஆத்திரம் அதிகமாகும்போது பெண் ஜென்மங்கள் நிறைய பேருக்கு - அழுகைதான் கடைசியில் கிடைக்கிற பலனாக இருக்கும்....

ஆனால் சந்தானலஷ்மியின் எந்த அழுகைக்கும் கனகசபாபதி மசிந்தே கொடுக்கவில்லை. அவள்மேல் அவருக்கு இரக்கமே வரவில்லையென்று சொல்லிவிட முடியாது. ஆனால் அவள்மேல் இரக்கம் காட்டினால் நாளை அவருடைய நிலை இரக்கப்படத் தக்கதாகிப் போய்விடும். அதனால் அவர் இந்த விஷயத்தில் ரொம்ப உஷாராகவே இருந்துகொண்டிருந்தார். அதற்காக சந்தானலஷ்மியும் பொழுதுபூராவுமா உட்கார்ந்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பாள்.... 'சரி - ஒழிந்து போ....' என்கிற மாதிரி கொஞ்ச நாட்களுக்கு அவளும் பேசாமல் இருப்பாள்.... பிறகு திருப்பியும் ஒருநாள் - கனகசபாபதியின் பாஷையில் - முருங்கை மரத்தில் ஏறி விடுவாள். அவளை அவர் பார்க்க வந்தால் குப்புறப் படுத்துக் கொள்வாள்.... கனகசபாபதி சந்தானலஷ்மியைத் தேடி இத்தனை தூரம் வந்திருக்கும் காரியத்திற்கு அவள் இப்படி குப்புறப் படுத்துக் கொண்டால் எப்படி....? அதனால் கனகசபாபதி சொல்ல முடிந்த எல்லா வார்த்தைகளாலும் சொல்லி அவளை கொஞ்சம் அரும்பாடு பட்டு சமாதானம் பண்ணுவார். உடனே சந்தானலஷ்மியும் போனால் போகிறதென்று சமாதானமாகிவிட்ட மாதிரி முக பாவனையை மாற்றிக்கொள்வாள். அவளின் முகபாவனை ஒரு நடிப்புத்தான். ஏனென்றால் அவளால் நிஜமாகவே சமாதானமாகிவிடமுடியாது. சமாதானமாகி விடுகிற மாதிரியான அத்தனை சாதாரணமான பிரச்னையும் இல்லை - அவளுடையது..... அதனால் சந்தானலஷ்மி நடிக்கவே வேண்டியிருந்தது. - அப்படி நடிப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழியும் கிடையாது.

- இப்படியே ஒரு மாதிரியாக வதைபட்டு வதைபட்டே - சந்தானலஷ்மி நாலைந்து வருடங்களை கனகசபாபதியோடு ஓட்டி விட்டிருந்தாள் - தனியாகவே. தனிமைதான் அவளுடைய வாழ்க்கை என்றாகிவிட்டிருந்தது. அந்த வாழ்க்கையை உற்சாகக் குறைவோடும்; ஒருவித இறுக்கத்தோடும்தான் வாழ்ந்து கொண்டிருந்தாள். ஆனால்; ஒரு தடவை சந்தானலஷ்மிக்கு ரொம்பவும் உடம்பு சரியில்லாமல் போனபோதுதான் அவளுக்கு மனசு உடைந்து போய்விட்டது. வந்துபோன நான்காவது வாரமே மீண்டும் இரண்டாம் முறையாக மலேரியா வந்து ஐந்து நாட்கள் சந்தானலஷ்மி ஒரு சின்ன நர்சிங் ஹோமில் அனுமதிக்கப்பட்டிருந்த போது கனகசபாபதி வந்து அவளை நர்சிங் ஹோமில் ஒரு தடவைகூடப் பார்க்கவில்லை. 'ஹவுஸ் ஓனர்' பழனிச்சாமியும் அவருடைய மனைவியும்தான் சந்தானலஷ்மியை பார்த்துக் கொண்டார்கள். அந்த நேரத்தில் அவர்கள் மட்டும் பெரிய மனது வைத்துப் பார்த்துக் கொள்ளாவிட்டால் இரண்டாம் முறை மலேரியா வந்ததில் சந்தானலஷ்மி செத்தே போயிருப்பாள்.... அந்த ஐந்து நாள் ஆஸ்பத்திரி அனுபவம் சந்தானலஷ்மியின் மனதைச் சிதறடித்து விட்டது.... என்றைக்கோ செத்துப் போய்விட்ட அப்பாவையும் அம்மாவையும் நினைத்து ஒருநாள் அவள் அழவே செய்தாள்.... இந்த நேரத்தில்கூட தன்னிடம் கருணை காட்டாத கனகசபாபதியின் மேல் முதல் முறையாக அவளுக்குத் தாங்க முடியாத வெறுப்பு வந்தது.

ஆனால் கனகசபாபதியின் பாடும் பெரியதுதானே தவிர - சின்னது இல்லை. மோசமான ஆஸ்த்மாகாரியை பெண்டாட்டியாக அடைந்து காலம் பூராவும் அந்த ஆஸ்த்மாவின் கோரத்தைப் பார்த்துப் பார்த்து ஒரு மாதிரி வெறுத்தும் அலுத்தும் போனவர். முதல் தடவை சந்தானலஷ்மிக்கு மலேரியா வந்தபோது வீட்டிலேயே இருந்துதான் சிகிச்சை செய்துகொண்டாள்.... அதனால் போனால் போகிறதென்று கனகசபாபதியும் தொடர்ந்து இரண்டு நாள் அவருடைய சுபாவத்திற்கு மாறாக போய் சந்தானலஷ்மியை பார்த்துவிட்டு வந்தார். பொதுவாக அவருக்கு அது சரிப்பட்டு வராத விஷயம். உடம்பு சரி இல்லாத நேரத்தில் - அவள் எந்தப் பொம்பளையாக இருந்தாலும் சரி - அவளைப் பக்கத்தில் போய் பார்க்க கனகசபாபதிக்கு பிடிக்கவே பிடிக்காது. அதனால் இரண்டாவது தடவையாக மலேரியா சந்தானலஷ்மிக்கு வந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் அவர் திரும்பியே பார்க்காமல் இருந்து விட்டார்.... காரணம் அது மட்டும் இல்லை. ஒரு நர்சிங் ஹோமில் போய் எப்படி அவர் அத்தனை பகிரங்கமாக ஊர் உலகத்திற்குத்



தெரியாமல் வைத்துக் கொண்டிருக்கும் வைப்பாட்டியைப் போய் பார்ப்பார்....

தனக்கும் அப்போது உடம்பு சரியில்லாமல் போய்விட்டதாகவும்; அதனால் தானும் சில நாட்கள் வீட்டை விட்டு வெளியேறவில்லை என்றும் பின்னால் ஒரு வாரம் கழித்து சந்தானலஷ்மியை வீட்டில் வந்து பார்த்தபோது கனகசபாபதி சொன்ன பொய்யை சுத்தமாக நம்பவில்லை அவள்.... ஆனாலும் என்ன செய்ய.... சந்தானலஷ்மி இதை வாயைத் திறந்து கனகசபாபதியிடம் சொல்லவில்லை... வாயை இறுக மூடியபடி பேசாமல் இருந்தாள். ஆனால் இந்த அனுபவத்தில் கனகசபாபதியின்மேல் அவள் கொண்டிருந்த முக்கியமான ஒரு ஆதாரம் சற்றே தளர்வு அடைந்துவிட்டது. அதுவும் ஒரு வாரம் கழித்து அவளைப் பார்க்க வீட்டிற்கு வந்த கனகசபாபதி சிறிது நேரம் பொதுவாக எதைஎதையோ பேசிக்கொண்டிருந்துவிட்டு பின் எப்போதும்போல பாலுறவுக்காக சந்தானலஷ்மியை அணுகப் பார்த்தபோது சந்தானலஷ்மி சிறிது வெகுண்டுவிட்டாள். அவளுக்கு வந்த மலேரியா ஜுரம் விட்டு விட்டதே தவிர அதன் கொடிய தாக்கம் அவளின் உடம்பு பூராவும் இன்னும் இயல்பாக செயல்பட முடியாதபடி மிக கனமாக அழுத்திக் கொண்டிருந்தது. சந்தானலஷ்மி அதனால் அந்த நிமிஷம் கனகசபாபதியின் பாலுறவு தாகத்திற்கு தண்ணீர் தர முடியாத நிலைமையில் இருந்தாள். அவருக்கோ தண்ணீர் குடித்துவிட்டுப் போனால் நன்றாக இருக்குமேயென்று தோன்றியது. சந்தான லஷ்மியை கொஞ்சம் ஒரு தடவைக்கு இரண்டு தடவை கேட்டுப் பார்த்தார். அவர் எட்டுத் தடவை கேட்டாலும் அன்று சந்தானலஷ்மி நிஜமாகவே கனகசபாபதிக்கு தண்ணீர் கொடுக்கிற உடல்நிலையில் இல்லை.... ஆனால் அந்த மனிதரால் அப்படி நினைக்க முடிய வில்லை. அவளை ஆஸ்பத்திரியில் போய் பார்க்காததற்காக தன்னைப் பழி தீர்த்துக்கொள்கிறாள் என்று எரிச்சலோடு நினைத்தார். கொஞ்சம் கோபத்தோடும் நினைத்தார். ஆனால் கோபத்தையோ எரிச்சலையோ காட்டிக்கொள்ளாமல் தன்னுடைய தாகத்திற்கு தண்ணீர் கிடைக்காத ஏமாற்றத்தை சந்தானலஷ்மியிடம் கொஞ்சம் அதிகமாகவே கனகசபாபதி காட்டவே செய்தார். ஆனால் - அதற்காக அவளிடம் கெஞ்சிக் கொண்டிருக்கவும் இல்லை - எதையுமே கெஞ்சிக் கேட்கிற சுபாவம் கனகசபாபதிக்குக் கிடையாது. எதுவும் தானாகக் கிடைக்க வேண்டும்; அல்லது கேட்டதும் கிடைத்துவிட வேண்டும். பாலுறவுக்காக பெண்டாட்டிக்காரியிடம் கெஞ்சிக் கெஞ்சிதானே - மண்டை காய்ந்து போனவர் அவர்....

இனி கனகசபாபதி யாரிடமும் எதையும் கெஞ்சுவதாக இல்லை. அதனால் அன்று சந்தானலஷ்மியை திருப்பித் திருப்பி கெஞ்சிக் கொண்டிருக்காமல் சும்மா அரைமணி நேரம் மௌனமாக சிரெட் புகைத்தபடி உட்கார்ந்து இருந்துவிட்டு எழுந்து போய்விட்டார் - அப்போது அவர் சந்தானலஷ்மியின் முகத்தைப் பார்க்காமல் சொன்ன வார்த்தை ''.... உடம்பைப் பாத்துக்க... நான் நாலு நாள் கழிச்சி வரேன். ஆபிஸ்ல வேலை தலைக்கு மேல இருக்கு....''

'' போ போ'' என்று வாய்க்குள் முணகியபடி சந்தானலஷ்மி ஆயாசம் தாங்காமல் பேசாமல் படுத்துவிட்டாள். வந்து நின்ற உடனே கனகசபாபதி அவளிடம் பாலுறவு கேட்டு நின்ற முந்தைய நாட்களில் அதை தனக்குத் கிடைத்த பெருமிதமாக வெற்றியாக இதே சந்தானலஷ்மி நினைத்து அந்தக் கணமே படுக்கைக்கு ஓடிப் போய் தயாராக படுத்துக் கொண்டவள்தான். இன்று அதே சந்தானலஷ்மிக்கு வந்து நின்ற வெகுநேரத்திற்குப் பிறகே கனகசபாபதி பாலுறவு கேட்டமுறைகூட வேப்பங்காயாகக் கசந்தது. மலேரியாவின் கடுமையை சிறிதுகூட நினைத்துப் பார்க்காமல் - அதென்ன வந்து நின்றதும் ஒருத்தியிடம் மனிதாபிமானமே இல்லாமல் படுக்கலாம் வா என்று கூப்பிடுவது.... நான் என்ன மனுஷியா மாடா? ஆஸ்பத்திரியில் வந்து என்னை நீ ஒரு நிமிஷம் பார்க்கவில்லை. வீடு வந்து சேர்ந்ததும் கிளம்பி ஓடிவந்து விட்டாய்... வாடி - படுக்கலாம் என்று வேறு கூப்பிடுகிறாய்.... நான் என்ன உனக்குத் தேவடியாளா?....

இந்த இழையில் சந்தானலஷ்மியின் எண்ணம் கோபத்துடன் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது 'நான் என்ன உனக்குத் தேவடியாளா?' என்ற கேள்வி சிறிது ஆக்ரோஷமாக உணர்வுகளில் எழும்பியபோது அவள் சற்று அதிகமாகவே அதிர்ந்து போனாள்.... மிகவும் குழம்பியும் போனாள்.... இந்த ஐந்து வருட காலமாக அவளுக்கும் கனகசபாபதிக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் உறவின் சகல அம்சங்களையும் அவசரப்படாமல்; அதேநேரம் சிறிய அச்சத்தோடும் சந்தானலஷ்மி மனதிற்குள் ஆழமாக பரிசீலித்தபடி- அன்று பூராவும் படுத்தே கிடந்தாள்....

❖

## 13

சந்தானலஷ்மி குடியிருக்கும் இந்த விசாகதோட்ட வீட்டுக்கு இப்போது வாடகை ஐந்தாயிரம் ரூபாய். கடந்த ஐந்து வருடங்களில்



'ஹவுஸ் ஓனர்' பழனிச்சாமி இவ்வளவுக்கு வாடகையை உயர்த்திவிட்டிருக்கிறார்.... மாதத்தில் முதல் தேதி கனகசபாபதி ஆபிசில் அவருடைய பணியாட்களுக்கு சம்பளம் போடுகிறாரோ - இல்லையோ - சரியாக ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று சாயந்தரம் ஐந்து மணிக்கு சந்தானலஷ்மியின் கைகளில் வீட்டு வாடகைக்காகவும் அவளின் மாதாந்திர செலவுகளுக்காகவுமாக சேர்த்து பத்தாயிரம் ரூபாயை மொத்தமாக கொடுத்துவிடுவார்.... அதற்குமேல் அவள் வாங்குவதற்கு ஆசைப்படும் பொருள் எதுவாக இருந்தாலும் அதற்கான பணத்தையும் மறுபேச்சுப் பேசாமல் உடனே கொண்டு வந்து தந்துவிடுவார். என்றைக்குமே எதற்குமே கனகசபாபதி கணக்குக் கேட்டதே கிடையாது சந்தானலஷ்மியிடம். அவள் கேட்டபோதெல்லாம் அள்ளி அள்ளி தந்திருக்கிறார். - அவை எதையும் சந்தானலஷ்மி இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அப்படி கனகசபாபதி அள்ளி அள்ளி கொடுத்ததற்கெல்லாம் ஈடாக அவருக்கு அவளிடம் தேவையாக இருந்தது அபரிமிதமான பாலுறவு ஒன்று மட்டும்தான் என்ற அபிப்பிராயம் இப்போது சந்தானலஷ்மி யின் மனதில் வந்துவிட்டது. சந்தானலஷ்மிக்கும் கனகசபாபதியிடம் அளவுகடந்த பாலுறவு ஆரம்பத்தில் இருந்தே தேவைதான்.... ஆனால் இப்போதெல்லாம் அதைத் தாண்டிய ஒரு மன ஒருமிப்பு; ஒரு மன அக்கறை; ஒரு மனமரியாதை சந்தானலஷ்மிக்கு கனகசபாபதியிடம் தேவையாக இருந்தது.

-அந்த மன அக்கறை இருந்திருந்தால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவளை ஓடி வந்து பார்த்திருப்பாரே.... ஆனால் ஆசாமி வந்து பார்க்கவே இல்லையே.... இதுவே அவருடைய பெண்டாட்டிக்காரி ஆஸ்பத்திரியில் போய் படுத்திருந்தால் ஆசாமி ஆஸ்பத்திரிக்குப் போகாமல் இருந்திருப்பாரா? - முதலில் அப்படி இருப்பதற்கு தைரியம் வருமா? சந்தானலஷ்மி என்றதால்தான் இளக்காரம். ஏனென்றால் அவள் அவர் தாலிகட்டின பெண்டாட்டி கிடையாது. வெறும் வைப்பாட்டி....

இப்படியெல்லாம் கோபத்தில் நினைத்து நினைத்துப் பார்த்துப் புரண்டு கொண்டேயிருந்த சந்தானலஷ்மிக்கு ஒரு நிமிஷம் தாங்க முடியாத கோபம் வந்துவிட்டது. தெரிந்தோ தெரியாமலோ; அறிந்தோ அறியாமலோ - அவள் கனகசபாபதி என்ற ஒரே ஒரு மனிதனின் தேவடியாளாக ஆகிப் போயிருந்தாள். பேசாமல் துணிந்து கனகசபாபதியை தூக்கி எறிந்துவிட்டு வேறொரு நல்ல ஆளாகத் தேடலாமாவென்றுகூட கோபத்தின் உச்சத்தில் சந்தானலஷ்மி

யோசித்தாள். ஆனால் இன்னொரு ஆளை அவள் எங்கே போய்த் தேடுவாள்.... எப்படித் தேடுவாள்... அந்தச் சாமர்த்தியமெல்லாம் தான் கிடையாதே அவளிடம்... அதெல்லாம் இருந்திருந்தால் என்றைக்கோ சந்தானலஷ்மி சரியான ஒரு ஆளைப் பிடித்தி ருப்பாளே - அவளுக்கு இருக்கிற அருமையான உடம்புக்கு....

கனகசபாபதியை ஆனால் அவள் உடம்பால் திட்டம் போட்டா பிடித்தாள்? அகஸ்மாத்தாக நடந்த விபத்து அது. சந்தானலஷ்மியின் வாழ்க்கையில் மறுபடியும் அப்படியொரு விபத்து நடந்தால் நன்றாகத்தான் இருக்கும். அதை வரவேற்க அவள் தயார். ஆனால் சும்மா சும்மா விபத்து நடக்க எங்கேயுமே சாத்தியம் கிடையாது. விபத்தை நோக்கி வாழ்வைச் செலுத்தத் தேவையான வழிமுறைகளோ, அவகாசம் கிடைப்பதற்கான வாய்ப்புகளோ இல்லாதபோது, வாய்ப்புகள் தெரியாதபோது - எந்த நம்பிக்கையில் சந்தானலஷ்மி திசையறியாமல் ஒரு திசையை நோக்கிப் போவாள்....? எங்கேயும் போக முடியாது. இந்த வாழ்க்கையில் இப்படியே போய்க்கொண்டிருக்க வேண்டியதுதான். முன்னே பின்னே இருந்தாலும் கனகசபாபதியை வைத்துக்கொண்டு சந்தானலஷ்மி அவளின் காலத்தைத் தள்ளவேண்டியதுதான். இது அவளுடைய தலைவிதி.... அதை மாற்றி எழுத அவளால் முடியாது....

இப்படியெல்லாம் மனதிற்குள் புரளும் எண்ண ஓட்டங்களுக்குள் சந்தானலஷ்மி பல நேரங்களில் அமிழ்ந்துபோய் கிடந்தாள். கனகசபாபதியின் எதிரில்கூட சில நேரங்களில் ஒரு மாதிரியாக மந்தமாக இருந்தாள். முன்பெல்லாம் கனகசபாபதி விசாக தோட்டத்து வீட்டுக்குள் நுழையும்போதே உற்சாகத்தின் உச்சாணிக் கிளையில் வேகமாக ஏறி உட்கார்ந்து கொள்பவள் - இப்போது மரத்தில் கொஞ்சம்கூட ஏறிக்கொள்ளாமல் தரையில் அப்படியே நின்றுகொண்டிருந்தாள்.... உடனே முன்புபோல அவளால் மரத்தில் ஏற முடியவில்லை. ஏறப் பிடிக்கவில்லை....

இதையெல்லாம் புரிந்து கொள்ளமாட்டாரா கனகசபாபதி.... பொம்பளை கொஞ்சம் மனதிற்குள் சரியில்லாமல் இருக்கிறாள் என்பது புரிந்துவிட்டது அவருக்கு. இதற்கு இடையே அவருக்கு மனம் கொஞ்சம் சரியில்லாமல் போகிற மாதிரி ஒரு சம்பவமும் நடந்தது. ஒருநாள் அவர் சந்தானலஷ்மியின் வீட்டிற்கு வந்து; வந்த வேலையெல்லாம் முடிந்து உட்கார்ந்து கொண்டிருந்தபோது ஒரு சின்ன குளியல் போட்டுவிட்டு வந்துவிடுவதாக சொல்லி எழுந்து



வேகமாக குளியல் அறைக்குள் போய்விட்டாள். அப்போது ஒரு சிகரெட் புகைக்கலாம் என்ற எண்ணத்தில் சிகரெட் ஒன்றை எடுத்து உதடுகளில் வைத்துக்கொண்டவர், பற்றவைக்க தீப்பெட்டி இல்லாததால் எழுந்து சமையல் அறைக்குப் போனார். அங்கிருந்த தீப்பெட்டி மூலம் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டவர்; எதேச்சையாக கவனித்தார். சின்ன வெங்காயம் போட்டு வைத்திருந்த சின்ன கூடையின் பின்னால் சுவரை ஒட்டி பேங்க் பாஸ் புத்தகம் போல ஏதோ ஒன்று இருந்தது. நெருங்கிப் போய் கனகசபாபதி அதை கையில் எடுத்துப் பார்த்தார். அது பேங்க் பாஸ் புத்தகம்தான். சைதாபேட்டையில் இருக்கும் ஒரு வங்கியில் சந்தானலஷ்மி பணம் போட்டு வைத்திருக்கும் சேமிப்புக் கணக்கிற்கான பாஸ் புத்தகம் அது. கனகசபாபதி அதை அவசரமாக புரட்டிப் பார்த்தார். இந்த வீட்டில் சந்தானலஷ்மியை அவர் குடித்தனம் வைத்த பின் சரியாக எட்டு மாதங்கள் கழித்து அவள் அந்த சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து; ஆரம்பித்த அன்று சந்தானலஷ்மி அவளுடைய கணக்கில் பதினைந்தாயிரம் ரூபாய் போட்டிருந்தாள்.- இன்றைய தேதியில் அந்த கணக்கில் ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் இருந்தது. இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விஷயம்- சந்தானலஷ்மியின் அந்தக் கணக்கில் பணம் போடப்பட்டுத்தான் இருந்ததே தவிர - ஒரு தடவைகூட எடுக்கப்படவில்லை....

கனகசபாபதி பாஸ் புத்தகத்தை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு வேகமாக திரும்பி வந்து ஹால் சோபாவில் உட்கார்ந்துகொண்டார். அவருடைய மார்புத் துடிப்புச் சிறிது அதிகமாகி இருந்தது. சிகரெட் புகையை வேகமாக உறிந்து உறிந்து ஊதிக் கொண்டிருந்தார். - அவருடைய மனதில் உடனே ஏற்பட்டிருந்த கேள்வி - ஏது இந்தப் பணம்? என்பதுதான்.... இந்தக் கேள்விக்கான பதிலை கனகசபாபதி கண்களை மூடிக்கொண்டு யோசித்துப் பார்த்தார். துல்லியமான பதில் கிடைக்கவில்லை அவருக்கு. ஆனால் துல்லியமான பதில் கிடைக்காவிட்டாலும் ஒரு பதில் நிச்சயமாக இருந்தது. - இந்தப் பணத்தை சந்தானலஷ்மிக்கு வேறு யாரும் கொடுப்பதற்கு மட்டும் நிச்சயமாக வாய்ப்பு இல்லை. இந்த பதிலில் கனகசபாபதி சிறிது ஆறுதல் பெற்றார். தொடர்ந்து மேலும் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்ததில் சந்தான லஷ்மியின் கணக்கில் இருக்கும் அத்தனை பணமும் அவர் கொடுத்ததுதான் என்பது ஒரு மாதிரியாக புரிந்தது அவருக்கு. மாதா மாதம் அவளுடைய செலவுக்காகக் கொடுத்த பணத்தில் மிச்சம் பண்ணி ஒவ்வொரு மாதமும் இரண்டாயிரம் மூவாயிரம் என

அவளுடைய கணக்கில் பணத்தை சந்தானலஷ்மி போட்டுக் கொண்டே வந்திருக்கிறாள்.... பாஸ்புக்கில் அதற்கான அத்தாட்சி தெளிவாகவே குறிக்கப்பட்டிருந்தது - அப்படி அவள் போட்டுக் கொண்டே வந்திருக்கும் தொகைதான் இன்று ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாயாக, சிறுதுளிப் பெரு வெள்ளமாக பெருகிப் போயிருக்கிறது....

மாதா மாதம் பணம் சேமிப்பது ரொம்ப நல்ல பழக்கம்தான். ஆனால் அதை சந்தானலஷ்மி தாராளமாக கனகசபாபதியிடம் சொல்லியிருக்கலாமே.... இன்றுவரை சொல்லவில்லையே.... இதை நினைத்துத்தான் அவர் விசனப்பட்டார். பணம் சேர்த்து வைப்பதை சந்தானலஷ்மி ரகசியமாக வைத்திருக்கிறாள். பாஸ் புத்தகத்தையும் சமையல் அறையில் ஒளித்து வைத்திருக்கிறாள். ஏன்? ஏனோ.... யோசிக்க யோசிக்க கனகசபாபதிக்கு கொஞ்சம் ஒரு மாதிரியாகவே இருந்தது. எங்கோ ஒரு புள்ளியில்; ஒரு கோட்டில் அவருக்கும் சந்தானலஷ்மிக்கும் இடையே ஏதோ ஒரு நம்பகத் தன்மை அற்ற இடைவெளி இருப்பதுபோல தெரிந்தது. இந்த இடைவெளி அதிகமாகிவிட்டால் என்ன செய்வதென்று யோசித்தார் - கொஞ்சம் பயத்தோடு கனகசபாபதியைப் பொறுத்த வரை இப்போதைக்கு எந்த இடைவெளியும் அவருக்கும் சந்தான லஷ்மிக்கும் இடையில் பெரிதாக வந்துவிடக்கூடாது. அவருக்கு இன்னும் சந்தானலஷ்மியிடம் நிறைய பாலுறவு வேண்டியிருக் கிறது.... இதுவரை அவருக்கு அது சந்தானலஷ்மியிடம் அலுத்தே போகவில்லை.... அலுத்துப் போகும்போது என்ன பண்ணனுமோ அதைப் பண்ணிக் கொள்ளலாம்.... சந்தானலஷ்மியையே அவருடைய வாழ்க்கையில் இருந்து கத்தரித்துத் தூக்கிப்போட்டு விட்டு கனகசபாபதி போய்க்கொண்டே இருக்கலாம் - தேவைப் பட்டால் அப்போது; தேவைப்பட்டால்தான் - வேறொரு சந்தானலஷ்மியை பார்த்துக்கொள்ளலாம். இப்போது அந்த அளவிற்கு தேவை கிடையாது. இந்த நிமிஷம் - இந்த சந்தானலஷ்மி யின் பாலுறவு சேவைதான் கனகசபாபதிக்குத் தேவை- அதற்காக சிற்சில தீர்மானங்களை கனகசபாபதி சற்று தளர்த்திக் கொள்ளலாம். அதன்மூலம் சந்தானலஷ்மியை சிறிதாவது சமாதானம் செய்யலாம்.... சென்னை நகரத்திற்குள் அவரால் சந்தானலஷ்மி யுடன் சினிமாவிற்குப் போக முடியாது. கடற்கரைக்குச் செல்ல முடியாது. சரவணா பவனுக்குள் நுழைய முடியாது. ஆனால் பெங்களூரில் அவளை இழுத்துக்கொண்டு தெருத் தெருவாகக்கூட கனகசபாபதி சுற்றலாமே. கேட்பதற்கும் ஆள் கிடையாது. பார்ப்பதற்கும் ஆள் கிடையாதே....



பத்து நாட்களில் ஆபிஸ் வேலையாக பெங்களூர் கிளம்ப வேண்டி வந்தபோது கனகசபாபதி சந்தானலஷ்மியையும் தூக்கிக் போட்டுக் கொண்டார்.... பெரிய ஆசை எதுவும் இல்லாமல் ஒரு அவசியத்திற்காகக் கூப்பிடும்போது அந்த வித்தியாசம் தெரியத்தான் செய்கிறது.... அதனால் சந்தானலஷ்மியும் பெரிய ஆசையோ ஆர்வமோ இல்லாமல்தான் கனகசபாபதியோடு பெங்களூர் கிளம்பினாள்.... அவளுக்கு அபிப்பிராயம் - கூரை ஏறி கோழி பிடிக்கமாட்டேன் என்று சொல்கிற கனகசபாபதி வானத்தில் ஏறி வைகுண்டத்திற்கு கூட்டிப்போகிறேன் என்கிறாரே - என்பதுதான். உள்ளூரில் ஆசாமி உடம்பு சரி இல்லாதவளை பார்க்க ஆஸ்பத்திரிப் பக்கம்கூட வந்துவிட மாட்டார்.... கொஞ்சம் புடவை; நைட்டியெல்லாம் வாங்க வேண்டியிருக்கிறது - இந்த பாண்டி பஜார் வரை போய் வரலாம் என்று கரடியாய் கத்தினால்கூட வாயைத் திறந்துவிட மாட்டார் மனிதர். அதிகம் நேரம்கூட வேண்டாம் - தீபாவளியன்று ஒரே ஒரு மணிநேரம் என் வீட்டுக்கு வந்துவிட்டுப் போ என்று கெஞ்சோ கெஞ்சு என கெஞ்சி இருக்கிறேன்.... நீ ஒரு நிமிஷம்கூட வரமுடியாதென்று சொல்லிவிட்டாய்.... இப்போது நான் எங்கே பெரியதாக முறைத்துக்கொண்டு விடுவேனோ என்ற பயத்தில் பெங்களூருக்கு கூட்டிக்கொண்டு போவதாக வலிய வலிய வந்து சொல்கிறாய். நீ இன்னும் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லை கனகசபாபதி. கோயம்புத்தூர் பெங்களூர் ஹைதராபாத் என்பதெல்லாம் நம்முடைய உறவின் ஆரம்பக்கட்டம்- அந்தக் கட்டத்தையெல்லாம் நாம் தாண்டி விசாக தோட்டத்து வீட்டுக்கு வந்து சேர்ந்து ரொம்ப நாளாகிவிட்டது. எனக்கு இனிமேல் வாழ்க்கை வீட்டில்தான்.... வீட்டில் வந்து இரு என்கிறேன்; நீ மறுபடியும் ஹோட்டல் அறைக்குக் கூப்பிடுகிறாய். இதுதான் கனகசபாபதி எனக்கும் உனக்கும் உள்ள வித்தியாசம். இன்னொரு மாதிரியும் சொல்கிறேன் கேட்கிறாயா.... பல்கலைக் கழக கல்விக்கு வந்துவிட்ட பின் திருப்பி யாராவது எல்.கே.ஜி., வகுப்புக்குப் போவார்களா சொல்....? ஆசைக்கு இன்னொரு விதமாகவும் சொல்லிவிடுகிறேன். சைதாபேட்டை விசாக தோட்ட வீடு - என்னுடைய வீடு. என் சொந்த வீடு இது. பெங்களூர் இப்போது எனக்கு மாமியார் வீடு. சாமி உன் போன்ற ஆம்பளை களுக்கு மாமியார் வீட்டுக்குப் போவதற்கு வேண்டுமானால் குஷியாக இருக்கலாம். என் போன்ற பொம்பளை யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுப் பார் நீ. எந்தப் பொம்பளையுமே மாமியார் வீட்டுக்கு இஷ்டப்பட்டு வரவேமாட்டாள். ஒரு கட்டாயத்திற்குத்தான் வருவாள்.

பெங்களூரில் இருந்த மூன்று நாட்களும் சந்தானலஷ்மி கட்டாயத்திற்கு மாமியார் வீடு வந்திருக்கும் மருமகள் மாதிரிதான் இருந்தாள். பெங்களூர் ஒட்டவே இல்லை அவளுக்கு கனகசபாபதிக்கே ஏண்டா அழைத்து வந்தோம் என்று ஆகிவிட்டது. விசாக தோட்டத்து வீட்டில் பாலுறவுப் புயலாகப் பார்த்த அதே சந்தானலஷ்மி பெங்களூர் ஹோட்டலில் பாலுறவு நத்தை மாதிரி - ஆடாமல் அசையாமல் இருந்தாள்.

கனகசபாபதியும் எல்லாவித உணர்வுகளும் இருக்கிற மனிதர்தானே.... நத்தைப் பாலுறவின் எரிச்சலில் நத்தையை விட்டுவிட்டு ஒடிவிடலாமாவென்று ஒரு நிமிஷம் நினைத்தார். ஆனால் ஏற்கனவே அவர் முடிவு செய்திருக்கும் அந்த இறுதித் தீர்மானத்திற்கு இன்னும் கனகசபாபதியின் மனம் வரவில்லை. கனகசபாபதி அதனால் இப்படி நினைத்தார் - ஒரு பேச்சுக்காக வைத்துக் கொள்ளலாம் - அவரின் மாமா ஒருத்தருக்குக் காசநோய் வந்திருந்த மாதிரி கனகசபாபதிக்கு ஒருவிதமான பாலுறவுக் காசநோய். நிஜ காசநோய் வந்திருந்த அவரின் மாமா அதற்காக எண்பது ஊசிவரை போட்டுக்கொண்டார். அதே மாதிரிதான் கனகசபாபதியும் அவருடைய பாலுறவுக் காசநோய்க்கு எண்பது ஊசி போட்டுக் கொண்டாக வேண்டும். ஆனால் கனகசபாபதி குத்துமதிப்பாக அவருடைய கணக்குப்படி அறுபது ஊசிவரை போட்டுக் கொண்டிருக்கிறார். சிகிச்சையை அவசரப்பட்டு ஒரு எரிச்சலில் இத்துடன் நிறுத்திக்கொண்டால் முக்கால்வாசிக்கு மேல் குணமாகிவிட்ட நோய் மறுபடியும் அதிகமாகிவிடும். அதைச் சரிபண்ண மேலும் அதிக காலம் தேவைப்படும். அந்த அளவு பணச் செலவும் இரட்டிப்பாகும். அதனால் கனகசபாபதியும் இப்போது எரிச்சல்பட்டு அவசரப்பட்டு ஊசி போட்டுக் கொள்வதை நிறுத்துவதாக இல்லை. இன்னும் தேவைப்படுகிற வரைக்கும் ஊசி போட்டுக்கொள்ளத்தான் போகிறார். - நோய் முற்றிலும் குணமாகிவிட்டது என்பது உறுதியாகத் தெரிகிறவரை.... நோய் முழுவதும் குணமாகிவிட்டால் அப்புறம் ஊசியோ மருந்தோ தேவை கிடையாது. சந்தானலஷ்மி என்ற டாக்டரையும் வீட்டுக்கு அனுப்பி விடலாம்....

-இப்படியெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு கனகசாபதி பெங்களூரில் சந்தானலஷ்மியிடம் கிடைத்த பாலுறவு நத்தையை பெரிய மனசு பண்ணி சகித்துக்கொண்டார். பாலுறவு நத்தையை எப்படி மறுபடியும் பாலுறவுப் புயலாய் பார்ப்பதென்று யோசனை செய்தார். கனகசபாபதிக்கு ஒரு வழி புலப்பட்டது....

❖

# 14

கம்பெனி வேலையாக வெளியூர் போகும்போது சந்தான லஷ்மியை அழைத்துக்கொண்டு போனது உப்புச்சப்பு இல்லாத அனுபவமாக ஆகிவிட்டதால், இனி வெளியூர் போவதாக சொல்லிவிட்டு அவ்வப்போது இரண்டு நாளோ மூன்று நாளோ சைதாப்பேட்டையில் அவளுடைய வீட்டில் வந்து - ஆனால் வெளியே தலையைக் காட்டாமல் தங்கி இருந்து பார்க்கலாம் என்ற புதிய யோசனை கனகசபாபதிக்குள் வந்தது. இந்த யோசனையையும் அவர் ஒரு தடவைக்கு இரண்டு தடவை தீவிரமாக பரிசீலனை செய்து கொண்டார். எவ்வளவு பரிசீலனை செய்து பார்த்தும் கனகசபாபதிக்கு இந்த யோசனையின்படி நடந்துகொள்வதற்கு சிறிது தயக்கமாகவே இருந்தது. இருந்தாலும் இந்த யோசனையின்படி நடந்துதான் ஆகவேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தமும் அவருக்கு இருந்தது. இரண்டு நாளோ மூன்று நாளோ கனகசபாபதி சந்தானலஷ்மியின் வீட்டில் வந்து அவளுடன் தங்கியிருந்தால் நிச்சயமாக அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். எதிர்பாராமல் இப்போது அவளுக்கும் அவருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் இடைவெளியும் அதனால் கண்டிப்பாக நீங்கும். கனகசபாபதிக்கும் அவருக்குப் பிடித்த பழைய பாலுறவுப் புயலை சந்தித்த மாதிரி இருக்கும். ஏனென்றால் - இந்த மலேரியாஜுரம் வந்து போன பிறகு வீட்டிலேயேகூட சந்தானலஷ்மி கொஞ்சம் கொஞ்சம் பாலுறவு நத்தை போலத்தான் நடந்துகொள்கிறாள். மாதம் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் அவளுக்காக செலவழிக்கும் கனகசபாபதிக்கு தேவையா - இப்படி ஒரு நத்தை....இப்போதும்கூட அவர் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் சந்தானலஷ்மிக்காக செலவழிப்பதற்குத் தயார்.... பணம் அவருக்குப் பெரிசே கிடையாது. அதுவும் இல்லாமல் - இதற்குச் செலவழிக்காமல் கனகசபாபதி வேறு எதற்குச் செலவழிக்கப் போகிறார்....

இந்த அவருடைய யோசனையை நாள் அதிகம் கடத்தாமல் ஒரு நாள் - சந்தானலஷ்மியிடம் சொன்னார் கனகசபாபதி. அதைக்கேட்ட அந்த நிமிஷமே அவளுடைய நத்தை பிம்பம் உதிர்ந்து - அவளுடைய வங்காள விரிகுடாவில் கடும் புயல் சின்னம் உருவாகி விட்டது.

''இதை நீங்க எப்பவோ செஞ்சிருக்கலாம்.... இதுக்குப் போய் இத்தனை யோசிச்சிருக்க வேண்டாம்....'' என்றாள்.

''எதுக்கும் ஒரு காலம் நேரம் வரவேண்டாமாடி குண்டு.... ஆனா ஒண்ணை மட்டும் சொல்லிடறேன்.... எனக்கா வசதிப்படும் போது மட்டுந்தான் உன்கூட இங்கே வந்து ரெண்டு நாளோ மூணுநாளோ என்னால தங்கி இருந்திட்டுப் போக முடியும்.... அதுக்காக சும்மா சும்மா உன் இஷ்டத்துக்கு என்னை இங்கே வந்து இருன்னு சொல்ல ஆரம்பிச்சிடக்கூடாது.... அதை ஞாபகத்ல வச்சிக்க.... நெனைச்சதும் டிக்கெட்டை எடுத்திட்டு பெட்டியை தூக்கிட்டு பெங்களூர் போகுற மாதிரி இல்லை - இங்கே வந்து உன்கூட தங்கறது... மீன மேஷம் எல்லாம் பாத்திட்டுத்தான் கிளம்பி வர முடியும்....'' கனகசபாபதியின் பேச்சுக்கு சந்தானலஷ்மி குறுக்கே எதுவுமே பேசவில்லை. முதலில் ஆசாமி மூன்று நாட்களுக்கு பெட்டியைத் தூக்கிக்கொண்டு வரட்டும் என்பது அவளுடைய அபிப்பிராயம்.... அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக ஆளை ஒரே அமுக்காக அமுக்கிவிடலாம். ஒரு மாதிரி 'ஸ்டிரைக்' செய்ததும் ஓடிவர முடிகிறது அல்லவா.... அப்படியானால் ஓடி வரக்கூடிய சுதந்திரத்தில்தான் இத்தனை நாளும் இருந்திருக்கிறாய்.... ஆனால் வராமல் இருந்திருக்கிறாய்.... இப்போது வழிக்கு வந்திருக்கிறாய்... வா கனகசபாபதி வந்து பார்; இனி எந்த 'ஸ்டிரைக்'கும் கிடையாது. நீ என்னுடன் தங்கியிருப்பதற்காக உனக்கு 'ஓவர்-டைம்'பணியே செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்....

சந்தானலஷ்மிக்கும் கனகசபாபதிக்கும் இடையே ஒப்பந்தம் மானசீகமாக கையெழுத்திடப்பட்டது. அதற்காக உடனே கனகசபாபதி கிளம்பி விசாக தோட்டத்துக்கு வந்துவிடவில்லை.... செய்ய வேண்டிய எல்லா சம்பிரதாயங்களையும் ஒன்றுவிடாமல் நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து செய்தார். வழக்கம்போல ஹைதராபாத் போக வர ரயிலில் அவருக்கு முதல் வகுப்பில் டிக்கெட் ரிசர்வ் செய்துகொண்டார். வழக்கம்போல ரயில் கிளம்புவதற்கு முக்கால் மணி நேரத்திற்கு முன்பாக அவருடைய அடையார் வீட்டில் இருந்து காரில் ஏறி பெட்டி படுக்கையோடு வனிதாமணியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினார். சென்ட்ரல் ஸ்டேஷனில் போய் இறங்கியதும் டிரைவரை காரை எடுத்துக் கொண்டு போ என்று வழக்கம்போல சொன்னார். வழக்கமாக அவருடைய 'கோச்'சைப் பார்த்து ஏறி உட்கார்ந்தும் கொள்வாரே - அந்த வழக்கமான காரியத்தை மட்டும் கனகசபாபதி அன்று செய்யவில்லை. வெறுமே பதினைந்து நிமிடம் சென்ட்ரல் ஸ்டேஷனில் அத்தனை பிளாட்பாரங்களிலும் அப்படியும் இப்படியுமாக யாரையோ தேடுகிற பாவனையில் நடந்தார் - இந்த



இடத்தில் கனகசபாபதிக்கு தான் இப்படி தன் அந்தஸ்துக்கு குறைச்சலான விதத்தில் ஒரு பொம்பளைக்காக பிளாட்பாரத்தை சுற்றிக்கொண்டிருக்கிறோமே என்ற சின்ன வெட்கம் வந்தது. ஆனால் வெட்கப்பட்டு என்ன செய்ய.... விசாகதோட்ட பொம்பளை தேவையாக இருக்கிறதே.... அது தேவையாக இருக்கும்வரை இப்படியெல்லாம் வெட்கப்பட்டுத்தான் தீரவேண்டும். கனகசபாபதி முதலிலேயே இன்னொரு இடத்திலும் இதே மாதிரியான வெட்கத்தைத்தான் பட்டார். வெட்கப்பட்ட இடம் - அவருடைய அடையார் வீடு. வெட்கப்பட்ட நேரம் - ஹைதராபாத் போய் கம்பெனி வேலைகளை பார்த்துவிட்டு நான்காவது நாள் வந்துவிடுவதாக மனைவி வனிதாமணியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பிய நேரம் நிஜமாகவே ரயிலில் ஏறி ஹைதராபாத் போய் விடலாமாவென்றுகூட கனகசபாபதி ஒரே ஒரு நிமிஷம் வேண்டும் என்றே யோசித்துப் பார்த்தார்.... அய்யோ அது வேறு மாதிரி ஆகிவிடும். அவரை வேறு எங்கேயோ கொண்டுபோய் விட்டு விடும்.... அப்புறம் அது சந்தானலஷ்மியின் பாலுறவுப் புயலாக இல்லாமல் வேற ஒரு புயலாகிவிடும்....

கனகசபாபதி அவருடைய வெட்கத்தையெல்லாம் கையில் வைத்திருந்த பெட்டிக்குள் போட்டு பூட்டி சாவியை எடுத்து விட்டார். வாட்ச்சில் மணி பார்த்தார். சந்தானலஷ்மி இந்நேரம் அவருடைய வருகையை எதிர்பார்த்து கதவைத் திறந்து வைத்தபடி காத்துக்கொண்டிருப்பாள். பிளாட்பாரத்தில் திரிந்தது போதும் என்று தோன்றியது கனகசபாபதிக்கு. ஸ்டேஷனைவிட்டு வெளியேறி சாலைக்கு வந்து ஆட்டோ ஒன்றைப் பிடித்து ஏறி உட்கார்ந்தார். பல வருட இடைவெளிக்குப் பிறகு அன்று கனகசபாபதி ஆட்டோவில் ஏறுகிறார். இதெல்லாம் விசாக தோட்டப் பொம்பளைக்காகத் தான்.... ஆட்டோவில் கனகசபாபதி ரொம்பவும் சிரமப்பட்டு உட்கார்ந்திருந்தார். ஆட்டோ சைதாபேட்டையை நோக்கி ஓட ஓட அவருக்குள்ளும் ஒரு பயம் ஓடத் தொடங்கலாயிற்று. தெரிந்தவர்கள் யாரும் இப்படி அவர் ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் போவதைப் பார்த்து வைத்தால் என்ன கதியாகும் என்று நினைத்துக் கொண்டபோது அவருடைய மனதின் பயஓட்டம் ஆட்டோ ரிக்ஷாவின் சூடு வைக்கப்பட்ட மீட்டரைப் போல மிக விரைவாக ஓடியது. ஏதோ ஒரு கோணத்தில் தான் சந்தானலஷ்மியிடம் வசமாக மாட்டிக்கொண்டிருக்கிறோம் என்ற கோபம் சட்டென கனகசபாபதி யின் மனதில் ஏற்பட்டது. - இந்தக் கோபத்தை அவர் கோபம் இல்லாமல் யோசித்தார். நிஜமாகவே தான் அப்படி சந்தானலஷ்மி

யிடம் மாட்டிக்கொண்டிருக்கிறோம் என்றால் - அந்த மாட்டலில் இருந்து கூடிய சீக்கிரம் தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்ற புதுப்பிக்கப்பட்ட தீர்மானத்திற்கு - அந்த நீண்ட ஆட்டோ பயணத்தில் கனகசபாபதி வந்து சேர்ந்தார்.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் ஓடி ஆட்டோ சந்தானலஷ்மியின் வீட்டின் எதிரில் போய் நின்றது. கனகசபாபதி பெட்டியை எடுத்துக் கொண்டு ஒரு தவறான ஸ்டேஷனில் இறங்கிவிட்ட உணர்வோடு ஆட்டோவில் இருந்து இறங்கி வீட்டிற்குள் போனார். ஸ்டேஷன் மாஸ்டர் அவரை வரவேற்பதற்காக தயாராக கையில் பச்சைக் கொடியோடு நின்றுகொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் கனகசபாபதியின் அத்தனை கோபமும் வடிந்து போய்விட்டது.

ஹைதராபாத் போவதாக கம்பெனியிலும் வீட்டிலும் போக்குக் காட்டிவிட்டு கனகசபாபதி சந்தானலஷ்மியின் வீட்டிற்கு ஒரு குருட்டுத் தைரியத்தோடும்; இக்கட்டான கோபத்தோடும் கிளம்பி வந்துவிட்டாரே தவிர - அங்கே அவரால் ஒரு நிமிஷம்கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை. மாட்டிக்கொண்டு விடுவோமோ என்ற பயத்தில் உடம்பால் மட்டும் சந்தானலஷ்மியின் வீட்டில் இருந்தாரே தவிர - மனதால் அவரின் வீட்டுக்கும் ஆபிசுக்குமாக 'லொக்கோட்டம்' ஓடிக் கொண்டிருந்தார். அந்த மன ஓட்டத்தை அவருடைய கண்கள் துல்லியமாக பிரதிபலித்துக் காட்டிக் கொண்டிருந்தன. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சந்தானலஷ்மிக்கு ஒரு நேரத்தில் தாங்கமுடிய்யாத எரிச்சலே வந்து விட்டது. இதற்கு கனகசபாபதி வராமலேயே இருந்திருக்கலாம்....

''அப்படி என்ன பயமோ தெரியலை எனக்கு.... என்ன தலையா போயிடும்?'' - சந்தானலஷ்மி கடுப்புத் தாங்காமல் கேட்டு விட்டாள்.

''தலை போனா பிரச்னையே இல்லை.... பணம் போயிரும் சந்தானம்.... மொத்த பணமும் போயிரும். பணம் போச்சின்னா மத்த எல்லாமே போயிரும். எல்லா மெயின் சுவிட்சும் அவ கையிலதான் இருக்கு....'' கனகசபாபதியும் ஒருவித எரிச்சலோடு கடுப்போடுதான் இதைச் சொன்னார்.

''தெரியும்தானே - எல்லா சுவிட்சும் அவ கையில இருக்கறது... தெரிஞ்சும் பின்னே எதுக்காக என் மேல கை வைக்கணும்.... பேசாம கிருஷ்ணா ராமான்னு இருந்திருக்க வேண்டியதுதானே.... நானும் அந்தப் பீடை பிடிச்ச ஆஸ்டல் ரூம்லேயே கெடந்திருப்பேன்.



கெடக்க முடியாம போயிருந்தா செத்தாவது ஒழிஞ்சிருப்பேன்.... இப்படி தனியாவே தினம் தினம் வீட்டுக்குள்ள செத்து செத்து பிழைச்சிட்டு இருக்கமாட்டேன்....''

கனகசபாபதி இதற்கு பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தார். சந்தானலஷ்மியும் சிறிது நேரம் மௌனமாக இருந்தபின் கேட்டாள்.

''நான் ஒரு விஷயம் கேக்குறேன்....மறைக்காம பதில் சொல்வீங்களா?''

''எதை வேணுமானாலும் கேளு.... ஆனா கொஞ்சம் கோபப்படாம கேளு....''

''கனகசபாபதி சற்று தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு சொன்னார்.''

''உங்க கம்பெனியில 'ப்ளாக் மணி' அப்பப்ப சேந்துக்கிட்டுத் தானே இருக்கும்....?''

''ரொம்ப வேகமா சேராது. ஆனா கொஞ்சம் கொஞ்சமா சேந்திட்டுத்தான் இருக்கும்.... ஏன் கேக்குற....?''

''வர்ர கறுப்புப் பணமும் அதனோட கணக்கும் - உங்களோட பொறுப்பில்தானே இருக்கு?''

''ஆமா. அது மட்டும் என்னோட பொறுப்பிலேதான் இருக்கு. வனிதாமணிகூட அதைப் பத்தின கணக்கை மட்டும் ஒருநாளும் என்கிட்ட கேக்கறது கிடையாது. நான் உனக்குக் கொடுக்குற பணமெல்லாம் அந்த ப்ளாக் மணியில் இருந்து எடுத்திட்டு வர்ரதுதான்....''

''நல்லதா போச்சி. சேந்திட்டு வர்ர கறுப்புப் பணத்தையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக இங்கே கொண்டாந்து வச்சிடுங்க. நமக்கு மொத்தம் எவ்வளவு தேவையான அளவுக்குக் கறுப்புப் பணம் சேருதோ - அப்ப அந்தப் பணத்தை எடுத்துக்கிட்டு நாம ரெண்டு பேரும் எங்கேயாச்சும் ஓடிப் போயிடலாம். நிம்மதியா இருக்கலாம்- ஓடிப் போய். என்னால காலத்துக்கும் இப்படி ஒண்டியாவே கிடக்க முடியாது....''

கனகசபாபதி பதில் சொல்லத் தெரியாமல் மௌனமாகத்தான் இருந்தார்.

''வாயைத் திறந்து எனக்கு ஏதாவது பதில் சொல்லியாகணும்....''

கனகசபாபதியின் உதடுகளில் பொய்யான ஒரு சிறிய புன்னகை நெளிந்தது.

''ஏன் சந்தானம் - நம்ம ரெண்டு பேருக்கும் ஓடிப் போகுற வயசா ஆகுது இப்ப....?'' என்றார்.

சந்தானலஷ்மியிடம் இருந்து இதற்குப் பளீரென்று பதில் வந்தது.

''கேக்குறதைப் பாரு. கோயம்புத்தூர் என்ன; பெங்களூர் என்னன்னு மாத்தி மாத்தி போயிட்டு வந்திட்டு இருந்தோமே - வயசு அதுக்கு மட்டும்தானாக்கும் - கேக்குறேன்.... ஓடிப் போகுற வயசான்னு கேக்குறீங்களே.... நெனைப்பு வந்திட்டா ஓடி ஓடி வரத் தெரியுதே - அதுக்கெல்லாம் மட்டும் ஒரு நாளும் வயசே ஆகாதாக்கும்....?'' கொஞ்சம் கொஞ்சம் மனசாட்சியோட பேசப் பாருங்க....''

-இப்படிப் பேசியபோது உணர்வு வேகத்தில் சந்தானலஷ்மிக்கு சற்று மூச்சு வாங்கியது.... கனகசபாபதி இப்போது சிறிது நிமிர்ந்து உட்கார்ந்தார். குட்ட குட்ட ஒரேயடியாக குனிந்துகொண்டிருக்க மாட்டார்தானே அவரும்....

''ஸாரி சந்தானம்; இப்பல்லாம் சாதாரணமா உன்கிட்ட பேசவே முடியமாட்டேன்கிறது.... ஏதாவது சொன்னாலே - திருப்பி உடனே பட்டுப் பட்டுனு கேக்குற.... ரொம்ப ஷார்ப்பாயிட்டே வருது உனக்கு மூளை.... ஆனா இந்த ஷார்ப்னெஸ் தேவையான்னுதான் தெரியலை....''

''இந்தப் புகழ்ச்சியெல்லாம் எனக்கு இந்த நேரத்ல தேவை யான்னுதான் தெரியலை''

''எனக்குத் தேவையா இருக்குடி...'' கனகசபாபதி மிகவும் மாறுபட்ட புதிய கறாரான தொனியில் சொன்னார்.

''என் தேவைகளையும் நீங்க கொஞ்சம் கவனிச்சாகணும் சாமி....
''அதான் நான் சொல்றதும்....'' - சந்தானலஷ்மியும் அதே மாறுபட்ட வேறொரு கறாரான தொனியில் சொன்னாள் - கொஞ்சம் உரக்க

''சந்தானம் - நான் சொல்றதைக் கொஞ்சம் கவனமாக நல்லா கேட்டுக்க. உன்னோட எல்லா தேவைகளையும் என்னால நிறைவேத்தி வைக்கமுடியாது. முதல்லேயே அதையெல்லாம் உன்கிட்ட க்ளீயரா சொல்லிட்டுத்தான் - உன்னை இந்த வீட்ல கொண்டாந்து நான் உக்கார வச்சேன்.... ஒத்துக்கிறியா இதை....?''

''ஒத்துக்கறேன். எல்லாத்தையும் கட் அண்ட் ரைட்டா சொல்லித்தான் இங்கே என்னை உக்கார வச்சிங்க. எனக்கும் அந்த



நேரத்ல 'அப்பாடா' - ஒரு வீடு மாதிரியான இடத்ல வந்து பாதுகாப்பா உட்கார்ந்திட்ட மாதிரியும்தான் இருந்தது. இப்ப அந்த பாதுகாப்பு உணர்வு இல்லை எனக்கு. நாதியில்லாம எங்கேயோ நடுத்தெருவுல நிக்கற மாதிரி இருக்கே....''

''அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றே....இது உன்னோட காம்ப்ளெக்ஸ்.... இதுக்கு நீதானே பொறுப்பு சந்தானம்....?'' - கனகசபாபதி சின்ன இரக்கத்துடன் இதை கேட்டார்.

''ஆமா - நாந்தான் பொறுப்பு. ஆனா இப்ப நான் உங்களை என்ன கேக்க ஆசைப்படறேன்னா - உங்களுக்கு என்மேல எந்தப் பொறுப்பும் இல்லையா என்கிறதைத்தான்....''

''எந்த அளவுக்கு நான் சொன்ன வார்த்தைகளுக்கு உட்பட்டு உன்கிட்ட பொறுப்பா இருக்கணுமோ அந்த அளவுக்கு நானும் பொறுப்பாத்தான் இருந்திருக்கேன்....''

''என்னைக்கோ நீங்க சொன்ன வார்த்தைகளுக்கு உட்பட்ட பொறுப்பு இப்ப எனக்குப் பத்தலை.... எந்த அளவுக்கு உங்களுக்கு என்கிட்டே செக்ஸ் வேணுமோ அந்த அளவுக்கு என்கிட்ட உங்களுக்கு பொறுப்பும் வேணும்''

''ஏன் - உனக்கு என்கிட்ட செக்ஸே தேவை இல்லையா?''

''அப்படின்னா இப்படிச் சொல்றேன் - எனக்கு உங்ககிட்டே எவ்வளவு செக்ஸ் வேணுமோ அவ்வளவு பொறுப்பும் உங்ககிட்டே இருந்து வேணும்...''

சந்தானலஷ்மி இப்படிச் சொன்னதும் கனகசபாபதி கொஞ்சம் இல்லை; சிறிது அதிகமாகவே உணர்ச்சிவசப்பட்டு விட்டார்....

❖

## 15

உணர்ச்சி வசப்பட்டுவிட்டால் வாயைத் திறந்து பேசித் தீர்த்து விடுவது கனகசபாபதிக்கு கூடப் பிறந்த குணம். இப்போது அந்தக் குணத்தைக் காட்டக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது அவருக்கு. அதனால் பல்லைக் கடித்தபடி பேசாமல் இருக்கப் பார்த்தார். ஆனால் அவர் பேசாமல் இருக்க சந்தானலஷ்மி கனகசபாபதியை விடுவதாக இல்லை.... அதை நோக்கி அவள் பேசினாள்.

...ARA PUBLIC LIBRARY

''அதுக்காக செக்ஸுக்கு பதிலா உங்ககிட்டே இருந்து பணத்தை எதிர்பாக்கறதா நெனைச்சிர வேண்டாம்.... அது தேவடியாதனம். நான் ஒண்ணும் தேவிடியா கிடையாது - அதை ஞாபகத்ல வச்சிக்கோங்க....''

சந்தானலஷ்மியின் இந்த ஒருமுனை தாக்குதலுக்கு உடனே பலன் கிடைத்துவிட்டது. கனகசபாபதி அதிகபட்சமாகவே உணர்ச்சி வசப்பட்டுவிட்டார் - கனகசபாபதி அவருடைய வாழ்நாளில் எந்தத் தேவடியாள் வீட்டுக்குள்ளும் போனதில்லை. ஒரு தேவடியாளுடன் சுகம் காண வேண்டும் என்று எண்ணியதும் இல்லை. ஆனால் 'தேவடியா' என்ற சொல் அவருள் உக்கிரமான பாலுணர்வுக் கிளர்ச்சியைத் தருகிற மந்திரச் சொல்லாக வாலிப வயதில் இருந்திருக்கிறது. அந்த வார்த்தையிலேயே பாலுணர்வு மிதப்பதான கடுமையான பிரமை அவருக்கு. வாலிப வயதில் அவருடைய ஒரு சில நண்பர்கள் அவ்வப்போது விலைமகள்களின் வீடுகளுக்குப் போய் வந்த கதைகளை உற்சாகமாக விவரித்துக் கொண்டிருப்பதை கனகசபாபதி வாயைத் திறக்காமல் கேட்டுக் கொண்டிருப்பார். தப்பித் தவறி வாயைத் திறந்துவிட்டால்; திறந்தவாயை மூடாமல் கேட்டுக் கொண்டிருப்பார். அவருக்கு விலைமகளுடன் படுக்கையை பகிர்ந்துகொள்ளும் விருப்பம் மனதில் ஏற்படவில்லையே தவிர - விலைமகள்களை பார்க்க வேண்டும் என்ற விருப்பம் சின்ன வயதில் அவருக்குள் நிறையவே இருந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் பார்ப்பதற்கு எப்படி இருப்பார்கள்; அவர்களுடைய வீடுகள் எப்படி இருக்கும்; அவர்களுடைய வீடுகளில் வேறு யாரெல்லாம் இருப்பார்கள் என்பதையெல்லாம் பார்த்துவிட்டு வரவேண்டும்போல இருக்கும் அவருக்கு. எப்போதோ ஒரு கட்டத்தில் விலைமகள் ஒருத்தியை நேசிக்கவேண்டும் என்ற ரகசியமான அவாகூட கனகசபாபதியின் மனசில் ஏற்பட்டிருக்கிறது. இப்போதும் அவருக்குக் காரணம் தெரியவில்லை. ஒரு முகம் தெரியாத விலைமகளை அவர் மானசீகமாக காதலித்திருக்கிறார் - இந்த ஆழமான புதைதளம் அவருள் இருந்ததில் சந்தானலஷ்மி ஆக்ரோஷத்துடன் 'நான் ஒண்ணும் தேவிடியா இல்லை' என்று சொன்னதும் கனகசபாபதி கட்டுக்கடங்காத அளவிற்கு உணர்ச்சி வசப்பட்டுவிட்டார்....

''அநியாயத்துக்கு என் உணர்ச்சிகளை உசுப்பி விடறேடி சந்தானம். இன்னைக்கி நான் இருக்குற நிலைமையில இவ்வளவு உணர்ச்சிகளை நான் தாங்கமாட்டேன். ஏற்கனவே உன்னைக் கடிச்சித் துப்பிடணும் என்கிற மாதிரியான ஒருவித கோவத்ல இருக்கேன்



நான்... ஏன்னு கேக்காத.... எவளாவது ஒருத்தியை கொன்னா தேவலைபோல இருக்கு - எனக்கு. இப்பச் சொல்லிடறேனே ஒரு உண்மையை.... இங்கே ஒவ்வொரு தடவையும் வந்திட்டுப் போகும் போதெல்லாம் ஏதோ ஒரு கட்டுப்பாட்டு உணர்வுலதான்- உன்னைக் கொல்லாம போயிருக்கேன். எத்தனையோ நேரம் - உன் உடம்பைப் பாக்குற போதெல்லாம் ஒரு அழுத்து அழுத்தி உன்னைக் கொன்னுடணும் என்கிற மாதிரியான ஒருவித செக்ஸ்யல் வயலன்ஸ் எனக்குள்ள வந்திருக்கு தெரியுமா.... அந்த அளவுக்கு உன்னோட கொழுத்த உடம்பு என்னைப் போட்டு கொன்னுருக்கு. அப்படி ஒரு அடங்காத மோகம்டி - இன்னி வரைக்கும் உன்மேல.... அப்படிப்பட்ட என்னைப் போட்டு நீ பாட்டுக்கு இன்னைக்கி வார்த்தையாலேயே கொல்றே. இதுக்கு பேசாமா என்னை நீ நெஜமாவே கொன்னு போட்டுரலாம்''

கனகசபாபதி உணர்வு வயப்பட்டு கிட்டத்தட்ட புலம்பினார். ஆனால் இவரால் மட்டும்தான் உணர்ச்சி வசப்பட முடியுமா? சந்தானலஷ்மியாலும் உணர்ச்சிவசப்பட முடியாதா -அவரை மாதிரி....? பதிலுக்கு அவளும் உணர்ச்சி வசப்பட்டாள்.

''ஆமா - இதிலெல்லாம் குறைச்சல் கிடையாது.... கடைசியில இப்படிப் பேசிப் பேசி என்னைக் கொன்னு போட்டுர வேண்டியது...''

''நெஜமாவே நான் உன்னை ஒருநாள் கொன்னுட்டு ஜெயிலுக்குப் போகப் போறேண்டி சந்தானம்....''

கனகசபாபதி ஒருவித ஆக்ரோஷப் பாலுணர்வோடு கொஞ்சம் உரத்த குரலில் கத்தவே செய்தார். சந்தானலஷ்மி உடனே தானும் கத்தினாள்.

''அதைச் செய் சாமி. முதல்ல அதைச் செய்.... தினம் தினம் தனியாவே கிடந்து செத்துச் செத்துப் பிழைக்கறதுக்கு அது எவ்வளவோ உத்தமம் - ஒரேயடியா செத்துடறது....''

இதைக் கேட்டதும் கனகசபாபதி வேற மாதிரி வித்தியாசமாக உணர்ச்சிவசப்பட்டார். வேகமாக சந்தானலஷ்மியை நெருங்கி அவளை வேகமாக இழுத்து அணைத்துக்கொள்ளப் பார்த்தார். அதை அவள் விரும்பவில்லை; விரும்பவும் செய்தாள்.

''சும்மா வந்து இப்படி என்னைக் கட்டிப்பிடிக்கிற வேலையெல்லாம் வேண்டாம்....'' - என்றாள்.

''நான் உன்னைக் கட்டிப் பிடிக்காம; எவன்டி உன்னைக் கட்டிப் பிடிப்பான்?'' இது உன் உடம்பு கிடையாது. என் உடம்பு என் உடம்பை தொடவும்; கட்டிப் பிடிச்சி உருளவும் உரிமை இருக்குடி எனக்கு.... அந்த உரிமையை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்...''

''கொல்லணும்போல இருந்ததெல்லாம் - இந்த உரிமையிலதான் போல....''

-இப்படிக் கேள்வியை திசை திருப்பும் போதே சந்தான லஷ்மிக்குத் தெரியும் - இது கனகச்பாபதியை என்ன செய்யும் என்பது.... அவரை அவளுக்கு எத்தனை நாளாகத் தெரியும்....

''-அதெல்லாம் ஒரு ஆம்பளையோட வேகத்ல வர்ர வார்த்தை.... அதுக்கெல்லாம் உடனே நேரடியான அர்த்தம் பாத்திட்டு இருக்க கூடாது. கொல்ற உடம்பாடி உனக்கு.... வேணும்னா இப்படிச் சொல்லலாம் - பாக்கறவனை கொன்னு போட்டுடுற உடம்பு இது. நான் சொல்றேன் - மில்லியன் டாலர் உடம்பு இது சந்தானம். பொய் சொல்லலை. நெஜமா உனக்கு மில்லியன் டாலர் உடம்பு. தயவு செஞ்சி மனசைப் போட்டு வீணா குழப்பிக்காத. அடிக்கடி நான் இங்கே வந்து உன்கூட இருக்கணும்னு பேராசையெல்லாம் படாதே.... சும்மா சும்மா நான் வந்து இருந்தா - பிறகு நான் மட்டும்தான் இருப்பேன். வேற எதுவும் இருக்காது''

''நீங்க வந்து இருக்கும்போது எனக்கு வேற எதுவும் வேண்டாம்...'' சந்தானலஷ்மி பட்டென சொன்னாள்.

''எல்லாம் இப்பச் சொல்வே. அதெல்லாம் பெரிய ஆபத்ல கொண்டுபோய் விட்டுரும்.... நான் சொல்றதைக் கேளு.... பொறுமையா இரு. டெய்லி கொஞ்ச நேரம் வேணுமானாலும் வரேன். ஆனா ராத்திரியில என்னை இங்கே தங்கச் சொல்லாதே.... அது முதலுக்கே மோசமாயிடும்....''

''நான் என்ன சொல்றேன்னா - முதலுக்கே மோசம் வரட்டும்னு தான்'' - முதல்லை வச்சிக்கிட்டு இத்தனை நாள் வாழ்ந்ததெல்லாம் போதும். இனி வட்டியை வச்சிக்கிட்டு வாழுங்கன்னு சொல்றேன் புரியுதா புரியலையா?

''புரியலைன்னுதான் வச்சிக்கோயேன்....''

''வனிதாமணி முதல். இந்த சந்தானலஷ்மி வட்டி.... இப்பப் புரியுதா நான் சொல்றது....''



சந்தானலஷ்மி இப்படிச் சொன்னதும் கனகசபாபதி கனத்த பெருமூச்சுவிட்டார். சில நிமிடங்கள் அவரையே பார்த்துக் கொண்டிருந்த சந்தானலஷ்மி கேட்டாள் ''நான் ஒண்ணு கேட்பேன் இப்ப - பதில் சொல்றீங்களா?''

''கேளு....'

''எனக்குக் கொண்டாந்து கொண்டாந்து நீங்க தர்ர பணம் எல்லாம் 'ப்ளாக் மணி'ன்னு ஒருவாட்டி சொல்லியிருக்கீங்க.... ப்ளாக் மணியை தனியா எங்கே வச்சிருக்கீங்க....?''

''நம்ம ஆபிஸ்ல என்னோட ரூம்லேதான். தனியா லாக்கர் ஒண்ணு இருக்கே - அதிலேதான் ப்ளாக் மணி பூராவும் இருக்கு.... ஆனா - இது ஆபிஸ்ல ஒருத்தருக்கும் தெரியாது....''

''ப்ளாக் மணி - நெறய இருக்கா உங்ககிட்டே....?''

''ரொம்ப வச்சிக்கிறது கிடையாது. ஏதாவது சொத்து அது இதுன்னு வாங்கும்போது - அதில இருந்து அப்பப்ப எடுத்து-இன்வெஸ்ட் பண்ணிடறது....''

''ப்ளாக் மணி நெறய இருக்கா உங்ககிட்டே?'' - கரெக்ட்டா சொல்லுங்க....

''ரொம்ப அதிகமா இருந்தா - ஏழெட்டு லட்ச ரூபாய்க்கு மேல வச்சிக்கிறது கிடையாது.... ஏதாவது பண்ணிடறது....''

''அதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா இங்கே எடுத்திட்டு வந்திடுங்க....''

''எதுக்கு?''

ரெண்டு மூணு வருஷத்துல நமக்குத் தேவையான அளவு பணம் சேந்ததும் - அதை எடுத்திட்டுப் போய் ஏதாவது வேற ஒரு ஊர்ல நாம ரெண்டு பேரும் நிம்மதியா இருப்போம். நெசமாத்தான் சொல்றேன்.... இத்தனை வருஷம் வனிதா அக்காகூட வாழ்ந்தாச்சி நீங்க.... போதும் அவங்ககூட வாழ்ந்தது. இனிமே என்கூட வந்து இருங்க. உங்களுக்கு நான் இருக்கேன்; எனக்கு நீங்க இருங்க. தினசரி உங்களுக்கு எத்தனை தடவை செக்ஸ் வேணுமோ - சொல்லுங்க. அலுத்துக்காம நான் தரேன் வந்திருங்க. போயிரலாம்....'' - சந்தானலஷ்மி சற்று கெஞ்சவே செய்தாள்.

ஆனால் இதற்குக் கனகசபாபதி சின்ன அலுப்புடன் சொன்னார். ''உனக்கு எப்படிச் சொல்றதுன்னே தெரியலை சந்தானம். நீ சொல்ற

மாதிரியே ப்ளாக் மணியை கொஞ்சம் கொஞ்சமா எடுத்திட்டு வந்து - ஒரு பதினைஞ்சி லட்ச ரூபா சேர்ந்திடுதுன்னு வச்சிக்க; அதை எடுத்திட்டுப் போய் நீ சொல்ற மாதிரி ஒரு சின்ன ஊர்ல குடித்தனத்தை ஆரம்பிக்கிறோம்னு வச்சிக்க - அதுக்கு பதினைஞ்சி லட்ச ரூபாயெல்லாம் பிரயோஜனமே படாது. டெபாசிட் பண்ணி அதுல வர்ர வட்டியில் நிம்மதியா சாப்பிட்டுட்டு இருக்குற காலமெல்லாம் எப்பவோ மலையேறிப் போயாச்சி. அதுமட்டு மில்லை - இந்த இருபது வருஷமா கம்பெனி; எம்.டி; கார்; பங்களா; வேலை செய்யறதுக்கு நூத்தியெட்டு ஆளுங்க - அப்படின்னு ஒரு அந்தஸ்தான வாழ்க்கையை வேற வாழந்து பழகிட்டேன் - இனிமே வேற எது இருந்தாலும் இந்த அந்தஸ்து எதுவும் இல்லாம எங்கேயோ போய் காலம் தள்ள என்னால் முடியுமா என்கிறது - டவுட்... அதனால ஒப்பனாவே சொல்லிடறேன் - ஏதோ ஒரு டப்பா ஊர்ல போய் வட்டியில குடித்தனம் பண்ற அட்ரஸ் இல்லாத வாழ்க்கை வாழ்றதெல்லாம் என்னால முடியாது சந்தானம்....''

''ஆனா நான் மட்டும் இப்படியே காலம் பூராவும் அட்ரஸ் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்திட்டு இருக்கலாம் போலிருக்கு...''- சந்தானலஷ்மி எரிச்சலோடு கேட்டாள். ''இப்படியெல்லாம் நீ கேக்கும்போது எனக்கும் மனசு கஷ்டமாதான் இருக்கு....''- கனகசபாபதி இதை ஒரு துயரமான குரலில்தான் சொன்னார்.

''சும்மா இப்படிச் சொல்லிக்க வேண்டியதுதான். நெசமாவே கஷ்டப்படற ஆள் மாதிரி உங்களைப் பார்த்தா தெரியலை...'' கனகசபாபதி இதற்கு பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தார். சந்தானலஷ்மியும் சில நிமிடங்கள் நிசப்தமாக இருந்துவிட்டுத் தொடர்ந்தாள்.

''தனியாவே இருந்து இருந்து ஒவ்வொரு நேரத்ல பைத்தியம் பிடிக்கிற மாதிரி இருக்கு எனக்கு. தாங்கிக்கவே முடியலை. நீங்க வந்து இருக்கும்போது அவ்வளவு சந்தோஷமா இருக்கு எனக்கு. நீங்க வரும்போது உங்ககூடவே வர்ர சிகரெட் புகையை சுவாசிக்கிற போதே இன்னும் சந்தோஷமாகவும்; தெம்பாகவும் இருக்கு எனக்கு- அதே நேரம் நீங்க கிளம்பிப் போயிடும்போது நன்றிகெட்ட அந்த சிகரெட் புகையும் உங்களோடேயே போய் தொலைஞ்சிருது - அந்தக் கோபம் தாங்காம இப்பல்லாம் கொஞ்ச நாளா நான் என்ன பண்றேன் தெரியுமா - நீங்க மிச்சம் மீதி வச்சிட்டுப் போயிடற சிகரெட் ஏதாச்சும் இருந்தா - அதனோட புகை வாசனைக்காக அதை எடுத்துப் பத்த வச்சிக்கிறேன் சாமி....''



சொல்லுகிற போதே சந்தானலஷ்மி அவளின் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கனமா ஒரு விம்மல் விம்மினாள். அதைப் பார்க்க தாங்கவில்லை கனகசபாபதிக்கு. பாய்ந்து அவளை இரண்டு கைகளாலும் அள்ளிக்கொண்டார். பெரும் மலர் மூட்டையை; நிறைந்த ஆற்று மணல் பொதியை கட்டிக்கொண்டாற்போல திம்மென்று இருந்தது அவருக்கு. சந்தானலஷ்மியும் மனம் உடைந்த விம்மலோடு கனகசபாபதியை இறுகக் கட்டிக்கொண்டாள். ''நான் இல்லாதப்ப நீ இப்படி சிகரெட் பத்த வச்சிக்கிற விஷயத்தை இதுவரை என்கிட்ட சொன்னதே இல்லையே....?'' - கனகசபாபதி கனிவுடன் கேட்டார்.

''ஆமா - ஒவ்வொண்ணையும் சொல்லிட்டே இருக்காங்க....''

''இப்ப எனக்கு அப்படி ஒரு சிகரெட்டைப் பத்த வச்சி காட்டேன் பாக்கலாம்....''

''நான் சிகரெட் பத்த வச்சிக்கிற விஷயம் - உங்களுக்கு வேடிக்கை பாக்குற விளையாட்டா....? இம்சை சாமி.... தாங்க முடியாத இம்சையில பண்றது அதை....''

''எனக்கும் அது இம்சைதான் சந்தானம்.... அந்த இம்சையை பாத்தா தேவலை போல இருக்கு.... அந்த இம்சைக்காகவே ஸ்மோக் பண்ணித்தான் காட்டேன்....''

''நெஜமாவா சொல்றீங்க?''

''உன்கிட்ட நான் பொய்யே சொல்றது கிடையாது''

சட்டென சந்தானலஷ்மி கனகசபாபதியின் அணைப்பில் இருந்து அவளை விடுவித்துக் கொண்டாள். அவளுடைய உணர்வுகளுக்குள் ஓர் ஆவேசம் மூண்டது. ஒரு சிகரெட்டை எடுத்து உதடுகளில் வைத்து வேகமாக பற்ற வைத்தாள். புகையை உறிந்து உறிந்து வெளியில் விட்டாள். ஒரு முறை புகையை நாசித் துவாரங்களின் வழியாகவும் விட்டாள். இன்னொரு முறை புகையை கனகசபாபதியின் முகத்தில் ஊதினாள். மற்றொரு முறையும் கோபத்தோடு அவரின் முகத்தில் ஊதிவிட்டு சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் நெறித்துத் திணித்துவிட்டு நிமிர்ந்த சந்தானலஷ்மியின் இரண்டு கண்களும் கலங்கிச் சிவந்திருந்தன. கனகசபாபதி ஒருவித சிலிர்ப்போடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சின்ன வயதில் கனகசபாபதி பெண் என்பவளைப் பற்றி எத்தனையோ வினோதமான கற்பனைகளையும் கனவுகளையும் மனதில் அலையவிட்டுக் கொண்டு இருந்தவர்தான். ஆனால்

இப்படித் தன் அருகே சிகரெட் புகைக்கும் ஒருத்தியை ரசித்துப் பார்த்து இம்சைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற கனவோ கற்பனையோ ஒரு நாளும் அவருடைய மனதில் வந்தது கிடையாது. இந்தக் காட்சி அவருடைய கற்பனைக்கும் மிக அப்பாற்பட்டதாக இருந்தது. கனகசபாபதி ஒரு நிமிடம் கண்களை மூடியபடி இருந்தார். இம்சை போலத்தான் இருந்தாலும் அவருடைய வாழ்க்கை எங்கோ ஒரு இழையில் நிகரற்று இருப்பதாய் தோன்றியது. கண்களைத் திறக்காமல் அந்த இழையிலேயே உணர்வுகள் அத்தனையும் ஊன்றிப் போய்விட எதையோ முணங்கியபடி நின்றுகொண்டிருந்தார். நின்று கொண்டிருந்தார். நின்று கொண்டே இருந்தார்.... சந்தானலஷ்மி ஆசைப்படுகிற மாதிரி எங்கேயாவது ஓடிப்போய் இந்த நிகரற்ற வாழ்க்கையை முழு நேரமும் வாழ்ந்துவிடலாமா என்ற சின்ன நப்பாசையே அவருடைய மனதின் ஒரு மூலையில் தலையை உயர்த்திப் பார்த்தது. பெங்களூரோ ஹைதராபாத்தோ ஓடிப் போய் சந்தானலஷ்மியுடன் சேர்ந்தே சிகரெட் புகைத்துக் கொண்டிருக்கலாம். எந்த வேலை வெட்டியும் வேண்டாம். சாப்பிட வேண்டியது; படுத்து தூங்க வேண்டியது. வேணும் என்கிற போதெல்லாம் அவளுடன் பாலுறவுப் புயலில் சிக்கிப் படாதபாடு பட வேண்டியது. போய் சேர வேண்டிய நேரம் வரும்போது நிம்மதியாக போய் சேர வேண்டியது. போய் சேரும்போது கனகசபாபதி எதையும் தலையில் தூக்கிக் கொண்டு போகப் போவது கிடையாது - அப்படி இருக்கும்போது எதற்காக இந்த எழவு பிடித்த கம்பெனியும் அதன் மேனேஜிங் டைரக்டர் வேலையும்.... தினமும் பொழுது விடிந்து ஆபிசுக்கு ஓடி என்ன சுகத்தைக் கண்டு விட்டோம்.... இதற்குத்தானா இந்த ஜென்மம் எடுத்ததே.... இவை எல்லாவற்றுக்கும் மேலாக அந்த ஆஸ்த்மாகாரியை வருஷம் பூராவும் கட்டி மாரடித்துக்கொண்டு.... எல்லாவற்றையும் வெறுப்போடு யோசனை செய்து பார்த்ததில் எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு சந்தானலஷ்மியுடன் ஓட்டம் பிடித்து விடலாம் போலத்தான் இருந்தது கனகசபாபதிக்கு.... ஓடிப் போகிற அந்த வாழ்க்கையில் அவசரம் கிடையாது. பதட்டம் கிடையாது. ஓட்டம் கிடையாது. ஆபிஸ் கிடையாது. வருமானவரி எழுவு கிடையாது. ஆடிட்டர் கிடையாது. முக்கியமாக ஆஸ்த்மாகாரி கிடையாது - நிம்மதியாக உட்கார்ந்திருக்கலாம் கனகசபாபதி - ஒரு துறவி மாதிரி. அதுவும் ஒரு பாலுறவுத் துறவி மாதிரி.... துறவியால் அதை மட்டும் துறக்க முடியாது.... உயிர் உள்ளவரை அதுமட்டும் வேண்டும்....

❖

# 16

ரயில் தண்டவாளத்தைப் போல மிக நீளமான யோசனையில் கனகசபாபதி அவரையும் அறியாமல் மிக அதிக நேரம் ஆழ்ந்து விட்டிருந்ததைப் பார்த்துக்கொண்டே இருந்த சந்தானலஷ்மி அவரின் உள்மன ஓட்டத்தைப் புரிந்துவிட்ட அவசரத்தில் கேட்டாள். ''என்ன முகத்தைப் பார்த்தா ஒரு மாதிரியா - என்னவோ போல இருக்கு.... ப்ளாக் மணியை மூட்டை கட்டிட்டு கிளம்பிரலாமா?''

உடனே கனகசபாபதியின் உள்மன ஓட்டம் கலைந்துவிட்டது. அடுத்த நிமிடமே சுதாரித்துக் கொண்டார். வெறுந் துறவியோ - இல்லை பாலுறவுத் துறவியோ - அந்தப் பதவியெல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான் ஜோராக இருக்கும். அந்த ஜோர் கலைந்துவிட்டால் -பின் நடைமுறை வாழ்க்கை அநேகமாக உப்புச் சப்பற்றதாக இருக்கும். அல்லது குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டுவதைப் போல இருக்கும். ஏற்கனவே சொன்ன மாதிரி கம்பெனி; தொழில்; பணம்; பங்களா - இதற்கெல்லாம் மேலாக மணியான இரண்டு குழந்தைகள் -இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு எங்கோ போய் ஒரு அட்ரஸ் இல்லாத வாழ்க்கையை சந்தானலஷ்மியோடு வாழ்வதென்பது கனகசபாபதியால் முடியாத விஷயம்.... சந்தானலஷ்மியுடன் இவ்வளவுதான் அவரால் வாழமுடியும். - இந்த மனோபாவம் அவருடைய உணர்வுகளில் மாற்றம் பெற்றதும் - அந்த மாற்றம் உடனே அவரின் கண்களில் தெரிந்தது. அதைக் கவனித்தும் சந்தானலஷ்மி சொன்னாள்

''மறுபடியும் மூட்டையை இறக்கி வச்சாச்சி போல.... எல்லா முத்துமழையும் மூணு நிமிஷந்தான் போல.... எனக்கு - இன்னைக்கி இன்னொரு ரொம்ப முக்கியமான விஷயத்தையும் பேசியாகணும்... பேசிரட்டுமா அதையும்?''

''நீ சீரியசா பேச ஆரம்பிச்சாலே இப்பல்லாம் எனக்குத் தொடை நடுங்குது சந்தானம்....'' - கனகசபாபதி சொன்னார்.

''மடியில கனம் இருந்தாத்தான் தொடை நடுங்கும்....''

''உடனே இப்படிச் சொல்லிடு. என்ன அது - இன்னொரு முக்கியமான விஷயம்?'' - கனகசபாபதி கொஞ்சம் எரிச்சலோடு கேட்டார்.

''உங்களுக்கும் எனக்கும் தொடர்பெல்லாம் ஏற்பட்ட ஆரம்பத்ல இதைப் பத்தி நான் யோசிச்சதும் இல்லை; ஆசைப்பட்டதும் இல்லை. ஆனா இப்பக் கொஞ்ச நாளாத்தான் புதுசா ஒரு நினைப்பு எனக்குள்ள தோணிட்டே இருக்கு. தொடர்ந்து நாமும் இத்தனை வருஷமா விடாம செக்ஸ் வச்சிக்கிட்டேதான் இருக்கோம். ஆனாலும் நான் ஏன் இப்படி குழந்தையே உண்டாகாம இருக்கேன்....? ஏன் ஒரு தடவைகூட என்னோட தூரக் கல்யாணம் நிக்காம தேதி குறிச்சாப்போல மாசா மாசம் கரெக்ட்டா நடந்துக் கிட்டே இருக்கு? .... சொல்லுங்க; ஏன் நான் இன்னும் குழந்தை உண்டாகாமலேயே இருக்கேன்.... எனக்கும் எல்லா பொம்பளைங் களுக்கும் போல குழந்தை உண்டாகினா தேவலையே.... என் வயித்ல பிறந்த பாவத்துக்காக அதாவது என்கூடவே இருக்குமே.... அப்படியாவது என் தனிமைக் கொடுமைக்கு ஒரு முடிவு கிடைச்சாகுமே.... இந்த நினைப்பு கொஞ்ச நாளா என்னைப் போட்டு உலுக்கி எடுக்குது சாமி.... இப்ப நீங்கதான் சொல்லுங்களேன் எனக்கு - ஏன் நான் மட்டும் இத்தனை வருஷமா குழந்தையே உண்டாகாம இருக்கேன்....? நாம ரெண்டு பேரும் வச்சிக்கிற இந்த செக்ஸ் சரிதானே....? இதுலேதானே ஒரு பொம்பளைக்குக் குழந்தை உண்டாகும்....? ''உங்களுக்கே வனிதாமணிக்கிட்ட ரெண்டு குழந்தைங்க பிறந்திருக்கே. ஏன் எனக்கு மட்டும் ஒண்ணுமே உண்டாகாம இருக்கு.... உண்டாகி அபார்ஸன்கூட ஆகக் காணோமே எனக்கு.... என் உடம்புலதான் ஏதாவது சரியில்லையா? யாராவது நல்ல லேடி டாக்டரைப் பார்த்து கன்சல்ட் பண்ணிட்டு வரலாம்னு பாக்குறேன்.... உங்களுக்குத் தெரிஞ்ச லேடி டாக்டர் யாராவது இருந்தா சொல்லுங்க.... - அவளையே போய் பாக்குறேன். உடனே பயந்து தொடை நடுங்கிட வேண்டாம். மறந்தும் உங்க பெயரை லேடி டாக்டர்கிட்டே சொல்லிடமாட்டேன் - சொல்லுங்க- லேடி டாக்டர்கிட்டே போய் வரட்டுமா?''

சந்தானலஷ்மி கனகசபாபதியை திருப்பித் திருப்பி இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தாள். கனகசபாபதியும் பதில் சொல்லத் தெரியாமல் தலையைச் சொறிந்துகொண்டே இருந்தார். சந்தானலஷ்மியின் மேல் இரக்கப்பட்டு வீட்டில் ஹைதராபாத் போவதாக சொல்லிவிட்டு இங்கே வந்து மூன்று நாட்கள் தங்கினது பெரிய தப்பாகத் தெரிந்தது அவருக்கு. ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்ட எரிச்சலும் வந்துவிட்டது. ஆனாலும் எரிச்சலைக் காட்டிக்கொள்கிற நேரம் காலம் இது கிடையாது. அதனாலேயே கனகசபாபதியின் எரிச்சல் பல



மடங்காகியது.... இருந்தாலும் என்ன பண்ண? வாயைத் திறக்காம லேயேதான் இருக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர் வாயைத் திறக்காமலேயே இருந்தால் சந்தானலஷ்மிக்கு சேர்த்து வைத்து மிகப்பெரிய எரிச்சல் வந்துவிடும்.... அதையும்தான் பார்க்க வேண்டி இருக்கிறது. ஆனால் சந்தானலஷ்மியின் நிலைமையும் அதேதான். அவளாலும் அவளுடைய எரிச்சல் அத்தனையையும் உடனே கனகசபாபதியிடம் காட்டிவிட முடியாது. கொஞ்சம் தொட்டுத் தடவி மென்மையாகத்தான் காட்டமுடியும். எடுத்த எடுப்பிலேயே தடாலடியாகக் கேட்டுவிட முடியாது.... ஆயிரம் என்ன; லட்சமாகவே இருந்தாலும் கனகசபாபதி அவளுக்குப் புருஷன் கிடையாது....

சந்தானலஷ்மி அவரை மிருதுவாகத் தழுவியபடி சொன்னாள். ''ஒரு குழந்தை பிறந்து என் தனிமை போறது ஒரு பக்கம் இருக்கட்டும். முதல்ல எனனோட வீட்லேயும் ஒரு குழந்தையோட அழுகை சப்தம் கேட்காதான்னு மனசு கிடந்து துடியா துடிக்குது சாமி.... அதுக்கும் மேல ஒரு குழந்தையை பெத்து அதுக்கு நான் தாய்ப்பால் குடுத்தாத்தான் சாமி இனிமே எனக்கு மனசே ஆறும்.... எனக்கு ஒரே ஒரு குழந்தை போதும் சாமி; நிஜமா ஒண்ணு போதும். அதனோட சின்னப் பிஞ்சுக் கையைப் பிடிச்சிக்கிட்டு நான் இந்தத் தனிமையை விட்டுக் கரையேறிடுவேன்.... சொல்லுங்க சாமி; தயவுசெஞ்சி சொல்லுங்க; எல்லா பொம்பளைங்களுக்கும் போல எப்ப எனக்கும் குழந்தை பிறக்கும்....?''

-இந்த கேள்வியை சந்தானலஷ்மி கனகசபாபதியை கட்டிப் பிடித்தபடி திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டிருந்தாள். எந்தப் பதிலும் சொல்லாமல் அவரும் மௌனமாக இருந்து கொண்டி ருந்தார். அதற்காக எவ்வளவு நேரத்திற்குத்தான் சந்தானலஷ்மியின் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமலேயே இருப்பது? எவ்வளவு நேரம் பதில் சொல்லாமல் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் இருக்கலாமேயென்பது கனகசபாபதியின் அபிப்பிராயம். ஆனால் அவருடைய அபிப்பிராயம் அவருக்கு. சந்தானலஷ்மிக்கு ஏது அந்த அபிப்பிராயம்.... கனகசபாபதியின் அபிப்பிராயத்தை உடைக்கிற மாதிரி வேகமாக அவளுடைய வேறு அபிப்பிராயத்தைச் சொன்னாள்.

''வாயைத் திறந்து பதிலே சொல்லாம இருக்கப் பாக்கறதிலேதான் பெரிய பதிலா மனசில இருக்கோன்னு சந்தேகம் வருது....''

இதற்குப் பிறகும் கனகசபாபதி வாயைத் திறக்காமல் இருக்க முடியாது. தர்மசங்கடத்துடன் கொஞ்சம் நெளிந்தவாறே கேட்டாள் ''என்னை என்ன பதில் சொல்லச் சொல்றே....?''

''சொல்லுங்க; எனக்குக் குழந்தை பிறக்குமா பிறக்காதா?''

''பிறந்திருக்கிறதா இருந்தா இந்நேரத்துக்குள்ள உனக்குப் பிறந்திருக்கணும்'' சந்தானலஷ்மி கனகசபாபதியை உற்றுப் பார்த்தாள்.

''அப்படின்னா எனக்கு இனிமே குழந்தை பிறக்காதுன்னா சொல்றீங்க....?''

''ஆமா சந்தானம்; உனக்குக் குழந்தை பிறக்கறதுக்கு சான்ஸ் கிடையாது.'' - கனகசபாபதி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னார். ஆனால் இதை அவர் சந்தானலஷ்மியின் முகத்தைப் பார்க்காமல் சொன்னார். உடனே அவள் கனகசபாபதியை சந்தேகத்துடன் ஒருவித கனத்த பார்வை பார்த்தாள்....

''அதெப்படி - ஒரு டாக்டர் மாதிரி அப்படியொரு நிச்சயமா சொல்றீங்க....?''

''சரி; ஒரு டாக்டர் சொல்றதாத்தான் வச்சிக்கோயேன்....''

''அப்படியெல்லாம் உங்க இஷ்டத்துக்கு வச்சிக்க முடியாது தெரிஞ்சுதா - ஏன் எனக்குக் குழந்தை பிறக்காது - அதுக்கு நேரா பதில் சொல்லுங்க....''

''நிஜமான பதிலைச் சொல்லச் சொல்றியா?''

''என் உடம்புல ஏதாச்சும் சரியில்லாம இருக்கா?''

''உன் உடம்புல குறை கிடையாது சந்தானம்''

''அப்புறம்?''

கனகசபாபதி மௌனமாக இருந்தார்.

''குறை உங்ககிட்டேயா?'' - சந்தானலஷ்மி பொறுமை இல்லாமல் கேட்டாள்.

''அதை குறைன்னு சொல்ல முடியாது''

''குறை இல்லைன்னா என்ன - ஏதோ ஒண்ணு....''

''அது ஒரு ஏற்பாடு''

''ஏற்பாடுனா?''



''என்கிட்ட செக்ஸ் வச்சிக்கிற பொம்பளைங்க யாருக்குமே குழந்தை பிறக்கறதுக்கு வழி கிடையாது சந்தானம்''

''பொய்யெல்லாம் சொல்லக்கூடாது - அந்த வனிதாமணி ஆண் ஒண்ணு பொண்ணு ஒண்ணுன்னு பின்னே எப்படி ரெண்டு பெத்து வச்சிருக்கா?''

''அதெல்லாம் பழைய கதை''

''புதுக் கதையில அவளுக்கும்கூடப் பிறக்காதா?''

''பிறக்காது''

''அதான் ஏற்பாடா?''

''ஆமா. என் மகள் ப்ரியா பிறந்ததும் - இனிமே குழந்தை வேண்டாம்னு நான் அப்பவே எனக்கு வாசக்டமி ஆபரேஸன் பண்ணிக்கிட்டேன்....''

''வாசக்டமி ஆபரேஸன்னா?'' - சந்தானலஷ்மி சிறு பயத்துடன் கேட்டாள்.

''குழந்தை பிறக்காம இருக்கறதுக்கு ஆம்பளைங்க பண்ணிக்கிற குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன்....''

சந்தானலஷ்மியின் பார்வையில் வேக வேகமாக கடுமை பரவியது. இறுகிப்போன குரலில் கேட்டாள்.

''அந்த ஆபரேஷனை பண்ணிக்கிட்டா என்னைக்குமே உங்களால ஒருத்தி குழந்தை உண்டாகவே முடியாதா?''

மறுபடியும் ஒரு சின்ன மாற்று ஆபரேஷன் மூலம் 'வாசக்டமி' யால் பாதிக்கப்பட்ட நிலையை நிவர்த்தி செய்துகொள்ளும் எளிய மருத்துவ முறை இருப்பதெல்லாம் கனகசபாபதிக்குத் தெரியும். ஆனால்அதைப் பற்றி சந்தானலஷ்மியிடம் சொல்ல அவருக்கு விருப்பம் இல்லை....

''ரொம்ப ஸாரி சந்தானம்; என்கிட்டே இனிமே ஒருத்தி தாயாகும் பாக்கியத்தை அடைய முடியாது....''

இப்படியொரு கடுமையான நிஜத்தை சந்தானலஷ்மி எதிர்பார்க்கவே இல்லை. நெஞ்சுக்குள் வெகுண்டு விட்டாள்.

''போச்சு போ.... இதுலேயும் என் தலைமேல கல்லைத் தூக்கிப் போட்டாச்சா....? சுத்தம்.... இனிமே என்ன பாக்கி இருக்கு.... ஒருத்தனுக்குப் பெண்டாட்டியாவும் ஆக முடியலை. ஒரு

குழந்தையாவது பெத்துக்கலாம்னு பாத்தா - அதுக்கும் வழி இல்லை. பேசாம - எங்கேயாது ஒரு பொம்பளைச் சாமியாரா ஓடிப் போயிர வேண்டியதான்....''

''பேசாத சந்தானம் - தயவுசெஞ்சி இப்படியெல்லாம்....''

''போதும் போதும்.... ஆச்சுனா போச்சுனா இந்த வார்த்தையைச் சொல்லிடுவீங்க....''

''ஒரு வகையில நீயே எனக்கு ஒரு குழந்தை போலத்தான் சந்தானம்....''

''சாமி உங்களைக்கூட ஒரு கட்டம் வரைக்கும் குழந்தை மாதிரி தான் நெனைச்சிருந்தேன்.... அப்புறம்தான் புத்தி தெளிஞ்சது.... குழந்தையா இருக்கறது வேற; குழந்தையா நெனைச்சிக்கறது வேறன்னு.... எனக்கு இனிமே நிஜமான குழந்தைதான் வேணும்.... குழந்தை மாதிரி இருக்கறதெல்லாம் தேவை கிடையாது. போரடிச்சிப் போயிருச்சி - அதெல்லாம்....''

''எனக்கு போரே அடிக்கலை சந்தானம்''

நிஜமாகவே தனக்கு போர் அடிக்கவில்லையா என்றெல்லாம் கனகசபாபதிக்கு நிச்சயமாகத் தெரியாது. சும்மா ஒரு பேச்சுக்கு அப்படிச் சொல்லி வைத்தார்....

''இன்னைக்கி வேணா போரடிக்காம இருக்கலாம்.... ஆனா என்னிக்காவது போர் அடிச்சதுன்னா....?''

''போரடிக்கும்போது பாத்துக்கலாம்னு சொல்லிரவா?''

''கேள்வி என்ன கேள்வி - சொல்லிரவான்னு; அதான் சொல்லியாச்சே.... நான் ரொம்ப ரொம்ப சீரியஸா என்ன சொல்றேன்னா - இப்பப் படு மோசமா தனியாக வாழ்க்கையில போரடிச்சிப் போய்க் கிடக்கறவளைக் கொஞ்சம் கண்ணைத் திறந்து பாக்கலாமே என்கிறதைத்தான்....''

கனகசபாபதிக்குச் சின்னதாக எரிச்சல் வந்தது. ''உன் தனிமைக்கு என்னால இதுக்குமேல எதுவுமே செய்ய முடியாம இருக்குறப்ப - இன்னும் என்னால என்னதான் செய்ய முடியும் சொல்லு.... எப்படிப் பாத்தாலும் இனிமே உனக்குக் குழந்தை பிறக்கறதுக்கும் எந்த வழியும் கிடையாது - எனக்குத் தெரிஞ்சு....''

உடனே சந்தானலஷ்மி கனகசபாபதியை கடுமையான வன்மத்துடன் பார்த்தாள். குரலையும் கடுமையாக்கிக் கொண்டு சொன்னாள்.



''எனக்குக் குழந்தை பிறக்கறதுக்கு எந்த வழியும் கிடையாதுன்னு சொன்னீங்க பாருங்க - அந்த வார்த்தையை சொல்லியிருக்க வேண்டாம் சாமி....''

''வேற எப்படி சொல்லச் சொல்றே?''

''நல்லா கேட்டுக்கோங்க - உங்க மூலமாத்தான் எனக்குக் குழந்தை பிறக்கறதுக்கு வழி கிடையாது. சொல்றதா இருந்தா நீங்க இப்படித்தான் சொல்லிக்கலாம்....''

சந்தானலஷ்மி இப்படிச் சொன்னதின் உள் அர்த்தம் தெரியாமல் முதலில் ஓரிரு நிமிடங்கள் விழித்த கனகசபாபதி அர்த்தம் தெரிந்ததும் கொஞ்சம் அதிர்ந்துவிட்டார். ஒருவித பயமும் துயரமும் அவரின் முகத்தில் பரவியது.

''கோவம் வரப் போகுதுன்னு பாத்தேன். பயம் வந்திருச்சாக்கும். பயந்திர கியந்திர வேணாம். குழந்தை பெத்துக்கறதுக்காக வேற ஒரு ஆம்பளைக்கிட்ட போய் படுத்திரமாட்டேன். உண்மையை நீங்க புரிஞ்சிக்கறதுக்காக சொன்ன வார்த்தை அது....'' சந்தானலஷ்மி கேலியான குரலில் சொன்னாள்.

''உண்மை அடிநெஞ்சு வரைக்கும் கசக்குதுடி குண்டு'' - கனகசபாபதி சின்ன ஆதங்கத்துடன் சொன்னார்.

''உங்க மூலமா எனக்குக் குழந்தை பிறக்காதுங்கிற உண்மை எனக்குப் பயங்கரமா கசக்குதே....''

''தயவுசெஞ்சு அந்த கசப்பை முழுங்கிக்க சந்தானம்.... எனக்காக முழுங்கிக்க....''

''வேற வழி.... பொம்பளையா பிறந்திட்டாலே அவ எந்த கசப்பையும் முழுங்கித்தானே ஆகணும்.... காறி துப்பிட்டுப் போகுற கதையெல்லாம் உங்களைப் போன்ற ஆம்பளைங்களுக்குத் தான்....''

இதைக் கேட்டு கனகசபாபதி அநியாயத்துக்கு உணர்ச்சி வசப்பட்டார். சட்டென அவரின் எல்லா உணர்வுகளும் வேறொரு தளத்திற்கு தடம் புரண்டன. ''கொஞ்சம் நேரம் இப்படி வந்து என் மடியில உக்காருடி குண்டு....'' - என்று தழுதழுத்த குரலில் கிட்டத்தட்ட என்ன சொல்கிறார் என்பதே தெரியாத மாதிரியான குரலில் சொன்னார். உடனே சந்தானலஷ்மிக்கும் கனகசபாபதியைப் போலவே அவளின் உணர்வுகளை மற்றொரு தளத்திற்கு தடம் புரட்டும் வேகம் ஏற்பட்டுவிட்டது. வேகமாகப் போய்க்

கனகசபாபதியின் மடியில் முழுமையாக உட்கார்ந்துவிட்டாள். கனகசபாபதியும் அவளின் கனத்த கொழுத்த உடம்பை அப்படியே முழுமையாக வாங்கிக்கொண்டார். - இந்தத் தோற்றத்தில் எவ்வளவு நேரம் இருந்து கொண்டிருந்தார்கள் என்பது - அவர்கள் இருவருக்குமே தெரியாதாம்....

❖

## 17

எடை அதிகம் இல்லாத பெரும் மலர் பொதிபோல சந்தான லஷ்மி மௌனமாக கனகசபாபதியின் மடியில் அமர்ந்திருந்தாள். அவளுடைய கூந்தலை மென்மையாக தடவிவிட்டபடியே மௌனமாக உட்கார்ந்திருந்த கனகசபாபதி நீண்ட நேரத்திற்குப் பின் சந்தானலஷ்மியின் அடர்த்தியான தலைமுடியை முகர்ந்தவாறே சொன்னார்.

''முத முதலா - கோயம்புத்தூர் ஹோட்டல் ரூம்ல உன்னைப் பாத்தேனே; பாத்துப் பாத்து அசந்தேனே; இப்ப நீ அந்தப் பொம்பளைதானான்னு சந்தேகமா இருக்கு எனக்கு. அப்பல்லாம் நீ கம்ப்ளீட்டா வேற மாதிரி - எந்த சென்டிமெண்ட்டும் இல்லாத மனுஷியா இருந்தேடி சந்தானம். அதைப் பாத்திட்டுத்தான் அன்னைக்கி நான் உன்மேல அப்படியொரு ராட்சச பாய்ச்சல் பாய்ஞ்சேன்.... இந்த நிமிஷமும் சொல்றேண்டி குண்டு; அன்னைக்கு உன்மேல் விழுந்தவன்தான்; இன்னைக்கி வரைக்கும் எழுந்துக் கலை....

இதை என்னமோ கனகசபாபதி ஒரு மாதிரி திக்கி திணறிச் சொல்லி விட்டார். இதைச் சொன்னபோது அவருக்குள் உணர்வுகள் எப்படி பொங்கி கொப்பளித்தன என்பதைச் சொல்லச் சொன்னால் -அதை அவரால் கஷ்டப்பட்டுக்கூட சொல்ல முடியுமா என்பது சந்தேகம்தான்.... சந்தானலஷ்மியும் இந்த விஷயத்தில் கனகசபாபதிக்குச் சிறிதும் குறைந்தவள் கிடையாது. அவருக்குச் சமமாக உணர்வுகள் கொப்பளிக்க அவள் சொன்னாள்.

''என்னமோ இங்கே எனக்கு மட்டும் எழுந்து ஓடப் பாக்க ரொம்ப ஆசை என்கிற மாதிரிதான் சொல்லியாகுது....''



''நான் கொஞ்சம் விட்டா - எழுந்துக்கப் பார்ப்பே போல இருக்கேடி''

''எழுந்து எழுந்து போயிட்டும் வந்திட்டும் இருக்கறது யார்னு கொஞ்சம் நெஞ்சில கையை வச்சிப் பாத்துக்கிட்டா சரி.... அதுக்கு தைரியம் இல்லேன்னா போய் கண்ணாடியில மூஞ்சியைப் பாத்துக்கிட்டா தேவலை''

''அதையே நானும் சொல்ல முடியாதாக்கும்.... சின்ன சென்டிமெண்ட்கூட இல்லாம இருந்தாளே ஒருத்தி - முதல்ல அவ போய் கண்ணாடியில அவ மூஞ்சியை பாத்துக்கட்டும்....''

''குழந்தை ஒண்ணைப் பெத்து அதுக்குத் தாய்பால் குடுக்கணும் என்கிற தவிப்பையும் ஏக்கத்தையும் வெறும் சென்டிமெண்ட்னு சொல்றதை என்னால ஒத்துக்க முடியாது. பொம்பளைங்க உடம்புல ப்ரெஸ்ட்டை கடவுள் ஒண்ணும் சும்மா வச்சிடலை - தெரியுதா? விளையாடறதுக்கு இல்லை - அது....''

''விளையாடவும்தாண்டி அது''

''எத்தனை நாளைக்கு வெட்டி விளையாட்டே விளையாடிட்டு இருக்கறது?''

''என் ஆயுசுக்கும் விளையாடிட்டு இருக்குற உத்தேசத்லதான் நான் இருக்கேன்''

''ஆயுசு உங்களுக்கு எப்படியோ - ஜாஸ்தியோ குறைச்சலோ....?''

''பயப்படாதே. தீர்க்காயுசு எனக்கு....''

''நீங்க ஆயிரந்தான் சொன்னாலும் எனக்குக் குழந்தை பிறக்காது என்கிற உண்மை என் மனசைப் போட்டு பிசையத்தான் செய்யுது. என் வயித்ல பிறக்கற குழந்தை ஒண்ணுக்குப் பால் குடுக்கறதுக்கும் எனக்குக் கொடுத்து வைக்கலை என்கிற கோணத்ல பார்த்தா - எனக்கு இந்த ரெண்டு ப்ரெஸ்ட் இருக்கறதே வேஸ்ட்'' - இதைச் சொன்ன போது சந்தானலஷ்மியின் இரண்டு கண்களும் சிவந்து கலங்கி விட்டன. அதைப் பார்த்து கனகசபாபதிக்கு மனசு கலங்கிப் போய்விட்டது. மனதில் ஒரு பதட்டமும் ஏற்பட்டு விட்டது.

''பெரிய பெரிய வார்த்தையா சொல்றியேடி.... இன்னைக்கி என்னை ஒரேயடியா வதைச்சிப் போட்டுறதுன்னு முடிவே பண்ணிட்டேபோல.... உன்னோட ப்ரெஸ்ட்டையாடி வேஸ்ட்டுனு சொல்றே....? இன்னொரு தடவை சொல்லாதே இதை. முதன்

முதலா என்னிக்கோ ஒருநாள் உன்னோட ப்ரெஸ்ட்டை பார்த்தப்ப எனக்குள்ள ஏற்பட்ட அந்த பிரமிப்பு இன்னிக்கு வரைக்கும் அடங்கலை சந்தானம். உன்னோட ரெண்டு ப்ரெஸ்ட்டும் சாதாரணமான துக்கடா ப்ரெஸ்ட் கிடையாது. நான் ஏதோ அதனோட பெரிய சைஸை பாத்திட்டுச் சொல்றேன்னு நெனைசிக்காதே.... வெறுமனே சைஸை பாத்திட்டு சொல்ற வார்த்தை இல்லை இது. எந்த வார்த்தையாலும் சொல்ல முடியாத வேற ஏதோ பிரமாண்டம் உன் ப்ரெஸ்ட்ல இருக்கு சந்தானம். உயிர் இருக்கு. வெக்கமே படாம இதையெல்லாம் மனசுவிட்டுச் சொன்னா - நீயே என்னை கிறுக்கன்னு நெனைச்சாலும் நெனைச்சிடுவியோன்னு பயந்திட்டுத்தான் இந்த மாதிரியான நெறய சங்கதிகளை நான் உன் காதுல போடறது கிடையாது....''

''கடைசியில் எல்லா பழியும் என் தலையில....''

''அப்ப மிச்சத்தையும் சொல்லிரவா?''

''மிச்சமே வைக்கக்கூடாது - என்கிட்ட கேட்டா....''

''சொல்லிட்டே இல்லையா.... இன்னைக்கி எல்லாத்தையும் சுத்தமா காலி பண்ணிடறேன் பார். என் கிறுக்குத்தனம் பூராவையும் வெளியில கொட்டித் தீர்த்திடறேன். முதல்ல ரொம்ப முக்கியமான ஒரு கிறுக்குத்தனத்தைச் சொல்றேன் - கேட்டுக்க. ஒரு பொம்பளையோட ப்ரெஸ்ட் இருக்கே - அதைச் சில நேரங்கள்ள பாக்கும்போது - அந்த ரெண்டு ப்ரெஸ்ட்டும் அந்தப் பொம்பளையோட மற்றும் ரெண்டு முகங்கள் போல எனக்குத் தெரியும் சந்தானம்....''

சந்தானலஷ்மி எதையோ நம்ப முடியாதவள் போல கனகசபாபதியை பார்த்தவாறே கேட்டாள் ''இப்படியுமா தெரியும் ஒரு மனுசனுக்கு?''

''தெரியுதே....''

''என் ப்ரெஸ்ட்டை பாக்கும்போது எனக்கு அப்படி எதுவும் தெரிய மாட்டேங்குதே....''

''கேட்ராக்ட் கண் உனக்கு''

''கேட்ராக்ட் கண் - எனக்கு?

''சந்தானம் - உன்னோட முகம் எப்படி ஒரு உயிருள்ள சுரைக்காய் மாதிரி பாக்கறதுக்கு தெரியுதோ - அதே அச்சடிச்ச ஸ்டைல்லதான்



உன் ப்ரெஸ்ட்டும் இருக்கு. எப்படி உன் குண்டு மூஞ்சியில அழகா அப்பாவித்தனமும் ஒரு கவர்ச்சியான பொல்லாத்தனமும் இருக்கோ -அந்த ரெண்டும் அப்படியே உன் ப்ரெஸ்ட்லேயும் இருக்குடி. நான் கிறுக்கானது அதைப் பாத்திட்டுத்தான்.''

''என்னை இன்னைக்கி ஒரேயடியா பைத்தியமா அடிச்சிடற துன்னு முடிவே பண்ணியாச்சி போல....''

''என் அழகு பெண்டாட்டி பத்தியும் கொஞ்சம் சொல்லிடறேன். கல்யாணமானபோதே அவளுக்கு ஒரு கடுவன் மூஞ்சி. அதுவும் பணக்கார கடுவன் மூஞ்சி. கொஞ்சங்கூட சதைப் பிடிப்பே இல்லாத சப்பை ஆஸ்த்மா மூஞ்சி. அதே சப்பை ஆஸ்த்மா மூஞ்சி ஸ்டைல்லதான் ப்ரெஸ்ட்டும்.... அதனாலேதான் சொன்னேன் - பொம்பளையோட ரெண்டு ப்ரெஸ்ட்டும் - அவளோட மற்றும் இரண்டு முகங்கள்னு....''

''இப்படி வெளியில சொல்ல முடியாத சங்கதி வண்டி வண்டியா இருக்கும் போலிருக்கே....?'' - சந்தானலஷ்மி கேட்டாள்.

திடீரென்று என்ன தோன்றியதோ - கனகசபாபதி உதட்டைப் பிதுக்கி விட்டார் ''எல்லாத்தையும் கொட்டியாச்சின்னு நினைக்கிறேன். அநேகமா என் வண்டி காலி சந்தானம்....''

''காலியாகிடக் கூடாதே சாமி''

''என்ன பண்ணலாம் சொல்லு....''

''இந்த மாதிரியான கோணல்மாணலான சங்கதிங்கதான் நம்ம ரெண்டு பேரையும் போட்டு இறுக்கமா கட்டிவச்சிருக்கோன்னு என் மனசுக்குத் தோணுது.... இதெல்லாம் இல்லேன்னா நீங்களே இல்லையே சாமி....?''

''அப்படிப் பாத்தா நீயும்தான் இல்லாமப் போயிடுவே....''

''ஒவ்வொரு நேரத்ல இதெல்லாமே பெரிய இம்சையா இருக்கு எனக்கு.... அப்பத்தான் பைத்தியம் பிடிச்சவ மாதிரி ஆயிடறேன்....'' சந்தானலஷ்மி பெருமூச்சுடன் சொன்னாள்.

''அதே கதைதான் சந்தானம் இங்கேயும்.... சில நேரத்ல உன்கூட இருக்கறது ஒரு புலிகூட இருக்கிற மாதிரி இருக்கும்....'' - கனகசபாபதி சொன்னார்.

''எனக்குத் தெரிஞ்சி புலி ரொம்பப் பொல்லாதது ஆச்சே?''

''அப்படின்னா இதை புலித் தோலை போர்த்திக்கிட்டு இருக்குற பசுன்னு வச்சிக்கோயேன்....''

''போச்சிடா....''

''இல்லேன்னா பசுத்தோல் போர்த்தின புலி....''

''பார்த்தா பசு. பாய்ஞ்சா புலின்னு சொல்லலாமா?''

''அப்படியும் சொல்லலாம். நம்ம இஷ்டம்தான்....''

''அதெப்படி - ஏதாவது ஒண்ணாத்தானே இருக்க முடியும்?''

''இந்தப் பொம்பளைகிட்ட இதான் விசேஷம். ரெண்டு மூணு தினுசா இருக்கும் இது.... அதைச் சொல்லி மாளாதுடி குண்டு. ஏன்னா - இம்சையை சொல்றதே பெரிய இம்சை.... ஒண்ணு சொல்லட்டுமாடி சந்தானம்.... இந்த நிமிஷம் எனக்கு உன்னை என் மடியில போட்டு அப்படியே கொஞ்சணும்போல இருக்கு. நெஜமா சொல்றேன் - இதுவரைக்கும் என் வாழ்க்கையில யாரையுமே நான் கொஞ்சினது கிடையாது. ஆனா - ஒரு சூப்பர் பொம்பளையை கொஞ்சணும் என்கிற துடிப்பு மட்டும் என் மனசுக்குள்ள எத்தினியோ வருஷமா ஊறிப்போய் கிடக்கு....''

''இதை நம்பறதா வேண்டாமான்னு தெரியமாட்டேங்குது''

''ஏண்டி இப்படிச் சொல்றே?''

''இத்தினி வருஷமா இங்கே வந்து போயாச்சி. ஒருநாள்கூட என்னை கொஞ்சலையே....?''

''கொஞ்சுற விஷயத்ல மட்டும் எனக்கு என்னமோ உன்கிட்ட ஒரு கூச்சம்....''

''இப்பத் திடீர்னு கூச்சம் எங்கே போயிருச்சி?''

''தெரியலையே....''

சந்தானலஷ்மி மௌனமாக இருந்தாள்.

''இப்ப உன்னைக் கொஞ்சட்டுமா சந்தானம்?'' - கனகசபாபதி சிறிது தொண்டையை அடைக்கிற குரலில் கேட்டார்.

''கொஞ்சறதுக்குக் கேட்டுட்டு நிக்கிற இந்த ஆம்பளையைப் பாரேன்....''- சந்தானலஷ்மியும் இதை அதேபோல் சிறிது தொண்டையை அடைக்கிற குரலில்தான் சொன்னாள் என்பதை இங்கே சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

அடுத்த நிமிஷம் கனகசபாபதி அன்று சந்தானலஷ்மியை ஆசைதீர கொஞ்சினார் என்று சாதாரணமாக சொல்லிவிட்டுப் போய்விட



முடியாது. மார்பிலும் மடியிலும் அள்ளிப் போட்டுக் கொண்டு அவளை அவர் கொஞ்சித் தள்ளிய அசுரக் கொஞ்சல் அது பேய்த்தனமான பயங்கர கொஞ்சல் அது சந்தானலஷ்மியை கனகசபாபதி 'என் குண்டு செல்லமே' என்றார் 'என் பட்டுச் செல்லமே' என்றார் 'என் குழந்தை இல்லாத செல்லமே' என்றார் பிறகு உணர்வு வேகத்தைத் தாங்க முடியாமல் அவருக்குத் தெரிந்த கெட்ட வார்த்தைகள் எல்லாவற்றையும் சொல்லிக் கொஞ்சினார் கொஞ்சினார். கொஞ்சினார். அப்படிக் கொஞ்சித் தள்ளினார். விடாமல் அவர் கொஞ்சிய பிசாசுத்தனமாக கொஞ்சலில் சந்தானலஷ்மி தூளியில் தூங்குகிற குழந்தையைப் போல கனகசபாபதியின் மடியில் தூங்கிப் போய்விட்டாள். அவளைக் கொஞ்சிக் குலாவிய அசுர களைப்பில் கனகசபாபதியும் சந்தானலஷ்மியின்மேல் அப்படியே சாய்ந்து தூங்கிப் போய் விட்டார். அவர்கள் இருவரின் தூக்கத்தையும் அசுர தூக்கம் என்று சொல்லலாமா? - சொல்லலாம்....

❖

# 18

ஹைதராபாத் போவதாக சொல்லிவிட்டு மூன்று நாட்கள் சந்தானலஷ்மியுடன் அவளுடைய வீட்டில் தங்கியிருந்த கனகசபாபதிக்கு இரண்டாம் நாள் பகல் வரைக்கும்தான் பயம் பதட்டம் எரிச்சல் எல்லாம் மாறி மாறி மனதில் புரண்டு உருண்டு அவரைப் போட்டு அலைக்கழித்துக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு ஏற்பட்ட வேகமான வார்த்தைப் பரிமாற்றங்களிலும்; ஆவேச உணர்வு பரிவர்த்தனைகளிலும் அவரின் பதட்டம் எரிச்சல் எல்லாமே இருந்த சுவடு தெரியாமல் காணாமல் போய்விட்டன. அவருடைய வீட்டுக்குக் கிளம்புகிற நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததைப் பற்றிய பரபரப்புக்கூட ஏற்படாமல் காலை ஆட்டியபடி உட்கார்ந்திருந்தார்.

''என்ன - கிளம்பற உத்தேசம் இல்லையா?'' சந்தானலஷ்மி கேட்டாள். அவளை பொறுத்தவரை கனகசபாபதி வீட்டுக்குக் கிளம்பிப் போய்விடப் போகிற ஆசாமிதான்.... போகிற ஆசாமி கொஞ்சம் நேரம் கழித்துப் போனால் என்ன; இப்போதே எழுந்து போனால் என்ன.... எல்லா எழவும் ஒன்றுதான்....

''போலாம் போலாம்.... லேட்டா போனா ஆஸ்த்மாகாரி என்ன என் தலையை சீவிப்பிடுவாளோ...?'' - கனகசபாபதி அலட்சியமாகவும் சிறிது எரிச்சலோடும் கேட்டார். உள்ளே இருந்த எரிச்சலை அவரின் மனம் எல்லோர் மீதும் காட்டுவதற்கு தயாராக இருந்தது....

''போடு - கடைசியில முளைக்க வேண்டிய மீசை முளைச்சாச்சி போல...''

''நீ கூடத்தான் பாத்தா - ஒரு வகையில் மீசை முளைச்ச பொம்பளை....''

''இருந்தா இருந்திட்டுப் போறேன். மீசை முளைச்சவளையும் ஒருத்தருக்கு பிடிச்சிருக்கே....''

''நாயா பேயா களைச்சிப் போயிடற அளவுக்குப் பிடிச்சிருக்கு...''

''ரொம்ப களைப்பா இருக்கா சாமி....?'' - சந்தானலஷ்மி போனால் போகிறதென்று சிறிது பரிவுடன் கேட்டாள்.

''வரலாறு காணாத களைப்பு குண்டு....''

''எப்படியோ - வரலாறு படைச்சாச்சி....''

''இந்த விஷயம் எனக்கே இப்பத்தான் புரியுது சந்தானம். இங்கே வந்து உன்கூட இருந்திட்டுப் போறப்ப எல்லாம் நான் அநியாயத்துக்குக் களைச்சிப் போயிடறேன்....''

''உங்களுக்கு வயசு அம்பதை நெருங்குதே....''

''இடியட். இது வயசு சம்பந்தமானதா தெரியலை சந்தானம். என் மொத்த எல்லா உணர்வுகளாலும் வாழ்க்கையை இங்கே எதையும் விடாம வாழ்வேன் பாரு - அதனால ஏற்படற வேறு மாதிரியான களைப்பு இது....''

''புரிஞ்சி பேசற பேச்சுத்தானா இதெல்லாம்....?''

''புரியாத எதைப் பத்தியும் நான் வாயைத் திறக்கறது கிடையாது''

''அப்படின்னா - புரிஞ்சதை எனக்கும் புரியற மாதிரி சொன்னா தேவலை....''

''உனக்குப் புரிய வைக்காமலாடி குண்டு....?''

சொல்ல வேண்டியவற்றை கனகசபாபதி சில நிமிடங்கள் மனதிற்குள்ளேயே சொல்லிப் பார்த்தபடி மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். சந்தானலஷ்மி எழுந்து சமையல் அறைக்குள்



போய் சில நாட்களுக்கு முன்னால் கடையில் வாங்கிய ஊறுகாய் பாட்டிலில் இருந்து; சிவந்த கெட்டியான எண்ணெயில் கிடந்த மாங்காய் துண்டுகளில் இருந்து ஒன்றை கரண்டியால் எடுத்து வாயில் போட்டுக்கொண்டாள். உடனே ஊறுகாயின் காரமும் வெப்பமும் உடம்பு பூராவும் பரவியது. அந்த சூட்டோடு சூடாக சந்தானலஷ்மி கனகசபாபதியின் எதிரில் வந்து உட்கார்ந்தாள்.

''ஊறுக்காயைத்தானே தின்னுட்டு வரே?'' - கனகசபாபதி கேட்டார்.

''பேட்டரி சார்ஜ் பண்ணிட்டு வரேன்....''

''இப்படியெல்லாம் பதில் சொல்றதுக்கு எங்கேதான் கத்துக் கிட்டேயோ - என் ஆபிஸ்ல இருந்தவரைக்கும் அப்படியொரு மக்குப் பொம்பளையா இருந்தே.... தப்பு இல்லாம அரைப் பக்கம் டைப் அடிக்கத் தெரியாது....இன்னைக்கி என்னடான்னா....''

''தப்புத் தப்பா டைப் அடிச்சதாலேதான் - இப்படி வந்து உக்காந்திருக்கோம்....''

சந்தானலஷ்மி இப்படிச் சொன்னதும் கனகசபாபதியின் பார்வை ஒரு மாதிரி ஆகியது....

''சரி சரி; உடனே முழியை மாத்திட வேண்டாம்.... நேரமாயிட்டு இருக்கு. புரிஞ்சதை எனக்கும் புரிய வச்சிட்டா கிளம்பி ஓடறதுக்கு சரியா இருக்கும்'' உடனே கனகசபாபதி சொல்ல ஆரம்பித்து விட்டார்.

''இங்கே உன்கூட இருந்திட்டுப் போனா - பயங்கரமா களைச்சிப் போயிடறதா சொன்னேன் இல்லையா.... இந்த களைப்பு வனிதாமணிகூட வாழந்திருக்கிற இத்தனை வருஷ வாழ்க்கைல ஒருநாள்கூட; ஒரு நிமிஷம்கூட; ஒரு சதவீதம்கூட வந்தது கிடையாது.... இதனோட அர்த்தம் என்னன்னு கேட்டா; அவகூட இருந்த; இப்பவும் இருக்குற வாழ்க்கைல - நான் கொஞ்சங்கூட வாழலை சந்தானம். சும்மா அவகூட இருக்கேன். இருந்திருக்கேன். சும்மாவே இருக்கும்போது ஒருத்தனுக்கு எங்கேயிருந்து வரும் களைப்பு.... இதுவே உன்கிட்டே வரும்போது அப்படியே தலைகீழ்.... உன்கிட்ட இருக்கும்போது எனக்கு ஏற்படற களைப்பு இருக்கே - கொஞ்சம் நஞ்சம் கிடையாது அது.... ரொம்ப கரெக்ட்டா சொன்னா - உன்கிட்ட நான் களைக்கக்கூடாத அளவுக்கு ஓவராவே களைச்சிப் போயிடறேன்....''

கனகசபாபதி சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த சந்தானலஷ்மியின் மனதில் ஏற்பட்ட நெகிழ்ச்சியும் ஓவர்தான். நெகிழ்வோடு அவள் சொன்னாள் ''அப்படி வாழ்ந்தாகுதாக்கும் இந்த குந்தானிகிட்ட?''

''ஒவ்வொரு நிமிசமும் வாழ்ந்தாகுது.... ரொம்ப ரொம்ப ஓவரா வாழ்ந்தாகுது....''

''எவ்வளவு ஓவர்னு சொல்ல முடியுமா?''

''ஒரு வருஷ வாழ்க்கையை ஒரே நாள்ல வாழ்ந்தா எப்படி இருக்கும் சொல்லு பாக்கலாம்....''

''சொல்லாதீங்க சாமி.... உங்களோட களைப்பு எனக்கும் வந்திடும் போல இருக்கு....''

''நெனைச்சி பாரேன்.... ஒருத்தன் ஒரு வருசத்துக்கு சாப்பிடற சாப்பாட்டை ஒரு வாரத்ல சாப்பிட்டான்னா என்ன ஆவான்....?''

''நெனைச்சே பாக்க முடியலை என்னால.....''

''அதான் - என் களைப்பையும் உன்னால நெனைச்சிப் பாத்துக்க முடியாது....''

''ஒத்துக்கறேன்....''

''இதுல இன்னொரு கஷ்டம் என்னன்னு கேட்டின்னா - என்னோட இந்த களைப்பை என்னாலேயே தாங்கிக்க முடியலை....''

''சொல்றதெல்லாம் சரிதான்....இப்படியெல்லாம் இங்கே இருந்திட்டு; இந்த மாதிரியெல்லாம் பேசவும் செய்திட்டு - எப்படித்தான் எந்திரிச்சி போகவும் முடியுதோ தெரியலை.... பேசாம என்கிட்டேயே விழுந்து கெடங்க.... அந்த சந்தோஷத்ல - உங்க வாழ்க்கையை இன்னும் அமோகமாக்கிக் காட்றேன்....''

''உடனே உன் பல்லவியை ஆரம்பிச்சிடு.... இங்கேயே கிடந்தா களைப்புல நான் செத்தே போயிடுவேன்....''

''அப்படியெல்லாம் செத்துட மாட்டீங்க.... உங்க எல்லா களைப்புக்கும் நான் தரேன் மருந்து....''

''ஏய் பைத்தியம் - என் களைப்புக்கே நீதான்டி காரணம்.... என் களைப்பே நீதான்....''

''அப்ப எந்திருச்சி ஓடறதாத்தான் அபிப்பிராயம்....?''



ஓடினாத்தான் திருப்பி ஓடி வர முடியும்டி கண்ணு.... என் ரயில் சென்ட்ரலுக்கு வர்ற நேரம் நெருங்கியாச்சி. இப்ப நான் ஆட்டோ பிடிச்சி சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு ஒரு லொக்கோட்டம் ஓடியாகணும்... டிரைவர் வண்டியை எடுத்துக்கிட்டு என்னைக் கூப்பிடறதுக்கு வந்திருவான்.... நானும் நேரா ஹைதராபாத்ல இருந்து வர்ரவன் மாதிரி நடிச்சாகணும். எவ்வளவு வேலை இருக்கு பார்....''

''அப்ப ஓட வேண்டியதுதான்; இப்படி ஓடணும்னு தலையில எழுதியிருந்தா அதை மாத்தவா முடியும்....? ஒடு ஒடு....''

''ஆறு போல ஓடறதுதான் நல்லது சந்தானம்.... ஓடாம தேங்கிப் போயிட்டோம்னு வச்சிக்க - அப்புறம் அந்த வாழ்க்கை சேறும் சகதியும்தான்''

- சந்தானலஷ்மிக்கு இதைக் கேட்டதும் கோபம் வந்தது. விருட்டென பதில் சொன்னாள் ''நீங்க கிளம்பி ஆறு போல ஓடிப் போயிடறதாலேயே இங்கே என் வாழ்க்கை தேங்கிப் போயிடுது.... இதுக்குத்தான் உங்களை பதில் சொல்லச் சொல்றேன்....''

இதைக் கேட்டு கனகசபாபதி ஒரு நிமிஷம் திகைத்தாற்போல இருந்தார். பிறகு சொன்னார் ''இதுக்கு பதில் சொல்ல ஆரம்பிச்சா - என் ட்ரெய்ன் சென்ட்ரல் பிளாட்பாரத்துக்கு வந்து சேந்திரும். கிளம்பறேன் நான். இன்னொரு நாள் வந்து உனக்கு பதில் சொல்றேன்....''

''எனக்கு எல்லா பதிலும் தெரியும். நீங்க சொல்ல வேண்டிய தில்லை....''

''ஆளை விடு....''

இப்படி முடிந்தது கனகசபாபதியின் ஹைதராபாத் பயணம். நிஜமாகவே ஆளை விட்டால் போதும் என்ற மனநிலையோடுதான் அவர் கிளம்பிச் சென்றார். கிளம்பிச் சென்றார் என்று சொல்வதைவிட கிளம்பி ஓட்டம் பிடித்துவிட்டார் என்று சொன்னால் சரியாக இருக்கும். கடந்த சிறிது காலமாகவே கனகசபாபதி அவரின் உள்மனத்திற்குள் இந்த மனநிலையில்தான் கொஞ்சம் கொஞ்சம் இருந்து கொண்டிருந்தார். இங்கே அவருக்கு வாழ்க்கை மூச்சு முட்ட வைப்பதாக இருந்தது. பெரும் போதையில் மல்லாக்க கிடப்பதாய் ஒருவித சுமையாகத் தெரிந்தது. இப்படியொரு உச்சபோதை தேவையா என்றுகூட அவ்வப்போது கேள்வி எழுந்தது. கொஞ்ச நாளைக்கு போதையின் பக்கம் வராமல் இருக்கலாமா என்றுகூட

சிலநேரங்களில் கனகசபாபதி யோசனை செய்துவிட்டார். ஆனால் ஒன்றைச் சொல்லிவிட வேண்டும். இந்த யோசனை அவருக்கு வருவது முதல் தடவை இல்லை.... அவ்வப்போது சிறிது வீரியக் குறைவாக இந்த எண்ணம் கனகசபாபதிக்குள் வந்திருக்கிறது. வந்த மாதிரி போயும் இருக்கிறது. இந்த முறை இந்த எண்ணம் மிக உக்கிரமாக வந்திருப்பதற்குக் காரணம் - நூறு மணி நேரங்கள் தொடர்ந்து சந்தானலஷ்மியுடன் இருந்துவிட்டதுதான். நூறு மணி நேரங்களுக்கே இந்த உக்கிரம் என்றால் நூறு நாட்கள் அவளுடன் தங்கிவிட்டால்? அவ்வளவுதான் - சந்தானலஷ்மியின் வீட்டிலேயே கனகசபாபதிக்கு சமாதிதான் கட்டவேண்டியதாகிவிடும்.... எப்பேற்பட்ட ஆசாமியாக இருந்தாலும் சமாதியாவதற்கு ஆசைப்பட மாட்டான்.... அதனால் இப்படித்தான் சந்தானலஷ்மியிடம் வந்து போய் என்று ஆட்டம் காட்டிக்கொண்டிருக்க வேண்டும்.... மோகம் தோன்றுகிறபோது கனகசபாபதியின் கார் தானாக கண்ணை மூடிக் கொண்டு சைதாபேட்டை விசாகதோட்டத்தை நோக்கி ஓடும். மோக ஓட்டம் உணர்வுகளில் இல்லாத நேரம் கார் அதுபாட்டுக்கு 'ஷெட்'டில் நின்றுகொண்டிருக்கும் - இதெல்லாம் கனகசபாபதிக்குத் தெரியாத சமாச்சாரம் இல்லை. ரொம்ப தெரிந்த சமாச்சாரம்தான். இருந்தாலும் தெரிந்தோ தெரியாமலோ இந்த முறை போதையின் புதிய உச்சத்தில் அவர் அதுவரை தாண்டியிராத சில எல்லைகளை யெல்லாம் தாண்டித் தொலைத்துவிட்டார். கண்மண் தெரியாமல் போதையின் வேகத்தில் சந்தானலஷ்மியை மடியில் அள்ளிப் போட்டுக்கொண்டு அநியாயமாக கொஞ்சித் தள்ளிவிட்டார். எத்தனை கொஞ்சல், எத்தனை கொஞ்சல்.... நினைக்கவே கனகசபாபதிக்கு வெட்கக்கேடாக இருந்தது.... இந்த வெட்கக் கேடான வெட்க உணர்வு எல்லாம் சென்டரல் ஸ்டேஷனை நோக்கி அவர் ஆட்டோவில் போய்க் கொண்டிருந்தபோதுதான்....

அவசரப்பட்டு அப்படியெல்லாம் கொஞ்சியிருக்கக் கூடாதோ வென்று தோன்றியது கனகசபாபதிக்கு. இத்தனை கொஞ்சல் கொஞ்சுகிற அளவுக்கு சந்தானலஷ்மியிடம் அப்படி என்ன இருக்கிறதென்று ஒரு கேள்வியையும் அவர் கேட்டுப் பார்த்துக் கொண்டார். இனி ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு கொஞ்சுகிற வேலை எதையும் வைத்துக்கொள்ளக் கூடாதென்று தீர்மானம் செய்து கொண்டார். சந்தானலஷ்மி மிகப் பெரிய பாலுறவுப் புதையல்தான். இந்த ஜென்மத்தில் அதை இல்லையென்று சொல்ல மாட்டார் கனகசபாபதி. அவருக்கு அவள் பெரிய ஒரு பாலுறவு



சாம்ராஜ்யத்தைத் திறந்து காட்டியிருக்கிறாள். அதற்கெல்லாம் நன்றிக் கடனாக கனகசபாபதியும் பெரிய பண சாம்ராஜ்யத்தை சந்தானலஷ்மிக்கு தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறார். அவரின் கணக்கில் வராத கறுப்புப் பணம் கணக்கில் வராத ஒரு கறுப்பு உறவுக்கு வெள்ளமாக மடை மாறியிருக்கிறது.... இந்தப் பண வெள்ளம் போதும் இந்த உறவுக்கு. சொல்லப் போனால் இதுவே அதிகம். இனி எந்த ஊருக்குப் போவதாகவும் போக்குக் காட்டி விட்டு இங்கே வந்து இவளுடன் இந்த கூத்தடிக்கிற வேலை எதையும் வைத்துக்கொள்ளக் கூடாது. போதும் போதும் ஆட்டம் எல்லாம்.... கொஞ்சம் கொஞ்சமாக சந்தானலஷ்மியிடம் இருந்து விடுபட்டுவிட வேண்டும். - அந்த நிமிடம் கனகசபாபதிக்கு சந்தானலஷ்மி சற்று பழசாகத் தெரிந்தாள். அவளின் வாளிப்பான அந்த உடம்பு பிருமாண்டமான அவருடைய மார்பகங்கள் - எல்லாமே கனகசபாபதிக்கு சுவாரஸ்யம் அற்ற சலிப்புணர்வைத் தந்தன.... எல்லாம் திரும்பத் திரும்ப பார்த்ததுதான். இனிமேல் பார்ப்பதற்கு எதுவும் இல்லை....

மற்றொரு உண்மை திடீரென கனகசபாபதிக்குத் தெரிந்தது. எந்தச் சின்ன முயற்சியும் இல்லாமலேயே அவருக்கு சந்தானலஷ்மி கிடைத்தவள். ஒரு முயற்சி செய்தால் இவளையும்விட இன்னொரு பெரிய கவர்ச்சிப் புயல் கிடைக்கமாட்டாளா அவருக்கு? நிச்சயமாகக் கிடைப்பாள். அதற்கெல்லாம்தானே கறுப்புப் பணம்.... பணத் தூண்டிலைப் போட்டால் பெரிய பாலுறவுத் திமிங்கலமே மாட்டினாலும் மாட்டும். கணிசமான பணத்தைக் கொடுத்து பழைய திமிங்கலத்தை கழற்றிவிட்டு விடலாம். பழைய திமிங்கலத்தின் சார்பில் வந்து கனகசபாபதியை வந்து கேட்பதற்கு நாதி கிடையாது....

இந்த திடீர் ஞானோதயம் கனகசபாபதிக்கே இனிய திகில் நிறைந்ததாய் இருந்தது. நிஜமாகவே புதிய மற்றொரு பெண்ணிடம் தாவிவிட அவரின் மனம் வேகமாக இச்சைக்கு உள்ளாகிவிட்டது... இந்த இச்சை கனகசபாபதிக்கு தப்பாகத் தெரியவில்லை. அவருடைய உரிமையாகவே தெரிந்தது. இந்த இச்சை திருமணத்தின் மூலம் அவரை கோடீஸ்வரனாக்கிய வனிதாமணிக்கே கனகசாபதி துரோகம் செய்திருக்கிறார். ஒரு காலத்தில் அவரிடம் கைநீட்டி சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த சந்தானலஷ்மிக்கு துரோகம் செய்வதால் அவருடைய குடி எதுவும் முழுகிப் போய்விடாது.

கனகசபாபதிக்குள் சந்தானலஷ்மிக்கு துரோகம் செய்கிற உணர்வு பீறிட்டுப் பெருகிக்கொண்டிருந்தது. அவரிடம்கூடச் சொல்லாமல்; இதுவரை அவருக்குத் தெரியாமல் பேங்க்கில் ஒன்றரை லட்ச ரூபாய் பணம் சேர்த்து வைத்திருக்கும் சந்தானலஷ்மியின் ரகசிய செயல் திடீரென அவருடைய ஞாபகத்தில் வந்து பெரும் புண்ணியத்தை வாங்கிக்கட்டிக்கொண்டு விட்டது.... சந்தானலஷ்மிக்கு ஒரு பாடம் கற்பிப்பதற்காகவே அவளுக்குத் துரோகம் செய்துதான் தீரவேண்டும் என்ற அவசர தீர்மானத்திற்கு ரொம்ப அவசரமாக வந்து சேர்ந்தார் கனகசபாபதி....

இந்த அவசர தீர்மானத்தோடு அவர் சென்ட்ரல் ஸ்டேஷனில் போய் ஆட்டோவில் இறங்கினார். பிளாட்பாரம் டிக்கெட் ஒன்றை வாங்கிக்கொண்டு பிளாட்பாரத்தில் எரிச்சலோடு உலாவிக் கொண்டிருந்தார். கனகசபாபதியின் எரிச்சலை அதிகப்படுத்துவது மாதிரி ஹைதராபாத்ததில் இருந்து ரயில் ஒரு மணிநேரம் தாமதமாக வந்துகொண்டிருப்பதாக செய்தி ஒலி பரப்பாகியது. கேட்டதும் ரொம்பக் கடுப்பாகிவிட்டார். அவரின் மொத்த கடுப்பும் சந்தான லஷ்மியின்மேல் திரும்பியது. கார் பங்களா சொத்து சுகம் என்று இருக்கும் அந்தஸ்து உள்ள அவரை இப்படி ஒரு பிளாட்பாரத்தில் நிற்க வைத்துவிட்டாள்....

வேறு வழியே இல்லாமல் கனகசபாபதி ரயில் வருகிற வரை நாய் மாதிரி பிளாட்பாரத்தில் நினறே ஆகவேண்டியிருந்தது. கிட்டத்தட்ட ஒன்றேகால் மணிநேரம் தாமதத்திற்குப்பின் ரயில் பிளாட்பாரத் திற்குள் ஆடி அசைந்து வந்து ஒரு வழியாக நின்றதோ இல்லையோ - ஸ்டேஷனை விட்டு வெளியே ஓடி வந்த முதல் மனிதர் கனகசபாபதி தான்.... சில நாட்களாக பார்க்காத அவரின் காரில் வேக வேகமாக ஏறி 'அப்பாடா' என்று அலுப்புடன் முணங்கிக் கொண்டார். காரைக் கிளப்பிய டிரைவரிடம் ''என்ன முத்து - மெட்ராஸ்ல மழை கிழை எதுவும் பெஞ்சதா இல்லையா?'' என்று கனகசபாபதி அக்கறையோடு விசாரித்தார்.

''இல்லைங்க சார்'' என்று மட்டும் சொல்லி டிரைவர் முத்து நிறுத்திக் கொண்டான். அவன் சொல்லாமல் மனதிற்குள் மறைத்துக் கொண்டது இது - ''வீட்டுக்கு வாங்க; அங்கே இருக்கு இடி மின்னல் புயல் மழை எல்லாம்....''

❖

# 19

அளவு கடந்த களைப்பில் நேராக ஹைதராபாத்தில் இருந்து வந்து கொண்டிருக்கிற அழகான முகபாவனையோடு கனகசபாபதி அவருடைய அடையார் வீட்டில் போய் இறங்கினார். - சந்தான லஷ்மிக்கு விரைவில் துரோகம் செய்யப்போகிற புத்துணர்ச்சியோடு. ஆனால் வீடு போய் சேர்ந்தவருக்கு வீட்டின் சூழ்நிலை இயல்பாக இல்லாமல் ஒருவிதமான இறுக்கத்தில் நிசப்தமாக இருந்ததை உடனே உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனால் அதைப் பற்றிய யோசனையில் உடனே ஆழ்ந்துவிடுகிற அவகாசம் அந்த நிமிஷம் கனகசபாபதிக்கு இல்லை. மனதாலும் உடம்பாலும் ஒட்டத்தில் இருந்தார். பொதுவாக சில நாட்கள் வெளியூர் போய்விட்டுத் திரும்புகையில் வீட்டிற்குள் நுழையும்போதே கனகசபாபதி மகள் ப்ரியாவின் பெயரைச் சொல்லி பெரிய குரலில் கூப்பிட்டபடியே வருவார். இன்று அவர் மிகவும் தாமதமாக வருகிறார். வழக்கமாக இந்த நேரத்தில் ப்ரியா பள்ளிக்கூடம் போய்விடுவாள் என்பதால் அன்று கனகசபாபதி வீட்டில் மகளை எதிர்பார்க்கவில்லை. அதனால் அவளுடைய பெயரை சொல்லி கூப்பிடாமலேயே வீட்டிற்குள் வேகமாக நுழைந்தார்.

''சனியன் பிடிச்ச ட்ரெய்ன் அநியாயத்துக்கு லேட்....'' என்று பெரிய அலுப்போடு சொல்லியவாறு உள்ளே போனவர்; மாடிப்படி ஏறுகிற இடத்தில்; சற்று புழக்கத்தில் இல்லாத சின்ன சதுக்கத்தில் மகள் ப்ரியா ஒருவித மந்தஹாச பூரிப்போடு தனியாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்து ஆச்சர்மானார்.

''ப்ரியா கண்ணு; என்ன நீ ஸ்கூலுக்குப் போகாம எங்கியோ போய் உக்காந்திருக்கே....?'' - என்று சந்தோஷத்துடன் கேட்டார். அவருக்குப் பதில் சொல்லாமல் ப்ரியா சிறு நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஏண்டா கண்ணு; உடம்பு எதுவும் சரியில்லையா என்ன?'' - என்று கனகசபாபதி திரும்பவும் கேட்டார். ப்ரியா இதற்கும் பதில் சொல்லாமல் வெறுமே சிரித்தாள். அவருடைய குரல் கேட்டு உள்ளிருந்து வனிதாமணி ஹாலுக்கு வேகமாக வந்தாள். மனைவியை பார்த்து கனகசபாபதி கேட்டார்.

''ப்ரியா குட்டி ஏன் ஸ்கூலுக்குப் போகாம இப்படி எங்கேயோ போய் உட்காந்திருக்கா?''

''தெரியலையா பாக்கும்போதே - அவ வயசுக்கு வந்திட்டா....'' வனிதாமணியிடம் இருந்து பதில் வேகமாக வந்தது.

இந்தச் செய்தியை கனகசபாபதி சிறிதும் எதிர்பார்க்காததால் மகளை ஆச்சர்யத்தோடு பார்த்தார். ''பேபி....'' என்று மகளை அன்புடன் கூப்பிட்டார். அப்போது வனிதாமணி குறுக்கிட்டு, ''நீங்க முதல்ல மாடி ரூம்ல போய் இருங்க.... உங்ககிட்ட பேச வேண்டியிருக்கு....'' என்றாள்.

''இப்ப உன்கிட்ட பேசிட்டு நிக்கறதுக்கெல்லாம் டயம் கிடையாது எனக்கு. இப்பவே நான் எக்கச்சக்க லேட்.... சட்டுப்புட்டுனு ஆபிஸ் போயாகணும்.... எதுவா இருந்தாலும் பிறகு பேசிக்க....''

வனிதாமணி கனகசபாபதியை கடுமையா ஒரு பார்வை பார்த்தாள்.

''ஆபீசுக்கெல்லாம் மெதுவா போலாம். மாடியில போய் இருங்க. இதோ நான் வந்திட்டே இருக்கேன்...'' - வனிதாமணி கண்டிப்பான குரலில் சொன்னாள்.

கனகசபாபதிக்கு வந்ததும் வராததுமாக எரிச்சல் வந்துவிட்டது. எப்போதுமே இவள் இப்படித்தான். எதையுமே உடனே பெரிய பார்லிமெண்ட் ஒத்திவைப்புத் தீர்மானம் போல பேசி முடிவு செய்யவேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்பாள். கடைசியில் பார்த்தால் ஒன்றுமே இருக்காது விஷயம்.... - முணுமுணுத்துக் கொண்டே கனகசபாபதி படியேறினார்.... சந்தானலஷ்மிக்கு துரோகம் செய்யவேண்டும் என்ற ஒருவித சுவாரஸ்யமான மனநிலையோடு வந்தவருக்கு வனிதாமணியுடன் உட்கார்ந்து உப்புசப்பற்ற எதையோ பேசவேண்டியிருப்பது எரிச்சலாக இருந்தது. அதே நேரம் மகள் ப்ரியா பெரிய பெண்ணாகி இருக்கும் செய்தி அவருடைய மற்றொரு மனநிலையை மெலிதாகக் கனிய வைத்திருந்தது. அதுமட்டுமில்லை; இந்தச் செய்தி கனகசபாதியின் மனதில் சட்டென புதிய பொறுப்பு ஒன்றை உணர வைத்திருந்தது. இனி அவர் மகளை கண்ணுங் கருத்துமாய் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பொறுப்புள்ள தகப்பனாக நடந்துகொள்ள வேண்டும். சரியாக இருபது வயதாகும்போது நல்ல இடத்தில் ப்ரியாவை கல்யாணம் பண்ணிக்கொடுத்து விடவேண்டும்... ரொம்பவும் படிக்க வைக்கக்கூடாது....

கனகசபாபதி மகள் ப்ரியாவை கல்யாணம் செய்து கொடுக்கிற காட்சியை கொஞ்சம் கற்பனை செய்து பார்த்தார். அவரின் மனம்



மிகவும் உணர்ச்சி வசப்பட்டது. எது இருந்தாலும் இல்லா விட்டாலும் ப்ரியாவை கல்யாணம் செய்து கொடுக்கிற பையனுக்கு உடல்நலம் மட்டும் எந்தக் குறையும் இல்லாமல் இருக்கவேண்டும். இது ரொம்ப ரொம்ப முக்கியம். காலம் பூராவும் ஒரு மோசமான ஆஸ்த்மாகாரியுடன் மாரடித்திருக்கும் கொடுமை அவருடைய குழந்தைகள் யாருக்கும் தப்பித் தவறிக்கூட வந்துவிடக்கூடாது. தாம்பத்ய வாழ்க்கை ஆஸ்த்மாவின் இளைப்பு மிகுந்ததாய் ஆகித் தொலைந்ததால்தானே கனகசபாபதி அவரின் அந்தஸ்தை மறந்து; குடும்பத்தின் கௌரவத்தையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு எவளோ ஒருத்தியிடம் போய் வெட்கம் மானம் இல்லாமல் படுத்து உருண்டுவிட்டு வருகின்ற கேவலத்திற்கு, அசிங்கத்திற்கு ஆளாக வேண்டி வந்துவிட்டது....

கனகசபாபதி - அந்த நிமிடம் நிஜமாகவே வெட்கப்பட்டார். சந்தானலஷ்மியுடன் அவருக்கு இருக்கும் உறவு வனிதாமணிக்கு எதிர்பாராமல் தெரிய வந்துவிட்டால்கூட கனகசபாபதி கவலைப்பட மாட்டார். ஆனால் மகன் ஸ்ரீகாந்துக்கும்; மகள் ப்ரியாவுக்கும் தெரிந்துவிட்டால் அவரின் தலை அவமானத்தால் தொங்கிப் போய்விடும். நிஜமாக அந்த அவமானத்தை தாங்கிக்கொள்ள முடியாது அவரால். வேறு யாரிடம் மரியாதையை இழக்க நேரிட்டாலும் தன்னுடைய குழந்தைகளிடம் மரியாதையை இழப்பதை கனகசபாபதியால் பொறுத்துக்கொள்ள முடியாது. இதுவரை அந்த மாதிரியான நிலைமை எதுவும் வந்துவிடுவதற்கு முன்னால் சந்தானலஷ்மியை கை கழுவிவிட்டு விடுவதுதான் புத்திசாலித்தனமான செயலாக கனகசபாபதிக்குத் தெரிந்தது. நிஜமாகவே இனி அவர் அவளைப் போய் பார்ப்பதை தாட்சண்யமே பார்க்காமல் நிறுத்திக்கொண்டு விடலாம்.....

சந்தானலஷ்மி மனது வைத்தால் இன்னொரு நல்ல பசையுள்ள ஆசாமி அவளுக்குக் கிடைக்காமல் போகமாட்டான். முடிந்தால் அவள் அந்த பசையுள்ள ஆசாமியையே கல்யாணம் வேண்டு மானாலும் தாராளமாக பண்ணிக்கொள்ளட்டும். அவனோடு குழந்தை குட்டி பெற்றுக்கொண்டு நல்லபடியாகவும் இருக்கட்டும். கனகசபாபதிக்கு அதில் எந்த ஆட்சேபணையும் கிடையாது. பாவம்தான் சந்தானலஷ்மியும். கல்யாணம் என்றும் குழந்தை யென்றும் உயிரை விடுகிறாள்.... அவர் போய் அதற்கெல்லாம் குறுக்கே நிற்பானேன்.... மாற்றி மாற்றி இப்படியெல்லாம் நினைத்து தனக்குத்தானே கனகசபாபதி புல்லரித்து பெரும் தியாகசீலராய்;

ஒழுக்க சிலராய் தீக்குளித்துக்கொண்டு மாடி அறையில் நின்றபோது வனிதாமணி அவருடன் பேசுவதற்காக படியேறி வந்துவிட்டாள்.

"இவ்வளவு தலை போகிற அவசரமாக இப்ப என்ன பேசணும் உனக்கு....நம்ம ப்ரியா பெரிய பொண்ணா ஆனதைப் பத்தியா?" - கனகசபாபதி மனைவியை பார்த்துக் கேட்டார். வனிதாமணி அவரை மிகவும் அந்நியமான பார்வை பார்த்தாள். "அவ பெரிய பொண்ணா ஆனதில என்னத்தைப் போட்டுப் பேச.... நான் அதைப் பத்தி பேச வரலை.... ஹைதராபாத் போயிட்டு வந்திருக்கிறதா சொல்றீங்களே- இப்ப அதைப் பத்திப் பேசியாகணும் எனக்கு...."

கனகசபாபதிக்கு உடனே திக்கென்று இருந்தது. பயத்தில் அந்த நிமிஷமே அவருக்கு வியர்த்துவிட்டது. என்னதான் இருந்தாலும் வனிதாமணியிடம எப்போதுமே அவருக்கு ஒரு பயம் உண்டு. அந்தப் பயம் ரொம்ப வெளிப்படையாக தெரிந்துவிடாதபடி நடந்து கொள்ள மிகவும் முயற்சி செய்வார். ஆனாலும் நிறைய நேரங்களில் அவரின் பயம் வெளிப்படையாய் தெரியும்படியேதான் இருக்கும்.

"எதையுமே என்கிட்ட மறைக்காம சொல்லிடுங்க. ஹைதராபாத் போயிட்டு வர்றதா சொல்லிட்டு எங்கே போயிட்டு வர்றீங்க...?" - புடவையின் முந்தாணையை இழுத்துச் செருகிக் கொண்டு வனிதாமணி கேட்டாள். கனகசபாபதி பெரும் திகைப்புடன் மனைவியை பார்த்தார். தயாராக நின்றுகொண்டிருக்கிற முகபாவனையோடு வனிதாமணி தெரிந்தாள். ஆமாம்; நான் ஹைதராபாத் போகவே இல்லையென்று எடுத்த உடனேயே ஒத்துக் கொண்டுவிட விரும்பவில்லை கனகசபாபதி. வனிதாமணிக்கு ஏதோ தெரிந்துவிட்டது. ஆனால் எவ்வளவு தூரத்திற்கு தெரிந்து விட்டது என்பது தெரியவில்லை. அதனால் முதலில் கூடியவரை எதையாவது சொல்லி சமாளிக்கலாம் என்று கனகசபாபதி நினைத்தார். எல்லாமே தெரிந்து போய்விட்ட மாதிரி இருந்தால் அதை அந்த நிமிஷம் எதிர்நோக்கலாம் என்ற உடனடி தீர்மானத்தில் இருந்தார் அவர். அதனால் திகைப்பையோ பயத்தையோ காட்டிக் கொள்ளாமல் முகத்தை சாதாரணமாக வைத்துக்கொண்டு கனகசபாபதி கேட்டார். "என்ன இது - திடுதிப்னு இன்னைக்கி உனக்கு இப்படி ஒரு சந்தேகம்....?" இதுவரை என்னை நீ இப்படி ஒருநாளும் சந்தேகப்பட்டு எதுவும் கேட்டதே கிடையாதே....?"

"உங்கமேல் சும்மா சந்தேகப்பட்டுட்டு இந்தக் கேள்வியை நான் கேக்கலை.... இந்தத் தடவை நீங்க சொல்லிட்டுப் போன மாதிரி



ஹைதராபாத் போயிட்டு வரலை...." இதைச் சொல்லும்போதே வனிதாமணியின் கண்களில் கோபத்தின் நிறம் அதிகப்பட்டுத் தெரிந்தது. "முந்தாநாள் ப்ரியா வயசுக்கு வந்திட்டதை சொல்லிட லாம்னு ஹைதராபாத்ல நீங்க எப்பவும் தங்குற ஹோட்டலுக்கு போன் பண்ணிப் பாத்தா - நீங்க அங்கே வரவே இல்லைன்னு சொல்லிட்டான்...."

எல்லா ஆயுதங்களோடும் நிற்கிற பகைவனை எந்த ஆயுதமும் இல்லாத பகைவன் பார்க்கிற மாதிரி கனகசபாபதி வனிதாமணியைப் பார்த்தார். அந்த நிமிடம் அவருக்கு சண்டாளி சந்தானலஷ்மியின் ஞாபகம் வந்தது. எல்லாம் அவளால் வந்தது. இப்போது அந்தச் சண்டாளியா வந்து பதில் சொல்லப் போகிறாள்.... கனகசபாபதிதான் பதில் சொல்லவேண்டும்.... ஆனாலும் ஒரு விநாடியில் அவர் உஷாராகிவிட்டார். எடுத்த உடனேயே வனிதாமணி அவரைக் கேட்ட கேள்வி - 'ஹைதராபாத் போயிட்டு வர்றதா சொல்லிட்டு எங்கே போயிட்டு வர்றீங்க....?' என்பதுதான். கனகசபாதிக்கு உடனே ஒரு விஷயம் தெரிந்துவிட்டது. வனிதாமணிக்கு தெரிந்து போயிருப்பது அவர் ஹைதராபாத் போகவில்லை என்கிற வரையில் தான் என்கிற மாதிரிதான் இருந்தது. கனகசபாபதி 'கப்'பென்று அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டார். தைரியமாக வனிதாமணியை நிமிர்ந்து பார்த்தவாறு கேட்டார். "ஏன் - ஹைதராபாத்ல வேறு ஒரு ஹோட்டல்ல நான் தங்கவே கூடாதா? அதே ஹோட்டல்லதான் தங்கணும்னு கட்டாயம் எதுவும் கிடையாதே...."

"ஹலோ கல்யாணம் செஞ்ச நாள்ல இருந்து உங்களை எனக்குத் தெரியும். உங்களால அப்படியெல்லாம் சட்டுனு பழகுன ஹோட்டலை மாத்திக்க முடியாது.... இருந்தாலும் அந்த சான்சையும் நான் விட்டுடலை.... ஹைதராபாத்ல இருக்குற மேலும் பத்து பெரிய ஹோட்டல்களுக்கும் போன் போட்டு கேட்டேன். எந்த ஹோட்டல்லேயும் இல்லை நீங்க. ஹைதராபாத்ல எந்தெந்த கம்பெனிகளுக்கெல்லாம் விசிட் பண்ணுவீங்களோ - அங்கே யெல்லாமும் வேற போன் பண்ணிக் கேட்டேன். எங்கேயும் நீங்க வரலை என்கிற பதில்தான் வந்தது. இப்பச் சொல்லுங்க - எங்கே போயிருந்தீங்க.... இத்தனை நாள் எங்கே இருந்தீங்க? உண்மை தெரிஞ்சாகணும் எனக்கு. இவ்வளவுக்கும் பிறகும் என்கிட்ட பொய் பேசினீங்கன்னா தாங்கமாட்டேன் நான். நிஜத்தைச் சொல்லி ருங்க...."

கனகசபாபதிக்கு கோர்ட்டில் குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்பது போல இருந்தது. இந்த கோர்ட்டில் அவருக்காக வாதாட வக்கீல் கிடையாது. அவரேதான் வாதாடிக் கொள்ளவேண்டும். இப்போது கனகசபாபதியின் மொத்த எரிச்சலும் மகள் ப்ரியாவின் மேல் திரும்பியது. நல்ல நேரம் பாத்திருக்கிறாள் பெரிய மனுஷி ஆக.... சரியா இப்போது நாள் பார்த்து வயசுக்கு வருவானேன்.... அதை உடனே அவருக்குச் சொல்லித் தொலைவதற்காக வனிதாமணி ஹைதராபாத்துக்கு போன் பண்ணுவானேன்.... கனகசபாபதியின் எரிச்சல் புயல் சட்டென சைதாபேட்டை பக்கம் திசை திரும்பியது. சும்மா இருக்கவிட்டாளா குந்தாணி.... என்கூட வந்து இரு. என்கூட வந்து இரு என்று உயிரைப் போட்டு வாங்கினாள். ரொம்பத்தான் உயிரை எடுக்கிறாளேயென்று பரிதாபப்பட்டு மூன்றே மூன்று நாள் அவளுடன் இருந்துவிட்டு வீடு வந்து சேர்வதற்குள் குஜராத் பூகம்பம் இங்கே வந்துவிட்டது. அப்படியா விஷயம்; போ - அந்த சைதாபேட்டைக்காரி கூடவே இருவென்று ஆஸ்த்மாகாரி விரட்டி யடித்துவிட்டால் என்ன செய்வது? அப்போது சைதாபேட்டைக் காரியா அவருக்குச் சோறு போடுவாள்.... வேளா வேளைக்கு அவளுக்கே சோறு நான்தான் போட்டுக் கொண்டிருக்கிறேன்....

கனகசபாபதியின் மனதில் புயல் வேகத்தில் படபடத்த உணர்வுகளின் ஒரு பக்கம்தான் மேலே சொன்னவை அவருடைய மனதில் சூறாவளி போல சுழன்ற இன்னொரு பக்கம் இதற்கு நேர் எதிர்.

''வனிதாச்சி ரொம்ப விரட்டிடாதே. அப்புறம் சாது மிரண்டா காடு கொள்ளாது. அவசரப்பட்டு ஏதாவது வார்த்தைகளை அள்ளிக் கொட்டினே - எங்கேயிருந்து இப்ப கிளம்பி வந்தேனோ - நேரா அங்கேயே திரும்பிப் போயிடுவேன். பேசாம அவகூடப் போய் இருந்திடுவேன். அதனால கொஞ்சங்கூட ஓவரா ரீயாக்ட் பண்ணி டாதே. கண்டுக்காம விட்டுடு என்னை. நானே இந்த நிமிஷம் அவளை விட்டுறதாத்தேன் இருக்கேன். யோசனை பண்ணி வார்த்தைகளை அளந்து பேசு....''

கனகசபாபதி மௌனமாகவே நிற்பதைப் பார்த்த வனிதாமணி ''நிஜத்தைச் சொல்றதா இருந்தா - சொல்லுங்க. சொல்ல முடியலையா - என்ன செய்யணுமோ அதை செய்துக்கறேன்'' என்றாள்.

உடனே கனகசபாபதி வாயைத் திறந்துவிட்டார் ''ஓ.கே. நான் நிஜத்தைச் சொல்லிடறேன் வனிதா. ஆனா நான் சொல்லுற நிஜத்தை



நீ நம்புவியான்னுதான் தெரியலை....'' - இதை அவர் சிறிது இரக்கப்படும்படியான குரலில் சொன்னார்.

''பரவாயில்லை சொல்லுங்க.... நிஜம் எப்பவும் நம்பற மாதிரிதான் இருக்கும்....'' - வெடுக்கென்று சொன்னாள் வனிதாமணி.

''அப்படியில்லை வனிதா; சில நேரங்கள்ல சில நிஜங்கள் நம்பற மாதிரி இருக்காது....''

''இப்படிச் சொல்லி நிஜத்தைச் சொல்ற மாதிரி என்கிட்ட பொய் பேசப் பார்க்காதீங்க, சொல்லிட்டேன்....''

''முதல்லேயே இப்படியெல்லாம் சொன்னீனா உன்கிட்ட நிஜத்தைச் சொல்றதுல பிரயோஜனமே கிடையாது. பேசாம நான் வாயை மூடிட்டு இருந்திரலாம்....''

வனிதாமணி கனகசபாபதியை உற்றுப் பார்த்தாள் ''இப்படி யெல்லாம் பேசறவர் கிடையாது நீங்க. புதுசா எங்கேயோ போய் கத்துக்கிட்டு வந்திருக்கிற மாதிரி தெரியுது....''

''ஆமா புதுசா இந்த வயசில போய்தான் கத்துக்கப் போறேன்...''

''ஹலோ - பேச்சு திசை மாறுது. ஹைதராபாத் போறதா சொல்லிட்டு எங்கே போயிட்டு வர்ரீங்க.... அந்தச் சொல்லுங்க முதல்ல....''

கனகசபாபதிக்கு தைரியம் வந்துவிட்டது. மனைவியை நேராக பார்த்தவாறே சொன்னார்.

''சரி வனிதா - நிஜத்தைச் சொல்லிடறேன்.... இந்த ட்ரிப்தான் நான் ஹைதராபாத் போகலை....''

''இவ்வளவு நேரம் கேட்டதுக்கு பிறகு உண்மை வெளியில வருது. அப்ப ஹைதராபாத் போறதா சொல்லிட்டு எங்கே போயிருந்தீங்க....?''

கனகசபாபதி சிறிதும் யோசிக்காமல் வனிதாமணியிடம் சொன்னார் ''திருப்பதி போயிருந்தேன்....''

பொய் அவருடைய வாயில் இருந்து சர்வ சாதாரணமாக வந்தது....

❖

## 20

வனிதாமணி கொஞ்சம்கூட நம்பமுடியாமல் கனகசபாபதியை ஆச்சர்யத்துடன் பார்த்தாள். ''என்னது; திருப்பதிக்கா'' என்று கேட்டாள்.

''ஆமா''

''யார்கூட?''

''பாத்தியா.... உடனே யார்கூடவோ போன மாதிரி சந்தேகப்பட ஆரம்பிச்சிட்டே''

''ஆமா. சந்தேகந்தான் படமுடியும். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வரைக்கும் ஹைதராபாத் போயிருந்தேன்னு சொல்லிட்டு இருந்த மனுஷன் இப்ப திருப்பதி போயிருந்தேன்னு சொன்னா உடனே எவளால அதை நம்பமுடியும்?''

''உங்க அப்பா பேர்ல சத்தியம் வனிதா. திருப்பதிக்கு நான் தனியாத்தான் போயிருந்தேன். யார் கூடேயும் போகலை....''

கனகசபாபதியிடம் இருந்து இத்தனை பெரிய வார்த்தையை வனிதாமணி எதிர்பார்க்கவில்லை. பாறையாக இறுகிப்போன அவளின் ஆஸ்த்மா மனசு சிறிது நெகிழ்ந்துவிட்டது. இறந்து போன அப்பாவின் மேல் அவளுக்குப் பெரிய பக்தி உண்டு. இந்த வீடு பணம் கம்பெனி எல்லாம் அவளின் அப்பா உழைத்துச் சம்பாதித்து உருவாக்கிக் கொடுத்தது. இந்த வாழ்க்கை அவருடைய வியர்வை. அண்ணன் தம்பியென்று யாரும் இல்லாத வனிதாமணிக்கு அப்பாதான் ஒரு ஆதர்ச ஆணாக இருந்தவர். அதே அப்பாதான் கனகசபாபதியையும் அவளின் வாழ்க்கைத் துணையாக கை பற்றிக் கொடுத்தவர். வனிதாமணிக்கு கனகசபாபதியிடம் மிகப்பெரிய திருப்தியும் கிடையாது. மிகப்பெரிய அதிருப்தியும் கிடையாது. ஆனால் ஒரு முக்கியமான நுண்ணிய இழையில் மனோதத்துவ ரீதியிலான பிரச்னை கனகசபாபதியிடம் அவளுக்கு ஏற்பட்டு விட்டிருந்தது.

ஆஸ்த்மாவின் கடுமையில் நசிந்த ரப்பர் பொம்மையாக அவளுடைய உடம்பு ஒடுங்கிப் போயிருந்ததில்; அவளின் கல்யாணமான புதிதில் அவளுடைய உடம்பை கணவனிடம்



காட்டுவதற்கு வனிதாமணி அளவு கடந்த கூச்சத்திற்கு உள்ளாகிப் போயிருந்தாள். கலையவே முடியாத ஒரு தாழ்வுமனப்பான்மை அவளின் உடம்பின்மேல் வனிதாமணிக்கு அதிகமாகவே இருந்தது. தினந்தோறும் மூன்று வேளையும் ஐஸ்க்ரீம் சாப்பிட்டே வளர்ந்ததைப் போன்ற அருமையான உடம்பைக் கொண்டிருக்கும் அழகான பெண்களைப் பார்த்தால் சின்ன வயதில் இருந்தே வனிதாமணிக்கு மிகுந்த ஆற்றாமையாக இருக்கும். அதுவும் நல்ல வாளிப்பான மார்பகங்களோடு இருக்கும் பெண்களைப் பார்க்கும் போது அவளுக்குப் பொறாமையாகவே இருக்கும். உடம்பு வாளிப்பாக இல்லாவிட்டால் போகட்டும். மார்பகங்களாவது வளம் பொங்கி இருந்திருக்கக்கூடாதா என்ற துக்கம் வரும் வனிதாமணிக்கு. காலேஜில் படித்தபோது அவளின் மிகவும் தட்டையான மார்பு அமைப்பை அவளுடைய தோழிகள் கேலியே பண்ணி இருக்கிறார்கள். ஏற்கனவே தாழ்வுமனப்பான்மையில் இருந்த வனிதாமணியை தோழிகளின் வார்த்தைகள் மேலும் கூனிக் குறுக வைத்திருக்கின்றன.

பெண்களிடத்திலேயே கூச்சத்தையும் தாழ்வு மனப்பான்மையையும் கொண்டிருந்தவளுக்கு கணவனாக வந்த கனகசபாபதி என்ற ஆணிடம் எந்த அளவுக்குக் கூச்சமும் தாழ்வு மனநிலையும் இருந்திருக்கும் என்பதை எளிதில் ஊகித்துக் கொண்டுவிட முடியும்.... பாலுறவுக்காக கனகசபாபதி அவளை நெருங்கிய போதெல்லாம் இயல்பான பூவாக மலர முடியாமல் வனிதாமணி தாழ்வு மனநிலையின் இறுக்கமான கிடுக்கிப் பிடியில் ஒருவித சினத்துடன் அவளை சுருக்கிக்கொண்டாள். கனகசபாபதிக்கோ விரிய விரிந்து மலர்ந்த மலர் தேவைப்பட்டது. வனிதாமணியோ விரிய மறுத்த கெட்டியான அரும்பு போலத்தான் இருப்பேன் என்றாள். அரும்பாக இருந்தால்கூடப் பரவாயில்லை சமாளித்துக் கொள்கிறேன் என்ற ஒரு மாதிரியான தியாக மனப்பான்மையோடு நடந்து கொள்வதாகத்தான் இருந்தார் கனகசபாபதி. ஆனால் வனிதாமணியின் கோபத்திற்கு அவருடைய தியாக மனநிலை சிறிதும் தேவை இல்லாமல் இருந்தது. ஆனாலும் நாளாக நாளாக அரும்பு என்பதற்கும் மேலாக சுருங்கிப் போனதில் வனிதாமணி கூரிய முள் என்பதாக ஓர் பாலுறவு நெருடலாக உருமாறிப் போனாள்- கனகசபாபதிக்கு. இத்துடன் முடிந்து போய்விடவில்லை விஷயம். கடும் தாழ்வு மனமப்பான்மை வனிதாமணியின் மனநிலையின் ஒரு புறத்தில் இப்படி கூரான முள்ளை உருவாக்கி வைத்திருந்தது போல அவளின் மனதின் மற்றொரு பக்கத்தில் கோபம் என்ற வினோத

கூரிய கத்தியையும் ஏற்படுத்தி வைத்திருந்தது. இந்த கோபத்தைக் கண்ணை எரியச் செய்கிற புகையென்று சொன்னால் நெருப்பு இல்லாமல் புகை வராது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். - இங்கே நெருப்பு என்பது 'நமக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு ஆஸ்த்மா உடம்பு?'' என்ற தீராத வயிற்றெரிச்சல். கோபம் என்ற புகையைப் பார்க்கத் தெரியாமல் போய்விட்டது. வனிதாமணிக்கு இது ரொம்ப வசதியாகப் போய்விட்டது. கோபம் என்ற புகை மூட்டத்தைக் காட்டியே கனகசபாபதியை ஒரு கட்டுக்குள் வைத்தி ருந்தாள். கனகசபாபதி அந்தக் கட்டுப்பாட்டு வளையத்திற்குள் எரிச்சலோடு கண்களை கசக்கிக்கொண்டு அதே நேரம் அவர் பாட்டுக்கு இருந்து கொண்டிருந்தார். கட்டுப்பாட்டு வளையத்தை அவர் நினைத்தால் பகிரங்கமாகவே உடைத்துப் போட்டு விடுவது மிகப் பெரிய அசுர காரியம் கிடையாது. ஆனாலும் அந்த காரியத்தில் 'தொடாதே அபாயம்' என்கிற மாதிரியான பெரிய ஆபத்து இருந்தது. கட்டுப்பாடு வளையத்திற்குள் ஒரு பாதுகாப்பு வளையமும் சேர்ந்துதான் ஒது புரிந்திருந்ததால் கனகசபாபதி மனதால் காளையாக இருந்தாலும்கூட கட்டிப்போடப்பட்ட பசுபோல பேசாமல் இருந்து கொண்டிருந்தார்....

கட்டுப்பாட்டு வளையத்தை ரொம்ப ரகசியமாகவே உடைத்து விடமுடியும் என்றாலும் அதற்கான எந்த ரகசிய திட்டமும் கனவிலும் கொண்டிராத கனகசபாபதியின் கட்டுப்பாட்டு வளைய வாழ்க்கையில் எதிரே பாராமல் வனிதாமணிக்கு புலப்படாமல் இனிய விபத்து கடவுள் செயலால் ஒருநாள் நடந்து அதைத் தொடர்ந்து இன்றுவரை என்னவெல்லாமோ எப்படியெல்லாமோ நடந்துவிட்டது. ஆனால் நடந்ததெல்லாம் போதும்; விபத்தில் கிடைத்த பாலுறவு வளையத்தை விட்டு தலைதெறிக்க ஓடி வந்து விடலாம் என்று கனகசபாபதியே நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் இங்கே மகள் ப்ரியா பெரிய மனுஷியாகிவிட்டாள் என்ற மற்றொரு வித்தியாசமான விபத்து நடந்துவிட்டது. இந்த விபத்து எந்த விபரீதத்திலும் போய் முடிந்துவிடாமல் இருக்க கனகசபாபதி அவருடைய வாய் ஜாலத்தால் தப்பித்தே ஆகவேண்டும். இல்லா விட்டால் பாதுகாப்பு வளையம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அந்த அவசரத் தேவையின் வேகத்தில் வந்துவிட்டது தான் 'உங்க அப்பா பேர்ல சத்தியம் வனிதா. திருப்பதிக்கு நான் மாத்திரம் தனியாத்தான் போனேன்' என்ற கனகசபாபதியின் அதிரடியான; ரொம்ப உருக்கமான பொய் சத்தியம்....



கனகசபாபதியின் இந்தப் பொய் சத்தியம் வனிதாமணியைப் பொறுத்தவரை நிஜ சத்தியம்.... அதனால் வனிதாமணி கணவனின் வார்த்தைகளை நம்பி ஆகவேண்டிய இயல்பான கட்டாயத்தில் இருந்தாள். இதில் முக்கியமான விஷயம் - அவளுக்கு தெரிந்து அதுவரை கனகசபாபதியிடம் எந்தவித மாறாட்டங்களும் பித்தலாட்டங்களும் கிடையவோ கிடையாது. அவர் உண்டு; அவருடைய ஆபிஸ் வேலை உண்டு என்பதற்கு மேல் வெளி உலக கேளிக்கைகள் எதன்மீதும் அந்த மனிதருக்கு நாட்டமோ ஈடுபாடோ கிடையாதென்றால் கிடையாதுதான். பிற பெண் - அவள் எத்தனை பெரிய அழகியாக இருந்தாலும் கனகசபாபதி அவளை நிமிர்ந்தே பார்க்கமாட்டாரே.... கண்ணை மூடிக்கொண்டபடி நடந்துபோய் விடுவாரே. வனிதாமணிக்குத் தெரியும். ஆபிசில் கனகசபாபதி எந்த அழகான பெண்ணுக்கும் வேலை கொடுப்பதில்லை. ஆபிசில் அவரிடம் பணிபுரியும் அழகற்ற பெண்களையும் எப்படி கோபத்தோடும் எரிச்சலோடும் மனம் புண்படும்படி நடத்தி இருக்கிறார் என்பதையெல்லாம் பார்த்து வனிதாமணியின் மன ஆழத்திற்குள் பெரும் உவகைகூட வந்திருக்கிறது.

ஆனால் சந்தானலஷ்மி கனகசபாபதியிடம் பணிபுரிய வந்தபோது மட்டும் வனிதாமணிக்கு சந்தானலஷ்மியின் மார்பு ஏற்றத்தைப் பார்த்ததும் பகீர் என்றிருந்தது. கம்பெனியின் சேர்மன் என்ற முறையில் வருஷத்தில் இரண்டு முறை வனிதாமணி அவர்களின் ஆபிஸிற்குச் சென்று வருவாள். ஒருமுறை ஆயுத பூஜைக்கு. மற்றொரு முறை கம்பெனியின் நிறுவனர் தினத்திற்கு.... அப்படி ஒருமுறை போயிருந்த போதுதான் சந்தானலஷ்மியின் குறிப்பிடத் தக்க அந்த மார்பு ஏற்ற அம்சத்தைக் கவனித்துவிட்டாள். அந்த அம்சம் வனிதாமணியை சஞ்சலப்படுத்தி கலவரப்படுத்தியது. அவளிடம் இல்லாத விசேஷமான அம்சம் அது.... ஆனால் அந்த விசேஷ அம்சம் கொண்டிருந்த சந்தானலஷ்மியைத்தான் கனகசபாதி மிகக் கடுமையாக நடத்திக் கொண்டிருந்தார். கண்ணில் விரலை விட்டு ஆட்டி வைத்துக்கொண்டிருந்தார். அதைப் பார்த்ததும்தான் வனிதாமணிக்கு அப்பாடா என்று மூச்சு வந்தது. மிகத் திருப்தி யாகவும் இருந்தது. நிச்சயமாக கணவன் சிறிதும் பெண் சபலமே இல்லாதவன். ஒரு ஏகபத்தினி விரதன்.... - இப்படியெல்லாம் நினைத்து நினைத்து மனதிற்குள் ரகசியமாக பூரித்து சந்தோஷப்பட்டுப் போயிருந்த வனிதாமணிக்கு ஹைதராபாத் போவதாகச் சொல்லிவிட்டு கனகசபாபதி அங்கே போகவில்லை என்பது தெரிந்தபோது - இந்த இரண்டு நாட்களும் பயமும் தவிப்பும்

அவளின் மனதைப் போட்டு குழப்பி எடுத்துவிட்டன.... நம்பிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த மாதிரி புருஷன் ஏகபத்தினி விரதன் இல்லையோ என்ற பெரும் சந்தேகத்தையும் ஏற்படுத்தி விட்டன.... ஆனால் கனகசபாபதி வனிதாமணியின் அப்பா பெயரில் சத்தியமாக திருப்பதிக்கு தான் தனியாக போயிருந்ததாக சொன்ன பிறகுதான் அவளுக்குச் சந்தேகம் போய் நம்பிக்கை வந்தது. அதற்காக உடனே அவசரப்பட்டு அவளின் நம்பிக்கையையும் கனகசபாபதியிடம் காட்டிவிடவில்லை வனிதாமணி. எச்சரிக்கையாகவே அவரிடம் பேசினாள். ''இதுக்கு முன்னாடி எப்பவாவது நீங்க எந்த வேலையும் இல்லாத ஊருக்கு இப்படி என்கிட்ட சொல்லாம தனியா போய் வந்திருந்தீங்கன்னா - இப்ப நீங்க தனியா திருப்பதி போய் வந்ததா சொல்றதை என்னால கொஞ்சம் நம்ப முடியும்''

''இதுக்கு முன்னாடியும் மூணு தடவை பெங்களூரோ ஹைதராபாத்தோ போறதா சொல்லிட்டு இதேபோல நான் திருப்பதி போய் வந்திருக்கேன்'' - கனகசபாபதி இந்தப் பொய்யை மிகவும் தைரியமாகச் சொன்னார்.

''உங்க பேச்சை நம்பியவளை நல்லா ஏமாத்தியிருக்கீங்க?''

''ஏதோ பொய் சொல்லிட்டேன்னு மட்டும் எடுத்துக்கோயேன். உன்னை ஏமாத்தினதா ஏன் எடுத்துக்கறே....''

''என்கிட்ட பொய் பேசறது என்னை ஏமாத்தறதுதான்''

''நான் உன்னை ஏமாத்தலை. ஏமாத்தவும் மாட்டேன்''

வனிதாமணி சில வினாடிகள் மௌனமாக இருந்தபின் கேட்டாள்.

''அதென்ன சொல்லிக்காம கொள்ளிக்காம திருப்பதிக்கு ஓட்டம்?''

கனகசபாபதிக்கு பயம் சுத்தமாக போய்விட்டது. வனிதாமணியிடம் இருந்து இந்த முறை முழுவதுமாக தப்பித்துவிடலாம் என்பது தெரிந்துவிட்டது.

''என்மேல நம்பிக்கையோட நான் சொல்றதை மனசு திறந்து நீ கேட்டுக்கறதா இருந்தா நானும் இன்னைக்கி மனசைத் திறந்து எல்லாத்தையும் பேசிடறேன்'' - என்றார்.

''திடீர்னு ஓடறதுக்கு திருப்பதியில என்ன இருக்கு; யார் இருக்கா?''



''எதுவும் இல்லை. யாரும் இல்லை....''

''வேற யார் கூடேயும் போகவும் இல்லை?''

''சத்தியமா இல்லை....''

''என்னை இதை நம்பச் சொல்றீங்க?''

''கட்டாயமா உன்னை நான் நம்ப வச்சாகணும்.... புரியவும் வச்சாகணும்''

''இந்தப் பேச்சே யாரோ சொல்லிக் கொடுத்துப் பேசற பேச்சாத்தான் எனக்குத் தோணுது. இதுபோல எல்லாம் பேசற ஆள் கிடையாது நீங்க....''

''காலமே மாறுது வனிதா.... பிறகு நான் மட்டும் எப்படி மாறாம இருப்பேன் - ஒத்துக்கறேன். நான் மாறியிருக்கேன்''

''எங்கேயோ போறதா சொல்லிட்டு வேற எங்கேயோ போய் வர்ரதுதான் மாற்றம்னு சொன்னா - அப்படிப்பட்ட மாற்றம் எனக்குத் தேவை கிடையாது''

''ஸாரி - எனக்கு இது தேவைப்படுது''

''இதுக்கெல்லாம் நிஜமான அர்த்தம் என்ன தெரியுமா?''

''நீதான் சொல்லணும்''

''உங்க பெண்டாட்டி பிள்ளைங்களை அவங்களுக்கே தெரியாம அப்பப்ப அவங்களை விட்டுட்டு ஓடிப் போய் ஓடிப் போய் வந்திட்டு இருக்கீங்க''

''சேச்சே; பாவம் நம்ம பிள்ளைங்க என்னை என்ன செஞ்சாங்க?''

''அப்ப செஞ்சதெல்லாம் நான்தான்''

வனிதாமணி இப்படிச் பேசியதும் சட்டென கனகசபாபதிக்கு சந்தானலஷ்மியின் ஞாபகம் வந்தது. சில தருணங்களில் அவளும் கிட்டத்தட்ட இந்தப் பாணியில்தான் இப்போதெல்லாம் பேசுகிறாள்.... இப்படிப்பட்ட நேரங்களில் எல்லா பொம்பளைகளுமே ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள் - சற்று இதை மனதிற்குள் ரசித்தவாறே கனகசபாபதி சொன்னார்.

''யாரும் எனக்கு எதுவும் செய்யலை. வாழ்க்கைதான் கொஞ்ச நாளா என்னை ஏதோ செய்யுது. அதே நேரம் ஏதோ செய்யலை.

இப்பச் சொல்லிடறேனே நான் ஒரு உண்மையை.... கொஞ்ச நாளா எனக்கு எங்கேயாவது ஓடிப் போயிரலாம்னு ஒரு நெனைப்பு அடிக்கடி மனசில வர ஆரம்பிச்சிருக்கு....''

''அதாவது எங்க எல்லாரையும் விட்டுட்டு?''

''பர்ட்டிகுலரா உங்களைனு இல்லை. மொத்தத்ல இந்த வாழ்க்கையை விட்டுட்டு....''

வனிதாமணி ஒரு நிமிடம் பேசாமல் கனகசபாபதியையே பார்த்துக் கொண்டிருந்தாள். பேச்சின் இழை வேறொரு திசையை நோக்கி நகர்வது தெரிந்தது.

''ஒண்ணை மட்டும் சொல்லிடறேன். முன்னே பின்னே யோசிக்காம ஏதாவது பிரச்னையை ஏற்படுத்திடாதீங்க....'' - வனிதாமணி ஒரு எச்சரிக்கையான தொனியில் சொன்னாள்.

''அதனாலேதான் திரும்பி ஓடி வந்திடறேன்.''

''என்ன பிடிக்கலை உங்களுக்கு - வாழ்க்கையில?'' சிறிது மாறிவிட்ட மனநிலையில் வனிதாமணி கேட்டாள்.

''வாழ்க்கையே பிடிக்கலை. எல்லாமே அலுப்பா சலிப்பா இருக்கு. எப்பப் பார்த்தாலும் ஆபிஸ் ஆபிஸ்னு ஓடி ஓடி உழைச்சி மனசுக்குள்ள ரொம்ப ஓடாகிப் போயிட்டேன்.... கரெக்ட்டா சொன்னா - வாழ்க்கை ஃப்ரஷ்ஷா இல்லை. ரொம்பப் பழசா டல்லா இருக்கு. எதுவுமே இல்லை புதுசா.... ஒரே செக்கு மாட்டு லைஃப். நான் கேக்குறேன் - வாழக்கையே ஆபிஸ் போறதும் பணம் சம்பாதிக்கிறதும்தானா?''

''சினிமா போங்க. இல்லேன்னா டி.வி. பாருங்க. இந்த ரெண்டுமே பிடிக்கலைன்னா புக்ஸ் படிங்க. நல்ல ம்யூசிக் கேளுங்க. அடிக்கடி ஃப்ரண்ட்ஸை போய் பாருங்க.... இனிமே சனி ஞாயிறு ஆபிஸ் போகாதீங்க. ஒரு ஸண்டே ஏதாச்சும் தீம் பார்க் போயிட்டு வருவோம். இன்னொரு ஸண்டே பாண்டிச்சேரி போயிட்டு வருவோம். மாசத்ல ஒரு தடவை நம்ம தோட்டத்ல போய் இருந்திட்டு வருவோம். நீங்கதான் எங்கேயும் போகாம அடைக்கோழி போல வீட்டுலேயே இருக்கீங்க. பிறகு வாழ்க்கை எப்படி போரடிக்காம இருக்கும்?''

''நீ தப்பா செல்றே. வாழ்க்கை எனக்குப் பிடிக்காம போனதாலத்தான் நீ சொல்ற அடைக்கோழி மாதிரி ஆயிட்டேன்''



''சொல்லிக்காம மூணு நாள் திருப்பதிக்கு ஓடிப் போயிட்டா உடனே வாழ்க்கை பிடிச்சிப் போயிடுமா?''

''அந்த மூணு நாளாவது பிடிக்காத வாழ்க்கைக்கு வெளியில இருக்கேனே - அதைப் பாரு நீ''

''ப்ரியா வயசுக்கு வந்திருக்கிற இப்பப் பார்த்து என் வயித்ல புளியை கரைக்காதீங்க....''

''நோ நோ. அப்படியெல்லாம் நெனைச்சி பயந்திடாதே. உன்னையும் பசங்களையும் விட்டுட்டு எங்கேயும் போயிட மாட்டேன்....''

''இதோ மூணு நாள் போக முடிஞ்சிருக்கே. என்கிட்ட சொல்லிட்டுப் போயிருக்க வேண்டியதுதானே....''

''எல்லாம் இப்பச் சொல்வே. தனியா நான் திருப்பதி போயிட்டு வரேன்னு சொன்னா உடனே நீ ஆயிரத்தெட்டு கேள்வி கேப்பே. தனியா போகவேண்டாம்னு சொல்லிடுவே. இல்லேனா- எல்லோருமா சேர்ந்து ஒருநாள் போலாம்னு சொல்லுவே.... அதனாலேதான் சொல்லிக்காமே நான் ஓடினது....''

''எனக்கு என்னமோ பயமா இருக்கு - உங்களுக்கு ஏதோ ஆயிட்டு இருக்கோன்னு....''

''பயப்படாதே. எனக்கு எதுவும் ஆயிடாது. ஐ ம் வெரி ஸ்ட்ராங் பர்சன்''

வனிதாமணி சில நிமிடங்கள் மௌனமாக இருந்துவிட்டு பேச்சை வேறொரு திசைக்கு மாற்றுகிற மாதிரி கேட்டாள்.

''சரி - திருப்பதியில மூணு நாள் தனியா என்ன செஞ்சீங்க?''

வனிதாமணி இப்படிக் கேட்டதும் கனகசபாபதிக்கு அவளை மிகவும் பிடித்துப் போய்விட்டது. அவருடைய வார்த்தையை பாவம் நம்புகிறாளே.... வேறொன்றும் கனகசபாபதிக்கு மிகவும் தெளிவாகவே தெரிந்துவிட்டது. அவர் மேல் ஏற்பட்டிருந்த கோபம் வனிதாமணிக்குள் கணிசமாகவே குறைந்து கொண்டிருந்தது.- கனகசபாபதி இந்த நிலையை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார்.

❖

## 21

கனகசபாபதி என்றைக்காவது சந்தானலஷ்மியின் சைதாபேட்டை வீட்டுக்கு வந்து இரண்டு மூன்று மணி நேரங்கள் இருந்துவிட்டுப் போகும் நேரங்களில் அவரிடம் இருந்து சந்தானலஷ்மிக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு போன்கூட வராது. என்றைக்கும் இல்லாத அதிசயமாகவும் முதல் முறையாகவும் மூன்று நாட்கள் தங்கி விட்டுப் போயிருந்த அவரிடம் இருந்து சந்தானலஷ்மி அதனால் நாலைந்து தினங்களுக்கு போன் எதையும் எதிர்பார்க்காமல் அவள் பாட்டுக்கு இருந்து கொண்டிருந்தாள். சாப்பிட்டு சாப்பிட்டு பேசாமல் படுத்து தூங்கிக் கொண்டிருந்தாள். பெரும்பான்மையான நேரம் தூக்கத்திலேயே கழிந்து கொண்டிருந்ததில் தனிமையின் விரிந்த சூனியத்தைக்கூட சந்தானலஷ்மி அதிகமாக உணராதவளாக இருந்தாள். ஒரு வாரம் சென்றும் கனகசபாபதியிடம் இருந்து எந்த போனும் வராததில் கொஞ்சம் ஒரு மாதிரியாகி விட்டாள்.

ஆபிசில் கனகசபாபதிக்கு தனியாகவும் ஒரு 'பர்சனல்' போன் இருந்தது. 'ஸெல்-போன்' வைத்துக் கொள்வதில் அவருக்கு ஒரு பிடிவாதமான வெறுப்பு இருந்தது. ஏதேனும் அவசரமாக சொல்ல வேண்டி இருந்தால் சந்தானலஷ்மி பர்சனல் போனில் நம்பரில் கனகசபாபதியை கூப்பிட்டு விடலாம். ஆனாலும் அவசரப்பட்டு அவள் அவரை அந்த நம்பரில் கூப்பிட்டு விடமாட்டாள். கூடியவரை எந்த போனிலும் தன்னை கூப்பிட்டு விடவேண்டாம் என்று கனகசபாபதியும் சந்தானலஷ்மியிடம் சொல்லி வைத்திருந்தார். இத்தனை வருடங்களில் அவள் மூன்றே மூன்று தருணங்களில் மட்டுமே கனகசபாபதியை அந்த பர்சனல் போனில் கூப்பிட்டு இருக்கிறாள். - இன்னும் ஒரே ஒரு நாள் பார்க்கலாம்; அப்போதும் அவரிடம் இருந்து போன் வராமல் இருந்தால் அவருக்கு என்ன ஏதுவென்று போன் பண்ணி விசாரித்து விடலாம் என்ற தீர்மானத்தில் சந்தானலஷ்மி மேலும் ஒரு நாள் படுக்கையில் படுத்தபடி கனகசபாபதியின் போனுக்காக காத்திருந்தாள். அன்று அவளுக்கு ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு நிமிஷமாக நகர்ந்து கொண்டிருந்தது.

-அந்த நிமிடங்களில் கனகசபாபதி அவளுடன் தங்கியிருந்த மூன்று நாட்களின் ஒவ்வொரு நிமிஷத்தையும் சந்தானலஷ்மி



மனதிற்குள் அசைபோட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். பேசிக் கொண்ட ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாக நினைவுபடுத்திப் பார்த்தாள். கனகசபாபதி தங்கியிருந்த அந்த மூன்று நாட்களும் ஏதோ ஒரு நாடகத்தின் இறுதிக் காட்சிகளைப் போல திடீரென தோன்றியதில் சந்தானலஷ்மி பயந்து போய்விட்டாள். உடனே மனதில் ஒரு பதட்டம் ஏற்பட்டு விட்டது. வீட்டின் வாசலுக்கே போகாதவள் போய் போய் நின்றாள். மொட்டை மாடியில் போய் நின்றாள். ஃப்ரிட்ஜை திறந்து சில நிமிடங்களுக்கு அதை மூடாமல் அதன் இளம் குளிரில் நின்றாள். கனகசபாபதி விட்டுப் போயிருந்த சிகரெட் பாக்கெட்டில் இருந்து சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்து யந்திரகதியில் புகையை இழுத்து இழுத்து விட்டபடி இருந்தாள். சந்தானலஷ்மிக்கு அந்த நிமிஷமே கனகசபாபதியுடன் பாலுறவு வைத்துக்கொள்ள வேண்டும்போல இருந்தது. அவரை ஏதோ ஒரு வெறி தீர திட்டவேண்டும் போலவும் இருந்தது. நிஜமாகவே வாயைத் திறந்து கனகசபாபதியை சப்தமாகவே அவள் திட்டிக் கொண்டிருந்தபோது சந்தானலஷ்மியின் வீட்டுக் கதவு லேசாக தட்டப்பட்ட சப்தம் கேட்ட மாதிரி இருந்தது. நிஜமாகவே கதவு தட்டப்பட்டதா என்பது தெரியாமல் சந்தானலஷ்மி கனகசபாபதியை திட்டுவதை நிறுத்திவிட்டு மௌனமாக இருந்தாள். ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் கதவு தட்டப்படும் சப்தம் கேட்கத்தான் செய்தது. சந்தானலஷ்மி சிறிது தயங்கினாள். கதவைத் தட்டுவது கண்டிப்பாக கனகசபாபதி கிடையாது. தம்பி சுந்தரேசனாக இருக்க வாய்ப்பு இல்லை. எப்போது அவன் வருவதாக இருந்தாலும் போன் பண்ணாமல் வரமாட்டான். வரவும் கூடாது. 'ஹவுஸ் ஓனர்' பழனிச்சாமியாக இருக்குமோ என்ற எண்ணத்தில் சந்தானலஷ்மி கொஞ்சம் எரிச்சல் அடைந்தாள்.

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை சும்மா அவளைப் பார்த்து விட்டுப் போகலாம் என்ற நினைப்பில் வந்ததாக சொல்லி; அவ்வப்போது சந்தானலஷ்மியின் எழுச்சிமிக்க மார்புப் பிரதேசத்தை கடைக் கண்ணால் பார்த்து ரசித்துவிட்டு ஏக்கப் பெருமூச்சுடன் எழுந்து போவது 'ஹவுஸ் ஓனர்' பழனிச்சாமிக்கு வழக்கம். அதுவும் கனகசபாபதி இல்லாத நேரம் பார்த்து வருவதுதான் அவரின் குணம். ஆனால் வாயால் அவர் சொல்வது மட்டும் 'நான் எப்ப வந்தாலும் சாரைப் பாக்கவே முடியலை' என்ற வார்த்தைகள். சந்தானலஷ்மிக்கு பழனிச்சாமியின் வருகையின் உள் நோக்கம் தெரிந்து கொள்ளமுடியாத கம்ப சூத்திரமாயென்ன....

பூதக் கண்ணாடியால் பார்ப்பது போல தெரியத்தான் செய்யும்.... இருந்தாலும் தெரிவதை அவரிடம் காட்டிவிட முடியாது. ஹவுஸ் ஓனர்..... கல்யாண வயதில் வீட்டில் மகளை வைத்துக் கொண்டு வாழ்க்கையில் கிடைக்காத ஏதோ ஒன்றைத் தேடி தேடி ஓடி வருகிறார் ஆசாமி. தேடுவது அந்த ஆசாமிக்குக் கிடைக்கப் போவது கிடையாது. கண்ணால் - அதுவும் அரைகுறையாய் பார்த்து விட்டுத்தான் போக முடியும். வந்து பார்த்துவிட்டுப் போகட்டும் என்பது சந்தானலஷ்மியின் அபிப்பிராயம்....

சந்தானலஷ்மி எழுந்து போய் கதவைத் திறந்தாள். வாசலில் நின்றது பழனிச்சாமி இல்லை. கிட்டத்தட்ட அவளுடைய வயதில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். தங்கத்தில் தாலிக் கொடி கேட்டுக்கொண்டிருந்த - குடும்பப் பெண் என்பதை பார்த்த வினாடியில் கவனித்துவிட்டாள் சந்தானலஷ்மி. அந்தப் பெண்ணை அவள் அவ்வப்போது பார்த்திருக்கிறாளே தவிர - பேசி அறிமுகம் இல்லை. ''ஸாரிங்க; தொந்தரவுக்கு மன்னிக்கணும். எனக்கு நீங்க சின்ன உதவி ஒண்ணு செய்யணும்....'' - என்றாள் அந்த குடும்பப் பெண்.

சந்தானலஷ்மிக்கு இது ரொம்ப ஆச்சர்யம். அந்தத் தெருவின் நல்ல குடும்பத்துப் பெண் ஒருத்தி படியேறி வந்து அவளிடம் உதவியும் கேட்டு நிற்பது சாதாரணமான விஷயம் கிடையாது. இந்த ஒன்றுக்கே சந்தானலஷ்மி அந்தப் பெண்ணுக்கு எந்த உதவியையும் செய்வாள். அதனால் அந்தப் பெண்ணை ''முதல்ல வீட்டுக்குள்ள வாங்க....'' என்று கூப்பிட்டாள். காலில் அணிந்திருந்த செருப்புக்களை வாசல் படியில் விட்டுவிட்டு அந்தப் பெண் நன்றி சொல்லியவாறே வீட்டிற்குள் நுழைந்தாள். சந்தானலஷ்மி அன்போடு அவளை ''உக்காருங்க'' என்றாள் நாற்காலியை இழுத்துப் போட்டு....

நாற்காலியில் உட்கார்ந்த அந்தப் பெண் ''ஸாரி; முதல்ல நான் வந்த காரியத்தை முடிச்சிரட்டுமா?'' என்று கேட்டாள்.

''தாராளமா....''

''ஒண்ணுல்ல மேடம்.... எங்க ஃபேமிலி டாக்டர் அசோக் நகர்ல இருக்கார். நாளைக்கி காலையில அவர்கிட்ட அப்பாய்ன்ட்மெண்ட் வாங்கணும். எங்க வீட்டு போன் வொர்க் பண்ணலை. நம்ம தெருமுனை பி.சி.ஓ. கடையும் பூட்டிக்கிடக்கு. என் டாட்டருக்கு உடம்பு சரியில்லை. அதான் உங்க போனை ஒரு ஒரு நிமிஷம் யூஸ் பண்ணிக்கலாமான்னு கேட்க வந்தேன். போனுக்கான காசை நான் குடுத்திடறேன்....'' - இத்தனையையும் அந்தப் பெண் எத்தனை வேகமாக சொல்லணுமோ அத்தனை வேகமாக சொன்னாள். ஆனால் - ''ஒண்ணுல்ல மேடம்....'' என்று ஆரம்பித்து; தொடர்ந்து சொன்ன எதுவும் சந்தானலஷ்மியின் காதில் விழுந்ததாவென்று தெரியவில்லை. காரணம் இதுதான். அவளையும் இந்த விசாக தோட்டத்து இல்லத்தரசி ஒருத்தி படியேறி வந்து 'மேடம்' என்று கூப்பிட்டுப் பேசியது சந்தானலஷ்மியின் தலையில் பெரிய கிரீடம் வைக்கிற மாதிரியான விஷயம், நாயுடு ஹால், சரவணா ஸ்டோர், என்றெல்லாம் போகும்போது யாரெல்லாமோ அவளை மேடம் மேடம் என்று கூப்பிடத்தான் செய்வார்கள். அதெல்லாம் சந்தானலஷ்மியின் மனதைப் போய் தொட்டது கிடையாது. இன்று அவளுடைய அதே தெருவைச் சேர்ந்த அதுவும் பெரிதாக தங்கத்தில் தாலிக்கொடி போட்டிருக்கிற குடும்பப் பெண் வந்து 'மேடம்' என்று சொன்னபோது அந்த சொல் நேராக சந்தானலஷ்மியின் மனதில் எந்த இடத்தைப் போய் தொடணுமோ அந்த இடத்தைப் போய் தொட்டது. சந்தானலஷ்மி அதை உடனே வார்த்தைகளில் பிரதிபலித்தாள். ''எத்தனை போன் வேண்டுமானாலும் பண்ணிக் கோங்க.... ஒரே ஒரு கண்டிஷன். போனுக்கு காசு மட்டும் வாங்கிக்க மாட்டேன்....''

''தேங்ஸ் மேடம். எனக்கு ஒரே ஒரு போன்தான் பண்ணனும்....'' என்று கூறிய அந்தப் பெண் அவளுடைய குடும்ப டாக்டருக்கு போன் பண்ணி இரண்டொரு நிமிடங்கள் பேசி அப்பாய்ன்ட் மெண்ட் வாங்கிக் கொண்டாள்.

''என்ன உங்க டாட்டர் உடம்புக்கு?'' - சந்தானலஷ்மி கேட்டாள்.

''ரெண்டு நாளா விட்டு விட்டு காய்ச்சல் வந்திட்டே இருக்கு. நம்ம தெருவுல ரெண்டு மூணு பேருக்கு மலேரியா இருக்காம். ''பயமாயிருக்கே....''

''என்ன வயசாகுது உங்க டாட்டருக்கு?''

''எட்டு வயசாகுது. இவ சின்னவ. பெரியவளுக்கு பதினோரு வயசு. எங்க வீடு - இங்கிருந்து ஆறாவது வீடு....''

''நான் உங்களை பாத்திருக்கேன்''

''எனக்குத் தெரிஞ்சி நீங்க யார்கிட்டேயுமே பேச்சு வச்சிக்கிறதில்லை. வீட்டுக் கதவைக்கூட எப்பவுமே சாத்தியே வச்சிருக்கீங்க.... ரொம்ப 'ரிசர்வட்' போல இருக்கு நீங்க....''

''அப்படியெல்லாம் இல்லீங்க.... பொதுவா நானா யார்கிட்டேயும் போய் ஜாஸ்தி பேசமாட்டேன். யாரும் அவுங்களா வந்து நல்லா பேசினாங்கன்னா நானும் பேசுவேன்....''

''உங்க பேர் சந்தானலஷ்மிதானே?'' - அந்தப் பெண் கேட்டாள்.

''கரெக்ட்டா என் பேரையெல்லாம் தெரிஞ்சி வச்சிருக் கீங்களே....''

''ஆறு வருஷமா போல இங்கியே இருக்கீங்களே.... பேர் கூடவா தெரியாம போயிடும்....''

அந்தப் பெண் இப்படிச் சொன்னதும் சந்தானலஷ்மிக்குக் கொஞ்சம் ஒரு மாதிரியாக இருந்தது. பெயர் மட்டும்தான் தெரியுமோ; இன்னும் என்னவெல்லாம் தெரியுமோ.... இதனால் தான் யாரோடு பேச்சு வைத்துக்கொள்ளவும் சந்தானலஷ்மிக்கு ஒரு தர்மசங்கடம்....

''உங்க பேர் தெரியாது எனக்கு'' - சந்தானலஷ்மி சொன்னாள்....

''என் பேர் கல்பனா....''

''அழகான பேர்....''

''எங்க வீட்டுக்கு ஒருநாள் வாங்களேன் நீங்களும்....'' கல்பனா மிகவும் சாதாரணமாகத்தான் கூப்பிட்டாள். ஆனால் அதற்கே சந்தானலஷ்மியின் மனசு நெகிழ்ந்துவிட்டது. இத்தனை வருஷத்தில் இந்தத் தெருவில் அவளையும் ஒரு மனுஷியாக நினைத்து வீட்டுக்கு வரச் சொல்லி கூப்பிட்டு இருப்பது இந்த கல்பனாதான். வேறு யாரும் வெறும் வாய் வார்த்தைக்குக்கூட கூப்பிட்டது கிடையாது சந்தானலஷ்மியை.... 'ஹவுஸ் ஓனர்' பழனிச்சாமி வரும்போது போகும்போது அவளை அவருடைய வீட்டுக்கு வரச் சொல்லி கூப்பிடத்தான் செய்வார். ஆனால் அது வழிசலில் சேர்த்தி. பழனிச்சாமியின் மனைவி எத்தனையோ தடவை சந்தானலஷ்மியை தெருவில் நேருக்கு நேர் பார்ப்பாள். ஆனால் வாயைத் திறக்க மாட்டாள். அந்த நேரங்களில் சந்தானலஷ்மிக்கு கோபம் வரும். கூப்பிட்டால் குறைந்து போய் விடுவாளோ என்ற ஆத்திரம் வரும். கூப்பிட்டால் அவளுடைய புருஷன்காரனை தூக்கிக்கொண்டு போய்விட சந்தானலஷ்மி என்ன பொம்பளை ராவணனா? நினைத்தால் பொம்பளை ராவணனாக ஆவதற்கு இருபத்தி நான்கு மணி நேரமாகாது சந்தானலஷ்மிக்கு. ஆனால் அதெல்லாம் தேவை



கிடையாது அவளுக்கு. இந்த மாதிரி இருக்கின்ற சூழ்நிலையில்தான் வந்து கல்பனா எந்த கல்மிஷமும் இல்லாமல் வீட்டுக்கு வரச் சொன்னதும் சந்தானலஷ்மியின் மனசு பாகுபோல் கரைந்து விட்டது....

''அதுக்கு என்னங்க.... கண்டிப்பா ஒரு நாள் வரேன்....'' என்று மட்டும் சொன்னாள். அதற்குமேல் அவளால் எந்த வார்த்தையையும் சொல்ல முடியவில்லை. சொல்ல முடியாமல் மனதிற்குள் அப்படி ஒரு உணர்ச்சி நெரிசல்.... அதுவும் ஏழு நாட்களாக கனகசபாபதியிடம் இருந்து போன் எதுவும் வராததில் தவிப்புக்கு ஆளாகிப் போயிருக்கும் நேரத்தில் கல்பனாவின் அழைப்பு சந்தானலஷ்மிக்கு இதமாக இருந்தது.

''உங்க வீட்டுக்கு போன் பண்றதுக்காக வந்ததால சொல்றேன்னு நெனைச்சிக்காதீங்க மேடம். அப்பப்ப உங்களைப் பாக்குற போதெல்லாம் உங்க ஃப்ரண்ட்ஷிப் கிடைக்காதான்னு நினைச்சிப்பேன்'' - இது கல்பனா.

''அய்யோ.... இப்படியெல்லாம் சொல்லி என்னைப் பெரிய மனுஷி ஆக்கிடாதீங்க.... நான் ரொம்ப சாதாரணமானவ...'' - இது சந்தானலஷ்மி.

''ரெண்டு பேர் ஃப்ரண்ட்ஸா இருக்கறதுக்கு யாரும் யாருக்கும் பெரிய மனுஷியா இருக்க வேண்டியதில்லை.....'' - இது கல்பனா.

''ஆனா இந்த நிமிஷம் எனக்கு நீங்க பெரிய மனுஷிதான்....'' - சந்தானலஷ்மி.

''போச்சிடா - கடைசியில என்னைப் பெரிய மனுஷி ஆக்கிட்டீங்க''

''ரெண்டு பொண்ணுங்கதானா உங்களுக்கு?''

''ரெண்டு பொண்ணு போதாதா செலவுக்கு?''

''உங்க ஹஸ்பெண்ட் எங்கே வொர்க் பண்றார்?''

''சவூதி அரேபியாவில இருக்கார். அங்கேதான் வேலை அவருக்கு....''

''அப்ப நீங்க உங்க பொண்ணுங்ககூட இங்கே தனியாவா இருக்கீங்க?''

''ஆமா. கல்யாணமான காலத்ல இருந்தே அவர் சவூதியிலதான் இருக்கார். நான் இங்கே இருக்கேன். ஆரம்பத்ல மூணு வருஷம் எங்க மாமியார் மாமனார்கூட புரசைவாக்கத்ல இருந்தேன். இப்ப அவங்க ரெண்டு பேருமே இல்லை. இறந்துட்டாங்க....''

''ஏன் - நீங்களும் போய் உங்க கணவர்கூட சவூதி அரேபியாவில இருக்கலையா?''

''இல்லைங்க மேடம். அதெல்லாம் சரியா வரலை. எல்லாத்தையும் யோசித்துப் பாத்திட்டுத்தான் நான் இங்கேயே இருந்திடறதுன்னு முடிவு செஞ்சோம்....''

''அப்படின்னா உங்க கணவர் எவ்வளவு நாளைக்கு ஒரு தடவை இங்கே வந்திட்டுப் போவார்?''

''வருஷத்துக்கு ஒரே ஒரு தடவை.... அதுவும் ஒரே ஒரு மாசம் வந்து இருந்திட்டுப் போவார்''

''அச்சச்சோ வருஷத்துக்கு ஒரு தடவையா.... அதுவும் ஒரே ஒரு மாசந்தானா? அப்ப உங்களுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குமே?'' - சந்தானலஷ்மி நிஜமான ஆதங்கத்தோடு கேட்டாள். இந்தச் செய்தியை அவள் கல்பனாவிடம் இருந்து எதிர்பார்க்கவே இல்லை.

''கஷ்டமா.... பெரிய கொடுமைங்க மேடம். புருஷனை வேலைக்காக வெளிநாட்டுக்கு அனுப்பிட்டு; இங்கே வொய்ஃப் மட்டும் பசங்களை வச்சிக்கிட்டு தனியா இருக்குற பாடு இருக்கே பாருங்க - அதை மாதிரி வேதனையான விஷயம் எதுவுமே இருக்க முடியாது. பொழுது விடிஞ்சி பொழுது போனா - தனிமைதான் வீட்ல. பசங்களும் ஸ்கூலுக்குப் போயாச்சினா கேக்கவே வேண்டாம். ஒவ்வொண்ணுக்கும் நானேதான் போகணும். நாந்தான் பேங்க் போகணும். நாந்தான் டெலிபோன் பில் கட்டறதுக்குப் போகணும். ஆடிட்டரைப் பாக்கறதுக்கு ஓடியாகணும். பசங்களுக்கு உடம்புக்கு எதுவும் சரியில்லையா - இதோ அதுக்கும் நாந்தான் டாக்டருக்கு போன் பண்ணணும். நாளைக்கு டாக்டர்கிட்டே கூட்டிட்டு ஓடணும். அப்பப்ப பசங்களுக்கு ஸ்கூல்ல ஏதாச்சும் பிரச்னைன்னா - அதுக்கும் நான் ஓடியாகணும். இடையில சொந்தக்காரங்க யார் வீட்லேயாவது கல்யாணம் காட்சின்னு ஏதாச்சும் வந்திடும். அங்கேயும் நான் தனியாவே போயாகணும்.... ரொம்ப கொடுமையான விஷயம் இதான். ஒரு வீட்டு விசேஷத்துக்கு தனியா போயிட்டு வர்ர சங்கடம் இருக்கு பாருங்க - அந்த



கஷ்டத்தைச் சொல்றதுக்கு நிஜமா எனக்கு வார்த்தையே கிடையாதுங்க மேடம்.... ஒரு தீபாவளிக்கு இருக்க மாட்டார். ஒரு பொங்கலுக்கு இருக்கமாட்டார். இதுக்கெல்லாம் இடையில பசங்களை அப்பப்ப நாந்தான் சினிமாவுக்கோ பீச்சுக்கோ வேற கூட்டிட்டுப் போய் வரணும். சின்ன ஒரே ஒரு ஆறுதல் என்னன்னு கேட்டீங்கன்னா வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை சவூதியில இருந்து அவர் எங்களுக்கு போன் பண்ணிப் பேசிடுவார்.... அதனால வெள்ளிக்கிழமை காலையில பொழுது விடியும் போதே மனசு அவரோட போனுக்குத் தயாராயிடும். வெள்ளிக்கிழமை வரும் போது பாத்து வீட்ல போன் அவுட் ஆஃப் ஆர்டர் ஆச்சுன்னு வச்சிக்கோங்க - மனசு அப்படியே நொறுங்கிப் போயிடும் நொறுங்கி....''

- கல்பனா அவளின் பிரச்னையைப் பற்றி சொல்லிக்கொண்டே வந்த - இந்த குறிப்பிட்ட இடத்தில் சந்தானலஷ்மியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. கட்டுப்படுத்த முடியாமல் இரண்டு கண்களில் இருந்தும் கண்ணீர் சட்டென நிறைந்து வழிந்து விட்டது...

❖

## 22

நிறைந்து வழிந்துவிட்ட கண்ணீரை சந்தானலஷ்மி அவசரமாக துடைத்துவிட்டுக் கொண்டாள். இந்த கல்பனாவைப் போல் அவளும் வாழ்க்கையில் வேறொரு விதத் தனிமையின் கொடுமையில்தானே இருக்கிறாள்.... இந்த நிமிஷம் கனகசபாபதியிடம் இருந்து ஒரு போனுக்காகத்தானே காத்துக் கொண்டிருக்கிறாள். சந்தானலஷ்மியின் மனசு பொருமியது. அவளின் உணர்வு மூண்ட முகத்தையும் வழிந்துவிட்ட கண்ணீரையும் பார்த்த கல்பனா - தான் பேசிக் கொண்டிருந்ததை சட்டென நிறுத்திக் கொண்டாள். சந்தானலஷ்மியிடம் இந்த கண்ணீரை அவள் எதிர்பார்க்கவில்லை. அதனால் சிறிது பதறிப் போய்விட்டாள்.

''ரொம்ப ஸாரிங்க மேடம்; நீங்க இவ்வளவு ஸாஃப்ட்டா இருப்பீங்கன்னு தெரிஞ்சிருந்தா என்னோட இந்தக் கஷ்டத்தையெல்லாம் உங்ககிட்ட பேசியிருக்கவே மாட்டேன்'' - என்று

சொல்லியவாறே கல்பனா சந்தானலஷ்மியின் கையை பரிவுடன் தொட்டாள்.

கல்பனாவின் இந்த இயல்பான தொடல் சந்தானலஷ்மிக்கு ஓர் அசாதாரண தொடலாக இருந்தது. நினைவு தெரிந்த காலத்தில் இருந்தே அவளை இப்படி ஒரு பரிவுடன் யாரும் தொட்டது கிடையாது. கசப்பான நிஜம் இது. சந்தானலஷ்மியை ஒரு மனித ஜீவனும் தொட்டதில்லை. கனகசபாபதியின் தொடல் எதுவுமே தொடல் கிடையாது உண்மையில். அது வேறு. அவரின் தொடல் வெறும் ஆணின் தொடல். கல்பனாவின் தொடல் பெண்ணின் தொடல் கிடையாது. அது மானிட ஜீவனின் பரிவுத் தொடல். ஆணின் தொடலுக்காக சந்தானலஷ்மி ஏங்கிப் போயிருந்த காலமும் உண்டுதான். ஆனால் இன்று ஆணின் தொடல் என்பதற்கும் மேலான தொடலை; அதுவும் நிரந்தர தொடலுக்குத்தானே அவளின் மனசு கிடந்து அடித்துக் கொள்கிறது.... அந்த நிரந்தர தொடல்தான் கிடைக்கமாட்டேன் என்கிறது - கனகசபாபதியிடம் இருந்தும். சந்தானலஷ்மி விம்மலுடன் கண்களை மூடிக் கொண்டாள்.

சில நிமிடங்களில் மனதின் உணர்ச்சிகளை சமனப்படுத்திக் கொண்ட சந்தானலஷ்மி ''இப்படியே கொஞ்ச நேரத்துக்கு என் கையைத் தொட்டுட்டே இருக்கீங்களா?'' என்றாள்.

சந்தானலஷ்மியின் உள்மன கிடக்கை கல்பனாவின் மனதைச் சொரேல் என தொட்டுவிட்டது. அதனால் கல்பனா சந்தானலஷ்மியின் மற்றொரு கையையும் பிடித்துக் கொண்டாள்.

''இந்த ஒரே சந்திப்புல நாம் ரொம்ப ஃப்ரண்ட்ஸா ஆயிட்டோம்னு நினைக்கிறேன்....'' - என்றாள் சந்தானலஷ்மி; மனம் நெகிழ்ந்து போய்....

''சந்திக்கிறதுக்கு முன்னாடியே எனக்கு நீங்க ஃப்ரண்டுதான்'' - கல்பனா

''எப்ப என்னை ஃப்ரண்டுனு நெனைச்சீங்களோ - அப்பவே என்னை வந்து மீட் பண்ணியிருந்தீங்கன்னா எவ்வளவோ நல்லாயிருந்திருக்கும்....''

''ரொம்ப நியாயமான வார்த்தை மேடம்''

''பொழுது விடிஞ்சி பொழுது போனா தனியாவே வீட்ல இருக்கறதா சொன்னீங்களே - அதைவிட மோசமான தனிமையில நான் கிடக்கேன் இங்கே கல்பனா. உங்களுக்காவது ரெண்டு



குழந்தைங்க இருக்காங்க. என்னைச் சொல்லுங்க.... எனக்கு இங்கே யார் இருக்கா....?''

''எனக்கு உங்க மனசு நல்லா புரியுது. தனியாவே இருக்கறது ரொம்ப கஷ்டம்....''

''பாருங்க கல்பனா. ஒரு வாரமா அவர்கிட்ட இருந்து ஒரு போன்கூடக் கிடையாது. ஆளும் வரலை....''

''நான் உங்களை ஒண்ணு கேக்கலாமா மேடம்?''

''கேளுங்க''

''அவர் உங்களை கல்யாணம் பண்ணிட்டுத்தானே இருக்கார்?''

''இல்லையே.... பாருங்க; கழுத்ல வெறும் செயின்தான் போட்டுட்டு இருக்கேன்''

''உங்களை கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அவரை நீங்க கேக்கலையா?''

''எத்தினிவாட்டிதான் கேக்கறது.... அதை மட்டும் கேட்காதேன்னு சொல்லிட்டார்.... ஒண்டி மனுஷி நான். கேக்கறதுக்கு மேல என்ன செய்ய முடியும் சொல்லுங்க....''

''ஒரு குழந்தையாவது பெத்துக்கோங்க....''

''நானா மாட்டேங்கிறேன்.... ஆனா அதுக்கும் வழியில்லாம பண்ணிட்டாரே. எப்பவோ குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷனை பண்ணிட்டார். அதனால எனக்கு குழந்தை பிறக்கறதுக்கும் சான்ஸ் கிடையாதாம்.''

''உங்களுக்குக் குழந்தை வேணும்ங்கிற ஆசை இருக்கா மேடம்?''- கல்பான கேட்டாள்.

''ஆசைக்கும் மேல பேராசையே இருக்கு....''

''அப்ப வேற யாராவது நல்ல மனுஷனா பாத்து கல்யாணம் பண்ணிக்கோங்க'' - இதை சிறிய தயக்கம்கூட இல்லாமல் கல்பனா சொன்னதில் சந்தானலஷ்மிக்கு மிகவும் ஆச்சர்யமாகிவிட்டது.

''நெஜமாவா சொல்றீங்க?'' என்று கேட்டாள்.

''நெஜமாத்தான் சொல்றேன் மேடம். உங்களை இவர் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு சொல்லிட்டார். அப்ப உங்களை கடைசிவரை வச்சி காப்பாத்துவாரான்னு தெரியலையே....''

''காப்பத்துவார் என்கிற நம்பிக்கையிலதான் இருக்கேன்....''

''காப்பாத்தலைன்னா?''

''அந்தப் பயமும் மனசுக்குள்ள இருக்கத்தான் செய்யுது.''

''தனிமையில இந்தப் பயமும் சேர்ந்திட்டா கேக்கவே வேண்டாம்....''

''சத்தியமான வார்த்தை இது....''

அப்போது டெலிபோன் மணி அடித்தது. சந்தானலஷ்மி வேகமாக எழுந்தாள்.

''போன் பண்றார். ஒரே ஒரு நிமிஷம் இருங்க. பேசினதும் வந்திடறேன். எனக்கு உங்ககிட்ட நிறைய பேசணும்'' என்று சொல்லியவாறே ஓடிப்போய் ரிசீவரை எடுத்து காதில் வைத்து ஆர்வத்துடன் ''ஹலோ'' என்றாள். ஆனால் போனில் மறுமுனையில் பேசியது -கனகசபாபதி இல்லை; சந்தானலஷ்மியின் தம்பி சுந்தரேசன். உடனே அவளின் முகம் மாறிப் போய்விட்டது. பொதுவாக எப்போதாவது அவளுடைய தம்பி போன் பண்ணும் போது சந்தானலஷ்மியின் மனதுக்குச் சிறிது இதமாகத்தான் இருக்கும். அவளுக்கு போன் பண்ணிப் பேசவும் ஏதோ தம்பி என்ற பெயரில் ஒரு ஆத்மா இருப்பதில் சந்தோஷம்தான் சந்தானலஷ்மிக்கு. அவளை அவன் தேடி வருவது பணத்திற்காக மட்டும்தான் என்பதிலும்கூட திருப்தியும்தான் அவளுக்கு. ஏதாவது ஒரு வேலைக்கு ஒழுங்காக போய்க்கொண்டு; அவனும் அவளோடு வந்து இருக்கட்டும் என்ற சின்ன ஆசைகூட சந்தானலஷ்மிக்கு இருந்தது. ஆனால் சுந்தரேசனுக்குத்தான் கால் ஒரு இடத்தில் தரிப்பேனா என்றது. எந்த இடத்திலும் நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறான்.

''சுந்தரேசு நீயாக்கும். நான் அவர்னு நெனைச்சி ஏமாந்து போயிட்டேன்'' - என்றாள்.

''அவசரமா எனக்கு ஆயிரம் ரூபா வேணும் அக்கா''

''நாளைக்கிக் காலையிலதான் பேங்க்ல போய் எடுத்திட்டு வரணும். இப்ப கையில அவ்வளவு பணம் இல்லைடா....''

''நாளைக்கி சாயந்தரம் வரட்டுமா?''

''தெரியலையேடா. அவர் வந்திட்டுப் போய் ஒரு வாரத்துக்கு மேல ஆயிடுச்சி. இன்னைக்காவது நாளைக்காவது வருவார்....''



''நாளைக்கி சாயந்தரம் அஞ்சு மணிக்கு திருப்பியும் உனக்குப் போன் பண்ணிப் பாக்கட்டுமா?''

''பண்ணிப் பாரேன்''

''அப்புறம் எப்படி அக்கா இருக்கே?'' - சுந்தரேசன் கேட்டான்.

''நான் இருக்கேன் நல்லாத்தான். நீ எப்படி இருக்கே?''

''ஏதோ இருக்கேன் அக்கா....''

''சரி - நாளைக்கு போன் பண்றியா?''

''பண்றேன் அக்கா''

சந்தானலஷ்மி ரிசீவரை வைத்துவிட்டு கல்பனாவின் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''நான் அவர்தான்னு ஆசையா ஓடினேன்.... ஆனா என் தம்பி.''

''உங்க தம்பி எங்கே இருக்கார்?''

''அட்ரஸே கிடையாது அவனுக்கு. எங்கேயாவது யார் கூடேயாது இருப்பான். எந்த வேலையிலும் நிலையா இருக்க மாட்டான். கெட்ட சகவாசமெல்லாம் வேற.... ஓயாம சீட்டாடுவான். பணம் வேணுமாயிருந்தா என்னைப் பாக்க வருவான். வேற எதுக்காகவும் வரமாட்டான்''

''உங்களுக்கு அப்பா அம்மா''

''அவங்கள்ளாம் செத்துப் போய் ரொம்ப வருஷமாயிருச்சி. உறவுன்னு சொல்லிக்கவும் இங்கே மெட்ராஸ்ல யாரும் கிடையாது. தூரத்து உறவுக்காரங்க காஞ்சிவரம்; உத்திரமேரூர் பக்கம் கொஞ்ச பேர் இருக்காங்க. ஆனா ரொம்ப வருஷமா தொடர்பே இல்லாம போயிட்டதால - அவங்க யாரையும் தெரியவும் செய்யாது. என் ஊரு உறவு உலகம் எல்லாம் இந்த வீடுதான்.... இந்த உலகத்லேயும் நான் மட்டும்தான்....''

''கஷ்டந்தான் மேடம் இப்படி இருக்கறது.... என் நிலைமை இதுக்கு எவ்வளவோ தேவலை. என் அப்பா அம்மா ஆரணியில இருக்காங்க. ஒரு தம்பி அங்கே அவங்ககூட இருக்கான். நாலைஞ்சு மாசத்துக்கு ஒரு தடவை என் அப்பா அம்மா வந்து இங்கே என்கூட இருந்திட்டுப் போவாங்க.... ஒரே ஒரு தங்கச்சி எனக்கு. அவ கல்யாணமாகி விருத்தாச்சலத்ல இருக்கா....''

''உங்க தம்பிக்கு கல்யாணமாயிருச்சா?''

''ஆயிருச்சி. நாலு வருஷமாகுது. அவனுக்குக் கல்யாணமாகி.... ரெண்டு வயசுல ஒரு பையன் இருக்கான்....''

''நீங்க அப்பா அம்மாவைப் பாத்திட்டு வர ஆரணிக்கெல்லாம் போவீங்களா?''

''மே மாசம் ஸ்கூல் இருக்காதே. அப்ப போயிட்டு பதினைஞ்சி நாள் இருந்திட்டு வருவேன்.... அதோட சரி. மத்தபடி அங்கே போறதில்லை''

''இப்ப உங்க ஹஸ்பெண்ட் இங்கே வந்திட்டுப் போய் எவ்வளவு நாளாகுது?''

''எட்டு மாசமாகுது. இன்னும் அவர் லீவ்ல வர நாலு மாசம் இருக்கு. அவர் வரும்போது ஆஹான்னு ரொம்ப சந்தோஷமாத்தான் இருக்கும். ஆனா லீவ் முடிஞ்சி சவூதிக்குக் கிளம்புவாரு பாருங்க - அப்ப என் முகத்தை அவரால் பாக்க முடியாது. அவரு முகத்தை என்னால பாக்க முடியாது. திருப்பியும் ஒரு வருஷத்துக்கு பிரிஞ்சி இருக்கப் போறோம் என்கிற வேதனையில் பேச்சே வராது. ஒவ்வொரு நிமிஷமும் ஒரு டென்ஷன் உடம்பிலும் மனசிலும் விர்ருனு ஏறும். அதுவும் அவரை வழியனுப்ப எல்லாருமா டாக்சியில போயிட்டு இருக்கும்போது எங்களுக்குள்ள ஒரு சைலன்ஸ் இருக்கும் பாருங்க- அந்த சைலன்ஸ் ஆக்ச்சுவலா எப்படி இருக்கும்னு சொல்றதுக்கு வார்த்தை - எனக்குத் தெரிஞ்சி கிடையாது மேடம்....'' - இந்த இடத்தில் கல்பனா மிகவும் உணர்ச்சி வசப்பட்டுவிட்டதால் பேச்சை ஒரு நிமிஷம் நிறுத்திவிட்டு மௌனமாக இருந்தாள். பின் தன்னை சமனப்படுத்திக்கொண்டு தொடர்ந்து சொன்னாள்.

''மெட்ராஸ்ல எனக்குப் பிடிக்கவே பிடிக்காத இடம் - ஏர்போர்ட்தான். அங்கேதான் நானும் அவரும் பிரிவோம். அதனால அதைப் பார்த்தால் பிடிக்காது. புருசன் உயிரோட இருந்தும் நம்ம பக்கத்ல இருக்காம; வெளிநாட்டுல இருந்தா அதைப் போல ஒரு நரகம் வேற எதுவுமே இருக்க முடியாதுங்க மேடம். இதுல என்ன பெரிய வேடிக்கைனு கேட்டீங்கனா - கல்யாணம் நிச்சயமான சமயத்ல என்னைக் கட்டிக்கப் போறவர் வெளிநாட்டுல இருந்தது பயங்கர பெருமை எனக்குப் பக்கத்து வீட்டு பொண்ணுங்க கிட்டேல்லாம் பெரிசா அலட்டிக்கிட்டு திரிவேன். நிச்சயதார்த்த



சமயத்திலேயே அவர் எனக்கு ஃபாரின் வாட்ச்; ஃபாரின் நைலக்ஸ் புடவைங்க; ஒரு ஃபாரின் டூ இன் ஒன்.... அப்படின்னு ஒரே வெளிநாட்டுப் பொருளா வாங்கிட்டு வந்து எனக்குப் பரிசா குடுத்தார். கேக்கணுமா எனக்கு. குதியா குதிச்சேன். கல்யாணமெல்லாம் முடிஞ்சி; லீவும் முடிஞ்சி - அவர் சவூதிக்குக் கிளம்பினப்பதான் உறைச்சது எனக்கு. திரும்பி அவர் வர ஒரு வருஷமாகும்னு தெரிஞ்சபோதுதான் அப்படியே நொறுங்கிப் போயிட்டேன். எத்தனையோ நாள் அழுது அழுது கிடந்தேன். வேலையும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம்னு அவரை கிளம்பி வரச் சொன்னேன்....''

- இப்போது சந்தானலஷ்மி குறுக்கிட்டாள் ''பிரிஞ்சி இருக்க கஷ்டமா இருந்தா வேலையை விட்டுட்டு வந்திட வேண்டியது தானே கல்பனா?''

''அங்கேதானே உதைச்சது. வேலையை அவர் விட்டுட்டு வந்திடற மாதிரியான நிலைமையில இல்லையே என் மாமியார் குடும்பம்.... வேலைக்கு போய் கொஞ்ச நாள்ல, வியாபாரத்ல நொடிச்சிப் போயிருந்த என் மாமனாரோட கடனையெல்லாம் என் வீட்டுக்காரர் அடைச்சார். பிறகு - ஒரு தங்கச்சிக்கு கல்யாணத்தைப் பண்ணினார். பிறகு ஒரு ரெண்டு வருஷம் கழிச்சி எனக்கும் அவருக்கும் கல்யாணமாச்சி. அடுத்த ரெண்டாவது வருஷம் இன்னொரு தங்கச்சியை கல்யாணம் பண்ணி குடுத்தார். அதுக்குப் பிறகு மூணு வருஷம் போச்சி. நாங்க இப்ப இருக்குற வீட்டை வாங்கினோம். இது கொஞ்சம் பழைய காலத்து வீடு. நெறயா இடிச்சி, புதுசா மாத்தி கட்டி மாடியில் வேற ரெண்டு ரூம் எடுத்திருக்கோம்.... போதாதா - பணமெல்லாம் கரையறதுக்கு.... இதோ - ரெண்டு பொண்ணுங்களை வளர்த்துப் படிக்க வச்சி ஆளாக்கி நாளைக்கி நல்லபடியா கல்யாணம் பண்ணிக் குடுக்கணும். இப்ப பணம் சேர்த்தாகுது இதுக்கெல்லாம். கூடவே எங்க வயசான காலத்துக்கும் பணம் சேர்த்து வச்சிக்கணுமே.... உக்கார வச்சி சோறு போடறதுக்கு ஆம்பளைப் பசங்க வேற இல்லாம போயிருச்சே.... நெனைச்சா ஒவ்வொரு நேரத்துக்கு வெறுத்துத்தான் போயிரும்.... எந்த மாதிரியான நேரத்ல எல்லாம் என் பக்கத்ல இருக்கணுமோ - அப்ப எல்லாம் இருக்கமாட்டாருங்க.... ரொம்ப அந்தரங்கமான விஷயந்தான் - இருந்தாலும் மனசைத் திறந்து சொல்றேனே; என்னோட மொத்த குடும்ப வாழ்க்கையில சரியான செக்ஸே கிடையாதுங்க மேடம்.....''

தயக்கமே இல்லாமல் கல்பனா இதைச் சொன்னதைப் பார்த்த சந்தானலஷ்மி கொஞ்சம் அதிர்ந்துவிட்டாள்.....

❖

## 23

தன்னுடைய குடும்ப வாழ்க்கையில் சரியான செக்ஸ் கிடையாது என்று கல்பனா சொன்னதால் மட்டும் சந்தானலஷ்மி அதிர்ந்து போய்விடவில்லை. இன்றுதான்; சிறிது நேரத்திற்கு முன்புதான் வந்து அறிமுகமானாள். அதற்குள் இவ்வளவு தூரம் எந்தத் தயக்கமும் இல்லாமல் நிஜத்தைப் போட்டு உடைக்கிறாளே - என்றும்தான் அவள் அதிர்ந்து போனாள். சரியான செக்ஸ் கிடையாதென்று கல்பனா சொல்லியதில் சந்தானலஷ்மி சற்று குழம்பியும் போனாள்.

''என்ன மேடம் - திடீர்னு இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுறாளேன்னு முழிக்கிறீங்களா? ரெண்டு பொண்ணுங்களை முழுசா பெத்து வச்சிட்டு இப்படி செக்ஸே கிடையாதுன்னு சொல்றாளேன்னு குழம்புறீங்களா? அதுக்கான செக்ஸ் உண்டு. ஆனா அதெல்லாம் செக்ஸ்ல சேர்த்தியா என்கிறதுதான் கேள்வி. எனக்கும் அவருக்கும் இடையில எப்பவுமே அவதியோ அவதியோன்னுதான் செக்ஸ் நடக்கும். ஏன்னா நின்னு நிதானமா போறதுக்கு டயம் கிடையாது. லீவ்ல வந்தார்னா - வந்ததும் ஒரு நடை அம்மாவைப் பார்த்துவிட்டு வருவேன். என் தங்கச்சி விருத்தாசலத்ல இருந்து வந்து ரெண்டு நாள் இருந்திட்டுப் போவா. அவரோட தங்கச்சிங்க ரெண்டு பேரும் ஆளுக்கொரு தடவை வந்து பாத்திட்டுப் போவாங்க. இதுக்கு இடையில எனக்கே என்னோட தூரத்து நாள் வந்திடும். எல்லாருக்கும் மூணு நாள்னா எனக்கு நாலு நாள் இருக்கும். இப்படி எல்லாமா சேந்து பத்துப் பன்னிரெண்டுநாள் செக்ஸ் வச்சிக்க முடியாமலேயே ஓடிப் போயிரும். மிச்சம் இருக்குற இருபது நாள்லதான் முடிஞ்ச வரைக்கும் பாத்துக்கணும். செக்ஸ்னா-எனக்கு ஆற அமர நிதானமா கொஞ்சம் ரொமாண்ட்டிக்காகவும் இருக்கணும். இங்கே நேரம் கிடையாது அதுக்கெல்லாம். அதனோட நெட் ரிசல்ட் என்னன்னு கேட்டீங்கன்னா - கல்யாணமான இத்தனை வருஷத்ல நெனைச்சிப் பாத்துக்கிற மாதிரியான ஒரு



அற்புதமான செக்ஸ் எனக்குக் கெடைச்சதே இல்லை லைஃப்ல. அதனால எனக்கு செக்ஸே கிடையாது என்கிற மாதிரியேதான் ஃபீலிங் இருக்கு. புரியுதா உங்களுக்கு இப்ப என்னோட நெஜமான நிலைமை....''

''நெனைச்சா இதெல்லாம் ஏண்டா புரியுதுன்னு இருக்கு கல்பனா....'' - சந்தானலஷ்மி சொன்னாள்.

''சம்பாதிச்சதெல்லாம் போதும் - ஊர் வந்து சேர்ந்திடலாம்னு திரும்பி அவர் வர்ரப்ப என் உடம்பு 'மேனோபாஸ்' கட்டத்தை நெருங்க ஆரம்பிச்சிடும். வெளியில இருந்து பாக்கறவங்களுக்கு தெரியுமா இதெல்லாம்? சத்யமூர்த்திக்கென்ன - சவூதியில லட்சம் லட்சமா சம்பாதிக்கிறார்னு சொல்லுவாங்க.... அதான் மிச்சம் கடைசியில.... பாருங்க மேடம்; ஒரு போன் பண்றதுக்கு வந்திட்டு ஒன்றரை மணி நேரம் பேசிட்டு நிக்கறேன். என்னமோ இது எனக்குப் பழக்கமாவே ஆயிடுச்சி. பேச ஆள் கெடைச்சிட்டா - நேரம் போறது தெரியாம பேச ஆரம்பிச்சிடுவேன்.... நீங்க எங்க வீட்டுக்கு ஒரு நாள் வாங்க மேடம்.... எனக்கு உங்க ஃப்ரண்ட்ஷிப் வேணும்.''

''ஒரு நாள் இல்லை; நெறய நாளே வர்ரதா இருக்கேன்'' - சந்தானலஷ்மி சொன்னாள்.

''டோர் நம்பர் பதினெட்டு எங்க வீடு.''

''இதோதானே இருக்கு. பாத்து வந்திருவேன்.''

''ஜாக்கிரதையா இருங்க மேடம். எதிர்காலத்துக்கான பாதுகாப்பு எதுவும் இல்லாம இருக்கீங்க.... பயம் காட்றேன்னு நெனைக்காதீங்க. உலகமும் காலமும் அப்படி கெட்டுப் போய் கெடக்கு. கையில எதாச்சும் சேவிங்ஸ்னு வச்சிருக்கீங்களா?'' - கல்பனா கேட்டாள்.

''கொஞ்சம் கொஞ்சமா ஒன்றரை லட்ச ரூபா வரை சேத்து பேங்க்ல வச்சிருக்கேன்....''

''அதெல்லாம் போதவே போதாது. சொத்து எதையாவது உங்க பேர்ல எழுதி வைக்கச் சொல்லுங்க அவரை....''

''ஆனா என்கிட்ட இன்னைக்கி வரைக்கும் அன்பு குறையாமத் தான் இருந்திட்டு வரார்....''

''கல்யாணத்தைப் பண்ணிட்டு அன்பா இருக்கலாமே....''

''ஒரேயடியா முடியாதுன்னு சொல்றவரை என்னங்க பண்ண முடியும்?''

''அப்ப உங்களை கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருக்குற ஒருத்தரைப் பார்த்து கல்யாணம் செய்துக்கோங்க....''

''இனிமே எப்படிங்க கல்பனா எனக்கு கல்யாணமாகும்?''

நிஜமாகவே சந்தானலஷ்மி நம்ப முடியாத தொனியில்தான் கேட்டாள். அதே நேரம் கல்பனாவின் இந்த வார்த்தையை நம்பவும் ஆசைப்பட்டாள். யாருடனாவது கல்யாணம் என்று நடந்தால் சந்தானலஷ்மிக்கு சந்தோஷம்தான்....

கல்பனா சந்தானலஷ்மிக்கு பதில் சொன்னாள். ''உங்களுக்குத் தெரியுமோ என்னமோ - நம்ம தெருவுல இருக்குற முக்கால்வாசி ஆம்பளைங்களுக்கு உங்க மேல ஒரு பெரிய 'இதுவே' உண்டு''

''அது நிஜமா இருக்கலாம். ஆனா யாரையாவது வந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிப் பாருங்க - அப்ப யாராவது என்னைத் திரும்பிப் பார்க்கிறாங்களான்னு பார்க்கலாம்....'' - சந்தானலஷ்மி சிறிய சிரிப்புடன் இதைச் சொன்னாலும்; சொல்லும் போது அவளுக்கே தெரிந்தது - உள்ளுக்குள் அவள் சிரிக்கவில்லை....

''என்ன வயசாகுது மேடம் உங்களுக்கு?''

''முப்பத்தி ஆறுன்னு நினைக்கிறேன்....''

''அது உங்க மனசுக்குத்தான்....''

''என்னைப் பாத்தா அவ்வளவு வயசு தெரியலையா?''

''அப்படிச் சொல்லமாட்டேன். உங்க உடம்புக்கு வயசு கிடையாதுன்னு சொல்ல வரேன் நான்....''

சந்தானலஷ்மி தலையில் சின்னதாக மலர் க்ரீடத்தை வைத்தாற் போல இருந்தது. பிற பெண்கள் யாரிடத்திலும் தோன்றியிராத புதிய மென்மையான உணர்வு அப்போது அவளுடைய மனதில் ஏற்பட்டிருந்தது. கல்பனாவை மிருதுவாக இழுத்து நெஞ்சோடு கனிவுடன் அணைத்துக் கொள்ள வேண்டும்போல இருந்தது.

''ஓகே மேடம்.... நான் கிளம்பறேன். இன்னொரு நாள் பாப்போம்....'' - கல்பனா விடைபெற்றுக் கொண்டு வேகமாக



வெளியேறிச் சென்றாள். சந்தானலஷ்மி சற்று பிரமை பிடித்தாற் போல இருந்தாள். எதிரேபாராமல் அவளுடைய வாழ்க்கையில் முற்றிலும் ஒரு புதிய கதாபாத்திரம் மேளதாளத்தோடு பிரவேசித்திருப்பதாகத் தோன்றியது. பிரவேசித்ததோடு இல்லாமல் புதிய ஜன்னல்கள் சிலவற்றைத் திறந்துவிட்டிருப்பது போலவும் இருந்தது. கனகசபாபதியை தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி சோர்ந்து போய்விடாமல் வற்புறுத்திக்கொண்டே இருக்க வேண்டியதுதான் என்ற அவசரமான வேகமான தீர்மானத்திற்கு சந்தானலஷ்மி வந்தாள். கனகசபாபதியும் தொடர்ந்து மறுத்துக் கொண்டே இருந்தால் கல்பனாவின் நட்பை இறுகப் பற்றிக் கொண்டு இந்த வீடு என்ற நான்கு சுவர்களுக்குள் படுக்கையை பகிர்ந்து கொள்வதே வாழ்க்கையாகிப் போயிருக்கும் சிறுமையில் இருந்து தைரியமாக வெளிநடப்புச் செய்துவிட வேண்டியதுதான் என்ற எண்ணத்திற்கும் வந்துவிட்டாள் சந்தானலஷ்மி. - அன்று நான்கு மணிவரை காத்திருந்து பார்த்துவிட்டு; கனகசபாபதியிடம் இருந்து எந்த போனும் வராமல் போனதும்; இதற்கு மேலும் காத்திருப்பது அர்த்தமில்லாதது என்ற தீர்மானத்தில் சந்தானலஷ்மி கனகசபாபதியின் பர்சனல் போன் நம்பருக்கு மன கலக்கத்தோடு டயல் செய்தாள். உடனே ரிசீவரை எடுத்துவிட்ட கனகசபாபதி ''ஹலோ.... கனகசபாபதி ஹியர்...'' என்றார். எட்டு நாட்கள் கழித்து அவரின் குரலைக் கேட்டதில் சந்தானலஷ்மி அவளுடைய இயல்பில் மிகவும் உணர்ச்சி வசப்பட்டாள்.

''நாந்தான் - குண்டு பேசறேன்'' - என்றாள் மறைக்கத் தெரியாத காதலுடன்.

எட்டு நாட்களாக போய் பார்க்கவும் செய்யாமல்; போனும் பண்ணாமல் இருந்ததால் எந்த நிமிஷமும் சந்தானலஷ்மியிடம் இருந்து போன் வரும் என்ற எதிர்பார்ப்பிலேயே இருந்து கொண்டிருந்ததால் கனகசபாபதி அவளிடம் பேசுவதற்கான தயாரான நிலையிலேயேதான் இருந்தார். இருந்தாலும் அதைச் சிறிதும் காட்டிக்கொள்ளாமல் வேண்டும் என்றே ரொம்பவும் புதிய தொனியில் கேட்டார் - ''குண்டா? எந்த குண்டு?''

சந்தானலஷ்மி ஆரம்பகால மனநிலையில் இருந்தால் ''நாந்தான் சாமி - ரச குண்டு....'' என்று குஷியோடு ஒரு போடு போட்டிருப்பாள். இப்போது அதெல்லாம் பழைய கதை என்கிற நிலைமையில் இருக்கிறது அவளுடைய கதை. அதனால், அப்படியெல்லாம் கேட்கத் தோன்றாமல் ஒரு மாதிரியான அதிர்வில் ஒரு

நிமிஷம் அவள் நிசப்தமாக இருந்தாள். மறுமுனையில் கனகசபாபதி சந்தானலஷ்மியின் பதில் குரலுக்காக சிறிது அலட்சியமான தோரணையில் காத்துக்கொண்டிருந்தார்.

- இந்த எட்டு நாட்களாகவே கனகசபாபதி மிகவும் உணர்வுகள் பெருத்த கனத்த மனநிலையில்தான் இருந்து கொண்டிருந்தார். சந்தானலஷ்மியின் விஷயத்தில் என்றாவது மாட்டிக்கொண்டால் என்ன செய்வதென்று ஒருநாளும் அவர் எந்தத் திட்டமும் போட்டு வைத்துக்கொண்டதில்லை. அதற்கான ஒத்திகை எதையும் எண்ணத்தில் நிகழ்த்திப் பார்த்துக் கொண்டதும் இல்லை. அதற்காக எது நடந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியத்தில் இருந்தார் என்றும் சொல்லிவிட முடியாது. அவருடைய மனதின் மூலையில் பயம் ஒன்று இரவில் தூக்கம் வராத மனசு போல ஒரு மாதிரியாக உறைந்தும் உயிரோடும் விழித்துக் கிடந்தது. ஆனாலும் ஹைதராபாத் போவதாக போக்குக் காட்டியதில் கையும் களவுமாக மாட்டிக்கொண்டபோது கனகசபாபதி ஒரேயடியாக கை கால் நடுங்கி உளறிக் கொட்டிவிடவில்லை. பொய்யும் புரட்டும் அவருடைய நாக்கில் இருந்து எந்தத் தடங்கலும் இல்லாமல் சரமாரியாக வந்து கொண்டிருந்தது. ''மூணு நாள் தனியா என்ன செஞ்சீங்க திருப்பதியில?'' என்று வனிதாமணி கல்மிஷம் இல்லாமல் கேட்டதும் கனகசபாபதி மேலும் உற்சாகமடைந்து தொடர்ந்து அவரின் பொய்மூட்டையை அவிழ்த்துக் கொட்ட ஆரம்பித்து விட்டார்.

''கீழ் திருப்பதியில தங்கிக்கிட்டு - டாக்சி வச்சிக்கிட்டு மேல போயிட்டு வந்தேன்....''

''அதென்ன திருப்பதியில போய் மூணு நாள்?''

''பக்கத்ல இருக்கு. ரொம்பப் பிடிச்ச இடமாவும் இருக்கு. கிளம்பிப் போயிட்டேன்''

''தரிசனம் என்னைக்குப் பண்ணுனீங்க?''

''ஸாரி - தரிசனமெல்லாம் பண்ணலை....''

ஏழுமலையானை தரிசனம் பண்ணியதாக பொய் சொல்ல கனகசபாபதிக்குச் சிறிது பயமாக இருந்தது

''என்னது - தரிசனம் பண்ணலையா; ஏன்?''

''யெஸ் - தரிசனம் பண்ணலை''



''என்னவோ ஆயிருச்சி உங்களுக்கு. மேலே போயிட்டு யாராவது தரிசனம் பண்ணாம வருவாங்களா?''

கனகசபாபதி மேலும் உற்சாகமாகிவிட்டார்.

''வனிதா நீ ஒரு விஷயத்தை சுத்தமாவே மறந்திட்டே. எத்தினியோ தடவை இதை நான் சொல்லியிருக்கேன். இப்பவும் சொல்றேன். உன்னை மாதிரி ஆளுங்களுக்குத்தான கோயிலுக்கு உள்ளே போறது கோயிலுக்குள்ளே போகாதது என்கிறதெல்லாம். மேல் திருப்பதிக்குப் போயாச்சினாலே எனக்கு கோயிலுக்குள்ள போயிட்ட மாதிரிதான். உனக்கே தெரியும் - திருப்பதி மலைமேல நான் செருப்பே போட்டுக்கறது கிடையாது. ஏன்னா - அந்த மலை முழுசுமே எனக்குக் கோவில் மாதிரி - இதுக்கு மேல என்னை எதுவும் சொல்லச் சொல்லாதே....''

இத்தனை கால தாம்பத்யத்தில் கணவனுடன் பேசிக் கொண்டிருந்த எந்தக் கட்டத்திலும் எதற்காகவும் வனிதாமணி மனம் நெகிழ்ந்ததோ உணர்ச்சிவசப்பட்டதோ கிடையாது. எல்லா வற்றுக்கும் சேர்த்து இன்று உணர்ச்சிவசப்பட்டு விட்டாள். அதேதான் கனகசபாபதியின் கதையும். காலில் செருப்புப் போட்டுக் கொள்ளாமல் திருப்பதி மலைமேல் கம்பீரமாக நிற்பது போன்ற பிரமையில் ஒரு நிமிஷம் சிலிர்த்துப் போய் நின்று கொண்டிருந்தார். அது மட்டுமில்லை; மனைவி வனிதாமணியுடன் மிகப் புதிய உறவுக்கோலத்தை வரைவதற்கான புள்ளியையும் அவரையும் அறியாத ஒரு கபடத்துடன் வரைந்துவிட்டிருந்தார்.

''கீழ் திருப்பதியில எங்கே தங்குனீங்க?'' வனிதாமணி கேட்டாள்.

''ஒரு தடவை நாமெல்லாம் போயிருந்தப்ப விஷ்ணுப்ரியானு ஒரு ஹோட்டல்ல தங்கினோமே - ஞாபகமிருக்கா?

''அங்கே தங்கிட்டு?''

''டாக்சி எடுத்துக்கிட்டு மேலே போனேன்.... டாக்சியை வராகசாமி கெஸ்ட் ஹவுசுக்குப் பக்கத்ல நிறுத்தி வச்சிட்டு நடந்தே சுத்து சுத்துனு சுத்தினேன். லட்டு விக்கற இடத்துக்குக் கீழ படிக்கட்டுல பேசாம உட்கார்ந்து ரொம்ப நேரத்துக்கு வேடிக்கை பாத்திட்டு இருந்தேன். அப்புறம் டாக்சியில ஏறி நேரா பாபநாசம் போனேன். பிறகு அப்படியே ஆகாய கங்கைக்கு வந்து அங்கே ரெண்டு மணி நேரம் இருந்தேன். பிறகு நேரா வேணுகோபாலசாமி கோயிலுக்கு வந்து அங்கே ஒரு அரைமணி நேரப்பொழுது போச்சி.

பிறகு மத்தியான சாப்பாட்டை முடிச்சிட்டு வராகசாமியை போய் கும்பிட்டேன். (வெங்கடாசலபதியை தரிசித்ததாக பொய் சொல்வதற்குப் பயந்த கனகசபாபதிக்கு வராகசாமியை தரிசனம் செய்ததாக பொய் சொல்ல பயம் இல்லாமல் இருந்தது) அவ்வளவுதான் - ஒரு மூலையில் ஒரு மரத்தடியில பேசாம கண்ணை மூடிட்டு படுத்துக் கிடந்தேன். லைஃப் பூரா அப்படியே படுத்துக் கிடந்திடலாம் போல இருந்துச்சி. ஆனா முடியாதே. பெண்டாட்டி பிள்ளைகள்னு கடமையெல்லாம் இருக்கே. மனசே இல்லாம மெதுவாக எந்திரிச்சி டாக்சியில ஏறி கீழே வந்து சேர்ந்தேன்....''

- இந்த இடத்தில் கனகசபாபதிக்கே அவர் மேல் ஒருவிதமான சுய இரக்கம் வந்துவிட்டது.....

❖

## 24

நிஜமாகவே திருப்பதிக்கு தனியாக இப்படி ஒரு 'ட்ரிப்' போய்விட்டு வந்தால்தான் என்ன என்ற ஒரு எண்ணம் சட்டென கனகசபாபதிக்குள் எழுந்தது. பெரிய புண்ணியம்தானே போய் வந்தால்.... வனிதாமணிக்கும் கணவர் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்ததில் அவர் மேல் பரிதாபம் ஏற்பட்டு விட்டது. ஏதோ ஒரு மன உளைச்சலில் மனிதர் இம்சைப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்ற வருத்தமும் வந்தது - அவளுக்குள். மன உளைச்சலில் தப்பான வழி எதிலும் போகாமல் சாமியார் மாதிரி திருப்பதிக்குப் போயிருக்கிறாரே என்ற சின்ன ஆறுதலும் கூட வனிதாமணியின் மனதில் வந்தது. அதே நேரம் கூடவே ஒரு பயமும் நிழல்போல் வந்தது. அதற்காக கனகசபாபதியை ஒரேயடியாக சாமியார்போல அடிக்கடி திருப்பதி போய் வரவும் விட்டுவிடக் கூடாது. அதுவும் ஆபத்து. பிறகு வனிதாமணிதான் இந்தச் சமூகத்திற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். பிள்ளைகள் வேறு பெரியவர்களாகி வருகிறார்கள். அதனால் கடமைகளும் பெரிதாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் கனகசபாபதி மூன்று நாட்கள் திருப்பதிக்கு ஓடிப் போய்விட்டு வந்திருக்கிறார். வனிதாமணி இதை ஊக்குவித்து விடவும்கூடாது. ஒரேயடியாக கட்டுப்படுத்திவிடவும் கூடாது. முள்ளின் மேல்



விழுந்திருக்கிற புடவையை எடுக்கிற மாதிரி மிக ஜாக்கிரதையாக கவனமாக இதைக் கையாள வேண்டும்....

''அப்புறம் கீழ் திருப்பதியில ரெண்டு நாள் என்ன செஞ்சேன்னு சொல்லிடறேன்....'' என்று ஆரம்பித்தார் கனகசபாபதி. ஆனால் அதைக்கேட்டுக் கொண்டிருக்கும் பொறுமை வனிதாமணிக்கு இல்லை. அவளின் இயல்புக்கு ஏற்ற ஒரு எரிச்சல் சட்டென்று வந்துவிட்டது.

''போதும் உங்க திருப்பதி ராமாயணம். நான் இப்பவும் சொல்றது இதான் - திருப்பதிக்கு நீங்க சொல்லிட்டே போயிருக்கலாம். சொல்லாம இது மாதிரி போகிற வேலையெல்லாம் வேண்டாம் இனிமே.... எங்கே போறதா இருந்தாலும் சொல்லிட்டுத்தான் போகணும்....''

இப்போதைக்கு இந்த விஷயத்தை இங்கே முடித்துக் கொள்ளலாம் என்கிற மாதிரிதான் வனிதாமணி நிறுத்திக்கொண்டு விட்டாள். இதற்கு மேலும் முற்றுப்புள்ளி வைக்காமல் விஷயத்தை இழுத்தடிக்க அவளுக்குச் சிறிது பயமாக இருந்தது. அவளுடைய மனதின் ஒரு மூலையில் கனகசபாபதியின் திருப்பதி பயணம் நெருடலாகவே இருந்து கொண்டிருந்தது. மகள் பெரிய பெண்ணாகி இருக்கும் இந்த நேரத்தில் அவளின் இயல்பான மிகக் கடுமையான எதிர்விளைவைக் கணவனிடம் காட்ட வனிதாமணி யோசனை செய்தாள். கனகசபாபதி சொன்னதெல்லாம் பொய்யாக இருந்தால்; பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்ற நம்பிக்கையில் அவள் அவளின் சந்தேகங்களை எச்சிலை விழுங்குவதுபோல விழுங்கிக் கொண்டாள்.

ஆனால் கனகசபாபதி அவருக்குள் விழுங்கிக்கொண்ட எச்சில் வேற மாதிரி. திருப்பதி பயணக் கதையை நம்பாமல் வனிதாமணி அவளின் வழக்கமான இயல்பின்படி கடுமையான கோபமான எதிர்விளைவு எதையும் கையில் எடுத்தால் கனகசபாபதி நேராக சந்தானலஷ்மியிடம் போய் நிரந்தரமாகவே தங்கிவிடுவதாக இருந்தார். திருப்பதி கதையை நம்பி வனிதாமணி அவரிடம் கடுமையாக நடந்துகொள்ளாமல் இருந்துவிட்டால்; ஏற்கனவே கனகசபாபதி ஓரளவு தீர்மானம் செய்து வைத்திருப்பது மாதிரி சந்தானலஷ்மிக்கு துரோகத்தைச் செய்துவிட்டு அவளை திரும்பிக் கூட பார்க்காமல் நிஜமாகவே திருப்பதிக்கு ரயில் ஏறிவிடுவதாக இருந்தார். அவருடைய இந்த இரண்டு கோணங்களுக்குள் அடங்கிப் போயிருந்தது சந்தானலஷ்மியின் விதி - வனிதாமணி புலி போல்

பாயாமல் போனதில் கனகசபாபதியின் இரண்டாம் மனநிலை ஓட்டத்திற்கு உட்பட்டதாகிவிட்டது சந்தானலஷ்மியின் விதி - இந்த விதி கனகசபாபதிக்கு திருப்தியானதாக இருந்தது. அவருக்கே பெரிய சிக்கலில் இருந்து தப்பித்துவிட்ட ஆறுதல்தான். நிஜமாகவே கனகசபாபதிக்கு சந்தானலஷ்மி போதும் என்ற உணர்வு வந்து விட்டது. தேவைக்கும் அதிகமாகவே அவர் அவளோடு பாலுறவுக் கடலில் குளித்து கும்மாளம் போட்டுவிட்டார். நீச்சல் குளத்தில் நீண்ட நேரம் நீந்திக் கொண்டிருக்கலாம். கடலில் அது முடியாத விஷயம். கடலில் ரொம்ப ஆழத்திற்கும் போய்விட முடியாது. போய்விடவும் கூடாது. ஆபத்தான சமாச்சாரம் அது. அதனால் கனகசபாபதி குளித்தது போதும் என்ற நினைப்பில் கரையேற முடிவு செய்துவிட்டார். எட்டு நாட்களாக கடலை திரும்பியும் பார்க்காமல் இருந்துவிட்டார். கடல் சைதாபேட்டையில் ஆளைக் காணாமல் அலை மோதிக்கொண்டிருந்தது. பொங்கி கலங்கிக் கிடந்தது. கடைசியில் பொறுக்காமல் கடல் போன் பண்ணி ''நாந்தான் குண்டு'' என்று ஒரு விம்மலுடன் ஞாபகப்படுத்தியபோது; குளித்து முடித்துவிட்ட அலட்சியத்துடன் கனகசபாபதி திருப்பிக் கேட்டதுதான் - ''குண்டா? எந்தக் குண்டு?'' என்று....

சில விநாடிகள் சந்தானலஷ்மி அதிர்ந்து போய் விட்டாலும்; அவளோடு கனகசபாபதி வேண்டும் என்றே விளையாடுவதாகத் தான் அடுத்த விநாடிகளில் அவளால் நினைக்க முடிந்தது. அதனால் அவசரமாக ''கொச்சு முதலாளி - நாந்தான் குண்டு சந்தானலஷ்மி பேசறேன்....'' என்றாள்.

''அடடே - சந்தானம்.... சட்டுனு வேலை டென்ஷன்ல ஒரு நிமிஷம் குழம்பிப் போயிட்டேன். ஸாரி. எப்படி இருக்கே?'' கனகசபாபதி ரொம்ப சகஜமாக பேசுவது போலவும் காட்டிக் கொள்ளாமல்; சகஜமே இல்லாத மாதிரியும் இல்லாமல் - ஒரு இரண்டும் கெட்டான் பாணியில் கேட்டார்.

''நீங்க கிளம்பிப் போய் ஒரு வாரத்துக்கு மேல ஆகிப் போயிருச்சி. எந்த போனும் இல்லை. உங்களுக்கு உடம்பு எதுவும் சரி இல்லையோன்னு பயந்து போயிட்டேன்.... அப்படி எதுவும் இல்லையே....?'' சந்தானலஷ்மி கேட்டாள்.

''உடம்புக்கென்ன? அதெல்லாம் ஒழுங்காத்தான் இருக்கு. வாழ்க்கைக்குத்தான் பெரிசா பிரச்னை வந்திருச்சி சந்தானம். அதை நேர்ல வந்து ஒருநாள் உன்கிட்ட டீடெய்லா சொல்றேன்....''



''என்ன பிரச்சினை வந்திருச்சி வாழ்க்கைக்கு?'' - சந்தானலஷ்மி கொஞ்ச பயந்த குரலில் கேட்டாள்.

''என்ன ஆகணுமோ அதெல்லாம் ஆயாச்சி''

''சீரியஸா எதுவும் ஆயிடுச்சா?''

''சந்தானம்; நடந்த எல்லாத்துக்கும் காரணம் நீதான். உன் பேராசைதான் காரணம். எத்தினியோ தடவை படிச்சி படிச்சி சொன்னேன்.... என்னை உன் சைதாப்பேட்டை வீட்ல வந்து உன்கூட ரெண்டு மூணு நாளெல்லாம் என்னைத் தங்கச் சொல்லாதடின்னு.... காது குடுத்துக் கேட்டியா நான் சொன்னதை.... வந்து இருடா இருடானு என் உசிரைப் போட்டு வாங்கினே.... இப்ப நெசமாவே என் உயிர் போயாச்சி. உசிர் போன அப்புறம் ஒருத்தன் எப்படி உன் வீட்டுக்கு வருவான்.... இல்லை - போன் பண்ணுவான்?''

''எனக்கு பயமாயிருக்கு - நீங்க இப்படியெல்லாம் பேசறதைப் பார்த்தா.....''

''நோ யூஸ்'' - என்றார் கனகசபாபதி அலட்சியமாக. ''இந்தப் பயம் முதல்ல இருந்திருக்கணும் உனக்கு. அநியாய வட்டிக்கு ஆசைப்பட்டே. முதலுக்கே மோசம் வந்திருச்சி. தாட்சண்யமே இல்லாம சொல்றேன் சந்தானம். நடந்ததுக்கு நீதான் பொறுப்பு. நான் கிடையாது. உன் தொணதொணப்புத் தாங்காம ஹைதராபாத் போறேன்னு சொல்லிட்டு உன் வீட்ல வந்து மூணு நாள் உக்கார்ந்திருந்தேன் பார் - சரியா அந்த நேரம் பார்த்து என் மக ப்ரியா வயசுக்கு வந்திட்டா. இது ரொம்ப மங்களகரமான விஷயமாச்சே. உடனே இதை குடும்பத் தலைவரை கூப்பிட்டுச் சொல்லிரணுமே - அதுக்காக என் அழகுப் பெண்டாட்டி ஹைதராபாத்ல நான் எப்பவும் தங்குற ஹோட்டலுக்கு உடனே போன் பண்ணியிருக்கா. ஹோட்டல்காரன் உடனே சொல்லிட்டான் - நான் வரவே இல்லைன்னு....''

''அச்சச்சோ....''

''ஹைதராபாத்ல ஒரு ஹோட்டல் விடாம போன் பண்ணி கேட்டிருக்கா. கனகசபாபதி என்கிற பேர்ல ஒரு காக்கா குருவிகூட வரலைன்னு எல்லா ஹோட்டல்காரனும் சொல்லிட்டான். நெனைச்சிப் பாரு சந்தானம். ஒரு நிமிஷம் நீ மனசில நெனைச்சிப் பாரு. ஹைதராபாத் போறேன்னு சொல்லி பெட்டியை தூக்கிட்டுக்

கிளம்பிப் போன புருஷன் - அங்கே வரவே இல்லைன்னு சொன்னா- ஒரு கௌரவமான பெண்டாட்டிக்காரிக்கு எப்படி இருந்திருக்கும்.... அவளை விடு. வீட்ல என் குழந்தைகளுக்கு எப்படி இருந்திருக்கும்.... ஆபிஸ்ல என் கௌரவமெல்லாம் தூள் தூளாக போயிருச்சி சந்தானம். என் மானம் மரியாதை எல்லாம் கப்பல் ஏறியிருச்சி. ரொம்ப மோசமா மாட்டிக்கிட்டேன். வனிதாமணியை என்னால நிமிர்ந்தே பார்க்க முடியலை. எப்படிப் பாப்பேன் சொல்லு.... இத்தனை வருஷத்ல இப்படி நான் ஒரு நிமிஷம்கூட இதுக்கு முன்னாடி அவ முன்னாடி நின்னது கிடையாது. ஒருநாள் பூராவும் அப்படியே என்னை நிக்க வச்சிட்டா தெரியுமா.... மனசு சரியில்லாம இருந்ததால திருப்பதியில போய் மூணு நாள் தங்கி இருந்தேன்னு ஒரு பொய்யை வேற சொல்லித் தொலைச்சி - இன்னும் மோசமாக அவமானப்பட்டுட்டேன். ஹைதராபாத் போறதா சொல்லிட்டு உன் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டிட்டு ஒரு நிமிஷம் வாசல்ல நின்னேன் பார் - கரெக்ட்டா அந்த நேரம் பாத்து நம் ஆபிஸ் ப்யூன் வேலுச்சாமி வந்து என்னைப் பாத்திட்டான். போதுமா...? - இதுக்கு மேல ஒரு அவமானம் இனிமே எனக்கு வரப் போறதில்லை சந்தானம். அந்த நிமிஷம் நான் நாக்கை புடுங்கிட்டு செத்திருக்கணும் என் போதாத காலம். நான் சாகலை....''

''வேலுச்சாமி என்னைக்கும் இல்லாம இந்தப் பக்கம் எங்கே வந்தான்?'' - சந்தானலஷ்மி மிகவும் பதட்டமடைந்து போய் கேட்டாள். அவளுடைய பதட்டம் அவளுக்கு. கனகசபாபதியின் எரிச்சல் அவருக்கு.

''நேரம் சரியில்லாம இருந்தா எவனும் வருவான். அவனோட உறவுக்காரன் ஒருத்தன் உன் வீடு இருக்குற அதே தெருவுல உடம்பு சரியல்லாம இருந்திருக்கான். அந்தப் பயலைப் பாக்குறதுக்கு வந்திருக்கான் வேலுச்சாமி. வந்தவன் உறவுக்காரனைப் பாத்தானோ இல்னலயோ - என்னைப் பாத்திட்டான். ஆனா முதல்ல அவனுக்கு நாந்தான்னு சந்தேகம். ஏன்னா அவனைப் பொறுத்தவரைக்கும் அவனோட முதலாளி அந்த நேரம் ஹைதராபாத் ட்ரெய்ன்ல இருந்திருக்கணும். அதனால் சந்தேகப்பட்டுட்டு ஒரு மாதிரி கம்னு இருந்திருக்கணும். ஆனா மறுநாள் ஹைதராபாத் பூரா வலை போட்டுத் தேடியும் முதலாளி கிடைக்கலைன்னு தெரிஞ்சதும் உஷாராயிட்டான். நேரா என் அழகு பெண்டாட்டிகிட்டே போய் என்னை சைதாபேட்டைப் பக்கம் பார்த்த மாதிரி இருந்ததுன்னு சொல்லி போட்டுக் குடுத்திட்டான்....



கனகசபாபதிக்கு கற்பனைக் குதிரையில் கனவேகமாக சென்றதில் சிறிது மூச்சு வாங்கிவிட்டது. சிறிய இடைவேளை அவருக்குத் தேவையாக இருந்தது. ''சந்தானம்; ரெண்டே ரெண்டு நிமிஷம் வெயிட் பண்றியா.... தொண்டை ஒரு மாதிரி வறண்டு போயிருச்சி. கொஞ்சம் ஐஸ் வாட்டரை முழுங்கிட்டு வந்து பேசறேன்'' என்று சொல்லி கனகசபாபதி 'அப்பாடா' என்ற உணர்வில் ரிசீவரை மேஜையின் மேல் வைத்தார். நாற்காலியில் சிறிது சாய்ந்து உட்கார்ந்தார். பாதிக் கிணறு தாண்டிவிட்டாற்போல இருந்தது அவருக்கு. திருப்பதி போயிருந்ததாக வனிதாமணியிடம் கதை அளந்துவிட்டபோது அவருக்கு எந்தக் களைப்பும் ஏற்படவில்லை. ஆனால் ப்யூன் வேலுசாமி சைதாபேட்டையில் தன்னைப் பார்த்துவிட்டதாக சந்தானலஷ்மியிடம் கதை அளந்ததில் அசாதாரணமான களைப்பு வந்துவிட்டது அவருக்கு.

- இது ஏன் என்று யோசனை செய்து பார்த்தார். யோசனை செய்த உடனேயே கிடைத்து விடுகிறாற்போல இல்லை பதில். அதனால் யோசிப்பதை நிறுத்திக் கொண்டார். பதில் எதுவாக இருந்தாலும் கவலை இல்லை அவருக்கு. இனிமேல் சந்தானலஷ்மியிடம் போய் களைப்பு அடைகிற எந்த காரியத்தையும் கனகசபாபதி செய்வதாக இல்லை....

❖

## 25

சந்தானலஷ்மி ரிசீவரை காதில் வைத்தபடி மௌனமாக காத்துக் கொண்டிருந்தாள். போனில் இதுவரை கனகசபாபதி பேசியவை கொஞ்சம் தீவிரமானதாகவும் இருந்தது. கொஞ்சம் தீவிரம் அற்றதாகவும் தெரிந்தது. அதனால் ஒரேயடியாக அதிர்ந்து போய்விடாமல் பல்லைக் கடித்தவாறு அமர்ந்திருந்தாள். கனகசபாபதியின் வீட்டில் என்னவோ நடந்திருக்கிறது. ஆனால் போனில் அவர் சொன்ன மாதிரியேதான் நடந்ததா என்பதில்தான் சந்தானலஷ்மிக்கு மிகவும் சந்தேகம். ஆசாமி எங்கேயோ குட்டையை குழப்புகிறார் என்று நினைத்தாள்.

ரிசீவரின் மறுமுனையில் கனகசபாபதியின் குரல் மீண்டும் கேட்டது.

''சந்தானம்....''

''சொல்லுங்க....''

''வனிதாமணியைப் பத்தி உனக்குத் தெரியும். என்னை சைதாபேட்டைப் பக்கம் பார்த்த மாதிரி இருந்ததுன்னு வேலுசாமி சொன்னதுமே என்னை அவ கிழிச்சி மாட்டறதுக்கு தயாராயிட்டா. அந்த நாள் எனக்காக அடிபட்ட புலி மாதிரி காத்திட்டு இருந்தி ருக்கா....''

''கொஞ்சம் இருங்க. கொஞ்சம் இருங்க'' சந்தானலஷ்மி குறுக்கிட்டாள்.

''ஒரு விஷயம் இங்கே எனக்குப் புரியலை'' என்றாள்.

கனகசபாபதிக்கு எரிச்சல் வந்தது. ''என்ன புரியலை உனக்கு?'' என்றார்.

''வேலுசாமி போய் சொன்னதும் உங்க வீட்ல இருந்து யாரும் உங்களை இங்கே தேடி வரலையே....?''

''அதெப்படி உடனே கிளம்பி உன் வீட்டுக்கு வருவாங்க?''

''ஹைதராபாத் போறதா சொல்லிட்டுப் போன நீங்க ஹைதராபாத்ல இல்லைங்கிறது தெரியுது. உடனே உங்க வீடு ஆபிஸ் எல்லாம் அமர்க்களப் படுது. அப்ப வந்து வேலுசாமி சொல்றான் - சைதாபேட்டையில ஒரு வீட்டு வாசல்ல பார்த்ததா.... உடனே அவனை கையோட கூட்டிக்கிட்டு வனிதாமணியே வரா விட்டாலும்; வேற யாரையாவது அனுப்பி நீங்க இங்கே இருக்கிங்களான்னு பாக்கறதுக்கு ஏற்பாடு செய்திருக்கணுமே.... அதைச் செய்யலையே அவ....''

சந்தானலஷ்மி இப்படிக் கேட்டதும் கனகசபாபதி பதில் சொல்வதற்குச் சிறிது திணறினார். ஆனாலும் உடனேயே சுதாரித்துக் கொண்டார்.

''பைத்தியக்காரி மாதிரி கேக்காதே. அவ எப்படி வருவா?''

''புருஷனைக் காணோம் என்கிற பதைபதைப்பு இருந்தா எவளா இருந்தாலும் கிளம்பித்தான் வருவா'' - சந்தானலஷ்மி மிகவும் கடுப்புடன் சொன்னாள். கனகசபாபதி ஏதோ ஒரு நாடகம் ஆடுகிறார் என்ற சந்தேகம் அவளுக்குள் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.



கனகசபாபதியும் அசந்து போய்விடவில்லை. ஆடுகிற நாடகத்தை சுத்தமாக கடைசிவரை ஆடி விடுகிற முனைப்பில்தான் இருந்தார்.

''டோட்டல்லி யூ அர் ராங் சந்தானம். புருஷனைக் காணோம் என்கிற பதைபதைப்பு இருந்தா எவளா இருந்தாலும் கிளம்பித்தான் வருவானு ரொம்பத் தெரிஞ்ச மாதிரி சொன்னியே - அதை என்னால ஒத்துக்க முடியாது. எப்படிச் சொல்றேன்னு கேளு. கிளம்பி வந்து பாத்து; புருஷன்காரன் ஏதோ ஒரு வீட்டுக்குள்ள கதவை மூடிக்கிட்டு எவளோ ஒருத்திகூட இருக்குறதை நேருக்கு நேரா பாக்கும்படி ஆயிட்டா என்ன பண்றது.... அதைப்போல ஒரு மோசமான விஷயம் வேற எதுவுமே இருக்க முடியாது - ஒரு குடும்பப் பெண்ணுக்கு. அதுக்காகவே கிளம்பி வரமாட்டா எவளும். அதுவும் வனிதாமணி கண்டிப்பா வரமாட்டா. அவளுக்கு ஈகோ அதிகம். ஒரு கம்பெனி யோட சேர்மன் அவ. கிட்டத்தட்ட பத்துக் கோடி ரூபாய் ஐவேஜ் உள்ளவ அவ. அப்படிப்பட்டவ கிளம்பி உங்க சைதாபேட்டையில ஒரு தெரு - என்ன தெரு அது? - பேரை மறந்திட்டேன்....'' - கனகசபாபதி ரொம்பவே நாடகமாடினார். சந்தானலஷ்மிக்குள்ளும் கோபம் உயர்ந்து கொண்டிருந்தது.

''ரொம்பத்தாண்டா கனகசபாபதி அலட்டறே'' என்று ஓங்கி ஒரு குரல் கொடுக்கலாம் போல இருந்தது அவளுக்கு. ஆனால் என்ன கஷ்டம் - அப்படி குரல் கொடுத்து விட முடியாது.

''என் தெருப் பேர் என்னவா இருந்தா என்ன இப்ப.... விஷயத்தைச் சொல்லுங்க'' என்றாள்.

சந்தானலஷ்மியின் குரலில் வந்த கடுமை கனகசபாபதிக்கு புரிந்தது. ஆனாலும் நாடகத்தின் இந்தக் கட்டத்தில் அவளின் கடுமையான தொனிக்கு அவரும் கடுமையான எதிர் குரலைக் காட்ட விரும்பவில்லை. சாந்தமான தொனியிலேயே நாடகத்தின் காட்சியை நகர்த்த நினைத்தார். ''அதானே உன் தெருப்பேர் என்னவா இருந்தா என்ன.... சைதாபேட்டையில ஏதோ ஒரு துக்கடா தெரு. ஒரு துக்கடா தெருவுக்கு கிளம்பி வந்திருவாளா எங்க கோடீஸ்வரி.... உயிர் போனாலும் வரமாட்டா. நம்ம வீட்டுக்காரன் ஏதோ பித்தலாட்டம் பண்றான். எங்கே போனாலும் வீட்டுக்கு திரும்பி அவன் வந்துதானே ஆகணும்.... வந்ததும் பாத்துக்கலாம்னு வனிதாமணி பேசாம கையைக் கட்டிட்டு இருந்திட்டா. நடந்த இதெல்லாம் தெரியாம நான் போனேன் வீட்டுக்கு. அறுத்து என்னை மாட்டிட்டா மாட்டி, தப்பிக்கிறதுக்கு எனக்கு வழியே தெரியாம - உண்மையை ஒத்துக்கிட்டேன்....''

கனகசபாபதி பேச்சை நிறுத்திவிட்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். சந்தானலஷ்மியும் மௌனமாக இருந்தாலும் - அவளுடைய மௌனம் மௌனம் இல்லை.

கனகசபாபதி தொடர்ந்தார். ''உண்மையை ஒத்துக்காம பெரிசா ட்ராமா ஆடி; ரீல் ரீலா விட்டு எப்படியாவது தப்பிக்கிறதுக்கு வழி பார்த்திருக்கலாம். ஆனா நான் அதைச் செய்யறதுக்கு ட்ரை பண்ணலை. அந்த மாதிரியெல்லாம் செய்திருந்தா என் பிழைப்புக்கே ஆபத்தா போயிருக்கும். வனிதாமணி கோவம் வந்தா எந்த ரேஞ்சுக்கும் போகக் கூடியவ. அதனால நான் உடனே அவளுக்குத் தலை வணங்கி உண்மையை ஒத்துக்கிட்டேன். மூணு நாளா சைதாபேட்டையிலதான் இருந்தேன்; அங்கே ஒருத்தியை தனியா ஒரு வீடு பிடிச்சி குடி வச்சிருக்கேன். என் 'கீப்'பா 'மெயிண்ட்டெய்ன்' பண்றேன் அவளைன்னு ஒப்பனா சொல்லிட்டேன். நெஜமா சொல்றேன் சந்தானம். என்கிட்ட இருந்து இப்படி ஒரு பயங்கர அணுகுண்டு மாதிரியான விஷயத்தை வனிதாமணி எதிரே பார்க்கலை. அவ்வளவு தூரத்துக்கு என்னை அவ நம்பியிருந்தா பாவம். என் மனசுல பிற பொம்பளைங்க மேல சின்னச் சபலம்கூடக் கிடையாது என்கிற மிகப் பெரிய நம்பிக்கையில இருந்தா அவ. அந்த நம்பிக்கையை சுக்கல் சுக்கலா உடைச்சி எறிஞ்சிட்டேன் நான். நான் சொன்ன உண்மையை கேட்டு நிஜமாகவே வனிதாமணி நொறுங்கிப் போயிட்டா 'யாரு அவ.... சொல்லுங்க. யாரு அவ.... சொன்னாத் தான் விடுவேன்'னு என்னைக் குடைஞ்சி எடுத்திட்டா. 'சொல்லலைன்னா இருக்கு'-னு என்னை மிரட்டினா. அதனால வேறு வழி இல்லாம உன் பேரை அவகிட்டே சொல்லிட்டேன்.... சைதாபேட்டையில ஒருத்தியை வச்சிருக்கேன்னு சொன்னதையே தாங்க முடியாதவளால - உன் பேரைச் சொன்னதை தாங்கிக்க முடியுமா.... சுருக்கமா சொல்றேன் சந்தானம் - உன் பேரைக் கேட்டதும் வனிதாமணி அழத்தான் செய்யலை. வேற எல்லாம் செய்திட்டா.

''அவ்வளவு தூரத்துக்கா என்னையும் என் பேரையும் அவ ஞாபகத்ல வச்சிருக்கா?'' - சந்தானலஷ்மி குறுக்கிட்டுக் கேட்டாள்.

''முதல்ல அவளுக்கு ஞாபகம் வரலை.... ரெண்டு மூணு நிமிஷம் யோசிச்சிப் பார்த்ததும் அவளுக்கு ஞாபகம் வந்திருச்சி....''

''என்ன சொன்னா ஞாபகம் வந்ததும்?'' சந்தானலஷ்மி கேட்டாள்.



''வேண்டாம் சந்தானம். அதை நான் உன்கிட்ட சொல்றதா இல்லை'' - கனகசபாபதி மிக அழகாக நடித்தார்.

''என்னைப் பத்தின விஷயம் எதுவா இருந்தாலும் என்கிட்ட அதைச் சொல்லித்தான் ஆகணும்....'' சந்தானம் சற்று தீவிரமான குரலில் சொன்னாள்.''

''வேண்டாம் சந்தானம். சொன்னா கேளு....'' - கனகசபாபதி தொடர்ந்து நடித்தார்.

''கேக்கறதா இல்லை. உங்க பெண்டாட்டி என்ன சொன்னாள்னு நீங்க இப்ப சொல்லித்தான் ஆகணும்....'' - சந்தானலஷ்மியும் விடவில்லை.

அவளுடைய இந்த பிடிவாதத்தை கனகசபாபதி சிறிது அவமானகரமானதாக உணர்ந்தார். அதைக் கேட்காதே என்கிறார். சொல்லித்தான் ஆகவேண்டும் என்கிறாள் அவள். - அந்த அளவுக்கு சந்தானலஷ்மிக்கு தைரியம் வந்துவிட்டது. ஒரு காலத்தில் அவரிடம் கை நீட்டி சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த நேரத்தில் இப்படியெல்லாம் தைரியமாக அவரிடம் இவள் பேசிவிட முடியுமா? பேசத்தான் விடுவரா கனகசபாபதி? இன்று அவருடன் படுத்துவிட்ட ஒரே காரணத்தால் தைரியமாகவும் அலட்சியமாகவும் சந்தானலஷ்மியால் கேட்க முடிகிறது.... கனகசபாபதியும் அவளுடைய கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்குத்தான் பெரியவர்கள் அந்தக் காலத்திலேயே நன்றாக சொல்லி வைத்திருக்கிறார்கள் - நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைக்கக் கூடாதென்று. கனகசபாபதி இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்குக் தவறிவிட்டார். அதற்கான பலனையும் இன்று அனுபவிக்கிறார்.... கனகசபாபதிக்குள் கோபத்தின் நீர்மட்டமும்; எரிச்சலின் நீர்மட்டமும் போட்டி போட்டுக்கொண்டு வேகமாக உயர்ந்தது. இத்தனை தைரியமாக அவரிடம் கேட்கிற திமிர் ஒன்றுக்காகவே தாட்சண்யம் பார்க்காமல் கனகசபாபதி சந்தான லஷ்மிக்கு எந்தத் துரோகத்தையும் தாராளமாகச் செய்யலாம்....

''அப்ப நீ என்னை சொல்லச் சொல்றே?''

''ஆமா....''

''எனக்கென்ன சொல்லிட்டுப் போறேன்: அவகிட்ட உன் பேரைச் சொன்னதும் முதல்ல அவளுக்கு நீ ஞாபகம் வரலை. ஞாபகம் வந்ததும் அவ முகம் போன போக்கைப் பார்த்து நான் ஒரு மாதிரி

ஆயிட்டேன். அப்படி ஒரு அற்பமான பார்வை என்னை வனிதாமணி அதுக்கு முன்னாடி பார்த்ததே இல்லை. ஒரு புழுவைப் பார்க்கிற மாதிரி பார்த்தா. அட சே அந்தத் தடிச்சியையா போயும் போயும் வச்சிட்டு இருக்கீங்கனு ரொம்ப கேவலமான ஒரு டோன்ல கேட்டா....''

கனகசபாபதி இதைச் சொல்லி முடிக்கவில்லை. கோபத்தில் சந்தானலஷ்மி வெடித்துவிட்டாள். ''தடிச்சின்னா சொன்னா? தைரியம் இருந்தா நேர்ல அவளை அந்த வார்த்தையை சொல்லச் சொல்லுங்க பார்ப்போம். தடிச்சியாமே.... அவ ஒண்ணும் சோறு போட்டு வளர்க்கலை - தடிச்சின்னு சொல்றதுக்கு. அந்த ஆஸ்த்மா காரி இப்படியெல்லாம் தடிச்சி கிடிச்சினு சொல்லிட்டு இருந்தாள்னா நான் நேர்ல கிளம்பி வந்திருவேன். ஒரு நியாயத்துக்குத்தான் பயப்படுவேன். பொறுமையா இருப்பேன். நியாயம் போயிருச் சின்னா - அவ்வளவுதான்; எவளுக்கும் பயப்படமாட்டேன். சொல்லி வையுங்க. அந்த சப்பை மூஞ்சிகிட்ட - அவ புருஷன்தான் என்கிட்ட வந்து விழுந்து கிடக்காரே தவிர - என் புருஷன் எவனும் போய் எந்த ஆஸ்த்மாகாரிகிட்டேயும் விழுந்து கிடக்கலை. இதை மறந்திட்டு எவளும் ஊர்ல இருக்கறவளை வாய்கொழுப்பு எடுத்துப் பேசவேண்டாம்....''

கோபத்தில் சந்தானலஷ்மி இப்படி வார்த்தைகளை வேகமாக கொட்டியதும் மறுமுனையில் கனகசபாபதி திருடனைப்போல முழித்தார். சந்தானலஷ்மியை உசுப்பிப் பார்க்கிற நுண்ணிய கபடத்துடன்தான் அவர் ஆடிக்கொண்டிருந்த நாடகத்தில் தேவையில்லாமல் இந்தக் காட்சியை செருகினார். அது மறுமுனையில் ஆவேசக் காட்சியை தயாரித்துவிட்டது. தான் கொஞ்சம் அடக்கி வாசித்திருக்கலாமோவென்று நினைத்தார் கனகசபாபதி. சந்தானலஷ்மிக்கு அழகாக துரோகம் இழைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற உற்சாகத்தின் வேகத்தில் மிகையான காட்சியில் மிகையாக நடித்துவிட்டார். அது சுவரில் அடித்த பந்தாக திரும்பி அவர் மேலேயே பாய்ந்துவிட்டது....

''சரி; அதுக்குப் பிறகு என்ன நடந்தது? அதைச் சொல்லுங்க''.... - என்றாள் சந்தானலஷ்மி.

''சொல்றதுக்கு எனக்கு சங்கடமா இருக்கு சந்தானம். ஆனா சொல்லாமலேயும் இருக்க முடியலை.... இனிமே எந்தக் காரணத்துக்காகவும் உன் வீட்டுப் பக்கம் என்னை தலை வச்சிக்கூட படுக்ககூடாதுன்னு ஆர்டர் போட்டுட்டா.... தப்பித் தவறி ஒரே



ஒருநாள் உன்னைப் பாக்கறதுக்குப் போனா திருப்பி நான் எங்க வீட்டு வாசல்படியை மிதிக்க முடியாதுன்னு க்ளீயரா சொல்லிட்டா. அது மட்டுமில்லை; எங்க கம்பெனி வாசல் படியையும் ஏற முடியாதபடி பண்ணிடுவேனு நாலு பேரை வச்சிக்கிட்டே சொல்லிட்டா....''

''அவ வார்த்தைக்குப் பயந்துதான் எட்டு நாளா இந்தப் பக்கம் ஆளும் வரலை. போனும் பண்ணலையா?''

''அவளுக்குப் பயந்திட்டு நான் வராம இல்லை. நான் உன்னைப் பார்க்க வராம இருக்கறதுக்கு காரணம் வேற....''

சந்தானலஷ்மி பொறுமைஇழந்துவிட்டாள். ''இங்கே பாருங்க; இந்த போன் பேச்செல்லாம் எனக்குப் பத்தலை. எதுவா இருந்தாலும் நேர்ல வந்து சொல்லுங்க....' என்றாள் வேகமாக.

❖

## 26

சந்தானலஷ்மியின் குரலில் இருந்த வேகத்தைப் பார்த்ததும் கனகசபாபதியின் குரலும் அதை எதிரொலிப்பதாய் கடுமையாகியது.

''ஸாரி சந்தானம்; நேர்ல வந்து எதையும் இப்ப உன்கிட்ட பேசற நிலைமையிலே நான் இல்லை. நீ போன் பண்ணியதால என் வேலை எல்லாத்தையும் தூக்கி வச்சிட்டு ஒரு மரியாதைக்காக உன்கிட்ட பேசிட்டு இருக்கேன். சொல்றேன் கேட்டுக்க. இனிமே உன் வீட்டுப் பக்கம் நான் வர்ரதா இல்லை. உன்கிட்ட தொடர்பும் வச்சிக்கிறதா இல்லை. உடனே பெண்டாட்டிக்குப் பயந்து ஓடறேன்னு நெனைச்சிக்காதே. அவளுக்குப் பயந்து ஓடுற ஆம்பளை - நான் இல்லை. நான் என்னோட ரெண்டு குழந்தைகளுக்கும் பயந்து உன்னை விட்டு ஓடுறேன். அதுவும் குறிப்பா என் மகளுக்குப் பயந்து ஓடுறேன். ஹைதராபாத் போறதா சொல்லிட்டு சைதாபேட்டையில ஒரு பொம்பளைகூடப் போய் படுத்துக் கிடந்திருக்கான் நம்ம தகப்பன் என்கிற அசிங்கம் பிடிச்ச கதை என் ரெண்டு குழந்தை களுக்கும் தெரிஞ்சி போச்சி சந்தானம். என் பெண்டாட்டிகிட்ட நான் தலைகுனியலை. ஆனா என் குழந்தைங்ககிட்ட தலை குனிஞ்சிட்டேன். அதுவும் என் மக வயசுக்கு வந்து உக்கார்ந்திருக்கிற இந்த அருமையான நேரத்ல தலைகுனிய வேண்டியதாயிருச்சி. என்

பெண்டாட்டி என்னை நாக்கைப் பிடுங்குற மாதிரி ஆயிரம் கேள்வி கேட்டா.... என் குழந்தைங்க ஒரு கேள்விகூட கேட்கலை - திருப்பியும் இதே தப்பை நான் செஞ்சா என் குழந்தைகளும் நாளைக்கு என்னை அதே நாக்கைப் பிடுங்குற கேள்விகள் கேட்கும் - அதை கேட்டுட்டு என்னால உசிரோட ஒருநாள்கூட இருக்க முடியாது சந்தானம். என் பெண்டாட்டிக்கு நான் நல்ல புருஷனோ இல்லையோ - தெரியாது. அதைப்பத்தி எனக்கு அக்கறையும் கிடையாது. ஆனா என் குழந்தைகளுக்கு என்னிக்கும் நான் ஒரு நல்ல தகப்பானா இருக்கவே ஆசைப்படறேன்....''

- கனகசபாபதி சில விநாடிகள் மௌனமாக இருந்தபின் தொடர்ந்தார்.

''இன்னொரு விஷயம் சந்தானம். முதமுதல்ல உன்கிட்ட நான் வந்தப்ப என் ரெண்டு குழந்தைகளுக்கும் வயசு குறைச்சல். அதனால அப்ப எனக்குத் தெரியலை. இப்ப நிலைமை வேற. என் பையன் இப்பவே என் உசரம் இருக்கான். என் மகளும் பெரிய பொண்ணாயிட்டா. என் மகனுக்கே இப்ப பொண்ணுங்களை பாக்குற வயசு. என் மகளுக்கோ அவளைத் தெரு பசங்க பாக்குற வயசு. இப்பப் போய் நான் உன்கூட இருக்கறதுக்கு ஹைதராபாத் போறதா பொய் சொல்லிட்டு ஓடி வந்திட்டு இருந்தா நல்லாவா இருக்கும்? இப்பத்தான் எனக்கே இன்னொரு விஷயம் புரியுது. ஒரு வயசுக்கு மேல போயாச்சின்னா நாம நம்மோட குழந்தைகளுக்காக சில தியாகங்களை பண்ணித்தான் ஆகணும். இதையெல்லாம் யோசிச்சி பாத்திட்டுத்தான் உனக்கும் எனக்கும் இருக்குற உறவை இந்தக் கட்டத்தோட நிறுத்திடலாம் என்கிற முடிவுக்கு வந்தேன்....''

-இந்த இடத்தில் சந்தானலஷ்மி கனகசபாபதிக்குக் கேட்கிற மாதிரியே பலமாக விசும்பிவிட்டாள். அவளுடைய நெஞ்சை அடைத்தது. இரண்டு கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தது. கண்ணீரை துடைத்து விட்டுக்கொண்டே மூக்கை உறிஞ்சினாள். சந்தானலஷ்மியின் அழுகையை உணர்ந்து கொண்ட கனகசபாபதி யின் மனம் சிறிது நெகிழப் பார்த்தது. ஆனாலும் 'நெகிழக் கூடாது' என்று தன் மனதை இறுக்கிக் கொண்டார். - விஷயம் சரியான திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது. தெரியாத்தனமாக இரக்கத்தைக் காட்டி திசை மாறிவிடும்படி செய்துவிடக்கூடாது. அப்படி எதையாவது செய்து வைத்தால் இத்தனை நேரம் சந்தானலஷ்மியிடம் கனகசபாபதி நடத்திக் காட்டியிருக்கும் பொய்யான நாடகத்தின் அத்தனை கற்பனைக் காட்சிகளும் அவரின்



வாழ்க்கையில் நிஜமாகவே ஒருநாள் நடந்தாலும் நடந்துவிடும். கனகசபாபதியை நடுத்தெருவில் நிற்க வைத்தாலும் நிற்க வைத்துவிடும். அதனால் சில நிமிடங்களுக்கு மௌனமாக இருந்துவிட்டு கனகசபாபதி சொன்னார். ''இதுல உணர்ச்சி வசப்படறதால நடக்கப்போற எதுவும் நடக்காம இருந்திடப் போறதில்லை சந்தானம்.... ரொம்ப ஸாரி - வேற வழியே கிடையாது.

சந்தானலஷ்மி பதில் சொல்லாமல் மூக்கை உறிந்து கொண்டிருந்தாள். கனகசபாபதிக்கு இதற்கு மேல் என்ன சொல்வதென்று தெரியவில்லை. திரும்பத் திரும்ப சந்தானலஷ்மி பேசாமல் மூக்கை உறிந்துகொண்டே இருந்தாள். ''எனக்கு நேரமாகுது சந்தானம்'' - என்றார் கனகசபாபதி.

''திடீர்னு நீங்க இப்படியெல்லாம் சொன்னா என்ன பண்ணுவேன் நான்? எங்கே போவேன்?'' சந்தானலஷ்மி அழுதுகொண்டே கேட்டாள்.

''உனக்கு ஒரு வழி பண்ணாம போகமாட்டேன்'' - என்றார் கனகசபாபதி.

''இதோ பாதி வழியில என்னை விட்டுட்டு உங்க வழியில போகப் பாக்குறீங்களே....''

''அப்படி ஏன் எடுத்துக்கறே.... நாம ரெண்டு பேருமா ஒரு ஒளிவு மறைவு இல்லாத; ஆனா ஊருக்கு ஒளிவுமறைவான பயணம் போயிட்டு இருந்தோம். இப்ப அந்தப் பயணம் முடிவுக்கு வந்திருச்சி....''

''ஆனா வனிதாமணிகூட மட்டும் உங்க பயணம் முடியவே முடியாது?'' - சந்தானலஷ்மி கோபமாகவும் இடக்காகவும் கேட்டாள்.

''அதையும் அப்படி எடுத்துக்காதே. எனக்கு அவகூட பயணமே கிடையாது. ரயில்ல எனக்கு எதிர்ல ஒருத்தர் நான் போற ஊருக்கே போறார். நானும் அவரும் ஒரே கம்பார்ட்மெண்ட்ல ஒரே ஊருக்குப் போயிட்டு இருக்கோம் என்கிறதாலேயே நானும் அவரும் ஒண்ணா ட்ராவல் பண்றோம்னா அர்த்தம்? கிடையாதே. வனிதாமணி நான் போற ட்ரெய்ன்ல அதே கம்பார்ட்மெண்ட்ல இருக்கா. அவ்வளவு தான். அதுக்கு மேல எனக்கும் அவளுக்கும் இடையே டப்பா எதுவும் கிடையாது. ஒரு உண்மையை இந்த நேரத்திலும் மனம்

திறந்து நான் ஒத்துக்கறேன் சந்தானம். எனக்கும் வனிதாமணிக்கும் இடையில் ஏற்பட்டது - ஏதோ விட்ட குறை தொட்ட குறைதான். ஆனா எனக்கும் உனக்கும் மத்தியில ஏற்பட்டது அப்படி விட்ட குறை தொட்ட குறை கிடையாது. எனக்குள்ள இருந்த மோசமான குறையை அருமையா நிறைய வச்சது உன்னோட ரிலேஷன்ஷிப் தான். செக்ஸ் இன்பம்; செக்ஸ் அனுபவம் என்கிற விஷயம் பெரிய காலிமனை மாதிரி ரொம்ப எம்ப்டியா வெறிச்சோடிப் போய் கிடந்தது சந்தானம். அதை பூத்துக் குலுங்குற தோட்டமாக்கியது நீதான். நெஜமாவே சொல்றேன். You are my Rain அதுவும் Sexual Rain - ஆனா இப்ப எனக்கு தேவையான மழை பெய்தாச்சி. தேவைக்கும் கொஞ்சம் அதிகமாவே பெய்திருச்சி. இனி மழை வேண்டாம் போதும்னு இருக்கு எனக்கு. யெஸ் - மழை எனக்குப் போதும் சந்தானம். தரிசா கிடந்த என் பாலுறவு நிலத்தை பூங்காவா மாத்தின மழையா - நீ இருந்ததுக்கு உனக்கு நான் என் ஆயுசுக்கும் நன்றிக் கடன்பட்டிருக்கேன். இப்ப உன்னை விட்டு விலகிக்கறதும்கூட இந்த நன்றிக் கடனோட ஒரு 'பார்ட்'தான். என்னதான் உனக்காக நான் வாரி வாரி பணத்தைச் செலவழித்தாலும் உன்னை நான் ஒளிவுமறைவான நிழல் வாழ்க்கையிலதான் மறைச்சும் அடைச்சும் வச்சிருக்கேன். ஊர் அறிய வெளிப்படையான கணவன்- மனைவி வாழ்க்கையை உன்கூட என்னால வாழ முடியாம போயிருச்சி. அந்த குற்ற உணர்ச்சியும் என்னை அப்பப்ப போட்டு வாட்டுதுன்னு சொன்னா - நீ நம்புவியோ மாட்டியோ. ஆனா அதான் உண்மை. மனசைத் திறந்து சொல்றேன் சந்தானம். யாரையாவது நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு நல்லபடியா இருக்கணும். இப்ப என் ஒரே ஆசை இதான். இதுதான் சரியான முடிவும்கூட...... பத்துப் பதினைஞ்சி நாள் கழிச்சி வந்து உன்னைப் பாக்குறேன். உன் எதிர்கால பாதுகாப்புக்காக ஆறு லட்ச ரூபா கொண்டாந்து தரேன். பத்திரமா அதை பேங்க்ல டெபாசிட் பண்ணி; அதுல இருந்து வர்ர வட்டியை உன் செலவுக்காக யூஸ் பண்ணிக்க....''

''எல்லாத்தையும் நீங்களே முடிவு பண்ணியாச்சி போல....'' சந்தானலஷ்மி கண்ணீரை துடைத்துக்கொண்டே கேட்டாள்.

''அப்படிப்பட்ட கட்டாயத்ல இருக்கேன் சந்தானம்....''

''இங்கே பாருங்க; என்னை நீங்க கல்யாணம் பண்ணிக்க வேண்டாம். என்கூட வந்து இருக்கவும் வேண்டாம். மாசத்ல ஒரே ஒரு நாள்; ஒரே ஒரு மணிநேரம் வந்து என்கூட இருந்திட்டுப் போங்க. அதை என் நெனைப்புலேயே வச்சிக்கிட்டு அடுத்த மாசம் நீங்க வரப் போற நாள் வரைக்கும் காத்திட்டு இருக்கேன் நான். ஒரேயடியா வராம மட்டும் இருந்திடாதீங்க. அதை என்னால தாங்கவே முடியாது....''

''முடியாது சந்தானம். காலம் பூராவும் எனக்காக காத்திட்டு இருக்கறதையே வாழ்க்கையா வச்சிக்கிட்டு இருக்கறது ரொம்ப கஷ்டம் உனக்கு.''

''நீங்க வரவே போறதில்லை என்கிற வாழ்க்கைதான் அதைவிடக் கஷ்டமா இருக்கும் எனக்கு. காலம் பூராவும் கண்ணீர் விட்டுட்டே கிடப்பேன்....''

''காலம் எந்த ஒரு காயத்தையும் ஆற வச்சிடும் சந்தானம். அப்படித்தான் தோணுது எனக்கு.''

கனகசபாபதி இப்படிச் சொன்னதும் சந்தானலஷ்மிக்கு கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. ''காலம் என் காயத்தை ஆத்தறதும் ஆத்தாததும் இருக்கட்டும். இப்ப நீங்க என்னை ரொம்ப மோசமா காயப்படுத்துவீங்க - அப்படித்தானே?'' - என்று குரலை மிகவும் உயர்த்திக் கேட்டாள்.

''ப்ளீஸ் சந்தானம் - மனசை தளர விட்டுடாதே'' கனகசபாபதி அவருடைய கைகடிகாரத்தில் மணி பார்த்துக்கொண்டே சொன்னார்.

''எனக்கு நீங்கதான் வேணுமே தவிர - உங்க சமாதானம் எதுவும் தேவை கிடையாது. மறுபடியும் கேக்குறேன் உங்களை.... இவ்வளவு நேரம் நீங்க பேசினதெல்லாம்தான் உங்களோட முடிவா?'' சந்தானலஷ்மி கேட்டாள்.

கனகசபாபதி தயக்கமே இல்லாமல் சொன்னார் ''யெஸ்....''

''சொல்ற வேகத்தைப் பார்த்தா - ரொம்ப இஷ்டமான முடிவு போல....''

''எப்படி உனக்கு இஷ்டமோ அப்படியே நெனைச்சிக்க....''

''அப்ப என்னோட முடிவை சொல்லிடறேன்....''

''நல்ல முடிவா சொல்லு....''

''என்னை நீங்க விட்டாலும் உங்களை நான் விடறதாயில்லை'' - என்று சொல்லிவிட்டு சந்தானலஷ்மி ரிசீவரை படாரென்று வைத்து விட்டாள். இதை எதிரே பாராததால் கனகசபாபதி திகைத்துப் போய்விட்டார். என்ன பண்ணுவதென்று தெரியவில்லை அவருக்கு.

பொய் நாடகமாடி வனிதாமணியை ஏமாற்றி கட்டுப்படுத்திவிட்ட மாதிரி சந்தானலஷ்மியையும் ஏமாற்றி எளிதாக விலக்கிவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தார். நினைத்தது நடக்காது போலிருந்தது. ஆபிஸ் வேலையில் மனம் குவியவில்லை. 'என்னை நீங்க விட்டாலும் உங்களை நான் விடறதாயில்லை' என்று சந்தானலஷ்மி சொன்னதின் நேர் அர்த்தம் என்னவென்று கனகசபாபதி யோசித்துப் பார்த்தார். எவ்வளவு யோசனை செய்தும் அர்த்தத்தை கண்டுபிடிக்க முடியவில்லை அவரால். உடனே கோபம் வந்துவிட்டது அவருக்கு. சந்தானலஷ்மி அவளுடைய புத்தியைக் காட்டுகிறாள் என்ற கடுப்பு ஏற்பட்டது கனகசபாபதியின் மனதில். எரிச்சலோடு ஏதோ விளங்காத மாதிரி உட்கார்ந்திருந்த அவரின் நினைப்பில் சரேலென பூனை குறுக்கே போவதுபோல சந்தானலஷ்மியின் சகோதரன் சுந்தரேசனின் ஞாபகம் குறுக்கே பாய்ந்தது. கனகசபாபதி உஷார் நிலையில் நிமிர்ந்து உட்கார்ந்தார். சுந்தரேசனை அவர் இரண்டு தடவை சந்தானலஷ்மியின் வீட்டில் எதிர்பாராமல் பார்த்திருக்கிறார். அவன் சகவாசம் சரியில்லாத; எந்த ஒழுங்குமுறையும் இல்லாத ஆள் என்பது அவருக்குத் தெரியும். அதற்குமேல் அவனைப் பற்றிய விபரம் எதையும் சந்தானலஷ்மியின் மூலம்கூட தெரிந்துகொள்ள கனகசபாபதி விரும்பியதில்லை. சுந்தரேசனைப் பற்றிப் பேசித் தெரிந்து கொள்வதுகூட அவருடைய அந்தஸ்திற்குத் தகாததாக நினைத்தார் அவர் - ஆனால் இப்போது அவரின் அந்தஸ்திற்கு தகாத சுந்தரேசனைப் பற்றிச் சிறிது நினைத்துப் பார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருந்தார் கனகசபாபதி. சந்தானலஷ்மி அந்த சுந்தரேசனை அனுப்பி பெரிய விவகாரம் எதையும் ஏற்படுத்தி விடுவாளோ?

கனகசபாபதி கவலையுடன் முகவாயை சொறிந்தார். தரிசாகக் கிடந்த அவரின் ஒரு வாழ்க்கையை சந்தானலஷ்மி பூங்காவனமாக மாற்றி இருக்கிறாள் என்று சிறிது நேரத்திற்கு முன்புதான் அவளிடம் அவர் சொன்னார் - பார்த்தால் பூந்தோட்டத்தில் இப்போது புயல் வீசிவிடும் போல இருந்தது. கனகசபாபதியால் நாற்காலியில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டே இருந்தார். ஹைதராபாத் புயல் வீட்டில் ஒரு மாதிரியாக ஓய்ந்து கிட்டத்தட்ட பத்து நாட்களாகப் போகின்றன. இப்போது சைதாபேட்டைப் பக்கம் இருந்து புதிய புயல் வீசத் தொடங்கும்போல இருந்தது. சந்தானலஷ்மியிடம் சமாதானமாகப் போய்விடலாமாவென்று நினைத்தார் கனகசபாபதி. அதற்கும் மனசு வரவில்லை அவருக்கு. இதற்குமேல் சமாதானம் செய்து



கொண்டால் அவருக்குத்தான் மானக்கேடு. அவருக்குத்தான் படுதோல்வி. விஷயம் அதோடும் முடிந்துவிடாது. சந்தானலஷ்மியுடன் உறவைத் துண்டிக்காமல் தொடர நினைத்தால்; வேறொரு சந்தர்ப்பத்தில் வனிதாமணிக்கு அது நிஜமாகவே தெரிய வந்தால்- புயலாக இராது அது. பிரளயமாக பூகம்பமாக இருக்கும். புயலின் பாதிப்பைவிட பூகம்பத்தின் பாதிப்பு அளவிட முடியாததாக இருக்கும். புயலா? பூகம்பமா? யோசனை செய்தார் கனகசபாபதி. இரண்டில் ஒன்றை சந்தித்துத்தான் ஆக வேண்டும். நிச்சயமாக பூகம்பத்தை சந்திக்க முடியாது. புயலை சந்தித்துவிடலாம். அதற்காக அதன் வேகத்திலேயே புயலை எதிர்கொள்ள வேண்டும் என்பதில்லை. புயலை சற்று சமாதானம் செய்வதுபோல; தாஜா பண்ணுவது போல பேசித்தான் அதைக் கையாளவேண்டும். ஏமாற்ற வேண்டும். அதற்குமேல் புயலிடம் எதுவும் வைத்துக் கொள்ளக் கூடாது. அது இனி முடிந்த கதைதான்....

❖

## 27

அரை மணி நேரத்திற்கு ஒருமுறை கனகசபாபதி சந்தானலஷ்மிக்கு போன் பண்ணிப் பார்த்துக்கொண்டே இருந்தார். போனின் பக்கத்திலேயேதான் உட்கார்ந்திருந்தாள் சந்தானலஷ்மி. ஆனால் ரிசீவரை எடுக்காமலேயே இருந்தாள். கனகசபாபதியும் விடாமல் டயல் பண்ணிப் பார்த்துக்கொண்டே இருந்தார். சந்தானலஷ்மி ரிசீவரை எடுக்காமலேயே இருந்ததில் கோபம் அவருக்கு உச்சந்தலையில் ஏறியது. அவர் ஏற்பாடு செய்து வாங்கிக் கொடுத்த டெலிபோன் தொடர்பு....கனகசபாபதி எத்தனை தடவை டயல் செய்தாலும் சந்தானலஷ்மியும் எடுத்துப் பேசுகிற அபிப்பிராயத்தில் இல்லை. ஆள் நேரில் வரட்டும் என்பது அவளுடைய தீர்மானம். இனி எதைப் பேசுவதாக இருந்தாலும் கனகசபாபதி அதை நேரில் வந்துதான் பேசவேண்டும். - அதற்காக சந்தானலஷ்மியும் வேக வேகமாக அவளைத் தயார் செய்து கொண்டிருந்தாள். கனகசபாபதி அவளுக்குக் கட்டாயம் வேண்டும் தான். அவரும் இல்லாமல் அவளுடைய வாழ்க்கை முற்றிலும் பாலைவனம் போலத்தான் இருக்கும். பாலைவன வாழ்க்கைதான்

இனி அவளுக்கு என்பது அவளின் தலைவிதியாய் இருக்குமென்றால் அதற்கு மாறாக சந்தானலஷ்மியால் எதுவும் செய்யமுடியாது. பாலைவன கப்பலாக அவள் வாழ்ந்துதான் தீரவேண்டும். ஆனாலும் அதற்கு முன் முடிந்த வரையிலும் தெரிந்த வரையிலும் அவள் போராடிப் பார்த்து விடுவதாக இருந்தாள். - இந்த ஆறேழு வருடங்களில் கனகசபாபதியை சந்தானலஷ்மி முக்கியமான சில கோணங்களில் துல்லியமாகப் புரிந்து வைத்திருந்தாள். எங்கேயோ ஒரு தடத்தில் கனகசபாபதி நாடகமாடுகிறார். அவர் விவரித்த சம்பவங்கள் கற்பனையாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் சந்தானலஷ்மியுடன் உறவைத் துண்டித்துக் கொள்வது என்ற அவரின் வார்த்தை அவருடைய நாடகத்தின் நிஜமான கரு. சந்தானலஷ்மிக்கு நிஜக் கருதான் முக்கியம். நாடகத்தின் கற்பனைக் காட்சிகளின் மேல் அவளுக்கு அக்கறை கிடையாது. ஆனால் அந்த பொய் காட்சிகளின் புரட்டுத் தனங்களுக்காகவாது கனகசபாபதியை அவள் இழுத்தடிக்க வேண்டும். எளிதில் ஆசாமியை விட்டுவிடக் கூடாது. போய் விடாதே சாமியென்று அவள் அவரின் காலைப் பிடித்துக் கெஞ்சவும் தயாராக இருக்கிறாள். போகத்தான் போவேன் என்று அவர் ஆட்டம் காட்டினால் சந்தானலஷ்மி கனகசபாபதியின் காலை வாரிவிடத்தான் பார்ப்பாள். மனுஷிதான் அவளும்....

ஆனால் ஒன்று; கனகசபாபதி அவளை நடுத் தெருவில் நிறுத்திவிட்டுப் போவது போல போய்விட்டால் எப்படி அவரைப் பழி வாங்கலாம் எப்போது பழி வாங்கலாம் என்கிற மாதிரியெல்லாம் எதையும் சந்தானலஷ்மி யோசித்துக் கொள்ளவில்லை.- யோசித்திருந்தால் அவளுக்கும் தம்பி சுந்தரேசனின் ஞாபகம் மின்னலாக மின்னியிருக்கும். மின்னல் மின்னிவிட்டால் தொடர்ந்து இடி முழக்கம்தான். விஷயத்தை சுந்தரேசனிடம் சொல்லிவிட்டால் மிச்சத்தை அவன் பார்த்துக்கொள்வான். - ஆனால் இந்த நிமிஷம் வரை சந்தானலஷ்மியின் மனதில் அந்த மின்னல் ஏனோ மின்னவில்லை. இப்போது அவள் செய்து கொண்டிருந்த ஒரே மின்னல் காரியம் - அவ்வப்போது மணியடித்த போதெல்லாம் போன் ரிசீவரை எடுக்காமலேயே இருந்ததுதான்.... - இந்த விஷயம் நான்கு நாட்களுக்கு இப்படியே போய்க்கொண்டிருந்தது. ஐந்தாவது நாள் சந்தானலஷ்மிக்கே தாங்கவில்லை. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்ததில் தலையெல்லாம் விண்விண்ணென்று வலித்தது. வெளியில் எங்கேயாவது போய் வரலாம் என்று தோன்றியது. உடனே சந்தானலஷ்மியின் மனதில் கல்பனா வந்தாள்.



அவளுடைய வீட்டுக்குப் போய் அவளுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கலாம் போலிருந்தது. கடந்த சில நாட்களாக சாவு வீடு ஒன்றில் தனியாக உட்கார்ந்திருப்பது போலவே இருந்தது சந்தானலஷ்மிக்கு. செத்துப் போன சடலமாக கிடப்பது அவளுக்கும் கனகசபாபதிக்கும் இடையே இருந்த உறவு. எதிர்பாராத சாவு இது. இயல்பான சாவும் இல்லை. ஒரு விதத்தில் இது ஒரு கொலை. கொலையை செய்திருப்பவர் கனகசபாபதி. சந்தானலஷ்மியால் தாங்க முடியாமல் போனது இதுதான். எந்த இரக்கமும் இல்லாமல் இந்தக் கொலையை செய்திருக்கும் கனகசபாபதிக்கு எந்தத் தண்டனையும் கொடுக்கலாம்.-

சரேலென இந்த எண்ணம் மின்னல் வீச்சுப் போல சந்தானலஷ்மியின் அறிவில் பளீரென பாய்ந்தது. சில நிமிடங்கள் அசையாமல் அவள் நின்றுகொண்டிருந்தாள். கனகசபாபதி நினைத்தால் இப்போதுகூட உறவுக்குப் புதிய உயிர் கொடுக்கலாம். உயிர் கொடுத்தால் அவரும் உயிரோடு இருப்பார். இல்லாவிட்டால் அவரின் உயிரை வாங்கிவிடலாம் - சந்தானலஷ்மியின் அறிவுக்குள் மின்னல்கள் மின்னின. இடிகள் அதிர்ந்தன. என்றாவது ஒருநாள் கனகசபாபதி அவளுடைய வீட்டுக்கு வரத்தான் செய்வார். சந்தானலஷ்மிக்கு பணம் கொடுத்து விஷயத்தை 'பைசல்' பண்ணுவதற்காகவாவது ஒரு முறை கட்டாயம் அவர் வரத்தான் செய்வார். அப்போது சந்தானலஷ்மி தைரியமாக கனகசபாபதியை படுகொலை செய்துவிடலாம். இதற்கு அவள் தயங்கவே வேண்டியதில்லை. திடீரென்று அவளை நடுத்தெருவில் நிறுத்துகிற அவரை அவள் தாராளமாக ரத்த வெள்ளத்தில் மூழ்க வைக்கலாம்....

- இப்படி நினைத்தபோது சந்தானலஷ்மியின் ரத்தம் சூடாகியது. உடம்பில் ஒரு அனல் பறந்தது. தெரியாத்தனமாக கனகசபாபதி இந்த நிமிஷம் கிளம்பி வந்தால் நிஜமாகவே அவருடைய ரத்தம்கூட மிஞ்சாது.... அவரை கொலை செய்து குழி தோண்டி வீட்டிற்குள்ளேயே புதைத்துவிட்டு சந்தானலஷ்மி ஜெயிலுக்குப் போகவும் தயாராக இருந்தாள். காலமெல்லாம் ஒற்றை மனுஷியாய் வீடு என்ற ஜெயிலுக்குள் கிடப்பதற்கு நிஜ ஜெயிலில் போய் இருந்துவிடலாம். எதிர்காலம் கிடையாது அங்கே. அதனால் எதிர்பார்ப்பும் கிடையாது. நேரம் தவறாமல் சாப்பாடு. துணைக்கு மேலும் பல பெண் குற்றவாளிகள். அந்தக் காட்சியை சந்தானலஷ்மி கற்பனை செய்து பார்த்தபோது அவளின் மனமும் உடம்பும் அதிர்ந்தன. பெண்களுக்கான ஜெயில் பெண் குற்றவாளிகளுக்கான வேறொரு

விதத்தில் பெண்களின் ஹாஸ்டலாகத் தெரிந்ததில் சந்தானலஷ்மி யின் மனம் நடுங்கிப் பதறியது. மீண்டும் ஒரு 'லேடீஸ் ஹாஸ்டல்' வாழ்க்கை எந்த விதத்திலும் குறுக்கிட்டு விடுமோ என்ற அச்சத்தில் சந்தானலஷ்மியின் உடல் அதிர்ந்தது. வீட்டில் அவளால் நின்று கொண்டிருக்க முடியவில்லை. வேகமாக வீட்டுக் கதவைப் பூட்டி சாவியை எடுத்துக்கொண்டு தெருவில் இறங்கி கல்பனாவின் வீட்டை நோக்கி நடந்தாள்.

-இந்த ஆறேழு வருடங்களில் இல்லாத வழக்கமாக சந்தானலஷ்மி தெருவில் நடந்து சென்று கல்பனாவின் வீட்டுப் படிகளில் ஏறிக் கொண்டிருப்பதைப் பார்த்த தெருக்காரர்கள் ஆச்சர்யமாகிவிட்டார்கள். அதேபோல் தெருவில் எந்த வீட்டின் படியிலும் ஏறியிராத சந்தானலஷ்மிக்குள்ளும் இனம் விளங்காத உணர்வுக் கலவை பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருந்தது. லேடீஸ் ஹாஸ்டலுக்குப் போய் சேர்ந்து; பிறகு இந்த விசாக தோட்டம் வீட்டுக்கு வந்து சேர்ந்த இந்தப் பன்னிரெண்டு வருஷங்களில் சந்தானலஷ்மி இப்படி தனிப்பட்ட முறையில் யாருடைய வீட்டுக்கும் கிளம்பியதில்லை. அதனால் உள் பக்கமாக தாளிடப் பட்டிருந்த கல்பனா வீட்டுக் கதவை உரிமையோடு தட்டுவதற்கு தயக்கமாக இருந்தது அவளுக்கு. சிறிது அந்நியமாகவும் தோன்றியது. அதனால் வந்த சுவடே தெரியாமல் திரும்பிப் போய் விடலாமாவென்று நினைத்தாள். ஆனால் தெரு ஆட்கள் ஆங்காங்கு நின்று சந்தானலஷ்மியை விசித்திரமாக கவனித்துக் கொண்டி ருந்ததால் திரும்பிப் போக முடியவில்லை அவளால்.... அதனால் சந்தானலஷ்மி கதவைத் தட்டிவிட்டு விரல் நகத்தைக் கடித்தபடி வாசலில் நின்றுகொண்டிருந்தாள். குளியலை அவசர அவசரமாக முடித்துவிட்டு வந்து கதவைத் திறந்த கல்பனாவுக்கு அவளின் கண்களையே நம்ப முடியவில்லை. இத்தனை சீக்கிரத்தில் சந்தானலஷ்மி அவளுடைய வீட்டிற்கு வருவாள் என்று எதிரே பார்க்கவில்லை அவள்.

''வாங்க மேடம்.... வாங்க; உள்ளே வாங்க... யூ ஆர் வெல்கம்....'' என்று ஆசை ஆசையாய் சந்தானலஷ்மியின் கையைப் பிடித்தபடி கல்பனா வரவேற்றாள். இந்த வரவேற்பு சந்தான லஷ்மியின் மனதுக்கு இதமாக இருந்தது. கல்பனா அவளை உள்ளே அழைத்துச் சென்று சோபாவில் உட்கார வைத்தாள். கல்பனாவின் வீடு சின்னதாகத்தான் இருந்தது. ஆனால் எல்லாவித விலை உயர்ந்த நவீன வசதிகளாலும் நிரம்பிப் போயிருந்தது. வீட்டில் ஆங்காங்கு



துணிகள் கண்டபடி கிடந்தன. பெண்களுக்கான பல பத்திரிகைகள் இறைந்து கிடந்தன. ஜன்னல் திரைகள் மிகவும் அழுக்கடைந்து தொங்கிக் கொண்டிருந்தன. சந்தானலஷ்மி உடனே அவளுடைய வீட்டின் பரிசுத்தத்தையும் ஒழுங்கையும் நினைத்தாள். அவளுடைய வீடு சுத்தமாக துடைத்து வைத்த ஆள் இல்லாத 'ஷோ ரூம்'போல பளிச்சென இருக்கும். ஆனால் வீடு என்பதற்கான உயிரோட்டம் சந்தானலஷ்மியின் வீட்டில் இருக்காது. - அந்த உயிரோட்டம் கல்பனாவின் வீட்டில் முழுமையாக நிறைந்திருந்தது. அந்த உயிரோட்டத்தை முதலில் சந்தானலஷ்மி நெஞ்சு விரிய சுவாசித்துக் கொண்டாள்.

''எங்கே உங்க பொண்ணுங்க - ஸ்கூலுக்கு போயிருக்காங்களா?''- சந்தானலஷ்மி கல்பனாவை விசாரித்தாள்.

''ஆமா மேடம்.... ஸ்கூல் முடிஞ்சி அவங்க வர மூணு மணியாகும்''

''அவ்வளவு நேரமாகுமா?'' - சந்தானலஷ்மி அறியாமையோடு கேட்டாள். இப்போதெல்லாம் பள்ளிக்கூடங்கள் எத்தனை மணிக்குத் தொடங்குகின்றன; எத்தனை மணிக்கு முடிகின்றன என்ற விஷயங்கள் எதுவும் அவளுக்குத் தெரியாது. ''எந்த ஸ்கூல்ல படிக்கிறாங்க?'' - தொடர்ந்து கேட்டாள்.

''ஹோலி ஏஞ்சல்ஸ்ல....''

''அவ்வளவு தூரமா போய் படிச்சிட்டு வர்றாங்க....?'' - இதுவும் சந்தானலஷ்மி அதே அறியாமையோடு கேட்ட கேள்விதான். ஹோலி ஏஞ்சல்ஸ் ஸ்கூல் எங்கே இருக்கிறது என்பதே அவளுக்குத் தெரியாது.

''ஆட்டோல போயிட்டு ஆட்டோவிலதானே வர்றாங்க....''

அடுத்து என்ன கேட்பதென்று தெரியவில்லை சந்தானலஷ்மிக்கு. பேசாமல் சுற்றியும் பார்த்தபடி மௌனமாக இருந்தாள். அவளுடைய முகத்தில் தெரிந்த சோர்வை கவனித்துவிட்டு கல்பனா கேட்டாள்.

''ஏன் மேடம் - உங்க முகமெல்லாம் என்னவோ போல இருக்கு - உடம்பு எதுவும் சரியில்லையா?''

தயக்கம் எதுவும் இல்லாமல் கல்பனா நேரிடையாகக் கேட்டதும் சந்தானலஷ்மிக்கு சட்டென துக்கம் தொண்டையை அடைத்தது.

சிரமப்பட்டு உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொண்டாள். போனில் கனகசபாபதி சொன்ன அத்தனையையும் கல்பனாவிடம் கொட்டி விடவேண்டும் போல இருந்தது. ஆனால் அதற்கான தெம்பு அவளிடம் அந்த நிமிடம் இல்லை. அவளுடைய சக்தி அத்தனையும் குன்றிப் போயிருந்தது. ''ஸாரிங்க கல்பனா - சொல்றதுக்கு நிறைய இருக்கு. ஆனா எல்லாத்தையும் சொல்ற பொறுமை இப்ப எனக்கு இல்லை.... விபரமா இன்னொரு நாள் சொல்றேன். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இப்ப சொல்லிடறேன்.... என்னமோ ஆயிருச்சி அவருக்கு. இனிமே என்கிட்ட எந்தத் தொடர்பும் வச்சிக்கப் போறதில்லைன்னு சொல்றார்''

''வந்திருந்தாரா?''

''வரலை. எல்லாத்தையும் போன்ல சொல்லிட்டார்''

''நேர்ல வர பயம் போல. அதான் மேடம்; என்னைக்கி உங்க கழுத்ல தாலி கட்ட முடியாதுன்னு சொன்னாரோ - அன்னைக்கே அவர் நம்பமுடியாத மனுஷர்தான்.... நாலுபேர் முன்னாடி தாலி கட்டியவனே பெண்டாட்டியை கைவிட்டுட்டு கூசாம ஒட்டம் பிடிக்கிற மனசாட்சி இல்லாத காலம் இது. தாலி கட்டாத இவர் ஏன் ஒட்டம் பிடிக்க மாட்டார்....வேண்டிய மட்டும் காரியம் முடிஞ்சி போயிருச்சின்னா பிடிக்க வேண்டியதுதானே ஓட்டம்....''

''தலையைப் போட்டு குடைஞ்சி எடுக்குது எனக்கு. இருக்க முடியலை வீட்ல. அதான் உங்ககூடயாவது பேசிட்டு இருக்கலாம்னு கிளம்பி வந்தேன்....''

''பேசாம ரெண்டு நாளைக்கு எங்க வீட்ல என்கூட இருங்க....'' என்றாள் கல்பனா.

''நெஜமாவா சொல்றீங்க - ரெண்டு நாள் என்னை உங்க வீட்ல இருக்கச் சொல்லி?'' - சந்தானலஷ்மி ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

''நெஜமாத்தாங்க மேடம். சும்மா ஒரு பேச்சுக்காகவெல்லாம் எதையும் நான் சொல்லிடமாட்டேன்....''

''ஒரு பேச்சுக்காக கேக்குறேன். நான் ரெண்டு நாள் உங்ககூட வந்து தங்கியிருந்தா நம்ம தெருவுல இருக்கறவங்க ஒரு மாதிரியா பார்க்கமாட்டாங்களா? அவங்களுக்கெல்லாம் நான் ஒரு மாதிரியான பொம்பளையாச்சே....''

''அதெல்லாம் சும்மா அலட்டலுக்கு வெளியில ஏதோ மாதிரி பேசிக்கறது. மனசைத் திறந்து பாத்தீங்கன்னா நம்ம தெருப்



பொம்பளைங்க எல்லாருக்குமே உங்க மேல - எனக்குத் தெரிஞ்சி பொறாமைதான் உண்டு''

''பொறாமையா? என் மேலயா? இருக்கவே இருக்காதுங்க. நீங்க தப்பா சொல்றீங்கன்னு நினைக்கிறேன்.'' - சந்தானலஷ்மி நம்ப முடியாதவளாக சொன்னாள்.

''கொஞ்சங்கூட சந்தேகமே படாதீங்க மேடம். நம்புங்க நான் சொல்றதை. நம்ம தெருப் பொம்பளைங்கன்னு இல்லை; நிறைய பொம்பளைங்களுக்கு வாழ்க்கையில எந்த நிஜமான சந்தோஷமும் கிடையாது. காலத்துக்கும் புருஷன்னு ஒருத்தனை கழுத்லேயும் கால்லேயும் கட்டிக்கிட்டு பொம்பளைங்க ஆம்பளைங்ககிட்ட படற பாடு இருக்கே - அதைப் போல பரிதாபமான இம்சையான சமாச்சாரம் வேற எதுவுமே இருக்காது. -இவங்க படற பாடு எதுவும் உங்க லைஃப்ல சுத்தமா கிடையாது. யாரோ ஒருத்தர் எப்பவோ ஒருநாள் வரார். போயிடறார். அதுக்குமேல உங்களுக்கும் அவருக்கும் இடையில எந்த கமிட்மெண்ட்டும் கிடையாது - அவர் வந்திட்டு போயிட்டார்னா - நீங்க பாட்டுக்கு தனியா அக்கடான்னு இருக்கீங்க....''

- சந்தானலஷ்மி வேகமாக இடைமறித்தாள். ''ஆனா நான் என் வீட்ல அக்காடான்னு இல்லையே கல்பனா.... எனக்குன்னு ஒரு புருஷன் இல்லாம அல்லாடிட்டுக் கிடக்கேனே....''

''அது உங்க பாடு. ஆனா மத்த பொம்பளைங்களுக்கு உங்க பாடு தெரியாது. அவங்களைப் பொறுத்தவரைக்கும் நீங்க குடும்பம் என்கிற பிக்கல் பிடுங்கல் எதுவும் இல்லாத கொடுத்து வைத்த நிம்மதியான மனுஷி.''

கல்பனா இதை மிகவும் உறுதியான குரலில் சொன்னதும் சந்தானலஷ்மி இனம் தெரியாத உணர்வுப் பெருக்கில் நீண்ட பெருமூச்சு விட்டாள்....

❖

# 28

சந்தானலஷ்மி மனதிற்குள் உணர்ச்சிவசப்படுவதை உணர்ந்த கல்பனா சற்று அவளின் பேச்சை நிறுத்தினாள். சில விநாடிகள்

மௌனமாக கழிந்தன.... தன் மனதின் உணர்வுப் பெருக்கை சமனப்படுத்திக் கொண்ட சந்தானலஷ்மி ''ம்.... நீங்க சொல்லுங்க கல்பனா'' என்றாள்.

கல்பனா தொடர்ந்தாள். ''நான் சொன்ன மாதிரி நீங்க மத்த பொம்பளைங்களுக்கு பிக்கல் பிடுங்கல் இல்லாத நிம்மதியான மனுஷி. உங்களை அவங்களோட பார்வையில பாக்கும்போதே தெரிஞ்சி போயிடுது இது. முப்பத்தைஞ்சி வயசாகியும் பாக்குறதுக்கு நீங்க அப்படியே இருக்கிங்க - கண்ணாடி கூஜா போல - மத்த பொம்பளைங்க எல்லாரையும் பாருங்க. யாராவது அதுபோல இருக்காங்களான்னு சொல்லுங்க. ஒரு பொம்பளைகூட இருக்கமாட்டா.... ஒவ்வொரு பொம்பளையையும் கல்யாணமான பத்தாவது வருஷம்; இருபதாவது வருஷம்; முப்பதாவது வருஷம்னு வரிசையா போட்டோ எடுத்து வச்சிட்டே வந்து அந்த போட்டோ எல்லாத்தையும் ஒண்ணா வச்சி அந்தப் பொம்பளையை பாருங்க. முப்பது வருஷம் புருஷன்கூட குடித்தனம் பண்ணின அழகு நல்லா தெரியும். ஒவ்வொரு மனுஷியும் நசுங்கி அப்படியே சப்பையாகி போயிருப்பா.... கரெக்ட்டா சொல்லப் போனா - பழைய பாத்திரம் போல ஆயிருப்பா.... புருஷன்கூட வாழற குடித்தன வாழ்க்கை பொம்பளைங்களோட உடம்பையும் மனசையும் சக்கையா மென்னு துப்பிடுதுங்க மேடம். ஒரு புருஷன் என்கிற மனுஷன்கிட்ட பெண்டாட்டி என்கிற மனுஷி கண்முழி பிதுங்கி - தொலைஞ்சே போயிடறா....''

''ஆனா எனக்கு இப்ப - ஒரு புருஷன்கிட்ட குடும்ப வாழ்க்கைல தொலைஞ்சி போக மாட்டோமான்னு இருக்கே....'' - சந்தான லஷ்மி கேட்டாள்.

''இது இந்தக் கரைக்கு அந்தக் கரை பச்சை என்கிற கதை....'' கல்பனா சிரித்துக்கொண்டே சொன்னாள்....

''ஆனா நீங்களும்தான் குடித்தனம் பண்ணி நசுங்கிப்போன மாதிரி தெரியலையே பாக்குறதுக்கு....'' சந்தானலஷ்மி கேட்டாள்.

''காரணம் - நான் இந்தக் கரையிலும் இல்லை. அந்தக் கரையிலும் இல்லை. புருஷன் என்கிற வீட்டுக்காரர் வருஷத்ல பதினோரு மாசம் வெளிநாட்ல இருக்கார். அதனால ரொம்ப நசுங்கிப் போயிடாம இருக்கேன்....''

''ஆனா அவர் பக்கத்ல இல்லேங்கறது கஷ்டமான விஷயந்தானே உங்களுக்கு?''



''அது கொடுமையான விஷயந்தான். ஆனா என் வீட்டுக்காரரும் வருஷம் பூராவும் என்கூடவே இருந்தார்னா - நானும் இந்நேரம் பாதி ஒடைசல் பாத்திரமாத்தான் ஆயிட்டு இருப்பேன்.''

''திடீர்னு நீங்க இப்படிப் பேசறது என்னவோ போல இருக்கு....'' - சந்தானலஷ்மி சிறிது குழப்பமான தொனியில் சொன்னாள்.

''ஸாரி - நீங்க ஏதோ உங்க பிரச்னையை பத்தி பேசறதுக்காக வந்திருக்கீங்க. அதை மறந்திட்டு நான் பாட்டுக்கு எதையோ லெக்ச்சர் அடிச்சிட்டு இருக்கேன்'' - என்றாள் கல்பனா.

''அதையெல்லாம் பேசலாம்னு நெனைச்சாலே மனசெல்லாம் கொதிக்குது. கொஞ்ச நேரமாவது அதை மறக்கலாம்னுதான் ஓடி வந்திருக்கேன். டீடெய்லா முடிஞ்சா இன்னொரு நாள் அதைப் பத்தி பேசுவோம் கல்பனா. நீங்க சொல்லிட்டு இருந்தீங்களே - தொடர்ந்து அதையெல்லாம் சொல்லுங்க.''

''ஓ.கே. மேடம். உங்க பிரச்னை பத்தி இப்ப எதுவும் பேச வேண்டாம்னா - ஓ.கே. நோ ப்ராளம்.... எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் என்ன சொல்ல வந்தேன்னா - குடித்தனம் என்கிறதில புருஷனோட கைதான் எப்பவும் எல்லா விஷயத்திலும் ஓங்கிப் போயிடுது. ரெண்டும் ஒண்ணுக்கு ஒண்ணு சமமா இருந்தா எதுவுமே டேமேஜ் ஆகாது. ஏதாவது ஒண்ணு கை ஓங்கிப் போயிடுச்சின்னா - இன்னொன்னுக்கு அடி வாங்கி நசுங்கிப் போறதைத் தவிர போக்கிடம் கிடையாது. லீவ்ல இருக்குற ஒரு மாசத்ல என் வீட்டுக்காரருக்கு என்னத்தை கை ஓங்கும். அதனால எனக்கும் எதுவும் ஆகலை. அதுக்காக இங்கேயே இருந்திருந்தா என் வீட்டுக்காரரும் மோசமான புருஷனாத்தான் இருந்திருப்பார்னு சொல்ல வரலை. அப்படி ஆகறதுக்கு சான்ஸ் ரொம்பவே இருந்திருக்கும். மனுஷனா இல்லாம எப்பவுமே புருஷனாவே ஒரு ஆம்பளை இருந்தா பிரச்னைதான்.... எத்தினியோ விஷயங்கள்ல என் வீட்டுக்காரர் ரொம்ப நல்ல மனுஷர்தான் - மத்தவங்ககூட ஒப்பிட்டுப் பார்க்கும்போது.... இருந்தாலும் என் வீட்டுக்காரர்கிட்ட ஒரு விஷயத்ல நான் பட்ட அவமானத்தை மட்டும் இப்ப உங்களுக்குச் சொல்றேன் - கேட்டுட்டு பயந்து போயிடாதீங்க - இந்த மாதிரி மனுஷனான்னு....''

''ரொம்ப நான் வீக் ஆயிட்டேன் போல கல்பனா....'' - என்றாள் சந்தானலஷ்மி குறுக்கிட்டு.

''எதை வச்சிச் சொல்றீங்க மேடம்?''

''அதை நீங்க சொல்ல ஆரம்பிக்கறதுக்கு முன்னாடியே பயம் வந்திருச்சி எனக்கு''

இதைக் கேட்டு கல்பனா லேசாக புன்னகை செய்தாள். அவளின் புன்னகையில் சின்ன வறட்சி இருந்தது. குறிப்பிட்ட பழைய ஞாபகத்தில் சில விநாடிகள் மௌனமாக ஆழ்ந்திருந்தபின் கல்பனா தொடர்ந்து சொல்லத் தொடங்கினாள்.

''அப்ப நான் என் ரெண்டாவது மகளை உண்டாகி இருந்தேன். வயித்ல ஏழு மாசம் அவ. ஸ்கேன் பண்ணிப் பாத்துல ரெண்டாவதும் பொண்ணுதான்னு தெரிஞ்சி போச்சி. மூணாவதாவது - ஆண் குழந்தை உண்டாகாதான்னு ஆசைப்பட்டு நாங்க ரெண்டு பேரும் ரிஸ்க் எடுக்க விரும்பலை. ஆனா என் வீட்டுக்காரருக்கு என்னமோ பயம் - வாஸக்டமி ஆபரேஷன் பண்ணிக்க....''

கல்பனா இதைச் சொன்னபோது கனகசபாபதி வாசக்டமி ஆபரேஷனைப் பண்ணிக்கொண்டிருப்பதாக ஒருநாள் சொன்னது சந்தானலஷ்மியின் ஞாபகத்தில் வந்தது.

கல்பனா தொடர்ந்தாள் ''அப்ப அவர் சவூதியில இருந்தார். லீவ்ல இங்கே அவர் வர்ரதுக்கு இன்னும் அஞ்சு மாசமோ என்னமோ இருந்தது. அதனால லீவ்ல இங்கே அவர் வர்ரதுக்கு முன்னாடி சவூதியிலேயே அந்த வாசக்டமி ஆபரேஷனை பண்ணிட்டு வந்திடச் சொன்னேன். சரியா அதுக்கு அவர் பதில் சொல்லலை.... ஆபரேஷனை இங்கே வந்து பண்ணிக்கிறதா சொன்னார். அவர் பொய் சொல்றார்னு தெரிஞ்சது. இங்கே வந்தா அங்கே போறதுக்கும் இங்கே போறதுக்குமே நேரம் சரியா இருக்கும். கடைசியில ஆபரேஷனை பண்ணிக்காமலேயே ஃப்ளைட் ஏறிடுவார். இங்கே மனுசன் ஒரு மாசம் இருக்கும்போது திருப்பியும் நான் உண்டாகி வச்சிட்டா என்ன பண்றது.... போன்ல பேசறப்ப அதனால - அங்கே அவர் ஆபரேஷன் பண்ணிக்கலைன்னா இங்கே நான் டெலிவரி ஆன கையோட க்யூபெக்டமி ஆபரேஷன் பண்ணிப்பேன்னு க்ளியரா சொல்லிட்டேன்....''

சந்தானலஷ்மி குறுக்கிட்டுக் கேட்டாள் ''க்யூபெக்டமி ஆபரேஷன்னா?''

''குழந்தை உண்டாகாம இருக்கறதுக்கு பொம்பளைங்களுக்கு செய்ற குடும்பக் கட்டுப்பாட்டு ஆபரேஷன்....''



''பாருங்க கல்பனா. இத்தனை வயசாயிருச்சி - இதுகூடத் தெரியாம இருக்கேன....'' சந்தானலஷ்மி சின்ன சுய இரக்கத்துடன் சொன்னாள் இதை.

''அதுக்கு என்னங்க மேடம் பண்றது.... அதையெல்லாம் தெரிஞ்சிக்கிற சந்தர்ப்பம் வரலை உங்களுக்கு. அதனாலே தெரியாம போயிருச்சி....''

இந்தச் சின்ன விஷயத்தைத் தெரிந்து கொள்கிற சந்தர்ப்பம்கூட வாழ்க்கையில் தனக்கு வராமல் போயிருக்கும் உண்மை சந்தான லஷ்மியின் மனதைச் சிறிது கலங்க வைத்தது. இதுகூட வாழ்வின் ஓர் இழப்பாகத் தெரிந்தது அவளுக்கு. இழப்பு சிறிது அவமானத்திற்கு உரியதாகவும் அவளின் மனத்திற்குத் தோன்றியது. சந்தானலஷ்மியின் முகபாவனையை கவனித்துவிட்ட கல்பனா கேட்டாள். ''உங்க மனசு எங்கேயோ போயிட்டாப்ல தெரியுதே....''

''ஒண்ணுல்ல கல்பனா.... நீங்க சொல்லுங்க. மனசுல ஏதோ கஷ்டம்....''

''சீரியஸா விஷயங்களை பேசினாலே மனசுக்குக் கஷ்டந்தான் மேடம்....'' - சந்தானலஷ்மி சொன்னாள்.

''நிஜந்தான் நீங்க சொல்றது. அப்ப நான் இப்ப சொல்லிட்டு இருந்தேனே - அதைத் தொடர்ந்து சொல்லட்டுமா?'' - கல்பனா கேட்டாள்.

''சொல்லுங்க கல்பனா....''

''ரெண்டாவது பொண்ணு டெலிவரி ஆன கையோட நான் க்யூபக்டமி ஆபரேஷன் பண்ணிப்பேன்னு போன்ல சொன்னதா சொன்னேன் இல்லையா - நான் அப்படிச் சொன்னதும் 'நீ பண்ணிக்க வேணாம்'னு அவர் உடனே திருப்பிச் சொல்லிட்டார். நான் பண்ணிக்கக் கூடாதுன்னா நீங்க சவூதியில வாஸக்டமி ஆபரேஷனை பண்ணிட்டுத்தான் இங்கே வரணும்னு நானும் திருப்பி விடாம சொன்னேன். ஆனா அதுக்கும் மனுசன் சரியா பிடி குடுக்கலை. 'பாக்கறேன்'னு இழுத்தாப்ல பதில் சொன்னார். நல்லா பார்ப்பாரே - எனக்குத் தெரியாதா இவரைப் பத்தி.... பாக்கறேன் என்கிற பேச்சே வேண்டாம். வாஸக்டமி ஆபரேஷனை பண்ணியே ஆகணும் அவர். பண்ணிக்கிறதுக்கு அவருக்குப் பயமாயிருந்தா - இங்கே நான் எனக்கு க்யூபக்டமியை பண்ணிப்பேன். ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர் ஆபரேஷன் பண்ணிக்காம செக்ஸ் வச்சிக்கிறதுக்கு நான்

தயார் கிடையாதுன்னு கறாரா நான் அடிச்சிச் சொன்னேன் பாருங்க - அதுக்கு அவர் உடனே திருப்பி என்னை ஒரு கேட்கக்கூடாத கேள்வியை கேட்டுட்டார். என்னை அவர் மோசமா என்ன கேள்வி கேட்டிருப்பார்னு யோசிச்சி சொல்ல முடியுமா மேடம் உங்களால....?'' - கல்பனா சந்தானலஷ்மியை கேட்டாள்.

''என்னையா கேக்குறீங்க?'' - சந்தானலஷ்மி திருப்பிக் கேட்டாள்.

''யெஸ்....''

சந்தானலஷ்மி சிறிது நெளிந்தாள். யோசனை பண்ணி கண்டு பிடிக்கிற ஆர்வமும் இல்லை பொறுமையும் இல்லை அவளுக்கு. ''தெரியலையேங்க கல்பனா....'' என்றாள்.

உடனே கல்பனா கனத்த பெருமூச்சுடன் சொன்னாள் ''தாட்சண்யம் பாக்காம சொல்றதா இருந்தா - ஒரு யோக்கியமான புருஷன் ஒரு யோக்கியமான பெண்டாட்டியை பாத்துக் கேக்குற கேள்வியே கிடையாது - அன்னைக்கி அவர் என்னை போன்ல கேட்டது. ஆனா என் வீட்டுக்காரர் யோக்கியமான மனுஷர். அப்படியொரு கேள்வியை கேக்குற ஆளே கிடையாதுதான். ஆனாலும் அந்த மோசமான கேள்வியை கேட்டு வைத்தார். க்யூபெக்டமி ஆபரேஷனை நீ பண்ணிக்கிட்டா உன்னை நம்பி என்னால எப்படி இங்கே நிம்மதியா இருக்க முடியும்?னு அநியாயமா மிருகத்தனமா கேட்டு வைத்தார். பாத்தீங்களா - என்ன மாதிரியான கேவலமான கேள்வினு....?''

தொடர்ந்து பேச முடியாத உணர்வுக் கனத்தில் கல்பனா விரைவாக மூச்சு மட்டும் விட்டவாறு நின்றாள். தன் கணவர் கேட்டதாக அவள் வெளியிட்ட கேள்வியின் உண்மையான பொருள் சந்தானலஷ்மிக்குப் புரியவில்லை. அந்தப் புரியாமையின் அறியாமையோடு அவள் கல்பனாவைப் பார்த்து முழித்தாள். அவளின் அறியாமை அவள்மேல் கல்பனா கொண்டிருந்த அபிமானத்தை மிக உயரத்திற்கு உயர்த்தியது. ''என்ன மேடம் - இப்படி பாக்குறீங்க பாவம் - புரியலை என் வீட்டுக்காரர் என்ன அர்த்தத்ல சொன்னார்னு....'' என்று ஒருவித வருத்தத்துடன் கேட்டாள்.

''ஸாரி கல்பனா - நெஜமாவே புரியலை - என்ன அர்த்தம்னு....''

''சில நேரங்கள்ல சில விஷயங்கள் புரியாம போயிட்டாலே நிம்மதிதான் - இருந்தாலும் சொல்லிடறேனே என்ன அர்த்தத்ல என்



வீட்டுக்காரர் அப்படிக் கேட்டார்னு.... க்யூபெக்டமி ஆபரேஷன் செய்துகிட்டா அதுக்குப் பிறகு எனக்குக் கண்டிப்பா குழந்தை உண்டாவதுக்கான சான்ஸ் கிடையாது என்கிறது உங்களுக்குத் தெரியும்னு நெனைக்கிறேன். அந்த ஆபரேஷனை பண்ணிக்கிட்டா; குழந்தை உண்டாயிட சான்ஸ் கிடையாது என்கிற தைரியத்ல நான் என் புருஷன் சவூதியில இருக்குற நேரத்ல யார்கூட வேணுமானாலும் செக்ஸ் வச்சிக்க இங்கே ரெடியா இருந்திடுவேனாம் - இந்த அர்த்தம்தான் என் வீட்டுக்காரர் அந்த மாதிரி கேட்டதுக்கு....''

கல்பனா இதைச் சொன்னதும் சந்தானலஷ்மி அதிர்ந்து போனாள். இந்த அர்த்தத்தை அவள் எதிர்பார்க்கவில்லை.

''என்னங்க கல்பான இது.... இப்படிப்பட்ட அர்த்தத்திலேயா உங்க வீட்டுக்காரர் கேட்டார் அப்படி.... எப்படி இந்த கேள்வியை நீங்க தாங்குனீங்க பாவம்....'' - சந்தானலஷ்மி இந்தக் கேள்வியை சிறிது ஆத்திரத்தோடு கேட்டாள்.

''எங்கே தாங்கினேன்.... தாங்க முடியாம அந்த நிமிஷம் செத்து சுண்ணாம்பாயிட்டேன். நெஜமா மேடம். அன்னைக்கி ஒரு கல்பனா செத்து சுடுகாட்டுக்குப் போயிட்டா போங்களேன்....''

''இப்படி கேட்டவர்கூடத்தான் நீங்களும் இத்தனை வருஷம் - அதுக்குப் பிறகும் குடித்தனம் பண்ணிட்டு இருக்கீங்க....''

''சொல்லிடறேனே.... இங்கேதான் நம்ம மாதிரி பொம்பளைங்க- 'வீக்கர் செக்ஸ்' ஆயிட வேண்டியிருக்கு மேடம். தப்பிச்சுக்கிறதுக் காக சொல்லலை இப்படி. யதார்த்தமான வாழ்க்கைல அந்த மாதிரி நடக்கும்படியா ஆயிடுது. வேற எதுக்காக பார்க்கா விட்டாலும் பெத்த குழந்தைகளுக்காக பார்க்க வேண்டியதாயிருக்கு. நான் எடுக்கற ஒரு முடிவு எனக்கு மட்டும் சாதகமா இருந்திட்டு என் குழந்தைகளுக்குப் பாதகமா இருந்திட்டா என்ன செய்யறது.... அதைத்தான் முதல்ல நெனைச்சி பாக்க வேண்டியிருக்கு. அதனால கடுமையான பிரச்னையும் சிக்கலும் ஏற்படும்போது ஏதோ ஒரு விதத்ல பேசாம இருந்திட வேண்டியிருக்கு. விட்டுக் கொடுத்தும் போயிட வேண்டியிருக்கு.... அவர் அந்த மாதிரி கேட்டதுக்கு எந்த அளவுக்கு 'ரீயாக்ட்' பண்ணனுமோ அந்த அளவுக்கு ரீயாக்ட் பண்ணிட்டு என் வீட்டுக்காரர் அப்படிக் கேட்டதை ஒருநாள் நானும் மன்னிச்சு மறந்திட்டேன்.... ஏன்னு கேட்டீங்கன்னா - அதுக்கு முன்னாடி ஒருநாள்கூட அவருக்கு என்மேல் எந்தச் சின்னச் சந்தேகமும் வந்தது கிடையாது. தப்பா எந்த வார்த்தையும் என்னைப்

பாத்துச் சொன்னது கிடையாது. அன்னைக்கி என்னமோ மனுசனுக்கு நாக்குல சனி.... அப்படி ஒரு வார்த்தை வாய்ல இருந்து வந்திருச்சி....''

- இதை சந்தானலஷ்மி ஒப்புக்கொள்ளவில்லை.

❖

## 29

சந்தானலஷ்மி அவளின் அபிப்பிராயதத்தைச் சொன்னாள். ''இல்லைங்க கல்பனா. நாக்குல சனின்னு சொல்றதை என்னால ஒத்துக்க முடியாது. மனசுக்குள்ள இருந்தாத்தான் அப்படி ஒரு வார்த்தை வாய்ல இருந்து வருமே தவிர திடுதிப்னு வந்திடாது....''

''ஒரு விதத்ல நீங்க சொல்றது சரிதான். ஆனா என் வீட்டுக்காரர் விஷயத்ல அது சரி கிடையாது என்கிறதுதான் என்னோட அபிப்பிராயம். இல்லேன்னா அவ்வளவு பெரிய வார்த்தையை கேட்ட அப்புறமும் அவர்கூட என்னால குடித்தனம் பண்ணியிருக்க முடியாது. வேகத்ல வார்த்தையை விட்ட மறுநிமிஷமே தன்னோட தப்பைப் புரிஞ்சிக்கிட்டு ஆயிரம் தடவை 'ஸாரி' சொன்னார். என்கிட்ட நூறுதடவை மன்னிப்புக் கேட்டார். தன் தப்புக்கு பிராயசித்தம் பண்ணனும்னு நெனைச்சிகிட்டு அந்தத் தடவை லீவ்ல வரும்போது எனக்கு ஏழு சவரன்ல நெக்லேஸ், நாலாயிரம் ரூபாய்ல ஒரு பட்டுப் புடவையெல்லாம் வாங்கி எடுத்திட்டு வந்திட்டார்....''

''டெலிவரி நேரத்ல அந்த ரூபெக்டமி ஆபரேஷனை நீங்க செய்துக்கிட்டீங்களா இல்லையா?''

''அப்படி ஒரு வார்த்தை வந்திட்ட அப்புறம் நான் எப்படி பண்ணிப்பேன்.... நான் பண்ணிக்கலை. பண்ணிக்கிறதாவும் இல்லை. ஆனா ஒன்னை மட்டும் அடிச்சி சொல்லிட்டேன் அவர்கிட்டே. ரைட்; அப்ப ஆபரேஷனை நீ பண்ணிக்க. பண்ணிக்க தெரியும் இல்லையா? எனக்குத் தெரியாது. ஆபரேஷனை பண்ணிக்காம என் பக்கத்ல வந்திட முடியாது நீ....''

''எப்படி எப்படி.... எப்படிச் சொன்னீங்க?'' - சந்தானலஷ்மி கண்களை விரித்தவாறு ஆசையுடன் கேட்டாள்.



''ஆம்பளைங்களுக்கான குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஸனை பண்ணிக்காத வரைக்கும் அவர்கூட நான் செக்ஸ் வச்சிக்க தயார் கிடையாதுன்னு ஸ்ட்ராங்கா அடிச்சிச் சொல்லிட்டேன் அந்தத் தடவை லீவ்ல அவர் வந்திருந்தப்ப - ஆபரேஷனை பண்ணிக்காத தால எனக்கும் அவருக்கும் செக்ஸே கிடையாது.

''அது சூப்பர்தான் கல்பனா. ஆனா அவர் பண்ணலைன்னா நீங்க குடும்ப கட்டுப்பாடு ஆபரேஷன் பண்ணிட்டு இருக்கலாமே....''

''அது சரி கிடையாதுங்க மேடம். அப்படியா சொல்றே - இரு இரு; நான் ஆபரேஷனைப் பண்ணிக்கிறேன்னு சொல்லி பண்ணிக் கிட்டேன்னு வச்சிக்கோங்க; அப்புறம் சவூதியில இருந்துக்கிட்டு அவர் பாட்டுக்கு என்மேல சந்தேகப்பட்டுட்டு இருந்தார்னு வச்சிக்கோங்க - என் வாழ்க்கையே அப்புறம் நாறிப் போயிடும் நாறி.... அந்த பாடு எதுக்கு.... நான் பண்ணிக்கலை. அவர் பண்ணிட்டார்னா செக்ஸ் உண்டு. பண்ணிக்கலைன்னா செக்ஸ் கிடையாது. அவ்வளவுதான்....''

கல்பனா சொல்லச் சொல்ல சந்தானலஷ்மியால் தாங்க முடியவில்லை. அவளின் கண்களில் நீர் சுரந்துவிட்டது. கண்களை துடைத்துவிட்டுக்கொண்டே சொன்னாள். ''குடும்பங்களுக்குள்ள புருஷன் பெண்டாட்டி இடையே இப்படியெல்லாம் நடக்குதுன்னு தெரியறப்ப அதிர்ச்சியா இருக்கு. ரொம்ப பயமாவும் இருக்கு. - இதுக்கெல்லாம் ஈடு கொடுத்து தைரியமா நீங்க வாழ்றதைப் பார்க்கும்போது பிரமிப்பாவும் இருக்கு கல்பனா. - ஆனா இப்படி தைரியமா இருக்கறதுக்கு உங்களுக்கு நாலு உறவு; நாலு மனுஷங்கன்னு ஒரு ஸ்ட்ராங்கான பேக் க்ரவுண்ட் இருக்கு. அந்த பலத்ல எது வந்தாலும் அதை உங்களால ஃபேஸ் பண்ண முடியுது. எனக்கு எந்த பேக் க்ரவுண்டும் இல்லாம போயிட்டதில எதுனாலும் ஒரு திகில், ஒரு பயம் மனசோட ஆழத்ல எனக்குள்ள எப்பவுமே இருந்திட்டு இருக்கு.... பாம்பு தலையைத் தூக்கற மாதிரி திகில் அடிக்கடி மனசுக்குள்ள இருந்து தலையைத் தூக்குது. என் திகிலைப் பார்த்தே நான் பயந்து நடுங்கிப் போயிடறேன் கல்பனா. வாழ்க்கை என்கிறதே ரொம்ப குழப்பமா இருக்கு. எந்த மாதிரி வாழ்க்கைல நிஜமான பாதுகாப்பு இருக்கு; எந்த மாதிரியான வாழ்க்கைல நிஜமான பாதுகாப்பு இல்லே என்கிறதெல்லாம் தெரிய முடியாததா இருக்கு. என் நிலைமையை பாருங்க - விட்டுட்டு ஓடறேன்னு கொஞ்சங்கூட இரக்கம் இல்லாம சொல்றார் கனகசபாபதி. என்ன பண்றதுன்னே தெரியலை.....'' - இதற்கு மேல் சொல்ல முடியாமல்

சந்தானலஷ்மிக்கு அழுகை வந்துவிட்டது. சட்டென புடவைத் தலைப்பால் வாயை மறைத்துக்கொண்டாள். கல்பனா நெருங்கிப் போய் சந்தானலஷ்மியின் கைகளை பிடித்துக்கொண்டாள். சில நிமிடங்கள் சென்றபின் கல்பனா சொன்னாள்.

''முதல்ல நீங்க மிஸ்டர் கனகசபாபதி விஷயத்ல எந்த மாதிரியெல்லாம் ரீயாக்ட் பண்ணனுமோ அந்த மாதிரியெல்லாம் ரீயாக்ட் பண்ணி அவரை ஒரு வழி பண்ணிடுங்க. மற்றதை அப்புறம் பார்ப்போம். அதுக்குப் பிறகு என்கிட்டே இருந்து உங்களுக்கு என்ன உதவி வேணுமோ - கொஞ்சங்கூட தயக்கம் இல்லாம கேளுங்க. எந்த உதவியா இருந்தாலும் நான் இருக்கேன் செய்யறதுக்கு. வாழ்க்கைல மட்டும் எதுக்காகவும் பயப்படாதீங்க. பயப்படாம இருக்கறது ரொம்ப முக்கியம்....''

சந்தானலஷ்மி கண்களை துடைத்துக் கொண்டாள் ''தேங்ஸ் கல்பனா; பிடிச்சிக்க இப்படி ஒரு கை இல்லாமத்தான் பாதாளத்ல விழுந்திடுவோமோன்னு பயந்து செத்துப் போய் கிடந்தேன். கொஞ்ச நாளைக்கு என் கையை நீங்க பிடிச்சிட்டு இருந்தீங்கன்னா போதும் - விழாம தப்பிச்சிடுவேன்....''

''இப்பவே நீங்க தப்பிச்சாச்சுன்னு வச்சிக்கோங்க. உங்க கையைப் பிடிச்ச பிடியை நான் இனிமே விடறதாயில்லை....''

''நெஜமாவே தப்பிச்சுட்டேன் கல்பனா.... அவன்பாட்டுக்கு அசால்ட்டா போன்ல சொல்லிட்டான், செக்ஸ் இன்பமும் செக்ஸ் அனுபவமும் அவனுக்குள்ளே வெறும் காலிமனையா கட்டாந்தரையா கிடந்ததாம். நான்தான் மழையா வந்தேனாம்- செக்ஸ் மழையா.... அந்த செக்ஸ் மழையில அவனோட காலி மனையெல்லாம் பூத்துக் குலுங்கி - அப்படியே பூந்தோட்டமா மாறிப் போயிருச்சாம். அதுக்காக எனக்கு லட்சம்வாட்டி நன்றி சொல்றானாம். இப்ப அவனுக்கு மழை போதுமாம் கல்பனா - சொல்றான் அவன்.... உனக்குப் போதும்னு சொன்னா ஆயிடுச்சா? எனக்கு வேண்டாமா மழை....? நாங்க மட்டும் காலத்துக்கும் கட்டாந்தரையா கிடந்தா பரவாயில்லை போல இருக்கு...? இதுல நன்றியோடதான் ஒட்டம் பிடிக்கிறதா வேற சொல்லிக்கிறான். பச்சைப் பொய் அது. நன்றிகெட்டுப் போய் ஓடுறான்.... நஷ்ட ஈடு மாதிரி ஆறு லட்ச ரூபா தரானாம். கடைசியில என்னைத் தேவிடியாளா ஆக்கியாச்சி....'' - சந்தானலஷ்மிக்குள் இருந்து விம்மல்களும் வேதனையின் வலிகளும் வார்த்தைகளாக சிதறி



வெடித்தன. கல்பனா குறுக்கிடாமல் வெடித்து முடியட்டும் என்பது போல மௌனமாக சந்தானலஷ்மியை பார்த்தவாறு கைகளை கட்டியபடி நின்றுகொண்டிருந்தாள். - சில நிமிட இடைவெளிக்குப் பிறகு சந்தானலஷ்மி சிறிது வெப்பம் தாழ்ந்த தொனியில் தொடர்ந்தாள்.

''-உங்ககிட்ட சொல்றதுக்கென்ன.... எனக்கு மழை போதாது கல்பனா. மழையே பாக்காதவ நான். இந்த அஞ்சாறு வருஷமாத் தான் மழையை பாக்குறேன் நான். மழையை இன்னும் பாத்தே முடியலை. அதுக்குள்ளே மழை அவ்வளவுதானு நீபாட்டுக்கு சொன்னா என்ன அர்த்தம்.... தைரியமான ஒரு ஆம்பளையா இருந்தா நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்க. பண்ணிக்க முடியலைன்னா வாயை மூடிட்டு ஒடு. ஒரு நல்லவனா பாத்து கல்யாணம் பண்ணிக்கன்னு நீ என்ன சொல்றது.... அதைச் சொல்றதுக்கு நீ யாரு....'' - மேலே பேச முடியாமல் சந்தானலஷ்மிக்கு மூச்சு வாங்கியது. அதனால் பேச்சை நிறுத்திவிட்டு கல்பனாவைப் பார்த்து புன்முறுவல் செய்தாள்.

கல்பனா அன்புடன் சந்தானலஷ்மியின் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னாள். ''இப்ப நீங்க மழை பெஞ்ச மாதிரிதான் பேசித் தள்ளிட்டீங்க.... பத்தே பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க.... உங்களுக்குச் சாப்பிடறதுக்கு சிக்கன் சூப் ரெடி பண்ணிக் கொண்டாந்து தரேன்....''

''திடீர்னு இப்ப சிக்கன் சூப் எப்படி தயார் பண்ணுவீங்க?'' - சந்தானலஷ்மி கேட்டாள்.

''கிட்டத்தட்ட ரெண்டு தலைமுறையா வீட்டுக்காரர் வெளிநாட்டுல இருக்கார்னா ஒரு சிக்கன் சூப் தயார் பண்றதா கஷ்டம்.... இது ஹாலண்ட் மேக். பவுடராத்தான் இருக்கும். ஆனால் அசல் சிக்கன் கான்ஸ்ட்ரேட். தண்ணியை கொதிக்கவிட்டு- இந்த பவுடரை கொட்டி அது கரைச்சிட்டா சிக்கன் சூப் ரெடி''

- சொன்னது போலவே கல்பனா பத்து நிமிஷத்தில் சின்ன பீங்கான் தம்ளர் நிறைய சூடாக சிக்கன் சூப்பைக் கொண்டு வந்து கொடுத்தாள். ஆசையோடு அதை வாங்கிக் குடித்த சந்தானலஷ்மி ஆச்சர்யப்பட்டுப் போனாள். அது சுவையான அசல் சிக்கன் சூப்தான்....''

''நல்லாயிருக்கா மேடம்...?'' - கல்பனா கேட்டாள்.

''ரொம்ப நல்லாயிருக்கு....''

''இன்னும் கொஞ்சம் கொண்டாந்து தரட்டுமா?''

''அய்யோ -வேணாம் வேணாம்.... இது போதும்....''

''இப்ப நீங்க சொன்னீங்களே - செக்ஸ் மழையா நீங்க வர்ரதுக்கு முன்னாடி செக்ஸ் இன்பமும் செக்ஸ் அனுபவமும் அவருக்குக் கட்டாந்தரையா இருந்ததாம்னு - அந்த வார்த்தை அவரே சொன்னதா...?''

''வார்த்தைக்கு வார்த்தை அவரே சொன்னதுதான்....''

''சும்மாவானும் சொன்ன வார்த்தையா இருக்கும் அது. இந்த ஆம்பளைங்களுக்கு அடுத்த மனுஷி ஒருத்தியை 'கவர்' பண்றதுக்கு தன் பெண்டாட்டியை குறைச்சிப் பேசறது ஒரு டெக்னிக். தன் பெண்டாட்டி ஒரு ராட்சசி; ஒரு அழுமூஞ்சி. இல்லேன்னா ஓயாம ஒடம்பு சரியில்லாதவள்னு சொல்லிச் சொல்லி அடுத்த மனுஷிக்கு தன்மேல ஒரு பரிதாபம் வர்ர மாதிரியான ஒரு நிலைமையை ஏற்படுத்திக்க பாப்பாங்க....''

''இல்லை இல்லை - இவர் விஷயத்ல அவர் சொன்னதெல்லாம் நெஜம்தான். அந்த மனுஷனோட பெண்டாட்டி மோசமான ஒரு ஆஸ்த்மா பேஷண்ட்.... பார்க்கிறதுக்கு காய்ஞ்சுபோன வாழை மட்டைபோல இருப்பா.... - அதுக்கு மேல சில மோசமான காம்ப்ளெக்ஸ் வேற அவளுக்கு....''

''பார்த்திருக்கீங்களா அவளை?''

''இவரோட கம்பெனியிலேதானே நான் வேலை பார்த்தேன். அவரோட பர்சனல் ஸ்டேனோ நான்''

''அப்படியா.... அவர்கிட்டேதான் வேலை பாத்தீங்களா....''

''அந்தக் கதை எல்லாத்தையும் இன்னொரு நாள் விபரமா சொல்றேன் கல்பனா.... சொல்ல ஆரம்பிச்சா அதுபாட்டுக்கு போயிட்டே இருக்கும்''

''- ஆனா உங்க அவர் போன்ல திடீர்னு சொன்ன மாதிரி உங்ககூட இனிமே தொடர்பு வச்சிக்காம இருந்திட்டார்னா என்ன பண்றதா இருக்கீங்க.... அதையும் நீங்க யோசிக்க ஆரமபிச்சாகணுமே....''

''அதை யோசிக்கத்தான் கல்பனா பயந்து சாகுறேன். திருப்பியும் என்னால லேடீஸ் ஹாஸ்டல் வாழ்க்கைக்குப் போகமுடியாது.



அங்கே போகிறதைவிட செத்துப் போயிடறது ஈஸி எனக்கு.... ஹாஸ்டல்ல இருக்க முடியாமத்தான் இந்த வைப்பாட்டி வாழ்க்கை யானாலும் பரவாயில்லைனு ஓடி வந்தேன். - இப்ப இதுக்கும் ஆபத்து வந்தாச்சி.... என்ன பண்ணப் போறேன்னு தெரியலை....''

''பயப்படாம இருங்க மேடம். பயப்படாம இருங்க. கூடப் பிறந்தவ மாதிரி நான் உங்களுக்கு துணையா இருக்கேன்....''

கல்பனாவின் இந்த வார்த்தையை கேட்டதும் சந்தானலஷ்மிக்கே இயல்பான ஓர் உற்சாகம் அவளின் உணர்வுகளில் உடனே பீறிட்டது. புதிய நம்பிக்கையோடு சொன்னாள்.

''நெஜமா சொல்றேன் கல்பனா - எனக்கு நீங்க அக்கா போல இருந்தா ரொம்ப ரொம்ப சந்தோஷப்படுவேன் - இத்தனைக்கும் நீங்க வயசுல எனக்குச் சின்னவங்களா இருந்தாலும் கவலையில்லை.... உங்களை அக்கானு கூப்பிடறதுக்கான ஒரு பர்சனாலிட்டி உங்ககிட்ட இருக்கு....''

''உங்களுக்கு அக்காவா இருக்கறதுல எனக்கு ஆட்சேபணையே கிடையாது....''

''நீங்க என் வீட்டுக்கு அடிக்கடி வந்து போயிட்டு இருக்கணும் கல்பனா. என் வீட்டை ஒரு நிஜ வீடா மாத்தித் தரணும்....''

''கண்டிப்பா மாத்திக் காட்றேன் மேடம்... பாருங்களேன்- இப்பத் தான் நாம மீட் பண்ணினோம். அதுக்குள்ளேயே நம்ம ரெண்டு பேரோட ஃப்ரண்ட்ஷிப் எவ்வளவு டெவலப் ஆயிருச்சின்னு....''

''இது ஒரு நல்ல மாறுதலுக்குன்னுதான் நெனைக்கிறேன்....''

அப்போது வாசலில் ஒரு ஆணின் குரல் கேட்டது. ''குட் ஈவினிங் சிஸ்டர்....'' சந்தானலஷ்மி திரும்பிப் பார்த்தாள். விதவிதமான வண்ணக் கலவையில் விசித்திரமான ஷர்ட்டும் ஜீன்ஸ் பேண்ட்டும் அணிந்து கச்சிதமாக திருத்தப்பட்ட தாடியுடன் இளைஞன் ஒருத்தன் ஒரு இளம் பெண்ணுடன் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

''வாடா வா - வழி தவறி வந்திட்டியா? ஆளைப் பாத்து ஒரு மாமாங்க காலம் ஆயிருக்கும் போல....'' - கல்பனா இளைஞனை வரவேற்றாள்.

''ரெண்டு மாசமா - ஸ்டோரி டிஸ்கஷன் சீரியஸா போயிட்டு இருக்கு அக்கா. இப்ப டைரக்டருக்குக் கொஞ்சம் உடம்பு

சரியில்லை. அதனால ரெண்டு நாள் ப்ரேக். உடனே இவளையும் கூட்டிட்டு கிளம்பி வந்தேன் - நைட் டின்னர் இன்னைக்கி இங்கேதான்....'' - என்றான் இளைஞன்.

''ஆகா அதுக்கென்ன - இருந்து சாப்பிட்டுட்டு போ.... சந்தான லஷ்மி மேடம் - இது என் சித்தப்பா பையன் - காவியன் - பிரபல சினிமா டைரக்டர் பாரதிகுமார் பெயரை நீங்க கேள்விப்பட்டி ருப்பீங்கன்னு நினைக்கிறேன்....''

''பாரதிகுமாரோட பேரை கேள்விப்படாதவங்க யாராவது இருப்பாங்களா? அவரோட படங்கள்னு சொன்னாலே ரொம்பப் பிடிக்கும் எனக்கு....'' - சந்தானலஷ்மி அவசரமாகச் சொன்னாள்.

''அவர்கிட்டே இவன் அசோசியேட் டைரக்டரா இருக்கான். இது அமிர்தா. அவனோட ஃப்ரண்ட்....''

காவியன் சந்தானலஷ்மியை ஒருவித ஆர்வத்துடன் கவனித்து ''வணக்கம்'' என்றான். சந்தானலஷ்மியும் பதிலுக்கு அவனுக்கு 'வணக்கம்' என்றாள். சட்டென அவளுக்கு அவளின் உலகம் வேகமாக ஒளிமாற்றம் பெறுவதாய் தெரிந்தது. சந்தானலஷ்மி அவளின் வாழ்க்கையில் முதல் தடவையாக திரைப்படத் துறையைச் சேர்ந்த மனிதனை இத்தனை நெருக்கத்தில் சந்திக்கிறாள். அந்த எண்ணத்தில் காவியனை அவள் சிறிது ஏறிட்டுப் பார்த்தாள். அவன் அவளுடைய உடம்பின் அதீத வனப்பை உணர்ந்துவிட்ட ஆச்சர்யத்துடன் சந்தானலஷ்மியை வேறொரு கண்ணோட்டத்தில் சற்றே சந்தோஷமாக பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய பார்வை சந்தானலஷ்மிக்கு வேறொரு புத்துணர்ச்சியை உடனே மனதுள் தோற்றுவித்தது.

- அப்போது கல்பனாவின் வீட்டிற்குள் சந்தானலஷ்மி வீட்டுக்கு எதிர் வீட்டைச் சேர்ந்த பையன் வேகமாக ஓடி வந்தான். அவன் சந்தானலஷ்மியிடம் பதட்டமான குரலில் சொன்னான்

''மேடம் - உங்களைப் பார்க்க உங்க வீட்டுக்கு கனகசபாபதி சார் வந்திருக்கார். உங்களை உடனே வரச் சொன்னார்....''

- அதைக் கேட்ட அடுத்த கணம் சந்தானலஷ்மியின் மனநிலை வேறொரு விருப்பப்படாத தளத்திற்கு விரைவாக சரிந்தது....

❖

NEMA ... BRARY ... 2004 ... 600 008

# 30

கனகசபாபதி வீட்டு வாசலில் நிற்பதாக எதிர்வீட்டுப் பையன் வந்து சொன்னதும் - ஒரு சில விநாடிகள் சந்தானலஷ்மி மிகவும் வெறுமையாக இருந்தாள். இப்படியொரு தருணம் இரண்டொரு மாதங்களுக்கு முன்பு ஏற்பட்டிருந்தால் சந்தானலஷ்மி அடுத்த வினாடியே கால் பிடரியில் பட எழுந்து வீட்டை நோக்கி கண் இமைக்கும் நேரத்திற்குள் ஓடிவிட்டிருப்பாள். கனகசபாபதி வீட்டு வாசலில் கால் நிமிஷம் காத்திருப்பதுகூட அவளுக்கு ஏற்புடைய தில்லை. இன்றைக்குக் கதை வேறு. கொஞ்ச நேரம் வாசலில் காத்துக்கொண்டு நிற்கட்டுமே என்று சந்தானலஷ்மியின் மனம் வன்மத்துடன் முணங்கியது. அதுவும் இல்லாமல் வாழ்க்கையில் புதிய காற்றுகள் பிரவேசித்திருக்கும் இந்த நேரத்தில் பழைய வியர்வை நெடியை நோக்கி உடனே ஓட அவளுக்கு எரிச்சலாகவும் இருந்தது. இருந்தாலும் எழுந்து சந்தானலஷ்மி செல்லத்தான் வேண்டும். கனகசபாபதியை சந்தித்து - கிட்டத்தட்ட உச்சக்கட்ட காட்சியின் சம்பவத்தை எதிர்நோக்க வேண்டும்.

''போய் என்னன்னு பாத்திட்டு வரேன் கல்பனா - நைட் மறுபடியும் வந்து விவரம் சொல்றேன்....''

கல்பனாவிடம் சொல்லிவிட்டு சந்தானலஷ்மி ஆடி அசைந்து நிதானமாக வீட்டை நோக்கி நடந்தாள். வீட்டு வாசலில் கனகசபாபதி நின்று கொண்டிருந்ததை கவனித்துக்கொண்டே மெதுவாக நடந்தாள். அவள் நிதானமாக வந்ததே கனகசபாபதியை கோபப் படுத்தியது. சந்ததானலஷ்மி வீட்டை நெருங்கியதும் ''வாசல்ல இப்படி நிக்க வச்சிட்டியே'' என்றார் கடுப்புடன்.

''வாசல்லேயே ஆரம்பிச்சிட வேண்டாம்....'' என்றபடியே சந்தானலஷ்மி வீட்டின் கதவைத் திறந்தாள். கனகசபாபதி வாசலில் வந்து நின்றதையும் சந்தானலஷ்மி கல்பனாவின் வீட்டில் இருந்து கிளம்பி வந்து கதவைத் திறந்ததையும் காணக்கிடைக்காத காட்சியாக பல வீட்டின் வாசல்களில் நின்று நிறையபேர் சுவாரஸ்யமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் எதிர்பார்த்த காட்சியாக அடுத்த நிமிடம் சந்தானலஷ்மியின் வீட்டுக் கதவு சாத்திக்கொள்ளவும்பட்டது.

கனகசபாபதி விஷயத்தை உடனே ஆரம்பித்துவிட்டார். ''நீ இந்த மாதிரி போனை எடுக்காமலேயே சண்டித்தனம் பண்ணின எரிச்சலுக்கு நான் இங்கே கிளம்பி வந்திருக்கவே கூடாது - தெரியுமா?''

''நீங்க எட்டு நாளைக்கு போனே பண்ணாம இருப்பீங்க.... நான் நாலு நாளைக்கு போனை எடுக்கலைன்னா - அது மட்டும் சண்டித்தனமாயிடும்....'' - சந்தானலஷ்மி பயமில்லாமல் திருப்பிக் கேட்டாள்.

''என்னமோ நான் உன்னை விட்டாலும் என்னை நீ விடறதா இல்லைன்னு போன்ல சொன்னியே - என்ன; ஏதாவது விவகாரம் பண்ணலாம்னு பாக்குறியா?''

''ஹலோ நீங்க 'வா'ன்னு சொன்னா நான் வந்திரணும். 'போ'ன்னு சொன்னா உடனே ஓடிப் போயிரணும். போக முடியாதுன்னு சொன்னா நான் விவகாரம் பண்றவளாயிடுவேன்.... மனசில கையை வச்சி பேசணும். ஒரேயடியா மனசாட்சியை குழிதோண்டிப் புதைச்சிட்டுப் பேசக்கூடாது. கடவுளுக்கே பொறுக்காது அது....''

''என் பெண்டாட்டி பிள்ளைங்க விஷயத்திலும் நான் மனசாட்சிப்படி நடந்துக்கணும் சந்தானம்....''

''அஞ்சாறு வருஷமா இதே பெண்டாட்டி பிள்ளைங்க விஷயத்ல எந்த மனசாட்சியும் இல்லாம இருந்த நீங்க பேசறீங்க....''

''அதுக்காக ஆயுசுக்கும் நான் அப்படியே இருக்கணும்னு சொல்றியா?''

''என்னை ஆயுசுக்கும் விடமாட்டேன்னு சொன்னீங்களே....''

''சொன்னது உண்மைதான். அதுக்கு வேணும்னா உன்கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன். என் வார்த்தையை காப்பாத்த முடியாம போனதுக்காக. ஆயுசு பூரா நீ உக்காந்து சாப்பிடறதுக்கு ஏத்த மாதிரி இந்த ப்ரீஃப்கேஸ்ல உனக்குத் குடுக்கறதுக்காக அஞ்சு லட்ச ரூபா எடுத்திட்டு வந்திருக்கேன். இதை நீ அப்படியே போஸ்ட் ஆபிஸ்ல டெபாசிட் பண்ணி மாதாமாதம் வட்டியை வச்சிக்கிட்டு நீ ஒருத்தி ஆயுசு பூரா சாப்பிட்டுக்க முடியும்....''

''சாப்பாடு சாப்பிட்டா போதும்? வேற எதுவும் வேணாம்.... உங்களுக்கு மட்டும் எல்லாம் வேணும்''



''ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு தலைவிதின்னு இருக்கு''

''உங்க தலைவிதி மாற ரொம்ப நாளாகாது....''

''உடனே சாபந்தானா?''

''நான் ஏன் சாபம் குடுக்கறேன்....''

''சாபம் இல்லேன்னா சந்தோஷந்தான்''

''அதன் சபிக்கப்பட்ட ஜென்மமா நான் இருக்கேனே''

''பேசறதுக்கு எனக்கு வேற விஷயம் கிடையாது சந்தானம். உனக்காக அஞ்ச லட்சத்து முப்பதாயிரம் ரூபா கொண்டாந்திருக்கேன். வாங்கிக்கிறியா....?

''அதென்ன கணக்கு அஞ்சு லட்சத்து முப்பதாயிரம்னு....?''

''அஞ்சு லட்ச ரூபாயை நீ டொபாசிட் பண்ணி அதுல இருந்து வட்டி கிடைக்க ஆரம்பிக்கிற வரைக்கும் செலவுக்கு வாடகைக்கு எல்லாம் உனக்குப் பணம் வேணுமே. அதுக்குத்தான் அடிஷனல் முப்பதாயிரம்....''

''இந்தக் கரிசனமெல்லாம் சரிதான். என்னை நீங்க விட்டுட்டுப் போயாச்சின்னா எனக்கு இருக்குற எத்தனையோ நடைமுறைச் சிக்கல் எதையும் பத்தி நீங்க நினைக்கவே இல்லை போல இருக்கு.... அதைப் பேசறதுக்கு முன்னாடி - இப்ப நீங்க நேர்ல வந்திருக்கிறதால- கடைசியா ஒரு தடவை கேட்டுடறேன்.... என்னை விட்டுப் போயிடறதுன்னு நீங்க எடுத்த முடிவு - எடுத்தது எடுத்ததுதானா? அதுல மறுபரிசீலனைக்கு சான்ஸே கிடையாதா?'' - சந்தானலஷ்மி விறைப்பாக நின்றுகொண்டு கேட்டாள்.

''ஸாரி சந்தானம்.... நிஜமா உன்கூட உறவை கண்டினியூ பண்ண முடியாது என்னால.... கண்டினியூ பண்ணினோம்னா எக்கச்சக்க சிக்கல் வந்திடும்....''

''எனக்கு எந்த சிக்கலும் வரலாம்.... அதைப்பத்தி கவலை கிடையாது உங்களுக்கு....?''

கனகசபாபதி மௌனமாக இருந்தார். சந்தானலஷ்மி தொடர்ந்தாள்.

''நீங்க குடுக்க நினைக்கிற பணம் எனக்குத் தேவைதான். பணமும் இல்லாம என்ன பண்ண முடியும் நான்? ஆனா பணம் ஒண்ணு மட்டுமே வாழ்க்கைக்குப் போதும்னு நினைச்சிட முடியாது.

இனிமே நீங்க என்னைப் பார்க்க வரவே போறதில்லைன்ா - இந்த வீட்ல தொடர்ந்து இருக்க முடியாது என்னால.... இவ்வளவு பெரிய வீடு தேவை கிடையாது என் ஒருத்திக்கு. இவ்வளவு வாடகை குடுக்கவும் கட்டுபடியாகாது எனக்கு. சின்னதா வேற வீடுதான் பார்த்தாகணும் நான். ஒண்டியா அதுக்கு முதல்ல நான் பைத்தியக் காரியா அலைஞ்சாகணும். கல்யாணமாகி டைவர்ஸ் ஆகியிருந் தாலும் சொல்லிக்கலாம். புருஷன் செத்துப் போயிருந்தாலும் சொல்லிக்கலாம். நான் எதைப் போய் எப்படிச் சொல்லிக்கிறது.... இந்த முப்பத்தி ஆறு வயசில ஜெயமாலினியாட்டம் ஒரு உடம்பை வச்சிக்கிட்டு கல்யாணமாகாதவள்னு சொல்லிட்டுப் போய் புதுசா ஒரு ஹவுஸ் ஓனர் முன்னாடிபோய் நின்னா முதல்ல அவன் மேலேயும் கீழேயும்தான் பார்ப்பான். வீடு தரமாட்டான். என்னை சந்தேகத்தோட வேற பார்ப்பான். தேவையா எனக்குத் திருப்பியும் வீடு பாக்குற பாடு.... அதுக்காக ரொம்ப வாடகைக் குறைச்சலான வீடாவும் பாத்திட முடியாது. நான் பெரிய பணக்காரியோ இல்லையோ - பார்க்கிறதுக்கு என்னமோ பெரிய பணக்காரப் பய பெண்டாட்டி மாதிரி இருக்கேன். அதுக்காகவாவது ஒரு நல்ல வீட்டை நான் பார்த்தாகணும். ஹவுஸ் ஓனர் என்ற ஒரே தகுதியில யாரோ கேக்குற கேள்விக்கெல்லாம் ஏன் நான் கல்யாணம் பண்ணிக்காம தனியா இருக்கேன்கிற பதிலை வாய் வலிக்காம எல்லார்கிட்டேயும் நான் சொல்லியாகணும்.... இப்படி நடைமுறை சிக்கல் எனக்கு வீடு பார்க்குற போதே ஆரம்பிச்சிடுது.... அதோடு முடிஞ்சி போயிடாது சிக்கல்.... நூத்தியெட்டு சிக்கல் அடுத்தடுத்து என் கையையும் காலையும் போட்டு சுத்திப் பின்னிடும். எந்தச் சிக்கலை பார்ப்பேன்.... எந்தச் சிக்கலுக்குக் கவலைப் படுவேன்.... இதுக்குச் சொல்லுங்க நீங்க எனக்குப் பதிலை....''

- சந்தானலஷ்மியின் குரல் அதிகமாகவே உயர்ந்து ஒலித்தது. ஆனால் கனகசபாபதி மிகவும் தாழ்ந்த குரலில் அவளுக்குப் பதில் சொன்னார்.

''எதுக்கு சந்தானம் நீ அனாவசியமா வாடகை வீடு பாக்குறே.... முன்னே இருந்த மாதிரி இன்னும் நல்ல வேற லேடீஸ் ஆஸ்டலா பார்த்துப் போயிடு. ஆஸ்டல்ல நீபாட்டுக்கு இருக்கலாம் - எந்த நடைமுறைப் பிரச்னையும் இல்லாம நிம்மதியா இருக்கலாம் நீ....''

கனகசபாபதி இப்படிச் சொன்ன மறு வினாடி சந்தானலஷ்மியின் இரண்டு கண்களும் நெருப்புத் துளிகளாக சிவந்து கனன்றுவிட்டன.



வேகமாக கனகசபாபதியை மிக நெருங்கிப் போய் நின்றாள். அவரை எச்சரிக்கை செய்வதுபோல அவளுடைய ஆட்காட்டி விரல் அவரின் முகத்தின் எதிரில் வலிமையாக ஆடியது.... ''இந்த வார்த்தையை மட்டும் மறந்தும் இன்னொரு வாட்டிச் சொல்லிராதீங்க. மறந்து சொன்னீங்க - நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. உங்களை கொலையே செஞ்சாலும் செஞ்சுருவேன். இப்ப என் மனசு இருக்குற இருப்புல உங்களை கொலை செய்யறதுக்கும் நான் அஞ்சமாட்டேன் - ஞாபகத்ல இருக்கட்டும் இது.... வீடே எனக்குக் கிடைக்காம போய் - நடுத்தெருவுல விழுந்து நான் செத்தாலும் சாவேனே தவிர லேடீஸ் ஹாஸ்டலுக்குள்ள மட்டும் என் கால் ஒருநாளும் நுழைஞ்சிடாது''

கனகசபாபதி சந்தானலஷ்மியின் ரௌத்ரத்தைக் கண்டு நடுங்கி விட்டார். பதட்டமடைந்தும் போனார்.

''ஸாரி சந்தானம்.... ரொம்ப ரொம்ப ஸாரி..... உன் மனசு தெரிஞ்சும் வாய் தவறி அந்த வார்த்தையை சொல்லிட்டேன். வீடு தேடி வீணா நீ கஷ்டப்பட வேணாமே என்கிற நெனைப்புல அந்த வார்த்தையை சொல்லிட்டேன்.... நிஜமான அக்கறையிலும்தான் அந்த வார்த்தையை சொன்னேன்''

உடனே சந்தானலஷ்மி இடைமறித்துச் சொன்னாள். ''அக்கறை ஏதோ ஒரே ஒரு விஷயத்ல இருக்கறதில பிரயோஜனம் எதுவும் கிடையாது. அக்கறை என் எல்லா விஷயத்திலும் இருக்கணும்....''

இதன்பின் அவர்கள் இருவரின் மத்தியில் மௌனம் நீடித்தது. இதற்குமேல் என்ன பேசுவதென்று இருவருக்குமே தெரியவில்லை. அந்நியர்களாக ஒருவரை ஒருவர் பார்க்காமல் நின்றுகொண்டி ருந்தார்கள். பின் கனகசபாபதி வாட்ச்சில் மணி பார்த்தார். பணம் அடங்கிய பிரீஃப் கேஸை சந்தானலஷ்மியிடம் கொடுத்துவிட்டு கிளம்பலாம் என நினைத்தார்.

''பணத்தை வாங்கிக்கிறியா?'' - என்று கேட்டார்.

''அஞ்சு லட்சத்து முப்பதாயிரம்?''

''ஆமா....''

''என்னோட விலை என்ன என்கிறதையும் நீங்களே முடிவு பண்ணியாச்சி?'' - சந்தானலஷ்மி கேட்டாள். கனகசபாபதி பதில் சொல்லாமல் அவளையே பார்த்தார்.

''இதை என்னால ஏத்துக்க முடியாது''

''ஏத்துக்க முடியாதுன்னா?''

''என் தகுதிக்கு இந்தப் பணம் ரொம்பக் குறைச்சல்''

இதை சந்தானலஷ்மியிடம் எதிர்பார்க்காத கனகசபாபதி அவளை திகைப்புடன் பார்த்தார். சந்தானலஷ்மி தொடர்ந்தாள்.

''என்னோட விலை என்ன என்கிறதை நாந்தான் முடிவு செஞ்சாகணும் - நீங்க கிடையாது''

''ஸாரி சந்தானம். இப்போதைக்கு என்கிட்ட இருக்குற ப்ளாக் மணியில இவ்வளவுதான் எனக்குத் தர்ரதுக்கு வசதிப்படும்....''

''வசதிப்படும்போது மிச்சத்தைத் தாங்க.... பணத்தைத் தர்ரதுக்கு நீங்க வரணும் என்கிறதுகூட இல்லை. ஒரு போன் பண்ணினீங் கன்னா என் தம்பியை அனுப்பி வாங்கிப்பேன்''

கனகசபாபதிக்கு புரிந்துவிட்டது. சந்தானலஷ்மி அவளுக்குத் தம்பி இருப்பதை ரொம்ப நுட்பமாக அவருக்கு உணர்த்துகிறாள். கனகசபாபதி எதிர்பாராமல் அவளுடைய தம்பியை இரண்டொரு முறை சந்தித்திருக்கிறார். அவனுடைய சகவாசங்கள் பற்றி தெரிந்தும் வைத்திருக்கிறார். - அதனால் ஏதோ ஒரு புதிய புள்ளியில் அவரின் மனம் தடுமாறியது. என்ன செய்யலாம் என்பதை அவரால் தீர்மானிக்க முடியவில்லை. சந்தானலஷ்மியை முற்றிலுமாக வெற்றி வாகை சூடுவதற்கு முயற்சி செய்யவேண்டாம் என நினைத்தார். பிரிவை சிக்கலாக்கிவிடக் கூடாது என அவரின் உள் மனம் கனகசபாபதியை எச்சரித்தது. கனகசபாபதிக்கென்ன சந்தானலஷ்மியின் மேல் தீராத பகையா என்ன? கிடையாதே.... அதனால் சட்டென அவருடைய பேச்சின் தொனியை மாற்றிக் கொண்டுவிட்டார்.

''ஓ.கே. சந்தானம்; சரிதான் நீ சொல்றதும்.... எல்லாத்தையும் நானே முடிவு பண்ணிட முடியாதுதான். உனக்கு இந்தப் பணம் போதாதுன்னா சொல்லு; நீ மேற்கொண்டு எவ்வளவு பணம் வேணும்னு சொல்றியோ - அதை நான் குடுத்திடறேன்....''

''அதை நான் சொல்றதுக்கு முன்னாடி - திருப்பியும் ஒரு தடவை கடைசியா உங்களைக் கேட்டுடறேன். ஏதோ நப்பாசையில கேக்குறேன்னு நெனைச்சிராதீங்க. தாங்க முடியாத வெறியிலேதான்



மறுபடியும் மறுபடியும் கேட்டுடலாம்னு பாக்குறேன்.... நம்ம ரெண்டு பேரோட உறவு முடிஞ்சே போச்சிதானா?''

''கையுங் களவுமா மாட்டிக்கிட்ட அப்புறமும் மறுபரிசீலனை பண்றதுக்கு இடம் இருக்கான்னு எப்படி நீ கேக்குறேன்னு தெரியலை.... ஆனா ஒண்ணு. நான் நெனைச்சா அதையும் மறுபரிசீலனை பண்ணமுடியும். வனிதாமணியை தூக்கியடிக்க அஞ்சு நிமிஷமாகாது எனக்கு. ஆனா - அவளைத் தூக்கி அடிச்சிட்டு அப்புறம் நான் என் குழந்தைகள்கிட்ட போக முடியாது. வனிதாமணியும் என்னை ஒரேயடியா தூக்கி அடிக்காம விட்டதுக்குக் காரணம் - நான் என் குழந்தைகளை விட்டுப் போயிடக் கூடாது என்கிறதுக்குத்தான். நான் வனிதாமணிக்கு நல்ல புருஷனோ இல்லையோ; அவ எனக்கு நல்ல பெண்டாட்டியோ இல்லையோ - நாங்க எங்களோட குழந்தைகளுக்கு நல்ல தாய் தகப்பனா இருந்தாக வேண்டியிருக்கு. இது எனக்கு ரொம்ப ரொம்ப முக்கியமானதா தோணுது. நல்ல தகப்பனா இருக்கறதுக்கு இனிமேலும் நான் இங்கே வந்து வந்து உன்கிட்ட இருந்திட்டுப் போறது சரிப்பட்டு வரவே வராது.... உனக்கு ஒரே ஒரு இன்சிடெண்ட்டைச் சொல்றேன்.... ஆறு மாசத்துக்கு முன்னாடி நடந்த இன்சிடெண்ட் இது.... அன்னைக்கி நான் உன்னைப் பாக்கறதுக்காக கிண்டி அண்ணா யுனிவர்சிட்டி பக்கமா கார்ல வந்திட்டு இருக்கேன். எதிரே என் மகன் பைக்ல வந்திட்டு இருந்தான். என்னை அவனும் பாத்திட்டான். டேடி கம்பெனி வேலையா கார்ல எங்கேயோ வேகமா போயிட்டு இருக்கார்னுதானே அந்த நேரம் என் மகன் நெனைச்சிருப்பான்.... தெரியுமா பாவம் அவனுக்கு - டேடி அவரோட கள்ளப் பெண்டாட்டியை பார்க்கப் போயிட்டு இருக்கார்னு.... அன்னைக்கி எனக்கு எவ்வளவு வெட்கக்கேடா இருந்துச்சி தெரியுமா? இதெல்லாத்தையும் வச்சி நல்லா யோசிச்சி எடுத்த முடிவுதான் - இனி உன்னை விட்டுப் பிரிஞ்சிட வேண்டியதுதான் என்கிறது.... அதனால இதுல மறுபரிசீலனைக்கே இனிமே இடமில்லை.... இதுக்காக என்னை மன்னிச்சிடு.... மேலே உனக்கு எவ்வளவு பணம் வேணும் என்கிறதைச் சொல்லிடு.... அதையும் இன்னொரு நாள் - அதாவது ரெண்டு மூணு மாதம் கழிச்சி எடுத்திட்டு வந்து குடுத்திடறேன்....''

''நான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் சொன்னேன் - பணம் குடுக்கறதுக்காக மட்டும்னா - நீங்க என்னைப் பார்க்க

வர்ரதுக்கு அவசியம் கிடையாது. என் தம்பியை அனுப்பியே வாங்கிப்பேன்....''

''உன் தம்பி என்னைப் பார்க்க வர்ரதை நான் விரும்பலை சந்தானம்....''

- கனகசாபதி குரலைக் கொஞ்சம் உயர்த்திக் கேட்டார். குரலை அவரால் மட்டும்தான் உயர்த்த முடியுமா? பதிலுக்கு சந்தானலஷ்மி யும் குரலை உயர்த்திச் சொன்னாள். ''பணத்தைக் குடுக்கறதுக்காக மட்டும் நீங்க இங்கே வர்ரதை நான் விரும்பலை....''

கொந்தளித்த உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டே கனகசபாபதி சந்தானலஷ்மியை பார்த்தார். எவ்வளவு தூரத்திற்குக் கொந்தளிப்பதற்கும் தயாரான மனநிலையோடு சந்தானலஷ்மி அவரைப் பார்த்தாள் - அவர்களுக்குள் மௌனமான ஆவேசப் பரிவர்த்தனை ஆக்ரோஷமாகப் பீறிட்டுக் கொண்டிருந்தது....

❖

## 31

சந்தானலஷ்மி கனகசபாபதியின் முக இறுக்கத்தைப் பார்த்த வாறே சொன்னார். ''இப்படி நான் பேசறதில மனசுக்குள்ள ரொம்ப கோவம் வருது போல. என் மனசுக்குள்ளேயும் அப்படித்தானே கோவம் வரும். - நீங்க செய்யற காரியத்துக்கு.... என்னை உங்களுக்குக் கிடைச்ச செக்ஸ் புதையல்னு சொன்ன காலத்ல நானும் அந்த மாதிரியே இருந்திருக்கேன் உங்களுக்கு.... அந்த வார்த்தை யெல்லாம் இன்னைக்கி மலை ஏறிப் போயிருச்சி. மழை போதும்னு சொல்லிட்டு தலையில துணியைப் போட்டுட்டு ஓட முடிவு பண்ணிட்டீங்க. நானும் இடி மின்னலா உங்களை தாக்க முடியு மான்னு பாக்கறேன்....''

சந்தானலஷ்மியின் இந்தப் பேச்சுக்கு கனகசபாபதியின் மனம் சிறிது பயப்படத்தான் செய்தது. ஆனால் மனதில் நினைத்துக் கொண்டது இதற்கு நேர் எதிராக. அவரின் அந்த நேர்எதிர் நினைப்பு இது - நான் பெண்டாட்டிச்சனியனுக்குப் பயப்படற ஆள்தான் - ஆனா வைப்பாட்டிச் சனியனுக்குப் பயப்படற ஆள் கிடையாது....''



கனகசபாபதி சந்தானலஷ்மியிடம் சொன்னார். ''சந்தானம் - இனிமே நான் உன்கிட்ட எதுவும் பேச விரும்பலை - மேலே உனக்கு இன்னும் எவ்வளவு பணம் வேணும்னு சொலிட்டீன்னா - அதைத் தெரிஞ்சிக்கிட்டு நான் கிளம்பிருவேன்....''

''சரியா இன்னும் அஞ்சு லட்ச ரூபா வேணும்''

''வேணும்னு வீம்புக்காக ரொம்ப ஆசைப்படறே....''

''புதையலோட விலை அதிகம்தான் எப்பவுமே''

''என்னிக்கோ புதையலா இருந்தே....''

''வேணும் என்கிற அளவுக்கு கொள்ளையடிச்சிட்டு இன்னைக்கி மனசாட்சியே இல்லாம பேசக்கூடாது....''

''நீதான் இப்ப மனசாட்சியே இல்லாம என்னைக் கொள்ளை யடிக்கப் பாக்குறே....''

''அப்ப கொள்ளைக்குக் கொள்ளை சரியா போன மாதிரி நெனைச்சிக்கோங்க....''

அப்போது வீட்டுக் கதவு தட்டப்படுகிற சப்தம் கேட்டதும் இருவருக்குள்ளும் உயர்ந்து கொண்டிருந்த உணர்ச்சிக் கொந்தளிப் பின் வேகம் சரேலென வீழ்ந்தது. சந்தானலஷ்மி சில விநாடிகள் வெறுமே தாமதித்துவிட்டு வேகமாகப் போய் கதவைத் திறந்தாள். யாருமே எதிர்பாராமல் வாசலில் கனகசபாபதியின் மனைவி வனிதாமணி நின்றுகொண்டிருந்தாள். சொப்பனத்தில் கூட கனகசபாபதி கண்டிராத காட்சி. காணப்பிடிக்காத காட்சியும்.

வனிதாமணியை பார்த்ததும் அந்த நிமிடம்; அந்த வினாடி - கனகசபாபதிக்கு எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை அவரால் ஒரு நிமிடத்தில் சொல்லிவிட முடியாது. ரொம்ப நாடகள் சென்றபின் யாராவது வந்து இந்தக் கேள்வியை கேட்டுப் பார்த்தால்- இப்படி யொரு அதிர்ச்சியான சம்பவத்தை அதற்கு முன் வாழ்க்கையில் தான் சந்தித்ததே இல்லையென்றுதான் கனகசபாபதி சொல்வார். யாரும் கேட்காவிட்டாலும்கூட எந்தக் காலத்திலும் தான் தலைகுனிந்து நின்றதே இல்லையென்று வேதனையோடு சொல்வார்.... ஆனால் அந்த நிமிஷம் கனகசபாபதியை வனிதாமணி அப்படிப்பட்டட கேள்வியையா கேட்டுக் கொண்டிருப்பாள்....? -அவள் கேட்ட கேள்விகள் வேறு. வீட்டுக்குள் வேகமாக நுழைந்த அவள் கேட்ட முதல் கேள்வி - ''நான் எப்படி இங்கே வந்தேன்னு பாக்கு

நீங்களா?''. இரண்டாவது கேள்வி - ''யாரு இவ...?''. மூன்றாவது கேள்வி ''எத்தனை காலமா நடக்குது இதெல்லாம்...?''

இந்த கேள்வி எதற்கும் கனகசபாபதி உடனே அந்த இடத்திலேயே பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் எதுவும் கிடையாது என்பதற்காக அவர் பதிலே சொல்லாமல் நின்று கொண்டிருக்கிறார் என்று அர்த்தம் இல்லை. நிஜமாகவே பதில் சொல்கிற நிலைமை யில் இல்லை அவர்.

வனிதாமணியின் பார்வை கனகசபாபதியிடம் இருந்து சந்தனாலஷ்மியின் மேல் திரும்பியது. - இப்போது கேள்வி சந்தானலஷ்மிக்கு. ''உன்னை எங்கேயோ பார்த்த மாதிரியும் இருக்கு - அதே நேரம் ரொம்பத் தெரிஞ்சவ மாதிரியும் இல்லை... யார் நீ...? ''எப்ப இருந்து இவர் உனக்குப் பழக்கம்? எப்படி பழக்கம்?''

வனிதாமணியின் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்கிற நிலையில் சந்தானலஷ்மியும் தான் இல்லை. ஆனால் அதற்கான காரணம் - திடீரென்று இப்படி இவள் வந்து நின்று விட்டாளே என்ற அதிர்ச்சி இல்லை - காரணம் வேறொரு திகைப்பு... சந்தான லஷ்மியைத்தான் சின்ன வீடாக வைத்திருப்பதாக வனிதாமணி யிடம் கனகசபாபதிதான் ஒப்புக்கொண்டு விட்டதாகவும்; அப்போது வனிதாமணி கனகசபாபதியிடம் 'அந்தத் தடிச்சியா?' என்று கேட்டதாகக்கூட கனகசபாபதி அன்று போனில் சொல்லி இருந்தாரே... அதெல்லாம் நிஜமாக இருந்தால் - இப்போது வனிதாமணி சந்தானலஷ்மியை மேலும் கீழும் பார்த்து 'யார் நீ' என்று கேட்பாளா? உன்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு என்று இரண்டாவது கேள்வியையும்தான் கேட்பாளா? வாய்ப்பே கிடையாது. வாய்ப்பே கிடையாது. கனகசபாபதி அன்று போனில் சொன்னது போல அவர் வனிதாமணியிடம் சந்தானலஷ்மியை வைத்துக் கொண்டிருப்பதாக ஒப்புக்கொண்டுவிட்டதாக சொன்னது எல்லாமே வெறும் கட்டுக்கதை. அது கட்டுக்கதை என்பதால்தான்- வனிதாமணி இப்போது கனகசபாபதியை பார்த்தும்; சந்தான லஷ்மியை பார்த்தும் கேட்ட கேள்விகள் எல்லாம்...

ஏடாகூடமாக மாட்டிக் கொண்ட கனகசபாபதியை பார்த்து 'அடப்பாவி மனுஷா...' என்று வனிதாமணி வாய் திறந்து சொல்லா விட்டாலும்; மனசுக்குள் அவரைப் பார்த்து அப்படித்தான் வயிறு எரிந்தாள். இந்த விஷயத்தில் சந்தானலஷ்மியும் வனிதாமணியோடு இணைந்து நின்றாள். வனிதாமணி கேட்ட கேள்விகளில் கனக



சபாபதியின் பொய் நாடகம் வெளியாகி இருப்பதில் சந்தான லஷ்மியின் மனசும் வயிற்றெரிச்சலில் 'அடப்பாவி...' என்று பற்றி தீயாக எரிந்தது. கனகசபாபதி ஆடியிருப்பது நாடகம் மட்டும் இல்லை. பித்தலாட்டத்தையும் சேர்த்துக்கொண்டு ஆட்டம் காட்டியிருக்கிறார். 'அந்தத் தடிச்சியா?' என்று வனிதாமணி கேட்டாள் என்று சொன்னரே - எத்தனை பெரிய பித்தலாட்டம் அது. நிஜத்தில் அந்த வார்த்தையை சொல்லியிருப்பது கனகசபாபதி. வனிதாமணி இல்லை... வனிதாமணி சந்தானலஷ்மியையே பார்க்க அவள் கனகசபாபதியையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். இரண்டு பேரையுமே பார்க்க முடியாமல் கனகசபாபதி தரையையே பார்த்தபடி நிற்க வேண்டியிருந்தது.

வந்த வேலையை முடிக்கிற வேகத்தோடு வனிதாமணி சந்தானலஷ்மியை பார்த்துக் கேட்டாள் ''யார் நீ; எப்ப இருந்து இவர் உனக்குப் பழக்கம்?''

''என்ன இது - எதுவுமே தெரியாத மாதிரி கேக்குறீங்க?'' - சந்தானலஷ்மி ஆச்சர்யத்தோடு கேட்டாள். - அவள் இந்த மாதிரி கேட்டது வனிதாமணிக்கு ஆச்சர்யம். ''தெரிஞ்சதை எப்படி நான் தெரியாதவ மாதிரி கேட்பேன்...?''

''ஏன் நான் யார்னு தெரியாதா உங்களுக்கு?''

''அதான் சொன்னேனே - உன்னைப் பாத்தா தெரிஞ்ச மாதிரியும் இருக்கு; தெரியாத மாதிரியும் இருக்குன்னு...''

''அன்னைக்கி உங்ககிட்ட கையுங்களவுமா மாட்டிக்கிட்டதாவும்; எல்லா விபரத்தையும் உங்ககிட்ட சொல்லிட்டதாகவும் சொன்னாரே...''

வனிதாமணி கனகசபாபதியை பார்த்தாள். முகத்தில் சவக் களை படிய நின்று கொண்டிருந்தார். ஒரே நேரத்தில ஒரே இடத்தில் மனைவியிடத்திலும் ஆசைநாயகியிடத்திலும் மாட்டிக் கொண்ட ஒரே ஆள் உலகத்தில் அவர் ஒருத்தராகத்தான இருப்பார்...

''என்னைக்கு சொன்னார்?'' - வனிதாமணி கேட்டாள்.

''ஹைதராபாத் போறதா சொல்லிட்டு மூணு நாள் என்கூட இங்கே இருந்திட்டுப் போனாரே...''

வனிதாமணி திருப்பியும் கனகசபாபதியை பார்க்க வேண்டி இருந்தது. காலில் செருப்புப் போட்டுக் கொள்ளாமல் திருப்பதியில்

சுற்றி அலைந்ததாக கதை அளந்து வைத்திருந்த கணவனைப் பார்க்கவே அவளுக்கு அவமானமாக இருந்தது. திருப்பதி போயிருந்ததாக கதை - வீட்டில். மாட்டிக் கொண்டு நிஜத்தைச் சொல்லி விட்டதாக கதை - சின்ன வீட்டில். கனகசபாபதி வனிதாமணியிடம் தலையை காட்டிவிட்டு சந்தானலஷ்மியிடம் வாலை காட்டியிருக்கிறார். பிறகு சந்தானலஷ்மியிடம் தலையை காட்டி வனிதாமணியிடம் வாலைக் காட்டப்பார்த்திருக்கிறார். தலையும் மாட்டிக்கொண்டு விட்டது. வாலும் மாட்டிக் கொண்டுவிட்டது. தலை போகுமா வால் போகுமா - இல்லை இரண்டுமே போய்விடுமா? - அது தெரிந்து விடுகிற உச்சகட்டத்தை நோக்கித்தான் கனகசபாபதியின் வாழ்க்கை மிக வேகமாக புரண்டு கொண்டிருக்கிறது...

சந்தானலஷ்மிக்கு இப்போது பெரிதாக சிரிப்பு வரும் போல இருந்தது. கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழியின் உருவமாக கனகசபாபதி அவளின் எதிரில் நின்று கொண்டிருந்தார். சந்தானலஷ்மிக்கு இப்போது அவசரமாக ஒரு உண்மை புரிந்தது. கோபத்தில் ஆத்திரத்துடன் அவள் கனகசபாபதியின் கன்னத்தில் ஒரு அறை விட்டால் கூட திருப்பி அவளை அறைகிற ஆண்மையில் அவர் இல்லை. என் புருஷனையா அறைகிறாய் என்று கேட்டு ஆவேசப் படுகிற நிலையில் வனிதாமணியும் இல்லை. ஆனால் அதற்காக சந்தானலஷ்மி உடனே இதுதான் சந்தர்ப்பம் என்று கனகசபாபதியின் கன்னத்தில் அறையவும் போவதில்லை. சந்தானலஷ்மியின் இயல்பு - படம் எடுத்துத் தீண்டப் பார்க்கிற பாம்பை அடிக்கிறதுதான். செத்த பாம்பை அல்ல; செத்துக்கொண்டிருக்கிற பாம்பை அடிக்கிறவள் இல்லை அவள். - அவளைப் பொறுத்தவரை கனகசபாபதி இப்போது செத்த பாம்பு.

சந்தானலஷ்மி வனிதாமணியை பார்த்துச் சொன்னாள் ''நாந்தான் சந்தானலஷ்மி. ஆறு வருஷத்துக்கு முன்னாடி உங்க ஆபிஸ்ல இவருக்கு பர்சனல் ஸ்டெனோவா இருந்தேன் - இப்ப ஞாபகம் வருதா?''

வனிதாமணிக்கு உடனே ஞாபகம் வந்துவிட்டது. சந்தான லஷ்மியை அடையாளமும் தெரிந்துவிட்டது. அந்தக் காலத்தில் ஆபிசில் சந்தானலஷ்மியை பார்த்து வனிதாமணி பொறாமைப் பட்டிருக்கிறாள் - அந்த சந்தானலஷ்மியே இன்று கனகசபாபதியின் ஆசைநாயகி. ஆனாலும் இந்த நிமிஷம் சந்தானலஷ்மியைப் பார்த்து பொறாமைப்படுகிற நிலைமையிலா வனிதாமணி இருக்கிறாள்...



வனிதாமணி ஒருவிதத் தீர்மானத்துடன் கனகசபாபதியை பார்த்துச் சொன்னாள் ''நீங்க போய் என் கார்ல இருங்க... உங்க காரை டிரைவர் ஓட்டிட்டு வருவான்... நான் இதோ வந்திடறேன்...''

கனகசபாபதி அவளைப் பார்த்துத் தயங்கி நின்றார். வனிதாமணி ''கார்ல இருங்கன்னு சொன்னா - போய் இருந்திடணும். இவ்வளவு பித்தலாட்டம் எனக்குத் தாங்காது. இங்கே ஒரு பொய் அங்கே ஒரு பொய்னு இவ்வளவு பெரிய நாடகமெல்லாம் நல்லதுக்குக் கிடையாது. போய் முதல்ல கார்ல இருங்க. நான் இவகிட்ட பேசிட்டு வரேன்...''

அதற்குமேல் அங்கே நிற்கும் தைரியமில்லாமல் கனகசபாபதி தலையைத் தொங்கப் போட்டபடி அங்கிருந்து வெளியேறினார். வனிதாமணியும் சந்தானலஷ்மியும் அடிப்படையில் இருவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லாத அந்நியமான தனிமையில் ஒருவரை ஒருவர் பார்த்தும் பார்க்காமலும் நின்று கொண்டிருந்தார்கள். இந்த சந்தானலஷ்மியிடம் தன் வாழ்வின் ஒரு கட்டம் தோற்றுப் போயிருப்பதாய் வனிதாமணிக்குத் தோன்றியது. கடைசியில் வெற்றி பெற்றிருப்பது வனிதாமணிதான் என சந்தானலஷ்மிக்குத் தோன்றியது. - இந்த மனத் தோற்றங்களில் இருவருமே பல நிமிடங்களுக்கு மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள்.

பிறகு பெரும் பெருமூச்சுடன் வனிதாமணி கேட்டாள் ''ஆனா நீ இப்ப ரொம்ப நாளா எங்க ஆபிஸ்ல இல்லைன்னு நினைக்கிறேன்...?''

''ஆமா - வேலையையெல்லாம் விட்டு ஆறு வருஷத்துக்கு மேல ஆகிப் போயிருச்சி...''

''எத்தனை வருஷமா உனக்கும் இவருக்கும் இந்தப் பழக்கம்?''

''அந்தப் பழக்கம் வந்து தான் வேலையை விட்டேன் நான்...''

''உன்னைக் கல்யாணம் எதுவும் பண்ணிட்டு இருக்காரா?''

''இல்லை. கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு சொல் லிட்டார்... அதுல உஷாராவே இருந்திட்டார்...''

''அது உஷார் கிடையாது. அதுவே ஒரு பித்தலாட்டம். என் புருஷன் என்கிறதுக்காக சொல்லாம இருக்க் முடியாது என்னால்...''

''எத்தினியோ தடவை சண்டை போட்டுப் பாத்தும் - கல்யாணம் மட்டும் பண்ணிக்கவே முடியாதுன்னு சொல்லிட்டார்...''

''அப்படிச் சொன்ன மனுசனை நீ அப்பவே வீட்டுக்குள்ள சேர்த்திருக்கக்கூடாது...''

சந்தானலஷ்மிக்கு பளீரென முகத்தில் குளிர்ந்த மழைத் துளிகள் உதிர்ந்தாற் போல இருந்தது. வனிதாமணியிடம் இருந்து இப்படி ஒரு வார்த்தையை அவள் எதிர்ப்பார்க்கவில்லை. சட்டென பக்கத்தில் போய் அவளுடைய கையைப் பிடித்துக் கொள்ள வேண்டும் போலக்கூட இருந்தது.

''சரி சந்தானலஷ்மி; இப்ப நான் சொல்லிடறேன். நான் சொல்றதுதான் ஃபைனல். இனிமே அவர் இங்கே வரமாட்டார். அவரை நீ எதிர்பார்க்காதே. அவரைப் பாக்கறதுக்கோ காண்டாக்ட் பண்றதுக்கோ ட்ரை பண்ணாதே. அவரை மறந்திடு. விட்டுடு அவரை. தெரிஞ்சும் பண்ணிருக்கார். தெரியாமலும் பண்ணி யிருக்கார். அதுக்காக நான் உன்கிட்ட மன்னிப்புக் கேட்டுக் கறேன்...''

வனிதாமணியின் இந்த வார்த்தைகள் பொய் கிடையாது. மிகை கிடையாது. நிஜமாகவே அவளின் மனதில் தோன்றியதை மறைக்காமல் சந்தானலஷ்மியிடம் அவள் வெளிப்படுத்தி விட்டாள்... வனிதாமணியின் வெளிப்பாடே இந்த வினோத தருணத்தில் ஒளிவு மறைவு அற்றுப் போயிருக்கும் போது - சந்தானலஷ்மியின் வெளிப்பாடு பற்றிச் சொல்ல வேண்டுமா...? அவளின் வெளிப்பாடு முற்றிலுமாக நிர்வாணமுற்றுவிட்டது...

❖

## 32

சந்தானலஷ்மி அவளின் மனதில் தோன்றியதை அப்படியே வார்த்தைகளில் காட்டினாள். ''இவ்வளவு பெரிய வார்த்தையை நான் எதிர்பார்க்கவே இல்லைங்க மேடம் - உங்ககிட்ட இருந்து... அவ்வளவு பெரிய வார்த்தை சொல்லிட்டீங்க... அதனால நானும் நிஜத்தைச் சொல்லிடறேன் - அவரே இனிமே இங்கே வர்ரதா இல்லை மேடம் ... வர்ரதை அவர் நிறுத்திட்டார். அந்த விவகாரம்தான் இப்ப எனக்கும் அவருக்கும் இடையில் போயிட்டு இருக்கு. ஆயுசுபூரா என்னை வச்சி காப்பாத்துவேன்னு சொல்லிட்டு



நட்ட நடு வழியில விட்டுட்டு ஓடப்பாக்கறாரே என்கிற ஆத்திரத்ல அவரை குத்தி கொன்னுப்பிடலாம்னு கூடஎனக்குள்ள ஒரு வெறி வந்துச்சின்னா - பாத்துக்கோங்க - எவ்வளவு தூரத்துக்கு என் மனசு பாதிக்கப்பட்டிருக்கும்னு... இனிமே எனக்குள்ள அந்த நெனைப்பு வரவே வராது - உங்க மேல சத்தியமா சொல்றேன்... ஏதோ வேற சில மன குடைச்சல்ல என்னைவிட்டு விலகிடறதா முடிவு பண்ணிட்டார். குட்பை சொல்லிட்டு போகிற மாதிரி இன்னைக்கிக் கடைசித் தடவையா வந்திருந்தார்... என் எதிர் காலத்துக்காக நஷ்ட ஈடு போல் அஞ்சு லட்ச ரூபாயும் குடுத்திருக்கார். பணத்தைக் குடுத்திட்டுக் கிளம்பறதுக்கு இருந்தார் - அந்த நேரத்ல நீங்க வந்துட்டீங்க...நீங்க மட்டும் பத்து நிமிஷம் லேட்டா வந்திருந்தா - கிளம்பிப் போயிருப்பார்''

''அதெப்படி போக முடியும்...? பல நாள் ஆசாமி ஒரு நாள் மாட்டிக்க வேண்டாமா?''

''நான் உங்கள ஒரு கேள்வி கேட்கலாமா மேடம்?''

''இன்னைக்கு எப்படி என் வீட்டுக்கு வந்திருக்கார்னு தெரிஞ்சி கரெக்ட்டா வந்தீங்க?''

''ரெண்டு வாரத்துக்கு முன்னாடி ஹைதராபாத் போறதா சொல்லிட்டு கிளம்பிப் போனவர் அங்கே போகலைன்னு தெரிஞ்சு மாட்டிக்கிட்டப்ப - மூணுநாள் திருப்பதி போயிருந்ததா என்கிட்ட சொன்னார்...''

''அந்த நிமிஷம் என் வீடுதான் அவருக்குத் திருப்பதியா தோணிச்சோ என்னவோ... ஆனா நூறு தடவை அவரை நான் நச்சரித்ததாலேதான் - ஹைதராபாத் போறதா சொல்லிட்டு இங்கே வந்து மூணுநாள் இருந்தார். பாவம் - முதல் தடவையே மாட்டிக் கிட்டார். உங்ககிட்ட திருப்பதி போனதா சொன்னாரா? என்கிட்ட - இங்கே என்கூட இருந்தது உங்களுக்கு தெரிஞ்சி போச்சின்னு சொல்லிட்டார். திருப்பதி போனதா சொன்னாரே - அதை நீங்க நம்பிட்டீங்களா?''

''நம்பவும் செஞ்சேன்; நம்பாலும் இருந்தேன். ஒரு கண் அவர் மேல் வச்சிட்டே இருந்தேன் - இதெல்லாம் உன்கிட்ட சொல்லணும்னு தேவை கிடையாது. இருந்தாலும் சொல்றேன். ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸிய இவரைப் பத்தி இன்வெஸ்டிகேஷனுக்கு - யாருக்குமே தெரியாம சொல்லி ஏற்பாடு

பண்ணி வச்சிருந்தேன். இங்கே அவர் வந்து வாசல்ல நின்னதுமே எனக்கு தகவல் வந்து சேர்ந்திருச்சி. கிளம்பி வந்துட்டேன். சரி சந்தானலஷ்மி; இது வரைக்கும் நடந்ததெல்லாம் நடந்ததாவே இருக்கட்டும். இனிமேயும் இது நடந்திட்டு இருக்கக்கூடாது. அவரை நீ மறந்திரு. அஞ்சு லட்ச ரூபாயை குடுத்திட்டாரா உனக்கு?''

''இதோ - இந்த ப்ரீஃப் கேஸ்ல இருக்கே. அதுலேதான் அஞ்சு லட்ச ரூபாய் இருக்கும்... ஆனா ஒண்ணு - இந்த அஞ்சு லட்ச ரூபாயெல்லாம் போதாதுன்னு அவர்கிட்ட சொல்லிட்டு இருந்தப்பதான் நீங்க வந்து கதவைத் தட்டிட்டீங்க...''

''அஞ்சு லட்ச ரூபாய் வச்சிக்கிட்டு இன்னைக்கி பாதுகாப்பா காலம் தள்ள முடியாது என்கிறதை நானும் ஒத்துக்கறேன்...''

வனிதாமணி இப்படிச் சொன்னதும் சந்தானலஷ்மியின் நெகிழத் தயாராக இருந்த மனம் எவ்வளவு தூரம் நெகிழ்ந்து போயிற்று என்பதைச் சொல்லவே வேண்டாம்.

''நீங்க இப்படிச் சொல்றது உங்க மேல எனக்குள்ள இருந்த அபிப் பிராயத்தையே மாத்துதுங்க மேடம்...'' - சந்தானலஷ்மி சொன்னாள்.

''இன்னும் உனக்கு எவ்வளவு பணம் வேணும்னு சொல்லு. அதுக்கு நான் ஏற்பாடு செய்யறேன்...''

''மேலே அதே அஞ்சு லட்சரூபா சேர்த்துத் தரச்சொன்னேன் அவர்கிட்ட. அந்தத் தொகை ரொம்ப ஜாஸ்தின்னு அவர் பங்குக்கு அவர் சொல்லிட்டு இருந்தார்...''

''பரவாயில்லை. எப்ப அந்த அஞ்சுலட்ச ரூபாய் என்னால புரட்டித் தர முடியுதோ- அப்ப அதை நான் கொண்டாந்து தந்திடறேன். தயவு செஞ்சு அது வரைக்கும் பொறுத்துக்க... ஆனா ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மறந்திடாம ஞாபகத்ல வச்சிக்க... நீ மட்டும் எந்தச் சூழ்நிலையிலும் எந்தக் காரணத்துக்காகவும் அவரை காண்டாக்ட் பண்றதுக்கு எந்த விதத்திலேயும் முயற்சி செய்யக் கூடாது. முயற்சி செய்யமாட்டேன்னு எனக்கு நீ சத்தியம் பண்ணித் தரணும்...''

சந்தானலஷ்மியின் மனசு மறுபடியும் மறுபடியும் நெகிழ வேண்டியதாகவே இருந்தது. ஒரு பெண் கோடி கோடியாக பணம் வைத்திருக்கும் கோடீஸ்வரியாக இருந்தால் என்ன; குப்பை மேட்டில் வாழ்கிறவளாக இருந்தால்தான் என்ன; அவளின் புருஷன்; அவன் நல்லவனோ கெட்டவனோ - அந்தப் புருஷன் அவள்



ஒருத்திக்குத்தான் உரியவனாக இருக்க வேண்டும். இதில் மட்டும் பெண்ணுக்குப் பெண் எந்த வித்தியாசமும் கிடையாது. உடனே சந்தானலஷ்மி வனிதாமணிக்கு அந்தச் சத்தியம் பண்ணிக் கொடுத்தாள். ''அவரை இனிமே நான் ஒரு நாளும் காண்டாக்ட் பண்ண மாட்டேன் மேடம். சத்தியமா காண்டாக்ட் பண்ண மாட்டேன். உங்க ரெண்டு குழந்தைங்க மேல ப்ராமிஸ் இது...'' - இதைச் சொன்ன போதே மனம் தாங்காமல் சந்தானலஷ்மியின் இரண்டு கண்களும் குளம் போல் ஆகி விட்டது சரிதான். அவளின் இந்த வார்த்தையை கேட்டு வனிதாமணியின் கண்களும் கலங்கப் பார்த்ததுதான் ஆச்சர்யம் - கண்களைத் துடைத்துவிட்டு வனிதமாணி சொன்னாள்...

''சந்தானலஷ்மி; இங்கே யாரோ ஒருத்தியை; ஏதோ ஒரு அசிங்கமான சம்பவத்தை எதிர்பார்த்து கொஞ்சம் அதுக்கும் தயாராத் தான் வந்தேன். நல்லவேளை - மாங்காட்டு அம்மன் அப்படி எதுவும் நடக்காம காப்பாத்திட்டா. உன்னையும் அவ நல்லபடியா காப்பாத்துவா. ஆனா வாழ்க்கைல மட்டும் நீ என்னிக்கும் எச்சரிக்கையாவே இரு. கல்யாணமான ஆம்பளைங்க யாரையுமே நம்பாதே. என்னிக்காவது விட்டுட்டு ஓடத்தான் பார்ப்பானுங்க. அதனால டைவர்ஸ் ஆனவர்; பெண்டாட்டி செத்துப் போனவர் - இந்த மாதிரி யாராவது நல்ல ஆள் கிடைச்சா கல்யாணம் பண்ணிக்க. எந்தப் பொண்ணுக்கும் ஒரு ஆம்பிளை துணை வேணும். ஒரு நல்ல துணை உனக்கும் கிடைக்கணும்னு மாங்காட்டு அம்மனை நான் வேண்டிக்கிறேன். நீ கேட்ட பாக்கி அஞ்சு லட்ச ரூபாயை எப்ப முடியுமோ அப்ப எடுத்துக்கிட்டு வரேன் நான். பார்ப்போம்...''

வனிதாமணி வேகமாக நடந்து வீட்டில இருந்து வெளியேறிப் போனாள். அடுத்த சில நிமிடங்களில் இரண்டு கார்கள் கிளம்பிச் செல்கின்ற சப்தம் கேட்டது.

சந்தானலஷ்மி மலைத்துப் போய் நின்றாள். சர்வமும் அடங்கிப் போய் நின்றாள் - இந்த மாதிரி எத்தனை விதங்களில் சொன்னாலும் அது சந்தானலஷ்மியின் அந்த நிமிட மனநிலையை நூறுசதவீதம் துல்லியமாக சொன்னதாகாது. அப்படியொரு மனநிலை அவளிடத்தில். பணம் நிரம்பிய கனகசபாபதியின் ப்ரீஃப்கேஸ் அவளின் கண் பார்வையில் தெரிந்துகொண்டே இருந்தது. வரம் ஒன்றத்தந்துவிட்டு சரேலென கடவுள் மறைந்து விட்டாற்போல இருந்தது - சந்தானலஷ்மி ஓடிப்போய் கட்டிலில் விழுந்தாள். அவளின் இரண்டு கண்களில் இருந்தும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்துகொண்டே இருந்தது. சந்தானலஷ்மி வாய்விட்டு உரக்கவே

அழுதாள். அவளுக்கும் கனகசபாபதிக்கும் இடையே இருந்த உறவு இறந்து... அதற்கான கர்ம காரியங்கள் நடந்து முடிந்திருப்பதாகத் தோன்றியது. இனி வாழ்க்கையாக அவளுக்கு என்ன நடப்பதாக இருக்கிறது என்பது சந்தானலஷ்மியின் அறிவுக்கு எட்டாததாகவே இருந்தது. கனகசபாபதியை பழி வாங்க வேண்டும் என்ற உள் மன ஓட்டமெல்லாம் எதிர்பாராமல் காணாமல் போயிருந்தது - ஆனால் பல நிமிடங்களுக்கு சந்தானலஷ்மி எதற்காக இப்படி அழுது கொண்டிருக்கிறோம் என்பதே தெரியமால் அழுதுகொண்டிருந்தாள்.

பக்கத்து வீட்டு கல்பனாவின் புதிய நட்புக் கரம் சந்தானலஷ்மியின் தனிமை என்ற இருள் கவிந்த வீட்டில் புதிய ஜன்னல் ஒன்றைத் திறந்து விட்டிருக்கும் தருணத்தில் வீடு என்ற அரைகுறை கட்டுமானமே தகர்ந்து போய்விட்டது, சந்தானலஷ்மியின் மனதை கடுமையாக தாக்கி விட்டது. மீண்டும் ஹாஸ்டல் ஒன்றின் தனியறை வாழ்க்கைக்கு தான் பின்னோக்கி வீழ்ந்து விட்ட அச்சமும் அவளின் மனதில் ஏற்பட்டிருந்தது. கனகசபாபதியோடு பகிர்ந்து கொண்டிருக்கும் பாலுறவு வாழ்க்கையின் பல சம்பவங்களும் அதன் அனுபவங்களும் சந்தானலஷ்மியின் ஞாபகத்தில் அடுக்கடுக்காய் வந்து போயின. கண்ணுக்குத் தெரியாத வெள்ளம் வந்து எல்லாவற்றையுமே அழித்து நாசமும் பண்ணிவிட்டுப் போயிருப்பதாய் தோன்றியது அவளுக்கு. வெள்ளம் சந்தானலஷ்மியை கிட்டத்தட்ட ஒரு அகதியாக நிற்க வைத்துவிட்டுப் போயிருந்தது. அவளுக்கு என்னமோ வெள்ள நிவாரண நிதி வந்து சேர்ந்து விட்டது. இன்னும் பாதி நிதி வரவும் போகிறது. அகதிகள் முகாமில் வேளா வேளைக்கு சாப்பாடு உத்திரவாதம். நிவாரண நிதியை வைத்துக் கொண்டு சந்தானலஷ்மியும் வயிறு நிறைய சாப்பாடு சாப்பிட்டுக் கொள்ள முடியும்...

ஆனால் அவளுடைய வீடு என்ற கட்டுமான அமைப்பை நிவாரண நிதி உருவாக்கியா தரும்?

சந்தானலஷ்மிக்குத் தொடர்ந்து அழுது கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. ஏற்பட்டிருந்த மலைப்பு பிரமிப்பு எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கி வடிந்து போகத் தொடங்கி இருந்தது. பணம் நிறைந்த ப்ரீஃப் கேஸை எடுத்துப் போய் அறையில் வைத்தாள். வனிதாமணிகூட ஏதோ நாடகம் ஆடிவிட்டுப் போயிருப்பதாக திடீரென தோன்றியது சந்தானலஷ்மிக்கு. எவள் என்ன ஆட்டம் வேண்டுமானாலும் ஆடிவிட்டுப் போகட்டும்.



அதைப் பற்றி சந்தானலஷ்மிக்கு எந்த அபிப்பிராயமும் கிடையாது. இப்போது அவளுக்கு உடனடி தேவை - பாக்கி ஐந்து லட்ச ரூபாய்தான். அதுவும் வந்து சேர்ந்த பிறகு என்ன பண்ணலாம் ஏது பண்ணலாம் என நின்று நிதானமாக யோசனை செய்யலாம். மறுபடியும் அடக்க முடியாத ஆத்திரம் என்றாவது வந்தால் அன்று கனகசபாபதியை பழி வாங்குவதைப் பற்றி மறுபரிசீலனை செய்யலாம். கனகசபாபதி எங்கேயும் ஓடி விடப் போவதில்லை. அப்படியே ஓடினாலும் கூட அவர் திருப்பதியை தாண்டி எங்கேயும் ஓடிவிடப் போவது கிடையாது. திருப்பதி இதோ இருக்கிறது. பிரைவேட் டாக்சி பிடித்தால் மூன்று மணி நேரத்தில் போய் விடலாம்...

சந்தானலஷ்மி முகத்தை நன்றாக கழுவித் துடைத்தாள். அருமையான காப்பி போட்டுக் குடித்தாள். சிகரெட் புகைக்க வேண்டும் போல இருந்ததால் - சிகரெட் பாக்கெட்டில் இருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைப்பதற்காக அவள் தீப்பெட்டியை எடுத்தபோது வீட்டுக் கதவு தட்டப் படும் சப்தம் கேட்டது. உடனே ஓடிப்போய் சிகரெட்டையும் சிகரெட் பாக்கெட்டையும் சமையல் அறையில் மறைத்து வைத்துவிட்டு வந்து சந்தானலஷ்மி கதவைத் திறந்தாள். வாசலில் கல்பனாவும் அவளுடைய சித்தப்பா மகன் காவியனும் நின்று கொண்டிருந்தார்கள். கல்பனா வந்திருந்தது சந்தானலஷ்மிக்கு ஆச்சரியமாக இல்லை. ஆனால் சில மணி நேரங்களுக்கு முன்பு கல்பனாவின் வீட்டில் அறிமுகமான திரைப்பட இணை இயங்குநரான காவியனும் வந்திருந்தது சந்தானலஷ்மிக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. அவர்கள் இருவரையும் வீட்டிற்குள் வரச் சொல்லி வரவேற்றாள்.

கல்பனா வீட்டிற்குள் வந்தவாறே சொன்னாள் ''உங்க கனகசபாபதி சாரோட கார் இருக்கா கிளம்பிப் போயிருச்சான்னு எங்க வீட்டு வாசல்ல நின்னு பார்த்தேன். கார் இல்லை, சரி; கிளம்பி போயிருச்சின்னு தெரிஞ்சது. உடனே இவனை கூட்டிட்டு வரேன் - கனகசபாபதி வந்ததும் போயிட்டாரா?''

''நிறைய விஷயம் நடந்திருச்சிங்க கல்பனா. நாளைக்கு டீடெய்லா எல்லாத்தையும் வந்து நானே சொல்றேன்...''

''ரொம்ப முக்கியமான விஷயமா வந்திருக்கோம் மேடம். காவியன் உடனே உங்களைப் பாத்து ஒரு விஷயம் பேசணும்னு ரொம்ப அவசரப் பட்டான். அதான் அவனை கூட்டிட்டு வந்தேன்... காவியா நீயே சொல்லிடேன்...''

''நீ சொல்லு அக்கா...'' என்றான் காவியன் தயங்கியவாறு.

''உதைப்பேன். உன் மேட்டர் அது. நீதான் சொல்லணும். நீதான் பேசணும்...''

காவியன் சிறிது தயக்கத்தோடும் சங்கோஜத்தோடும் சந்தான லஷ்மியை பார்த்தான். சில வினாடிகளுக்கு மௌனமாகவே இருந்தான். சந்தானலஷ்மிக்கு இது ஓர் விதமான புதிராக இருந்தது. சில மணி நேரங்களுக்கு முன் அறிமுகமான இந்த காவியனுக்கு தன்னிடம் இத்தனை அவசரமாகப் பேச என்ன இருக்கும் என்ற ஆச்சர்யத்துடன் காவியனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பரவாயில்லை - எதுவா இருந்தாலும் சொல்லுங்க - என்றாள். காவியன் தயக்கம் விலகி சொன்னான் ''எங்க டைரக்டர் பாரதிகுமார் புதுசா ஆரம்பிக்கப் போகிற தமிழ் படத்ல ஒரு மிடில் ஏஜ்ல இருக்கிற மாதிரியான கவர்ச்சி வில்லிக்கான ஒரு கேரக்டர் வருது. வயசான வில்லனுக்கு ஜோடியா வர்ர கேரக்டர் அது. குறைஞ்சது பத்துப் பன்னிரெண்டு சீன் வரும் அந்த வில்லி கேரக்டருக்கு. உங்களைப் பார்த்த உடனே எனக்குத் தோணிச்சி - அந்த ரோலுக்கு நீங்க பொருத்தமா இருப்பீங்கன்னு...'' - அந்த காவியன் சற்று நிறுத்தினான். சந்தானலஷ்மியின் முகத்தைப் பார்த்தான். திகைப்புடன் நின்று கொண்டிருந்தாள் அவள் - அவளுடைய காதுகளையே நம்ப முடியாமல்... அவளுடைய வீட்டுக் கதவை வந்தா வாய்ப்பு தட்டுகிறது? - அப்படித்தான் தெரிகிறது....

❖

## 33

''என்ன கல்பனா - உங்க தம்பி திடீர்னு வந்து இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுறாரு.... நானாவது கவர்ச்சி வில்லியா நடிக்கிறதாவது.... அதுக்கான மூஞ்சி வேண்டாமா முதல்ல எனக்கு....'' - என்றாள் சந்தானலஷ்மி.

''சொல்லு காவியா - கேக்குறாங்க பார்....'' கல்பனா காவியனைப் பார்த்துச் சொன்னாள்.

''அப்படி இல்லைங்க மேடம். 'பர்ட்டிகுலரா' முகம்னு இல்லை- மொத்தத்ல உங்க பாடி அனடமியைப் பாத்திட்டுத்தான் உடனே



எனக்குள்ள தோணிடிச்சி, நீங்க அந்த ரோலுக்கு ரொம்பப் பொருத்தமா இருப்பீங்கன்னு.... அக்கா வீட்ல இருந்து நீங்க கிளம்பி வந்த அடுத்த நிமிஷமே நான் அக்காகிட்டே சொன்னேன் இதை. அவங்க முதல்ல வேண்டாம் அதெல்லாம்னுதான் சொன்னாங்க. நான்தான் அவங்களை விடாப்பிடியா கேட்டு; உங்ககிட்ட நேர்ல பேசிப் பார்த்திரலாம்னு உங்க வீட்டுக்கு என்னை கூட்டிட்டுப் போகச் சொன்னேன்....'' - வேக வேகமாகச் சொன்னான் காவியன்.

சந்தானலஷ்மிக்கு இன்னமும் அவளுடைய காதுகளை நம்ப முடியாமலே இருந்தது. காவியனின் முகத்தைப் பார்க்கக்கூட சங்கோஜமாக இருந்தது அவளுக்கு. கல்யாணமான ஒரு இளம் பெண்ணுக்கு முதல் இரவின்போது கணவனின் எதிரில் எந்த மாதிரியான நூதன வெட்கம் ஏற்படும் என்ற விஷயம் சந்தான லஷ்மிக்குத் தெரியுமா என்பதுபற்றித் தெரியவில்லை. ஆனால் கிட்டத்தட்ட அந்தமாதிரியான நூதனமான சங்கோஜத்துடன்தான் அந்த நிமிஷம் அவள் சினிமா இணை இயக்குநர் காவியனின் எதிரில் நின்றுகொண்டிருந்தாள். சங்கோஜம் ஏற்படுகிறபோது எந்தப் பெண்ணின் வனப்பும் சிறிது மெருகு கூடித் தெரியும். சந்தானலஷ்மியின் உடலின் வனப்பு இதற்கு விதிவிலக்காகிவிடுமா? இது மட்டும் இல்லை விஷயம். முதல் முறையாக சந்தானலஷ்மிக்கு அவளுடைய உடல் வனப்பின் மேலேயே சங்கோஜம் வந்து விட்டிருந்தது. சினிமா சந்தர்ப்பம் அவளுடைய வீட்டின் கதவை தட்டியிருப்பது அவளின் உடல் வனப்பைப் பார்த்துவிட்டுதான். நடிப்புத் திறமையை பார்த்துவிட்டு இல்லை....

''சொல்லுங்க மேடம்....'' காவியன் தொடர்ந்தான் ''கண்டிப்பாக நீங்க சம்மதம் சொல்வீங்க என்கிற நம்பிக்கையிலேதான் கிளம்பி வந்தேன்''

சந்தானலஷ்மி லேசாக நெற்றியை சொரிந்தபடியே சொன்னாள்.

''எனக்கு நடிப்புன்னு சொன்னாலே என்னன்னு தெரியாது. என்னை வந்து கூப்பிடறீங்களேன்னுதான் ஆச்சர்யமா இருக்கு எனக்கு....''

''நீங்க நடிக்கவே வேண்டாம். எங்க டைரக்டர் சொல்றதை அப்படியே செஞ்சு காட்டினா போதும்.... மத்ததை நாங்க பாத்துப்போம்''

''அதைச் செய்து காட்டவும்தானே தெரியாது எனக்கு''

''இல்லை மேடம். நிச்சயமா உங்களால முடியும்... ஐ ஹோப் ஸோ....''

சந்தானலஷ்மிக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் கல்பனாவைப் பார்த்தாள். கல்பனா சொன்னாள் ''உங்களுக்கு நடிப்பு வருமா; நடிக்க முடியுமா - அப்படியெல்லாம் சந்தேகப்படாதீங்க மேடம் நீங்க. நடிக்க உங்களுக்கு விருப்பம் இருக்கா - என்கிறதை மட்டும் சொல்லுங்க....''

''பயமா இருக்கு கல்பனா'' என்றாள் சந்தானலஷ்மி. இதை அவள் பயந்துகொண்டு சொல்லவில்லை. சிறிய புன்னகையுடன் சொன்னாள்.

''யாருக்குமே முதல்ல பயம் இருக்கத்தான் செய்யும்.... நாலைஞ்சு நாள் ஒர்க் பண்ணிட்டீங்கன்னா பயமெல்லாம் தானா போயிடும்....'' - என்றான் காவியன்.

சந்தானலஷ்மி மௌனமாக இருந்தாள். உண்மையில் அவளுக்குப் பயம் எதுவும் கிடையாது. வெட்கம்தான். இந்த வயதில்போய் சினிமாவில் நடிப்பதா? அதுவும் கவர்ச்சி வில்லியாக? தெரிந்தோ தெரியாமலோ; விருப்பப்பட்டோ விருப்பப்படாமலோ அவள் கவர்ச்சியான உடம்பைக் கொண்ட மனுஷியாகிவிட்டாள். ஆனால் கவர்ச்சியான நடிகையாகத் தெரிய அவளுக்கு ஒரு மாதிரியான வெட்கமாக இருந்தது. கவர்ச்சியான மனுஷியாக இருப்பது வேறு. கவர்ச்சியான நடிகையாக இருப்பது வேறு - இந்த இரண்டுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை சந்தானலஷ்மி எப்படியோ கண் எதிரில் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த வித்தியாசத்தை கண்டுகொள்ளாமல் கண்களை மூடிக் கொள்வதற்குத்தான் வெட்கமாக இருந்தது அவளுக்கு - அந்த நிமிஷம் சந்தானலஷ்மியின் மனக்கண்ணில் கனகசபாபதி தெரிந்தார். வீட்டில் அவர் என்ன மோசமான கதியில் இருக்கிறாரோ? சந்தானலஷ்மியை இங்கே அவமானப்படுத்த ஆள் கிடையாது. அங்கே கனகசபாபதியை அவமானப்படுத்த ஒரு கூட்டமே திரண்டு நின்றாலும் நிற்கலாம் - அதுமட்டுமில்லை; இங்கே கனகசபாபதி யால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத விஷயம் ஒன்று சந்தானலஷ்மியின் வீட்டில் நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் அவளின் மனஉணர்வுகளில் பெரும் தீரச் செயலாய் வேகம் பெற்றுக்கொண்டிருந்தது.



நிஜமாகவே சந்தானலஷ்மி தமிழ் சினிமாவில் ஒரு கவர்ச்சி நடிகையாக அறிமுகமாகி; பிரபலமும் ஆகிவிட்டால் கனகசபா பதிக்கு எப்படி இருக்கும்? - அதற்காகவே உடனே கிளம்பி நடிக்கப் போகலாம் போல இருந்தது அவளுக்கு. அந்த வழியிலாவது கனகசபாபதியை பழி வாங்கியாக வேண்டும் சந்தானலஷ்மிக்கு. நெஞ்சில் கொஞ்சம்கூட ஈவு இரக்கம் இல்லாமல் 'ஹாஸ்டலில் போய் இரு'வென்று சொன்ன கனகசபாபதியை அவளுக்குப் பழி வாங்கியே தீரவேண்டும். மற்ற எல்லோரையும்போல ரொம்ப சாதாரணமான வழியில் அவரைப் பழி வாங்கிவிடக் கூடாது. ரொம்பப் புது வழியில் யாரும் பழி வாங்காத ஸ்டைலில் பழி வாங்கவேண்டும். அதற்காக கடவுளாகப் பார்த்துக் கொடுத்தி ருக்கும் எதிர்பாராத சந்தர்ப்பம்தான் இந்த சினிமா வாய்ப்பு. சந்தானலஷ்மி சினிமாவில் நடிக்கிறாள் என்பது தெரிந்தாலே கனகசபாபதி ஒருமாதிரி ஆடிப் போய்விடுவார். சினிமாவில் அவள் பிரபலமாகி விட்டால் அவர் அவரின் இயல்பின்படி சந்தான லஷ்மியின்மேல் பொறாமைப் படவும் ஆரம்பித்துவிடுவார். சந்தானலஷ்மிக்கு அவரை ரொம்ப வருஷமாகத் தெரியும். அந்த பொறாமை 'அவளா - நேத்துவரை என்கிட்ட ஸ்டெனோவா வேலை பார்த்தவ' என்ற ஆற்றாமை மிகுந்த பேச்சாக வெளிப்படக்கூட வாய்ப்பு உண்டு. ஸ்டெனோவாக இருந்ததை மட்டும்தான் சொல்லிக்கொள்ள முடியும். மற்ற எதையும் சொல்ல முடியாது வெளியில். சந்தானலஷ்மி சினிமாவில் நடித்தால் கனகசபாபதிக்கு இத்தனை சிக்கல் இருக்கிறது.

நிமிடங்கள் ஓட ஓட சந்தானலஷ்மியின் மனநிலையில் மிக வேகமாக மாற்றங்கள் நடந்தன. வெறும் கவர்ச்சியான மனுஷியாக இருந்த பலன் இத்தனை வருஷத்தில் கனகசபாபதிக்கு ஆசைநாயகி யாக இருந்ததைத் தவிர வேறு எதுவும் பெரியதாகக் கிடையாது. வெறும் கவர்ச்சியான மனுஷியாக இருந்து வந்ததில் அவளுக்கு அலுப்பும் சலிப்பும் திடீரென வந்துவிட்டது. கவர்ச்சியான நடிகையாக இருந்து பார்த்தால்தான் என்னவென்றும் தோன்றியது. தொடர்ந்து நடிகையாக நடிப்புத் தொழிலில் ஈடுபட்டால் முதலில் அவளுடைய தனிமையை முடிவுக்குக் கொண்டு வரலாம். தினமும் படப்பிடிப்புக்குப் போய் வரலாம். நிறைய பண வருமானம் வந்துவிட்டால் வீட்டில் வேலைக்கு நிறைய ஆட்களை வைத்துக் கொண்டுவிட்டால் வீடும் கலகலப்பாக மாறிவிடும். முக்கியமான இன்னொரு விஷயம் - வேறு வீடு பார்த்துத் தொலையவேண்டாம்.

சொந்த வீடு வாங்குகிற வரை இந்த வீட்டிலேயே இருந்து கொள்ளலாம்.

சந்தானலஷ்மி காவியனைப் பார்த்து புதிய நட்புடன் புன்னகை செய்தாள். அவனுக்கு அந்தப் புன்னகையின் பொருள் தெரிந்தது. ''அப்பா - எங்க நீங்க சம்மதிக்க மாட்டீங்களோன்னு கொஞ்சம் பயந்திட்டேன்.... ஏன்னா - இப்ப உங்க வாழ்க்கைச் சூழ்நிலையில ஏதோ ப்ராப்ளம்னு அக்கா சொன்னாங்க.... இந்த நேரத்ல கேட்டா சரியா இருக்குமான்னு நெனைச்சேன்....'' - காவியன் மூச்சுவிடாமல் பேசினான்.

அவனுக்கு உடனே சந்தானலஷ்மி பதில் சொன்னாள். ''இந்த சூழ்நிலையில இருந்து வெளியில வரத்தான் நடிக்கலாம்னு பாக்குறேன். மத்தபடி எனக்கு சினிமா நடிகையா வரணும் என்கிற ஆசை சுத்தமா கிடையாது. ஆனா ஒண்ணு; உங்க டைரக்டர் பாரதி குமாரோட படங்கள்னா எப்பவுமே எனக்குப் பிடிக்கும். அவரோட படத்திலேயே நடிக்கிறதுன்னா ரொம்பப் பெரிய விஷயம் அது. நடிக்கிறதுக்கு நான் சம்மதிக்கிறதுக்கு இதுவும் ஒரு காரணம். ஆனா முதல்லேயே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிடறேன். ரொம்ப கவர்ச்சியான டிரெஸ் எதையும் கன்னாபின்னான்னு குடுத்திடாதீங்க''

''அய்யய்யோ; அப்படியெல்லாம் எந்த டிரெஸ்ஸையும் உங்களுக்குக் குடுத்திடமாட்டோம். முதல்ல நீங்க என் அக்காவோட ஃப்ரண்ட். அதுக்குப் பிறகுதான் எனக்கு நீங்க நடிகை....''

''சரிடா காவியா....'' என்று, கல்பனா கேட்டாள். ''நீ இவங்களை நடிக்க வாங்கன்னு கூப்பிடுறே. இவங்களை உங்க டைரக்டருக்குப் பிடிக்கணுமே.... அவர் வந்து பாத்திட்டு வேணாம்னு சொல்லிட்டார்னு வச்சிக்க - தேவையில்லாம இவங்களோட உணர்வுகளோடு விளையாடிட்ட மாதிரி ஆயிடும் - யோசிச்சி பாத்துக்க....''

''என்னக்கா நீ.... என்னிக்காவது நான் உன் வீட்ல இதுக்கு முன்னாடி இப்படி யாரையாவது பார்த்து 'அப்ரோச்' பண்ணியிருக்கேனா? எனக்குத் தெரியும் எங்க டைரக்டரைப் பற்றி.... எனக்குப் பிடிச்சா கண்டிப்பா அவருக்கும் பிடிக்கும். இப்ப இவங்களை கேட்டேன் பார் - அந்த கேரக்டர்ல நடிக்கிறதுக்கு இதுவரைக்கும் இவங்க ஏஜ்லேயே பதினைஞ்சு லேடீஸ்ஸை எங்க



டைரக்டர் பார்த்திட்டார். யாருமே அவருக்கு திருப்தியா இல்லை. இன்னைக்கி உன் வீட்டுக்குள்ள இவங்களைப் பாத்ததும் - அந்த கேரக்டர் அப்படியே என் கண் முன்னாடி நிக்கற மாதிரி இருந்துச்சி. நாளைக்கே எங்க டைரக்டரை கூட்டிட்டு வந்து இவங்களைப் பார்க்கிறதுக்கு நான் ஏற்பாடு செய்றேன். இவங்களை பாத்து டைரக்டர் 'ஓ.கே.' சொல்லலைன்னு வச்சிக்க - என் சினிமா வேலையையே நான் விட்டுடறேன்....''

''போதும் போதும். உடனே ரொம்ப இமோஷனலா பேச ஆரம்பிச்சிடாதே. நான் ஒரு முன்னெச்சரிக்கைக்காக அப்படிக் கேட்டேன். நீ சும்மா ஆசையை கிளப்பி விட்டுட்டுப் போயிடக் கூடாது....'' - கல்பனா சொன்னாள்.

''நீ கவலைப்படாதே.... இவங்கதான் அந்த கேரக்டருக்கு.... அது உறுதி. எனக்கு வேண்டியது இவங்களோட சம்மதம்தான்....''

''சம்மதம்தான் சொல்லிட்டாங்களே....''

''அப்ப விஷயம் முடிஞ்சாச்சி. நாளைக்கு இந்நேரம் டைரக்டர் இவங்க கையில அட்வான்ஸைக் குடுத்திருப்பார். ரொம்ப தேங்ஸ் மேடம். நாளைக்கு நான் உங்களுக்கு போன் பண்ணிட்டு டைரக்டரை கூட்டிட்டு வரேன். நீங்க நாளைக்கு வெளியில எங்கேயும் போயிடலையே?''

''வீட்லேதான் இருப்பேன்....'' - சந்தானலஷ்மி சொன்னாள்.

''அப்போ நாளைக்குப் பார்ப்போம் மேடம்.... நான் கிளம்பறேன். குட்நைட்''

''காவியா - நீ போய் வீட்ல இரு. நான் கொஞ்சம் இவங்ககூடப் பேசிட்டு வரேன்....'' என்றாள் கல்பனா.

காவியன் கிளம்பிச் சென்றான். சந்தானலஷ்மி அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த இளமையின் மணத்தோடும்; இந்த வாலிபத்தின் கம்பீரத்தோடும் அவளுடைய வீட்டிற்குள் இதுவரை யாரும் நுழைந்தது கிடையாது. அந்த நிமிடம் கனகசபாபதியின் துரோகம் ஏற்படுத்திய கோபத்திலும் இருந்தாள். நடிகையாகப் போகிற பிரமிப்பிலும் இருந்தாள். பெரிய பெரிய தொகையாக பணம் வந்து சேர்ந்துகொண்டிருக்கிற உற்சாகத்திலும் இருந்தாள். நிஜமாக என்ன செய்யவேண்டும் என்றே தெரியவில்லை அவளுக்கு. எப்படியென்றே புரியாத தன் மன உணர்ச்சிகளை, கதம்ப

நிலையை கல்பனாவுடன் பேசிப் பகிர்ந்துகொள்ள வசதியாக அமைந்துவிட்டது - கல்பனா காவியனை அனுப்பி வைத்தது.

''நானே நினைச்சேன் கல்பனா - கொஞ்சம் நேரம் உங்களை இருந்திட்டுப் போகச் சொல்லணும்னு.... நல்லவேளை நீங்களே உங்க தம்பியை அனுப்பி வச்சிட்டீங்க.... நெறய விஷயம் ரொம்ப வேகமாக நடந்து போயிருச்சிங்க கல்பனா....'' என்று ஆரம்பித்து கனகசபாபதியும் வனிதாமணியும் வந்திருந்தபோது நடந்த அத்தனை விஷயங்களையும் கல்பனாவிடம் சந்தானலஷ்மி அவ்வப்போது கண்கலங்கி சொல்லி முடித்தாள். குறுக்கே எந்தக் கேள்வியும் கேட்காமல் கல்பனா கேட்டுக்கொண்டிருந்தாள். நீண்ட நேரத்திற்கு அவர்கள் இருவரின் மத்தியில் மௌனம் நிலவியது. பிறகும் சந்தானலஷ்மிதான் தொடர்ந்தாள்.

''.... கடைசி கடைசியா ஹைதராபாத் போறதா சொல்லிட்டு இங்கே வந்து மூணு நாள் என்கூட இருந்திட்டுப் போனாரே - அந்த மூணு நாளையும் நான் லேசில மறக்கமாட்டேன் கல்பனா. நெனைச்சே பாக்கலை நான் - திடீர்னு இப்படி என்னை விட்டுட்டுப் போயிடுவார்னு.... ஏன்னா - அந்த மாதிரி கிடந்திருக்கார் என்கிட்ட. என் உடம்பைப் பார்த்துப் பார்த்து மாளாது மனுசனுக்கு. சாவு வரும்போதுகூட என் உடம்பைப் பார்த்துக்கிட்டே சாகணும்னு சொல்வார். நிஜமா அப்படித்தான் இருந்திருக்கார் என்கிட்ட. திடீர்னு என்ன ஆச்சோ தெரியலை.... கட்டினவகிட்டே ஒரு பொய். வச்சிருக்கிறவள்கிட்டே ஒரு பொய்.... முழுக்க முழுக்க இந்த மாதிரி பொய்யே பேசற மனுஷனான்னு பார்த்தா - அப்படியும் கிடையாது. சரி; எல்லாமே போகட்டும். போனதாவும் இருக்கட்டும்.... எனக்கும் அவருக்கும் இத்தனை வருஷம் இருந்த தொடர்புல எனக்கு ஒரே ஒரு குழந்தை பிறந்திருந்தாகூட இவ்வளவு தூரம் நான் மனசு பாதிக்கப்பட்டிருக்கமாட்டேன்.... அதுக்கும் நான் குடுத்து வைக்கலை'' -இப்போது கல்பான குறுக்கிட்டாள் ''நான் ஒண்ணு கேக்கலாமா உங்களை?''

''கேளுங்க கல்பனா''

''ஏன் உங்களுக்குக் குழந்தை பிறக்கலை; உங்க உடம்புல ஏதாச்சும் குறை இருக்கா?''

''என் உடம்புல எந்தக் குறையும் இல்லைன்னுதான் நினைக்கிறேன். ஆனா அவர் மூலமா எனக்குக் குழந்தை பிறக்காது.



ஆம்பளைங்க செய்துக்கற குடும்ப கட்டுப்பாடு ஆபரேஷன் பண்ணிட்டிருக்கார் அவர்....''

''பண்ணியிருந்தா என்ன? குழந்தை வேணும்னா திருப்பியும் அந்த இடத்ல ஒரு சின்ன ஆபரேஷன் மூலமா அதைச் சரி பண்ணியாச்சின்னா போதும். எத்தனை குழந்தை வேண்டுமானாலும் அவர் மூலமா பெத்துக்கலாம்....''

கல்பனா இப்படிச் சொன்னதைக் கேட்டு சந்தானலஷ்மி திகைத்துப் போனாள். சற்று புரியாமல் குழம்பவும் செய்தாள்.

''அப்ப ஏன் அவர் திருப்பி அந்த ஆபரேஷனை செய்துக்கலை?'' சந்தானலஷ்மி கேட்பதற்குச் சிறிது பயந்தவாறே இந்தக் கேள்வியை கேட்டாள்.

''எதுக்காக செய்துக்கணும்?'' - கல்பனா கேட்டாள்.

''என்னங்க கல்பனா இப்படிக் கேக்குறீங்க.... திருப்பி அந்த ஆபரேஷனை பண்ணிக்கிட்டார்னா எனக்கு ஒரு குழந்தையாவது பிறந்திருக்குமே?''

''நீங்க நினைக்கலாம் இப்படி. அவரும் இதை நினைக்க வேண்டாமா? நினைக்கல அவர். நினைச்சிருந்தா பண்ணிருப்பார் அந்த ஆபரேஷனை. உங்களுக்கும் குழந்தை பிறந்திருக்கும்.''

கல்பனா சொன்னதைக் கேட்டு சந்தானலஷ்மியின் நெற்றி சுருங்கியது. புருவங்கள் மின்னலாக வெட்டின. கண்கள் சற்று நேரம் சூனியத்தை நோக்கி இடுங்கின. அதே சூனியம் நோக்கி சந்தானலஷ்மியின் குரல் மிகவும் மெலிதாக ஒலித்தது.

''அதை ஏன் கனகசபாபதி நினைக்கவே இல்லை?''

''நீங்க கேக்குற கேள்விக்கு உள்ளேயே பதில் இருக்கு பாருங்க''

கல்பனா இப்படி சுட்டிக் காட்டியதும் சந்தானலஷ்மி அவளின் கேள்விக்குள் சிறிது சிறிதாக உட்புகுந்து பார்த்தாள். உள்ளே அவளின் கேள்விக்கான பதில் தெரிந்தது. அந்தப் பதில் இதுதான் - சந்தானலஷ்மி ஒரே ஒரு குழந்தை பெற்றுக் கொள்வதில்கூட கனகசபாபதிக்கு ஆர்வமோ அக்கறையோ கிடையாது.

❖

## 34

கனகசபாபதியின் மேல் ஏற்பட்ட தாங்கமுடியாத கோபத்தில் 'ஏண்டா டாய் சோமாரி....' என்ற சுத்தமான மெட்ராஸ் பாஷையில் அவரின் வீடு இருக்கும் அடையார் திசையை நோக்கி அடி வயிற்றில் இருந்து ஒரு கத்து கத்த வேண்டும்போல இருந்தது சந்தான லஷ்மிக்கு. ஆனாலும் அவள் கத்தவில்லை. வரிசையாக கெட்ட கெட்ட வார்த்தைகளால் வாய்க்கு வந்தபடியெல்லாம் அவரைத் திட்டித் தீர்க்க வேண்டும்போல இருந்தது. ஆனாலும் சந்தானலஷ்மி திட்டவில்லை. உறைந்துபோனவளாக அப்படியே இறுகிப்போய் நின்று கொண்டிருந்தாள்.

கனகசபாபதியோடு வாழ்க்கையில் அவளுக்கு நிகழ்ந்த எல்லா சம்பவங்களும் அவரின் ஆபரேஷன் நிஜத்தோடு கலந்து ஒருமித்து அதையே ஓர் உச்சக்கட்ட காட்சியாக சந்தானலஷ்மியின் பார்வையில் வடிவப்பட்டுவிட்டன. சந்தானலஷ்மி அந்த உச்சக் கட்ட காட்சியையே மனம் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். கவர்ச்சிகரமான பாலுறவுக் காட்சிகளுடன் அவளின் வாழ்க்கையில் ஆரம்பித்த கனகசபாபதியின் கதை துரோகங்களாலும் பொய் பித்தலாட்டங்களாலும் - திடீரென முடிந்து போயிருந்தது. இறுதிக் காட்சிகளின் கனமும் அழுத்தமும் தாங்கமுடியாமல் சந்தானலஷ்மி கண் கலங்கினாள். கண்ணைத் துடைத்துவிட்டுக் கொண்டே கன்பனாவிடம் சொன்னாள் ''நீங்க சொன்ன அந்த ஆபரேஷனை செய்துக்கிட்டு எனக்கு ஒரு குழந்தை பாக்கியத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தா - குறைஞ்சா போயிடுவார் அவர்....''

இதற்கு கல்பனா சொன்னாள் ''அப்படி இல்லைங்க மேடம். தாலி கட்டி கல்யாணம் பண்ணிக்காம ஆசைக்கு வச்சிக்கிறவள் குழந்தை பெத்துக்கறதை எந்த ஆம்பளையும் விரும்பமாட்டான்''

''என்னை அவரோட பெண்டாட்டிக்கு மேலேன்னு எத்தினியோ வாட்டி சொல்லியிருக்காரு கல்பனா....''

''பெண்டாட்டிக்கு மேலே; பெண்டாட்டிக்குக் கீழே என்கிற பேச்செல்லாம் பைசா பெறாத பேச்சு - நீங்க அவருக்குத் தாலிகட்டின பெண்டாட்டியா இல்லையா என்கிறதுதான்.... ஒண்ணே ஒண்ணை மட்டும் எனக்குச் சொல்லுங்க. உங்களை அவரோட



பெண்டாட்டிக்குமேலன்னு சொன்னாரே - அதை எங்கே வச்சிச் சொன்னார்?''

''இங்கே வீட்லேதான் சொன்னாங்க....''

''அதைக் கேக்கலை நான். வீட்லே எங்கே வச்சி சொன்னார் - நாற்காலியில உக்காந்துக்கிட்டு இருக்கும்போதா - இல்லை; கட்டில்ல இருக்கும்போதா?''

''மனுஷன் பேசற பேச்சு எல்லாமே கட்டில்ல இருக்கும் போதுதான்''

- இதைச் சொன்னபோது அவளையும் மீறி சந்தானலஷ்மியின் உதடுகளில் சிறிய வறண்ட புன்னகை விரிந்தது. - அதைப் பார்த்து கல்பனாவின் மனம் மிகவும் நெகிழ்ந்தது. ''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியவே இல்லை. கனகசபாபதி கட்டில்ல உக்காந்துக்கிட்டு சொன்ன எல்லாத்தையும் நிஜம்னு அப்படியே நம்பீட்டீங்க. கனகசபாபதி இல்லை; கட்டில்ல உக்காந்துக்கிட்டு எந்த ஆம்பளை சொல்ற எதையும் சீரியஸா எடுத்துக்கக்கூடாது. கட்டில்ல பேச்செல்லாம் எப்படி எப்படியோதான் வரும். வானத்தை வில்லா வளைச்சிக் காட்றேன்; மண்ணை கயிறு திரிச்சிக் காட்றேன் என்கிற மாதிரியான டயலாக் எல்லாம் கட்டில்லதான் வரும்னு சொல்றேன். சாப்பிடும்போது இந்த மாதிரி டயலாக் ஒண்ணாவது ஆம்பளைங்க கிட்டே இருந்து ஒரு நாளாவது ஒரு தடவையாவது வந்திருக்குன்னு ஒரு பொம்பளையை சொல்லச் சொல்லுங்க - பார்த்திடலாம். ஒரு பொம்பளையாலும் சொல்ல முடியாது....''

''மறுபடியும் எனக்கு எல்லாமே குழம்புற மாதிரி இருக்கு கல்பனா....'' - சந்தானலஷ்மி சொன்னாள்.

''இதெல்லாம் உங்களுக்குத் தெரியாமலேயே போனதுக்குக் காரணம் இருக்கு மேடம். உங்க வாழ்க்கைல பொம்பளைங்களே கூட கிடையாது. உடனே லேடீஸ் ஹாஸ்டல்ல இருந்ததைச் சொல்ல நினைக்காதீங்க. அது வேற அரைகுறை உலகம். அங்கே இருக்குற பொம்பளைங்க யாருக்குமே பொம்பளைங்க கிடையாது என்கிறதுதான் என்னோட அபிப்பிராயம். அதனால ஹாஸ்டல் பொம்பளைங்களை நீங்க கன்சிடரே பண்ணாதீங்க. மொத்தத்ல வெளி உலகப் பொம்பளைங்க யார்கிட்டேயும் தொடர்பே கிடையாது உங்களுக்கு. பொம்பளை ஃப்ரண்ட்ஸ் கிடையாது. நம்ம தெருவிலேயாவது அவ இவள்னு யார்கிட்டேயாவது உங்களுக்கு

காண்டாக்ட் உண்டானு பார்த்தா - அதுவும் சுத்தமா கிடையாது. பொம்பளைங்களைத் தெரிஞ்சிருந்தாத்தான் உங்களுக்கு ஆம்பளைங்களைப் பத்தி தெரிஞ்சிக்க முடியும் மேடம்''

''- ஆனா கல்பனா; கட்டில்ல உக்காந்து சொன்னார் என்கிறதுக்காக அவர் சொன்ன எதையும் சீரியஸா எடுத்துக்கக் கூடாதுன்னு நீங்க சொல்றதை அப்படியே என்னால ஏத்துக்க முடியலை. அவரோட ஒய்ஃபைப் பத்தி முக்கியமான விஷயங்களையெல்லாம்கூட அவர் கட்டில்லேதான் சொல்லியிருக்கார்....''

''என்ன சொல்லிருக்கார் பெரிசா? எல்லாமே செக்ஸ் விஷயத்ல அவளைப் பத்தின கம்ப்ளைண்ட்ஸ்தான். அவளுக்கு செக்ஸ் பிடிக்காது. உடம்பை அப்படிக் காட்டமாட்டா; இப்படிக் காட்டமாட்டா. ப்ரெஸ்ட்டே கிடையாது அவளுக்கு. - இந்த மாதிரியான கதைதான் எல்லாம்.... வேற எதுவும் அவளைப் பத்தி நல்ல விஷயம் எதுவுமே கிடையாது.... ஏன் செக்ஸ் பத்தின கம்ப்ளையண்ட்ஸ் மட்டும் வண்டி வண்டியா கொட்டறார்னா - இங்கே அவருக்கு செக்ஸ் மூக்கு முட்ட வேணும்''

''அதுக்குப் போய் எதுக்காக பெண்டாட்டியைப் பத்தி என்கிட்ட வந்து புகார் பண்ணிட்டு இருக்கணும்? புகார் எதையும் பண்ணத் தேவை இல்லாமலேயே அவருக்கு வேணும் என்கிற அளவுக்கு செக்ஸ் குடுக்கிற நிலைமையிலதானே நானே இருக்கேன்.... எனக்கும்தானே மூக்கு முட்டற மாதிரி வேணும் செக்ஸ்....''

''அதைப் பத்தியெல்லாம் அவருக்கென்ன கவலை? - அவருக்கு மூக்கு முட்டினா போதும். மூக்கு முட்டினது போதும்னு தோணிடுச்சி - உடனே ஒட்டம் பிடிச்சாச்சி''

''அப்ப ஆம்பளைங்க எல்லாருமே இப்படி மோசமாத்தான் இருப்பாங்களா?'' - சந்தானலஷ்மி கேட்டாள்.

''மோசம்னு எடுத்துக்காதீங்க இதை. இதான் அவங்களோட கேரக்டர். பெண்டாட்டியைப் பத்தி அடுத்த மனுஷிகிட்ட குறை சொல்லாத ஆம்பளைங்க ரொம்ப குறைச்சல் மேடம். எப்படியாவது இங்கே காரியம் நடந்தாகணும். அதுக்குத்தான் அத்தனை புகார் மனு.... நான் ஒண்ணு கேக்குறேன் உங்களை. உங்ககிட்ட வந்து பெண்டாட்டியைப் பத்தின நிறைகளைக்கூட வேணாம் - ஏதாச்சும் ஒரு குறையைப் பத்தி அந்தப் பெண்டாட்டிக்காரிகிட்டே போய் சொல்லிட முடியுமா? இதென்ன ஒன்வே ட்ராஃப்பிக்கா? இங்கே



வந்து கதை விட்டுட்டு உக்காந்திருப்பே; அங்கே போய் வாயை மூடிட்டு இருப்பே. உனக்குத்தான் பிடிக்கவே பிடிக்காது உன் பெண்டாட்டியை. பிரம்ம ராட்சசி அவ. அவளை விட்டுட்டு ஓடி வந்திடேன். அதைச் செய்யலையே நீ. கடைசியில அவ பின்னாடி தானே ஓடிப் போயிட்டே. ஆனா பணம் குடுத்திட்டு ஓடிட்டே. அதனால கொஞ்சம் தப்பிச்சே....''

''தப்பிச்சது இங்கே இருந்துதான். அங்கே அவ வறுத்து எடுத்திருவா. இப்பவே அங்கே லட்சார்ச்சனை நடந்திட்டு இருக்கும்'' - சந்தானலஷ்மியின் மனநிலை சிறிது சமநிலைக்குத் திரும்பியிருந்ததால் இதைச் சிறிய புன்னகையுடன் சொன்னாள்.

''அப்படியெல்லாம் ஒரேயடியா எதிர்பார்த்திடாதீங்க மேடம். பொம்பளைங்களாகிய நாமெல்லாம் வீக்கர் செக்ஸ்னு அப்ப ஒரு தடவை சொன்னேன். இப்பவும் சொல்றேன். அதனால பெண்டாட்டிமார்களும் ஒரு அளவுக்கு அடக்கித்தான் வாசிச்சாகணும். ஓவரா வாசிச்சிட்டா - போங்கடி சரிதான்னு புருஷன்காரன் நிமிர்ந்திட்டான்னா பெண்டாட்டிங்களோட நிலைதான் மோசமா போயிடும். அதனால அந்த வனிதாமணி புருஷனை அடிக்கிற மாதிரி நாலு அடி அடிப்பா. அதுக்கு அவ புருஷனும் அழற மாதிரி நாலைஞ்சு சொட்டுக் கண்ணீர் விட்டார்னு வச்சிக்கோங்க - அப்புறம் ரெண்டு பேருமே சேர்ந்து 'ஜனகன மன'னு தேசியகீதம் பாடி முடிச்சிர வேண்டியதுதான்.... அதுக்கு மேல எல்லாம் எதுவும் நடந்திடாது அங்கே.... நீங்க வேணுமானாலும் பாருங்க....''

கல்பனா சொல்லி முடித்ததையெல்லாம் சந்தானலஷ்மி அழகான புன்னகையுடனேயே கேட்டுக் கொண்டிருந்தாள். அந்தப் புன்னகையுடனேயே சொன்னாள் ''கல்பனா - இப்ப ஒரு உண்மையை நான் கண்டுபிடிச்சிருக்கேன். எனக்கு இவர்கிட்ட இந்தத் தொடர்பெல்லாம் ஏற்படறதுக்கு முன்னாடி அவர்கிட்ட ஸ்டெனோவா வேலை பார்த்தேன் பாருங்க - அப்பல்லாம் நான் ரொம்ப ரொமப சாதாரணமான ஒரு மக்குப் பொம்பளையாத்தான் இருந்தேன். ஒருநாள் இவர் என்கிட்ட விழுந்து; நானும் இவர்கிட்டே விழுந்து எல்லா கதையும் ஆரம்பித்த அப்புறம் - அதே நான் படு பிரில்லியண்ட் மனுஷியாயிட்டேன். எல்லாமே எனக்கு வெளிச்சமா பளிச்சுனு தெரிஞ்சது. இப்ப அதெல்லாமே டமால்னு ட்ரான்ஸ் ஃபார்மர் வெடிச்சாப்ல கம்னு ஃப்யூஸ் போயிருச்சி. இனிமே இந்த மனுஷன் வரமாட்டார்னு தெரிஞ்சதும்... ஒரே இருட்டா இருக்கு

எல்லாம். எதுவும் தெரியலை. எதுவும் புரியலை. பழைய மக்குப் பொம்பளை என்கிற இடத்துக்கே திரும்பி வந்திட்டாப்ல இருக்கு. அதனால இன்னும் ஒரு விஷயம் மட்டும் என் மண்டைக்குப் புரிய மாட்டேங்குது. ஏன் அவர் என்னைத் திடீர்னு விட்டுடறதா முடிவு எடுத்தார்? கடைசிவரை என்கிட்ட எந்த அலுப்பும் சலிப்பும் இல்லாமத்தானே வந்து போயிட்டு இருந்தார். அன்னைக்கி ஹைதராபாத் போறதா சொல்லிட்டு இங்கே என்கூட வந்து இருந்த விஷயத்லகூட இங்கே இருந்தது எதுவும் தெரிய வராமதானே தப்பிச்சிருக்கார்? அப்புறம் என்னத்துக்காக அவசர அவசரமா என் தொடர்பை கட் பண்ணிடறது என்கிற முடிவுக்கு வந்தார்? என்னத்துக்காக என்கூட இருந்ததை பெண்டாட்டிகிட்ட ஒத்துக் கிட்டதா என்கிட்டே போன்ல கூசாம பொய் சொன்னார்? சொல்லுங்க கல்பனா; எதனால அவர் என்கிட்ட கடைசியில இப்படியொரு தலைப்பிரட்டை பண்ணினார்?''

கல்பனா ஒரு முறை சுவர் கடிகாரத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னாள்.

''இந்தத் தலைபிரட்டைக்கு ரெண்டு விஷயந்தான் காரணம் மேடம். ஒண்ணு - ஹைதராபாத் போறதா பொய் சொல்லிட்டு போகாம உங்ககூட இருந்ததுல திருப்பதி போயிருந்ததா சொல்லி அந்த நேரத்துக்கு உங்ககூட இருந்ததை மறைச்சி பெண்டாட்டியை ஏமாத்திட்டார். ஆனா அந்த நேரம் ஏமாத்திட்டாலும் மனுஷர் உஷாராயிட்டார். ஏன்னா - பெண்டாட்டிக்காரியும் உஷாராயிடு வாள்னு தெரியும் அவருக்கு. அந்தத் தடவை எப்படியோ ஒரு கதையைச் சொல்லிவிட்டுத் தப்பிச்சாச்சி. இனிமேயும் சைதாபேட்டைப் பக்கம் போயிட்டு வந்திட்டு இருந்தோம்னா என்னிக்காவது ஒருநாள் அசிங்கமா மாட்டிப்போம். இனிமே ஒரு தடவை மாட்டினோம்னா - தொலைஞ்சோம்னு உடனே உங்களை கட் பண்ணிடற முடிவுக்கு வந்திட்டார். ரெண்டாவது - அந்த ஹைதராபாத் விஷயம் மாட்டிக்க நேர்ந்ததுக்கே காரணமான பொண்ணு வயசுக்கு வந்த மேட்டர். அவரோட செண்டி மெண்ட்ஸை நிஜமாவே அது ரொம்பவே பாதிச்சாலும் பாதிச்சிருக்கலாம். மகள் வயசுக்கு வந்தாச்சி; இனிமே இந்த மாதிரித் தொடர்பெல்லாம் நிஜமாவே வேண்டாம்னு மனசில அவருக்குத் தோணியிருக்கலாம். எல்லாத்தையும் கணக்குப் போட்டுப் பார்த்திட்டு டமால்னு ஸ்விட்சை ஆஃப் பண்ணிட்டார். பாவம்; இங்கே நீங்க ஒரேயடியா ஃப்யூஸ் போயிட்டீங்க....''



கல்பனா விவரிக்க விவரிக்க சந்தானலஷ்மியின் மனதில் சிறிது சிறிதாக தெளிவு ஏற்பட்டு அதன் பிரதிபலிப்பாக அவளின் முகத்திலும் ஓர் வெளிச்சம் தோன்றியது. ''விஷயத்தை ரொம்ப அழகா புரிய வச்சிட்டீங்க கல்பனா. சட்டுனு என் மனசில இருந்த குழப்பம் கஷ்டம் எல்லாமே காணாமப் போயிடுச்சி. ஆனாலும் இன்னும் ஒரே ஒரு துக்கமும் என் மனசுல இருக்கத்தான் செய்யுதுங்க கல்பனா. திடீர்னு பார்த்தா கிளம்பின இடத்துக்கே நான் திரும்பி வந்திட்ட மாதிரி இருக்கு. முன்னே நான் லேடீஸ் ஹாஸ்டல்ல இருந்தேன். இப்ப ஒண்டியா தனியா இந்த ஒரே ஒரு லேடி மட்டும் இருக்குற லேடீஸ் ஹாஸ்டல்ல இருக்கேன். - அன்னைக்கி அந்த லேடீஸ் ஹாஸ்டல்ல இருந்தப்ப; எனக்கும் கல்யாணமாகாதா? புருஷன்னு ஒருத்தன் எனக்கும் வரமாட்டானா? நிக்கறதுக்கு வாழ்க்கைல சின்னதா இருந்தாலும் பரவாயில்லை; ஒரு நிழல் கிடைக்காதா - அப்படியெல்லாம் தவியா தவிச்சிருக்கேன் - எத்தனையோ நாள். கடைசியில என் தவிப்புக்கு ரொம்ப லேட்டா கிடைச்சது கனகசபாபதி என்கிற நிழல். நிழல் எனக்கு முதல்ல ரொம்ப ரொம்ப இதமா இருந்துச்சி. மனசுக்கும் நிம்மதியா இருந்துச்சி நிழல். ஆனா; நாள் போகப் போகத்தான் நிழல் நிழலா தெரியாம ஒரு இருள் மாதிரி தெரிஞ்சது. ஏதோ அது ஒரு ஒளிஞ்சிக்கிட்டு இருக்குற மறைவிடம் போலவும் ஆகிப் போயிருந்தது. அது எனக்குச் சரிப்படலை. அதை மாத்தறதுக்கு எப்படியெல்லாமோ போராடியே பார்த்தேன் கல்பனா. ஆனா அதுல நான் தோத்துப் போயிட்டேன். மறைவிடம் போல ஆகிப் போயிருந்ததை ஒரு வீடா மாத்த முடியலை என்னால.... சரி நம்ம தலை எழுத்து இவ்வளவுதான்னு நினைச்சப்ப - கிடைச்சிட்டு இருந்த அரைகுறை நிழலும் காணாமப் போயிருச்சி. மறுபடியும் என் மண்டைமேல மொட்டை வெயில் காயுது. திருப்பியும் வெயில் தெரியாம இருக்கறதுக்கு புதுசா வேற ஒரு நிழல் தேடியாகணும் போல இருக்கு. ஆனா அதைத் தேடறதுக்கு தெம்பு இல்லை. ஆயாசமா சோர்வா இருக்கு மனதுக்கு. புது நிழலை தேடறதுக்கான வேகமோ உற்சாகமோ மனசில ஏற்படவே மாட்டேங்குது.... என்ன செய்யப் போறேனோ தெரியலை. மொட்டை வெயிலை நினைச்சாலும் மனசெல்லாம் நடுங்குது....''

- இதைச் சொன்னபோது சந்தானலஷ்மியின் கண்களில் மீண்டும் துக்கம் படர்ந்து கண்ணீர் பளபளத்தது; கல்பனா பரிவுடன் சந்தான லஷ்மியின் தோள்களைப் பற்றினாள். கருணையுடன் அவளின்

முகத்தைப் பார்த்தாள். சந்தானலஷ்மியும் சற்று உணர்வு வயப்பட்டு கல்பனாவின் ஒரு கையை தன்னுடைய தோளில் இருந்து எடுத்து இறுக்கமாகப் பற்றிக்கொண்டாள்....

❖

## 35

சில நிமிடங்களுக்கு ஒருத்தரை ஒருத்தர் பற்றியபடி உறவின் உச்சத்தில் நின்று'கொண்டிருந்த கல்பனாவுக்கும் சந்தானலஷ்மிக்கும் சற்று நேரத்திற்குப் பேச்சு அற்ற மௌனம் தேவைபோல் இருந்ததில் அமைதியாக ஒருவரை ஒருவர் பார்த்தவாறு நின்றார்கள். பின் கல்பனா பேச ஆரம்பித்தாள்.

''நீங்க கடைசியா சொன்னதுக்கு நான் வேற ஒரு விதத்ல பதில் சொல்றேன் மேடம். மறுபடியும் நீங்க நிழல் தேடாதீங்க. எந்த நிழல்லேயும் சின்ன இருட்டும் இருக்கிறதுக்குத்தான் வாய்ப்பு அதிகம். அதுக்கும் மேல எல்லா நிழலுக்கும் எங்கேயோ ஒரு எல்லை இருந்தே தீரும். அதை நீங்க ஞாபகத்ல வச்சிக்கனும். நிழல் என்கிறது எப்பவுமே - 'Limited' - மேடம்.... அதனால சொல்றேன். நீங்க தேட வேண்டியது நிழலை இல்லை; ஒளியை. வெளிச்சத்தைத் தேடுங்க மேடம். வெளிச்சத்துக்குள்ளே இருள் கிடையாது. வெளிச்சத்துக்கு எல்லையும் கிடையாது. யதார்த்தத்ல இது என்ன; இது எப்படின்னு சொல்லத் தெரியலை எனக்கு. ஒளியைத் தேடறதுதான் சரியான ஒரே வழின்னு நான் ஃபீல் பண்றேன். நாளைக்கி உங்களை டைரக்டர் பாரதி பார்க்க வரப் போறார். என் தம்பி காவியன் சொன்ன மாதிரி நாளைக்கி கண்டிப்பா நீங்க பாரதி கையால அட்வான்ஸ் வாங்கத்தான் போறீங்க.... கனகசபாபதி கரெக்ட்டா உங்களை விட்டு விலகிப் போன இந்த இக்கட்டான நேரத்ல ஒரு ஒளிமயமான நல்ல எதிர்காலத்துக்கான திருப்பமாத் தான் இதை நான் பாக்குறேன் மேடம்.... நிஜமா அப்படி அமையவும் நான் உங்களை வாழ்த்தறேன். வேற எதுவா எடுத்துக்காவிட்டாலும் சினிமாவை நீங்க உங்க வேலையா உங்க தொழிலா ஏத்துக்கோங்க. இதனால நீங்க பணத்துக்காக வேற யார் கையையும் எதிர்பார்க்காம இருக்கலாம். இது ரொம்ப முக்கியமான விஷயம் வாழ்க்கைல - ஒரு பெண் தன்னோட சொந்தக் கால்ல நிக்கறது....''



இப்போது சந்தானலஷ்மி குறுக்கிட்டாள். ''எனக்கும் அந்த அபிப்பிராயம்தான் கல்பனா. தேடி வர்ர சினிமா வாய்ப்பைப் பயன்படுத்திக்க எனக்கும் ஆர்வமாவே இருக்கு. அதே நேரத்ல ஒருவித பயமாவும் இருக்கு. ஏன்னா - அந்த அளவுக்குச் சினிமா உலகத்தைப் பத்தி மோசமாவும் கேள்விப்பட்டிருக்கேன்....''

''நீங்க கேள்விப்பட்டது எதுவும் பொய்யால்லாம் இருந்திடாது. அதைச் சொல்லலை நான். நல்லது கெட்டது எல்லா ஃபீல்டுலேயும் இருக்கும். எல்லார்கிட்டேயும் இருக்கும். அன்னைக்கி நான் சொன்னேனே - பொம்பளைங்க பண்ணிக்கிற க்யூபெக்டமி என்கிற குடும்பக்கட்டுப்பாடு ஆபரேஷனை நான் பண்ணிக்கப் போறேன்னு சொன்னதும் என் வீட்டுக்காரர் 'நீ ஆபரேஷனை பண்ணிக்கிட்டா யார் உன்னை நம்பறது?'னு மோசமான ஒரு கேள்வியை கேட்டார்னு.... அப்படி மோசமா கேட்டதால அவர் ஆளே மொத்தத்ல மோசமானவர்னு சொல்லிட முடியாது. மனுஷன் நல்லவர்தான். என்னமோ திடீர்னு அந்த நேரத்ல மனுஷனோட வாய் அப்படியொரு கேள்வியைக் கேட்டிருச்சி. அய்யோ என்ன இப்படி ஒரு மோசமான ஆளா இருக்காரேன்னு உடனே தாலியை கழட்டிக் குடுத்திட்டு ஓடிப் போயிடலை நான். அதுக்காக அந்த இஷ்யுவை நான் விட்டுடவும் இல்லை. எவ்வளவு ஷார்ப்பா ரீயாக்ட் பண்ணனுமோ அவ்வளவு ஷார்ப்பா ரீயாக்ட் பண்ணிட்டுத்தான் விட்டேன். கெட்டுப்போற ஒவ்வொருத்தியும் க்யூபெக்டமி ஆபரேஷனை பண்ணிட்டுத்தான் ஓடிஓடி கெட்டுப் போயிட்டு இருக்காளுங்களா...? - எதுக்காக இதை இப்ப வந்து உங்களுக்கு ஞாபகப்படுத்திச் சொல்றேன்னா - ஏதாவது மோசமான அனுபவத்தை சினிமா உலகத்ல நீங்க சந்திக்க வேண்டி வந்ததுன்னா- பயப்படவே பயப்படாதீங்க - எதையும் தைரியமா ஃபேஸ் பண்ணுங்க. பயங்கரமா ரீயாக்ட் பண்ணி நீங்க யார்னு காட்டிடுங்க. அப்புறம் ஒருத்தனும் கிட்டே வரமாட்டான். நீங்க உங்கபாட்டுக்கு உங்க வழியில போயிட்டே இருக்கலாம்.... என்ன; நான் சொல்றதெல்லாம் சரிதான் என்கிற மாதிரி தெரியுதா; சரியில்லை என்கிற மாதிரி தெரியுதா?'' - கல்பனா கேட்டாள்.

''உங்க பொண்ணுங்க ரொம்ப அதிர்ஷ்டம் செய்திருக்கணும் கல்பனா'' - சந்தானலஷ்மி ஒருவித நன்றி உணர்ச்சியுடன் சொன்னாள்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''இப்படி ஒரு அம்மா கிடைச்சிருக்காங்களே அவங்களுக்கு''

''நீங்களும் வாழ்க்கையில ஒருநாள் இப்படிப்பட்ட அம்மாவா இருக்கணும் - அதான் என் ஆசை....''

''நிஜமாவே நான் அம்மாவா ஆயிட்டேன்னா - ஒரு நல்ல அம்மாவாதான் இருப்பேன். அப்படி இருக்கத்தான் முடியும் என்னால....''

''மணி ரொம்ப நேரமாயிடுச்சின்னு நினைக்கிறேன். நான் போய்தான் சாப்பிடணும் எல்லாரும். நீங்களும் மனசில இருக்குற அத்தனையையும் தூக்கிப் போட்டுட்டு நிம்மதியா உக்காந்து சாப்பிடுங்க. நாளைக்கு டைரக்டர் பாரதியை மீட் பண்றதுக்கு எல்லா விதத்திலேயும் உங்களை தயார் பண்ணிக்கோங்க. நாளைக்கு அவர் வந்து உங்களைப் பாத்திட்டுப் போனதும் நான் உங்களைப் பார்க்க வரேன்.... குட்நைட்''

சந்தானலஷ்மியும் 'குட்-நைட்' என்றாள்.

கல்பனா கிளம்பிப் போனதும் வாசல் கதவை சாத்தித் தாளிட்டாள் சந்தானலஷ்மி. ஒரு நிமிடம் கண்களை மூடியவாறு நின்றாள். வாழ்க்கையில் வேகவேகமா சம்பவங்கள் நிகழத் தொடங்கி இருந்தது. அவளையும் ஒருவித மனவேகத்திற்கு உள்ளாக்கி இருந்தது. நாளை வரப்போகிற இயக்குநர் பாரதி குமாரை சந்திப்ப தற்காக அவளின் மனஉணர்வுகளின் நீர்மட்டம் வேகவேகமாக உயரத் தொடங்கிற்று. சினிமா நடிகையாக பிரகாசிப்பதுதான் கனகசபாபதியின் மூக்கை அறுத்ததற்கு நிகராக இருக்கும் என்றுகூட சந்தானலஷ்மியின் மனம் நினைத்தது. ஏதாவது ஒரு வழியில் கனகசபாபதியை பழி வாங்கத்தான் வேண்டும் என்ற தீர்மானத்தில் இருந்து மட்டும் பின்வாங்குவதாக இல்லை அவள். கனகசபாபதி ஒரு பணக்கார மெட்ராஸ் சோமாரி என்ற சந்தானலஷ்மியின் இறுதி அபிப்பிராயத்திலும் மாற்றம் எதுவும் இல்லை.... திடீர் என்று ஏற்பட்ட பரவசத்தில் சந்தானலஷ்மி கவர்ச்சி நடிகைக்கு உரித்தான விதத்தில் ஒரு கவர்ச்சியான குலுக்கல் நடனத்தை தனக்குத்தானே சில நிமிடங்கள் ஆடிக் கொண்ட பின் - உட்கார்ந்து அமைதியாக சாப்பிட்டாள். வெற்றிலை போட்டாள். சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்து ரொம்ப நிதானமாக புகைத்துக் கொண்டிருந்தாள். கல்பனாவிற்கு வீட்டில் இருந்தபடியே 'குட்நைட்' சொல்லிவிட்டு ஒரு வரலாறு காணாத களைப்புடன் படுக்கையில் விழுந்தாள்.

CONNEMARA LIBRARY



படுத்த சில நிமிடங்களில் சந்தானலஷ்மி குறட்டை விட்டவாறு தூங்கியும் விட்டாள்....

சந்தானலஷ்மியின் வாழ்க்கை சரித்திரத்தின் இரண்டாம் பாகம் இங்கே முடிந்து போகிறது. இது இரண்டாம் பாகம் என்றால் எது முதல் பாகம் என்ற கேள்வி யாருக்காவது தோன்றுமானால் அவர்களுக்கான பதில் இதுதான். கனகசபாபதியின் உறவு ஏற்பட்டு சந்தானலஷ்மி இந்த சைதாபேட்டை வீட்டுக்கு வருவதற்கு முன் லேடீஸ் ஹாஸ்டல் ஒன்றில் இருந்தாளே - அதுவரை அவளுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த அந்த மொத்த அனுபவங்களைச் சொல்லலாம் - அவைதான் அவளுடைய வாழ்க்கைச் சரித்திரத்தின் முதலாம் பாகமாக.... இனி அவளுடைய வாழ்க்கைச் சரித்திரத்தின் மூன்றாம் பாகம் நாளை தொடங்க இருக்கிறது. அந்த மூன்றாம் பாகத்தில் அடுக்கடுக்காக நிறைய சம்பவங்களும் அனுபவங்களும் நிகழப் போகின்றன. அவை அத்தனையையும் இங்கே சொல்வது என்பது முடியாத காரியம். ஆகையால் அவற்றில் மிகச் சிலவற்றை மட்டும் மிகச் சுருக்கமாக கோடிட்டுக் காட்டிவிட்டு மட்டும் நிறுத்திக் கொள்ளலாம்....

நாளை சந்தானலஷ்மியை வந்து பார்க்கப் போகும் திரைப்பட இயக்குநர் பாரதிகுமார் அவளைப் பார்த்த பத்தாவது நிமிடம் அட்வான்ஸ் பணம் பத்தாயிரம் ரூபாயை அவளுடைய கையில் தரப் போகிறார். ஆனால் அட்வான்ஸ் பணத்தைக் கொடுக்கப் போகிற பத்தாவது நிமிடத்திற்கு முன்பாகவே இயக்குநர் பாரதி சந்தானலஷ்மியின் ஈடு இணையற்ற உடல் கவர்ச்சியின் மேல் அவருடைய மனதைப் பறிகொடுத்துவிடப் போகிறார். பாம்பின் கால் பாம்பு அறியும். இயக்குநர் மனதைப் பறி கொடுத்துவிடப் போகிறதை அந்த நிமிடமே அவரின் கண்களில் அதைப் பார்த்து விடப் போகிற சந்தானலஷ்மியும் அதனாலேயே இயக்குநர் பாரதியின் மேல் காதல் வயப்படப் போகிறாள். அவள் நடிக்கப் போகிற அவருடைய படம் வேகமாக வளரப்படப் போகிற மாதிரியே அவர்கள் இருவருக்குள்ளும் உணர்ச்சிமயமான காதல் மிக வேகமாக வளரப் போகிறது. காதலோடு பாலுணர்வும் இருவருக்குள்ளும் தீ மாதிரி கொழுந்துவிட்டு எரியப் போகிறது. அந்தத் தீ சந்தானலஷ்மியின் வீட்டுக் கட்டிலில் அவ்வப்போது அணைக்கப்படவும் போகிறது.

- இப்படியெல்லாம் ஒரு பக்கம் இருக்கப் போகிறதென்றால் திரைப்படத் துறையில் நடிகையாக வெற்றியும் புகழும்

சந்தானலஷ்மியைத் தேடி அலை அலையாய் வரப் போகிறது என்பது மற்றொரு பக்கமாக இருக்கப் போகிறது. பாரதியின் இயக்கத்தில் சந்தானலஷ்மி நடிக்கப்போகும் முதல் திரைப்படம் மிகப் பெரிய வெற்றி பெறப் போகிறது. அவளை சிறந்த கவர்ச்சி நடிகையாக அறிமுகப்படுத்தப் போகிறது. அதுமட்டுமில்லை; வெற்றி பெறப் போகும் முதல் தமிழ் திரைப்படம் உடனே தெலுங்கில் 'டப்' பண்ணப்பட்டு ஆந்திராவில் திரையிடப்பட்டு சந்தானலஷ்மிக்கு அமோகமான வரவேற்பை வாரி வாரி வழங்கப் போகிறது. ஆந்திர மண் ஒரு மாதிரியான கல்மிஷம் இல்லாத வெகுளித்தனமான மண். அந்த மண் சந்தானலஷ்மியை புதிய நூற்றாண்டின் ஜெயமாலினியாக தோள்களில் தூக்கி வைத்துக்கொண்டு கொண்டாடப்போகிறது. தங்கத் தாம்பாளத்தில் வைத்து அவளை தாங்கப் போகிறது. புகழும் பணமும் சந்தானலஷ்மியின் வீட்டின் கூரையைப் பியத்துக்கொண்டு அருவிபோல் கொட்டப் போகிறது. ஒரு சினிமாவில் தலையைக் காட்டுகிற நடிகைக்கே ரசிகர் மனறம் திறக்கிற தமிழ்நாட்டுப் பெருநகரம் ஒன்றில் சந்தானலஷ்மி ரசிகர் மன்றத் தலைமையகம் தடபுடலாக செயல்படப் போகிறது. ரசிகர் மன்றங்களின் பொதுச் செயலாளராக சந்தானலஷ்மியின் தம்பி சுந்தரேசன் யாரும் தட்டிக் கேட்க முடியாத அதிகாரங்களோடு செயல்படப் போகிறார். படத்திற்குப் படம் அவளுடைய சம்பளம் வானத்தைத் தொட்டு விடப் போகிற அளவுக்கு உயரப் போகிறது. அதேபோல் அவ்வப்போது சந்தானலஷ்மியோடு காதல் வயப்படும் நபரின் பெயரும் மாறிக்கொண்டே இருக்கப் போகிறது. - அதில் மாறாமல் இருக்கப் போவது ஒன்றே ஒன்றுதான். அவளிடம் உணர்வு வயப்பட்டு காதலுறவு கொள்ளப்போகிற ஆண்கள் எல்லோருமே ஏற்கனவே கல்யாணமாகி மனைவி மக்களோடு வாழ்கிறவர்களாகத் தான் இருக்கப் போகிறார்கள். அதேபோல் அந்த ஆண்கள் எல்லாருமே சந்தானலஷ்மியுடன் திருமண வாழ்க்கை என்ற குடித்தன பரிவர்த்தனைக்குத் தயாராக இல்லாமல் கடைசியில் ஒருநாள் அவளிடம் இருந்து பிரிந்து ஓடிவிடப் போகிறார்கள்.

திரும்பத் திரும்ப கிடைக்கப் போகிற அந்த அனுபவங்களில் மீண்டும் மீண்டும் அடையப் போகிற காயங்களின் வலியைத் தாங்க முடியாமல் சந்தானலஷ்மி மனம் வெதும்பப் போகிறாள். கோபத்தில் கொந்தளிக்கப் போகிறாள். அதற்காக யாரையோ மானசீகமாக பழி வாங்குவது போலவோ; அவளையே பழி வாங்கிக் கொள்வது போலவோ அடுத்து நடிக்கப் போகிற படத்தில் மிக மிக



அதிகமாக கவர்ச்சி காட்டி நடிப்பதென்று ஆங்காரப்பட்டு கிட்டத்தட்ட ஆடையை அவிழ்த்துப் போட்டே ஆடுகிற ஆவேசத்திற்கு அவள் ஆளாகப் போகிறாள். ஆனால் எத்தனை ஆடினாலும் சந்தானலஷ்மியின் வாழ்க்கையில் ஒரு ஆடவனோடு திருமண வாழ்க்கை என்ற சந்தோஷமும் கிடைக்கப் போவதில்லை. அந்த வாழ்க்கையில் குழந்தை பாக்கியம் என்ற ஆனந்த வரமும் கிடைக்கப் போவதில்லை.... மற்றபடி வாழ்க்கையில் சந்தானலஷ்மி சந்தோஷமாகத்தான் இருக்கப்போகிறாள். அவளை வைத்துப் படம் எடுக்கும் தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் விநியோகஸ்தர்களும் சந்தோஷமாகவே இருக்கப் போகிறார்கள். எல்லாரையும் விட சந்தானலஷ்மியின் ரசிகர்கள் அவளின் போதை தரும்படியான கவர்ச்சியின் உச்சகட்ட நடிப்புகளைப் பார்த்து அளவற்ற சந்தோஷங்களுக்கு ஆளாகப் போகிறார்கள்....

- இப்படி ஒரு உலகமே சந்தோஷக் கடலில் திளைக்கப் போகிறபோது ஒரே ஒரு நபர் இதையெல்லாம் பார்த்துச் சந்தோஷப் பட முடியாமல் ரொம்பப் பெரிய விசனத்தின் கடலில் மூழ்கிக் கிடக்கப் போகிறார். இந்த மாதிரியெல்லாம் புகழ்பெறும் பெரிய நடிகையாவாள் என்பது தெரிந்திருந்தால் சந்தானலஷ்மியுடன் தனக்கு இருந்த தனிப்பெரும் உறவை எப்பாடு பட்டாவது காப்பாற்றிக் கொண்டிருக்கலாமேயென்று அந்த நபர் பெரும் துக்கக் கடலில் நீச்சலடிக்கப் போகிறார். அரிதாகக் கிடைப்பதற்கு இருந்த புகழ்பெற்ற கவர்ச்சி நடிகையின் காதலர் என்ற மிகப் பெரிய பொக்கிஷத்தை யோசித்தே பார்க்காமல் இழந்துவிட்டோமே என்று அந்த நபர் வேதனைச்சாகரத்தில் மிதக்கப் போகிறார்.... அந்த நபர் வேறு யாருமில்லை - திருமதி. வனிதாமணியின் ஆதர்ச கணவர் திரு. கனகசபாபதி அவர்கள்தான்.

- துக்கம் தாங்காமல்; வேதனை பொறுக்காமல்; ஒருநாள் நூறு தடவை யோசித்து; ஆயிரம் தடவை மேலேயும் கீழேயும் பார்த்து நப்பாசை பட்டு போன் பண்ணித்தான் பார்ப்போமேயென்று கனகசபாபதி ரொம்ப ரகசியமாக கவர்ச்சி நடிகை சந்தானலஷ்மிக்கு டெலிபோன் பண்ணப் போகிறார். அதிர்ஷ்ட வசமாக கவர்ச்சி நடிகை சந்தானலஷ்மியே ரிசீவரை எடுத்து 'ஹலோ' எனப் பேசப் போகிறாள். அவளின் குரலைக் கேட்டதும் கனகசபாபதி மகிழ்ச்சி வானில் காற்றாடி மாதிரி பறக்கப் போகிறார். ஒரு நிமிஷம் பேச முடியாமல் தத்தளிக்கப் போகிறார். - ''சந்தானம்; நான்தான் கனகசபாபதி'' என்று திக்கித் திணறி அவளுடன் பேச முடியாமல்

பேசப் போகிறார். அவரின் குரலைக் கேட்டு ஒரு நிமிஷம் மறுமுனையில் இருந்து எந்த பதிலும் வராமல் இருக்கப் போகிறதால் கனகசபாபதி மறுபடியும் 'சந்தானம் - நாந்தான் கனகசபாபதி' என்று சொன்னதையே திருப்பிச் சொல்லப் போகிறார். திருப்பிச் சொன்ன உடனேயே சந்தானலஷ்மியிடம் இருந்து அவருக்குக் கிடைக்கப் போகிறது சூடான பதில். அந்தச் சூடான பதில் இதுதான் - ''கம்மனாட்டிக்குப் பொறந்த சோமாரி. வைடா போனை....''

சந்தானலஷ்மியின் வாழ்க்கைச் சரித்திரத்தின் மூன்றாம் பாகத்தின் சின்ன கதைச் சுருக்கம் இந்த இடத்தில் இந்த விதமாக முற்றுப்புள்ளி பெற்றுக் கொள்கிறது.....

❖

CONNEMARA PUBLIC LIBRARY
19 FEB 2004
CHENNAI 600 008

27 DEC 2009
26 MAR 2007

CPL572018

P 240